வரு. 76 இல. 02 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 ஜனவரி 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 14 Sunday, 2024





02 மட்டக்களப்பை புரட்டிப்போட்ட மழை வெள்ளம்


05 நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்


12 ஹவுத்தி கிளர்ச்சியாளர் மீதான தாக்குதல் உத்தி ஏற்படுத்தப் போகும் அரசியல்?


24 உலகக் கிண்ணத்திற்கு தயாராகும் வனிந்துவின் டி20 அணி




# பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இலங்கை முன்னேற்றம்

## ஜனாதிபதிக்கு இலங்கை வந்துள்ள IMF பிரதிநிதிகள் பாராட்டு தெரிவிப்பு



சவாலான பொருளாதார சீர்திருத்தங்களுடன் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் மதிப்பாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்ததற்காக ஜனாதிபதிக்கு IMF பாராட்டு தெரிவித்துள்ளது.

ஆசியாவிலேயே முதன்முறையாக ஆட்சியைக் கண்டறியும் அறிக்கையை (Governance Diagnostic Report) வெளியிடுவது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை பணிப்பாளர்கள் இவ்வாறு பாராட்டு தெரிவித்துள்ளனர். 06

# ஜனாதிபதி ரணில் நேற்று சுவிட்சர்லாந்து பயணம்

## உலக வர்த்தக மாநாட்டில் பங்கேற்பார்



சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெறவுள்ள உலக வர்த்தக மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்று அதிகாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இதன்போது, சுவிட்சர்லாந்து ஆசிய வர்த்தக சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பசுமை பேச்சு ஒன்றியத்தின் கூட்டத்திலும் ஜனாதிபதி உரையாற்றவுள்ளதுடன், 'எரிசக்தி வளத்தை உறுதி செய்யும் இலங்கையை கட்டியெழுப்புதல்' எனும் 06

## மாணவர்கள் மாதாந்தம் பயன்படுத்தும்

# பஸ் சீசன் டிக்கெட்டுகளுக்கு திடீரென கேள்வி அதிகரிப்பு

## பாடசாலை, பல்கலை, தொழில்நுட்ப மாணவர்களின் பயன்பாட்டில் திடீர் உயர்ச்சி

## மாணவர்களுக்கான 'சிசுசெரிய' பஸ் சேவைகளும் அதிகரிப்பு

நாடு எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகளின் மாணவர்களுக்கான மாதாந்த பருவகாலச் சீட்டுக்கான தேவை அதிகரித்ததன் காரணமாக 2023ஆம் ஆண்டில் வருமானமான 21,775 ரூபா கிடைத்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மாதாந்த பருவகாலச் சீட்டுக்காக மாணவர்களிடமிருந்து 07 வீதம் மட்டுமே அறவிடப்படுவதாகவும் 06



பாடசாலை மாணவர்களுக்காக 93 வீத நிதியையும் பல்கலை, தொழில்நுட்ப மாணவர்களுக்காக 73 வீத நிதியையும் அரசாங்கமே செலவிடுகிறது



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரிட்டன் இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலய நிர்வாகத்தினர் இளவரசிக்கு மகத்தான வரவேற்பளித்தனர்.

# மின் கட்டணத்தில் விரைவில் திருத்தம் ஏற்பட வாய்ப்பு

## 30, 60, 90 அலகுகளுக்கு நிவாரணம் கிடைக்கும்

லோரன்ஸ் செல்வநாயகம்



மின்சார கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கையின் முன்னோடி செயற்பாடாக நேற்று அந்த பிரேரணை தொடர்பான தரவுகள் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயல் பிரியந்த 06

## பல நுண்நிதி கடன் நிறுவனங்களால்

# கிராமப்புற பெண்களுக்கு அதிக வட்டிக்கு கடன்கள்

## ஒழுங்குபடுத்தல் அவசியம் -கோகிலா MP



நுண்நிதிக் கடன் திட்டங்களை ஒழுங்குபடுத்துவது அத்தியாவசியமான விடயமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்த்தன தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் 06

# உலக சந்தையில் எண்ணெய் விலையில் திடீர் அதிகரிப்பு

## செங்கடல் மோதல் நிலை காரணம்



செங்கடலில் ஹவுத்தி (Houthi) கிளர்ச்சியாளர்களுக்கும், அமெரிக்க போர்க் கப்பல்களுக்கும் இடையிலான மோதல் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்ந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யேமனை மையமாகக் கொண்டு ஹவுத்தி (Houthi) கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து ஏவுகணைத் 06

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்துள்ள யதார்த்தம்!

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன எழுதிய ‘2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதார விஞ்ஞான நோக்கு’ என்ற புத்தகம் கடந்த புதன்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், புலமை பெற்ற பலரால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன.

அந்த உரைகளைக் கேட்கும் போதும், அமைச்சர் பந்துல குணவர்தனவின் படைப்புகளை வாசிக்கும் போதும், நாம் அவதானமாக செயற்படாவிட்டால் இந்த நாடு பெரும் பாதாளத்தில் வீழ்ந்துவிடுவதற்கான ஆபத்து உள்ளதென்பதை உணர முடிகிறது. அந்த நூல் மற்றும் அங்கு அறிஞர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து முக்கியமான விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கை அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. 3 பில்லியன் டொலர் கடனை மூன்று தவணைகளில் பெற்றுக் கொள்வதற்கே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இது நீண்டகாலக் கடனாகும். எந்தவொரு நாடும் இலங்கைக்கு கடன் வழங்க 06

# பெண்ணின் வயிற்றிலிருந்த 13.5 லீற்றர் கொழுப்பு அகற்றல்

## கண்டியில் இலங்கை வைத்தியர்கள் சாதனை



பெண் ஒருவரின் வயிற்றிலிருந்து 13.5 லீற்றர் கொழுப்பை சத்திர சிகிச்சை மூலம் அகற்றி வைத்தியர்கள் இலங்கையில் முதன்முறையாக சாதனை புரிந்துள்ளனர். கண்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையிலேயே இச்சாதனை இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரியையும் ஒரு பிள்ளையின் தாயாருமான 61 வயதுடைய இப்பெண்ணின் வயிறு பெரிதாக 06

# இலங்கை ஐயப்ப பக்தர்கள் 16 பேர் சென்ற வேன் திருச்சியில் விபத்து

## நுவரெலியா, நாவலப்பிட்டி, சாமிமலை பகுதிகளைச் சேர்ந்த 01 பெண் உட்பட 04 பேர் படுகாயம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

திருச்சி பெரம்பலூர் அருகே பழுதாகி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் மீது பஸ் வண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 06





# உலகத் தமிழ் தலைவர்கள் பெயர் பட்டியலில் செந்தில் தொண்டமான்



உலக நாடுகளில் உள்ள தமிழ் தலைவர்களின் கடந்த கால செயற்பாடுகளை தமிழக அரசு அவதானித்து, அவர்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் அயலக தமிழர் மாநாட்டுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இப்பட்டியலில் 06



06

# இந்திய அரசின் இலவச ரயில் எஞ்சின்கள் விரைவில் நாட்டுக்கு!

பெப். 04க்கு முன் கிடைக்கும் -ரயில்வே GM

# சென்னையில் நடைபெற்ற தமிழர் பொருளாதார மாநாடு



சென்னையில் அண்மையில் நடைபெற்ற தமிழர் பொருளாதார மாநாட்டில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இலங்கையின் கல்வித் துறைக்கும் விசேடமாக மலையக கல்வி வளர்ச்சிக்கும் செய்த சேவைகளுக்காக விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதன்போது மொரிசியஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி வையாபுரி பிள்ளை விஜிபி குழுமங்களின் தலைவர் டாக்டர் சந்தோசம் சென்னை வளர்ச்சி கழகத்தின் தலைவர் முனைவர் வி.ஆர். எஸ்.சம்பத் சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பாஸ்கரன் பேராசிரியர் முத்துவேல் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் பல்வேறு துறைகளிலும் சேவைகளை செய்த 10 பேர் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





சமூக சேவா திலகம் எஸ்.என்.உதயநாயகன், கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று 23 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, வியாழக்கிழமை அன்று சாயி நிலையத்தினர் அன்னாரின் சேவையை பாராட்டி கௌரவித்தனர். நிகழ்வில் சாயி நிலைய உபதலைவர் சிவா இராஜஜோதி, பொருளாளர் எஸ். தவக்குமார், சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் மற்றும் சாயி சமூக சேவை அமைப்பாளர் ஆர்.நாராயணசாமி நாயிடு ஆகியோரும் பங்கேற்றனர்.

# மட்டக்களப்பை புரட்டிப்போட்ட மழை வெள்ளம்



**வ.சக்திவேல்**

வருடாந்தம் மாரிகாலம் வந்துவிட்டாலே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஒருகணம் கதிகலங்கிப் போவார்கள். தாழ்நிலங்களில் வாழும் மக்களின் வீடுகள் அனைத்தும் வெள்ளநீரால் மூழ்கடிக்கப்படுவதுடன், மக்களின் வாழ்வாதாரமும், முற்றாகப் பாதிக்கப்படும் நிலமையே அங்கு காணப்படுகின்றது. ஆனாலும் வெள்ள அனர்த்தத்தை முறையாக கையாள்வதற்கும் அதற்கு ஈடுகொடுக்கும் சீரிய திட்டங்களும் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்ட ரீதியில் இன்னும் வகுக்கப்படவில்லை என்பது சுற்றாடல் ஆர்வலர்களின் கருத்து. இது போன்றுதான் இவ்வருடமும் அம்மாவட்ட மக்கள் வெள்ள அனர்த்த நிலமையை எதிர்கொடுள்ளார்கள்.

மாவட்டத்தில் அமைந்துள்ள மிகப் பிரதானமான குளங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதுடன் அக்குளங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீரும் வான்பாய்ந்து வருவதோடு, சிறிய குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வருடமும் வெள்ளநீர் கடலைச் சென்றடைவதற்கு முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளன. ஆனாலும் கிராமங்களில் முறையான வடிகான் வசதிகள் இன்மையால் இன்னும் வீதிகளிலும், மக்கள் குடியிருப்புக்களிலும், வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றது. இதனால் மக்கள் தொற்று நோய்களுக்குட்படுவதுவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பருவப் பெயர்ச்சி மழையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக இதன்போது அரசாங்க அதிபரினால் அதிகாரிகளிடம் விரிவான விளக்கங்கள் கோரப்பட்டன.

தாழ்நிலங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளல், நாசிவன் தீவில் உள்ள உயர்தர பரீட்சை எழுதும் பாடசாலை மாணவர்களுக்கு கடற்படையினரினால் படகு மூலம் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல், பட்டிருப்பு பாலம் அமைந்துள்ள ஆற்றில் சல்வீனியா (ஆற்று வாழை) நிறைந்து காணப்படுவதனால் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கு தடையாக இருப்பது அவதானிக்கப்பட்டு அவை அகற்றப்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்குவது, உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வடிகான்களை துப்பரவு செய்து வெள்ள நீரை வடிந்தோடச் செய்வது மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்துவித நிவாரண உதவிகளையும் உடனுக்குடன் வழகுவது தொடர்பாக இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்டத்தின் 9 முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இடைத்தங்கல் முகாம்களை பார்வையிட்டதுடன், முகாம்களில் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து அவற்றை உடன் தீர்த்து வைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் போது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வந்தாறுமூலை கணேசா வித்தியாலயத்தின் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 78 குடும்பங்களை சேர்ந்த 255 பேரையும், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காவத்தமுனை பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 48 குடும்பங்களை சேர்ந்த 131 பேரையும் அரசாங்க அதிபர் நேரில் சென்று பார்வையிட்டதுடன், இடைந்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கான நிவாரண உதவிகளையும் வழங்கி வைத்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 நலன்புரி நிலையங்களில் 353 குடும்பங்களைச் சேர்ந்த 954 பேர் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

10846 குடும்பங்களைச் சேர்ந்த 37845 பேர் தங்களின் வீடுகளில் உள்ள சொத்துக்கள் மற்றும் கால்நடைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் அவர்களுக்கு வேண்டிய நலன்புரி திட்டங்கள் பிரதேச செயலகத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் பிரதேச செயலாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு 3 நாட்களுக்குத் தேவையான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அதனைவிட உலருணவுப் பொருட்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும், அரச உதவியுடனும் வழங்கப்பட்டு வருகின்றன.



இதனைவிட பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு படுக்கை விரிப்பு உள்ளிட்ட நிவாரணங்கள் கொழும்பு அனர்த்த நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. அடைமழை காரணமாக மாவட்டத்தில் கிரான் பிரதேசத்தில் புலிபாய்ந்தகல், வாகரை, கல்லரிப்பு, சித்தாண்டி, பெருமாவெளி, நாசிவன்தீவு போன்ற இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு தற்காலிக படகுப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் இயந்திர சேவைகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எவ்வித தடங்கலும் ஏற்படவில்லை. அது பற்றிய முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும், நாசிவன்தீவில் மாத்திரம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக கடற்படையின் உதவியுடன் படகுச் சேவை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றனது.

### 5100 ஏக்கர் விவசாய செய்கைகளும் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடிகான் அமைப்பு செயல்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான நிதித் தேவையும் நமது மாவட்டத்தில் உள்ளது. இதனை கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் செயல்பட வேண்டி உள்ளது. இவ்வாறான இந்நிலையில் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கால்நடைகளும், வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ள அனர்த்தத்தினால் 5100 ஏக்கர் விவசாய செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒவ்வொருவரும் தங்களது பிரிவிலுள்ள கமநல சேவை திணைக்களத்திற்குச் சென்று பாதிப்புகளை பதிய வேண்டும். அப்போது தான் அவர்களுக்குரிய விவசாய காப்பறுதி நஷ்டஈடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

காலத்துக்கு காலம் அவ்வப்போது சுழற்சியாக இடம்பெறும் இயற்கை, செயற்கை இடர், அழிவு, நாசவேலைகள் என்பன வற்றுக்காக நிவாரணம் வழங்குவதும் நிவாரணத்தைப் பெறுவதும் மாத்திரம் நமது பணியாக இருக்கக்கூடாது. பாதிக்கப்பட்ட பின்னர் அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நிவாரணம் வழங்கும் கலாசாரத்தையும், மக்கள் நிவாரணங்களைப் பெற முண்டியடிக்கும் கலாசாரத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

அழிவுகள் இடம்பெறுவதற்கு முன்னர் அவதானமாக இருந்து அந்த அழிவுகளை முன்னாயத்தமாக முறியடிக்கும் யுக்தித் திட்டமிடல் அனைத்துத் தரப்பிலும் இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக முன்னாயத்தம், முன்னெச்சரிக்கை, தற்காப்பு போன்ற விடயங்களில் இன்னமும் மக்கள் முழுமையாக தயார்படுத்தப்படாத நிலையில் தான் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

காலாகாலமாக எதிர்கொள்ளும் வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை இடர்களையும், அவ்வப்போது மனிதனால் உண்டாக்கப்படும் அழிவு வேலைகளையும் தடுக்கக் கூடிய திட்டமிடல் பொறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

## சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட கணக்குகளை தவறாகப் பயன்படுத்தல்

- வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துவது பொதுவாக விதந்துரைக்கப்படாத வேளையில், சில சிறிய மற்றும் முறைசாரா வியாபாரங்கள் வசதி கருதி அல்லது சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் தனியான வியாபாரக் கணக்குகளைப் பேணுவதிலுள்ள நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு போதியளவில் இல்லாமை காரணமாக, அவ்வாறு செய்வதனை தெரிவுசெய்கின்றன.
- வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனிப்பட்ட கணக்குகளைப் பயன்படுத்துவது அதிகளவு புத்திசாலித்தனமானதோ அல்லது தொழில்சார் அணுகுமுறைக்குரியதோ அல்ல என்பதனைப் புரிந்துகொள்வது முக்கியமானதாக இருப்பதுடன், இது, பல்வேறு சவால்களுக்கும் இடர்நேர்வுகளுக்கும் இட்டுச்செல்லும்.
- காத்திரமான நிதியியல் முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நீங்கள் வியாபாரமொன்றினைத் தொழிற்படுத்துகின்றவராக இருப்பின் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனியான வங்கிக் கணக்கொன்றினைப் பயன்படுத்துவது பொதுவாக மதியுடைய செயலாக இருக்கும். இது, வெளிப்படைத்தன்மையினையும் தனிப்பட்ட மற்றும் வியாபார நிதிகளை வெவ்வேறாகப் பேணுவதற்கு உதவும்
- கலப்பான நிதியிடல்கள் சட்ட மற்றும் வரிச் சிக்கல்களுக்கு வழிவகுத்து, வியாபார நிதிகளைக் காத்திரமான முறையில் கண்டறிந்து முகாமைப்படுத்துவதில் சவால்களை உருவாக்கும்.
- கலப்பான தனிப்பட்ட மற்றும் வியாபார நிதியங்கள் பணம் தூயதாக்கல் தொடர்பான சந்தேகங்கள், குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் புலன்விசாரணைகளைத் தோற்றுவிக்கக்கூடிய கடுமையான குற்றங்களுக்கும் வழிவகுக்கலாம்.
- சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கும் நிதியியல் வெளிப்படைத்தன்மையினைப் பேணுவதற்கும் பிரத்தியேகமான வியாபாரக் கணக்குகளை நிறுவிக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகிறது.
- தனித்தனியான தனிப்பட்ட மற்றும் வியாபார நிதிகள், எளிமைப்படுத்தப்பட்ட நிதியியல் முகாமைத்துவம் பாதுகாப்பான தனிப்பட்ட சொத்துக்கள் என்பனவற்றை உறுதிப்படுத்துவதுடன் தொழில்சார் நம்பகத்தன்மையினையும் அதிகரிக்கிறது.

பணிப்பாளர்
இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

# தொடர்ச்சியான மழையால் விண்ணை முட்டும் மரக்கறி விலைகள்



*நுவரெலியா தினகரன் நிருபர்*

இலங்கை முழுவதும் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக பெய்து வருகின்ற தொடர் மழையின் காரணமாக அனைத்து விவசாய உற்பத்திகளுக்கும் வரலாறு காணாத அளவுக்கு விலை அதிகரித்துள்ளது. அத்துடன் விவசாயிகளும் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளனர். தங்களுடைய விவசாய உற்பத்திகள் விலை அதிகரித்திருந்த போதிலும் அதற்கான இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமையை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக அதிக அளவிலான விவசாய மருந்துப் பொருட்களை பாவிக்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உற்பத்திச் செலவினமானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது. விவசாயத்துக்காக பயன்படுத்தப்படுகின்ற கிருமிநாசினிகள் இரசாயன உரவகைகள் என்பவற்றின் விலைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

அது மட்டுமல்லாமல் விவசாயம் புரிகின்றவர்களின் அன்றாட சம்பளமும், (ஆண் தொழிலாளர்களுக்கு 2500 ரூபா முதல் 3500 ரூபாவரை) அதிகரித்துள்ளது. அதே போல பெண் தொழிலாளர்களின் சம்பளமும் 1500 ரூபா முதல் 2000 ரூபாவரை அதிகரித்துள்ளது. இவ்வாறான ஒரு நிலைமையில் தங்களுடைய விவசாயத்தை தொடர முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த விலை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பது தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக விவசாய பயிர்கள் முற்றாக பாதிக்கப்பட்டதன் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. உரம் தேவையான அளவு பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதன் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்ற கோரிக்கையையும் விவசாயிகள் முன்வைக்கின்றார்கள். இந்த நிலைமை காரமணாக சிறு வியாபாரிகள் அதாவது அன்றாடம் கொழும்பு மெனிங் சந்தை உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள மொத்த விற்பனை நிலையங்களிலும் நாள்தோறும் கொள்வனவு செய்து விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஏனெனில் வழமையாக தாங்கள் கொள்வனவு செய்வதைவிட தற்பொழுது ஏற்பட்டுள்ள விலை அதிரிப்பின் காரணமாக கொள்வனவு அளவை அவர்கள் குறைத்துள்ளனர். ஏற்கனவே தங்களுடைய வியாபாரத்துக்கு அதிகமான பணம் தேவைப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். அதிகளவில் முதலிடு செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

உற்பத்தி குறைவடைந்தமையால் கொழும்பு உட்பட ஏனைய நகரங்களுக்கு அனுப்பப்படும் மரக்கறிகளின் அளவும் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக லொறி உரிமையாரளர்களும் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளனர். ஏனெனில் கொழும்பு மற்றும் பிற நகரங்களை நோக்கி செல்கின்ற லொறிகள் குறைவடைந்துள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் கொழும்பு, தம்புள்ளை, வெலிசர உட்பட மொத்த விற்பனை நிலைங்களில் சுமை தூக்குகின்ற தொழிலாளர்களின் வருமானமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துள்ள பொருட்களின் விலை காரணமாகவும் தங்களுடைய வருமானத்தில் ஏற்பட்டுள்ள இழப்பு காரணமாகவும் தங்களுடைய குடும்பங்களை கொண்டு நடத்த முடியாத இக்கட்டான நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். செலவு அதிகரித்த போதிலும் வருமானம் அதிகரிக்கவில்லை என்ற விடயத்தையே இவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

சாதாரணமாக 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளின் விலைகள் தற்பொழுது 2000 முதல் 2200 ரூபா வரை அதிரித்துள்ளன.வழமையாக ஒரு கிலோவை கொள்வனவு செய்தவர்கள் தற்பொழது 250 கிராம் கொள்வனவு செய்வதற்கே தயக்கம் காட்டுகின்றார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில் விவசாயிகளின் பாதிப்பை தடுத்து நிறுத்தவும் அவர்களை பாதுகாத்துக் கொள்ளவும் அரசாங்கம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை விவசாயிகள் முன்வைக்கின்றார்கள்.

வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு நுவரெலியா மரக்கறிகளின் மொத்த விற்பனை விலை அதிகரித்துள்ளது. கரட் 800 முதல் 900 வரையும், கோவா 500 முதல் 600 வரையும், லீக்ஸ் 400 முதல் 500 வரையும், பீட் 450 முதல் 525 வரையும், என வரலாறு காணாத அளவில் விலைகள் அதிகரித்துள்ளன. தற்போதைய காலநிலை தொடருமானால் விலைகள் இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

# பலன் தருமா பாரத நீதிப்பயணம்?






இந்திய அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் ராகுல் காந்தி தமிழ்நாட்டின் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையில் நடைப்பயணம் மேற்கொண்டார். இந்த நடைப் பயணத்தில் மக்களை எளிதாக சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிய வாய்ப்பாக இருந்தது. மக்களிடம் ஒரு எழுச்சியும் ஏற்பட்டது. இந்தப் பயணத்தின் வெற்றியாக கர்நாடக மாநில சட்டமன்ற தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியையும் பிடிக்க முடிந்தது. இதேபோல விரைவில் வர இருக்கும் மக்களவை தேர்தலை முன்வைத்து, மீண்டும் இரண்டாவது நடைப் பயணத்தை ராகுல் காந்தி தொடங்குகிறார். ஜனவரி 14 ஆம் திகதி இரண்டாம் கட்ட நடைப் பயணத்தை, மணிப்பூரிலிருந்து தொடங்குகிறார். நாட்டின் வடமேற்கில் இருந்து கிழக்காக 15 மாநிலங்கள் வழியாக 6.713 கிலோமீட்டர் தூரத்துக்கு நடைப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்த நடைப்பயணத்திற்கு பாரத நீதிப் பயணம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. முதல் நடைப்பயணத்தைப் போல இரண்டாவது பயணத்துக்கு எந்தளவு பலன் கிடைக்கும் என்று காங்கிரஸ் கட்சியினரும் அரசியல் நோக்கர்களும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இந்தப்பயணம் வெற்றியடைந்தால் இந்திய அரசியலில் பெரிய மாற்றம் வரலாம், ஆனால் அதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பது போன்ற சூழல் தான் தற்போது நிலவுகிறது. தற்போதைய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியை உருவாக்கியிருப்பது பலம் என்றாலும், கூட்டணிக் கட்சிகளுக்கிடையே ஏற்படும் குழப்பங்களால் இந்தியா கூட்டணியின் வெற்றியை சந்தேகக் கண்ணோடு தான் பார்க்க வேண்டியுள்ளது. காங்கிரஸ் கட்சியை எதிர்த்தே பல மாநிலங்களில் புதிய கட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கருத்து முரண்பாடு இருந்தாலும்இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. தேர்தலில் எந்தெந்த கட்சியை முன்னிலைப்படுத்தி முக்கியத்துவம் கொடுத்து தொகுதிப் பங்கீடு செய்வது என்பதில் குழப்பமும் இருக்கிறது.

இந்தியா கூட்டணியில் உள்ள மேற்குவங்கத்தில் மக்களவைத் தேர்தல் தொகுதிப் பங்கீடு தொடர்பாக காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ் தலைவர்களிடைய கருத்து மோதல் எழுந்துள்ளது.மேற்குவங்கத்தில் உள்ள 42 தொகுதிகளில் இரண்டு தொகுதிகளை மட்டுமே காங்கிரஸுக்கு வழங்கவுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி காங்கிரஸ் தலைவர்களிடையே கோபத்தை உண்டாக்கியுள்ளது.

மேற்குவங்க காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் சௌதரி செய்தியாளர்களிடம் கூறியதாவது, திரிணமுல் காங்கிரஸிடம் தொகுதிகளை கேட்டு கையேந்தும் நிலையில் காங்கிரஸ் இல்லை. அவர்களின் நன்கொடை எங்களுக்குத் தேவையில்லை. காங்கிரஸ் எத்தனை தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என தீர்மானிக்க அவர்கள் யார்? தேவைப்பட்டால் மக்களவைத் தேர்தலில் தனித்துக் கூட போட்டியிடுவோம் என்று கொந்தளித்துள்ளார்.



அதீர் ரஞ்சன் சௌதரியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து திரிணமுல் காங்கிரஸின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் சௌகதராய் கூறியதாவது, திரிணமுல் குறித்தும் மம்தா பானர்ஜி குறித்தும் தவறாகப் பேசுபவர்களின் கூட்டணியில் தொடர்வது முறையல்ல. கூட்டணியில் தொடர வேண்டுமானால், அதீர் ரஞ்சன் சௌதரி மற்றும் மாநிலத்தில் உள்ள பிற காங்கிரஸ் தலைவர்களும் தவறான கருத்துகளை முன்வைப்பதை தவிர்க்க வேண்டும். காங்கிரஸ் மேலிடம் இவர்களைக் கண்டிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா கூட்டணியில் உள்ள இன்னொரு கட்சியான ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய தலைவர்களை ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி வருமான வரித்துறை மற்றும் அமலாக்கத்துறையினரின் மூலம் முறைகேடுகளில் ஈடுபட்டதாக கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டு நெருக்கடிகளைக் கொடுத்துவருகிறது. ஆம் ஆத்மி கட்சியின் வளர்ச்சியை முடக்க வேண்டும், தற்போது டெல்லியிலும் பஞ்சாபிலும் ஆம் ஆத்மி தான் ஆட்சி நடத்தி வருகிறது. ஊழலற்ற ஆட்சியை நடத்துவார்கள் என்றுதான் மக்கள் ஆம்ஆத்மியை நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையை உடைக்க வேண்டும் என்பதற்காகவே ஆளும்கட்சி இவர்கள் மீது ஊழல் புகார்களைக் கூறிவருகிறது.

இதுபற்றி காங்கிரஸ் கட்சியிலிருந்து எந்தவிதமான எதிர்வினையும் இல்லை என்ற முணுமுணுப்பும் அரசியல் மட்டத்தில் இருக்கிறது. காங்கிரஸைப் பொறுத்தவரையில் கூட்டணிக் கட்சிகளின் தனிப்பட்ட பிரச்சினைகளில் தலையிடுவதில்லை என்பதில் தெளிவாக இருக்கிறது. எனினும் கூட்டணியில் இருக்கும் கட்சிகளின் மீதும் கொஞ்சம் கவனம் எடுத்திருந்தால் அண்மையில் நடந்த ஐந்து மாநில தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிக்கு நல்ல வெற்றிவாய்ப்பு கிடைத்திருக்கும். தனித்த அடையாளத்துடன் வெற்றிபெற வேண்டும் என்று காங்கிரஸ் அடம்பிடிப்பதிலிருந்து விலகி, கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு பயணிப்பது தான் எதிர்காலத்துக்கு நல்லது.



ஆளுங்கட்சியான பாரதிய ஜனதா கட்சிக்கு உலக அளவில் நல்ல அங்கீகாரம் கிடைத்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் முன்னெடுப்புகள் பயனுள்ளதாக இருப்பதாக பலரும் பேசத் தொடங்கியுள்ளதையும் எதிர்க்கட்சிகள் அவதானிக்க வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்தியா வலுவாக செயலாற்றி வருவதாக, சீனாவில் இருந்து வெளியாகும் அரசு ஊடகமான குளோபல் டைம்ஸ் நாளிதழ் பாராட்டியுள்ளது. இந்தியா, சீனா இடையே எல்லைப் பிரச்சினை உட்பட பல்வேறு விவகாரங்கள் தீர்க்கப்படாமல் இருந்த போதிலும், பொருளாதார ரீதியாக கடும் போட்டிகள் இருந்தாலும் சீனப் பத்திரிகை பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டியிருப்பது சர்வதேச அளவில் கவனம் பெற்றிருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் இந்திய பொருளாதாரம் முதற்கொண்டு பல்வேறு துறைகளில் வளர்ச்சிப்பாதையில் இந்தியா பயணிக்கிறது என்பதை நிரூபிக்கும் விதமாக மோடி தலைமையிலான அரசின் முக்கிய தலைவர்களின் செயல்பாடுகளும் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வருவதாக கருத்துக்கணிப்புகள் கூறி வருவது மீண்டும் பாரதிய ஜனதா தலைமையிலான ஆட்சியே இந்தியாவில் அமையலாம் என்று அரசியல் நோக்கர்கள் கூறுவதும் அவதானிக்கத் தக்கது.

இவ்வாறான சூழலில் ராகுல் காந்தியின் நடைப்பயணம் எந்தளவுக்கு பயன் தரும் என்பது சந்தேக் கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டியுள்ளது. ஏனென்றால் காங்கிரஸ் கட்சிக்கு ராகுலைத் தவிர நாடறியக்கூடிய ஆளுமைமிக்க தலைவர் இல்லை என்பதும் ஒரு குறையே. இந்தியாவில் அரசியல் மாற்றம் வரவேண்டும் என்பது பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக இருந்தாலும், காங்கிரஸ் அதைக் கொண்டு வருமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# சூரிய வழிபாட்டுடன் இணைந்த தைமாதப் பிறப்பும் தைப்பொங்கலும்



இந்து மதத்திற்கு உரித்தான பல பண்டிகைகளும், விழாக்களும், சிறப்புத் தினங்களும் வருடந்தோறும் வந்து போகின்றன. இவற்றுள் ஒன்றாக அமைந்திருப்பது தைப்பொங்கல் திருநாளாகும். இது தைமாதப் பிறப்புடன் இணைந்ததாக முக்கியத்துவம் பெறுவது சிறப்புக்குரியது.

நவக்கிரக நாயகர்களுள் முதன்மை பெறுபவர் சூரிய பகவான். கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படும் சிறப்புக்குரியவர். உலகம் முழுவதும் உயிர்ப்புடன் இயங்குவதற்கு துணைநிற்கும் இயற்கை சக்திகள் அனைத்துக்கும் மூலசக்தியாக விளங்குபவரும் இவரே. சூரிய பகவானின் இயக்கம் செம்மையாக அமையப் பெற்றால்தான், உலகில் மனிதகுலம் மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளும், தாவரங்களும் செயற்படக்கூடியதாக இருக்கும்.

சூரிய வழிபாடு உலகின் பல நாடுகளிலும் நீண்டகாலமாகவே மேற்கொள்ளப்பட்டுவரும் பாரம்பரிய சிறப்பைக் கொண்டது. இத்தகைய பெருமைக்குரிய சூரிய வழிபாட்டுடன் இணைந்ததாகவே இந்து மக்களின் விழாக்களான தைமாதப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் அமைந்திருக்கின்றன. இவ்விரு சிறப்பு நாளிலும் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைக்கும் கருமங்கள் மேற்கொண்டு வருகின்றபோதிலும், பெருமளவு இந்து மக்கள் தைமாதப் பிறப்பு தினத்தன்றே பொங்கல் விழாவை கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இராசி மண்டலத்தில் சூரிய பகவானின் ஒவ்வொரு இராசிப் பிரவேசமும் ஒவ்வொரு தமிழ் மாதங்களினதும் உதயமாக அமைகின்றது. முதலாவதான 'மேட' இராசிக்குள் பிரவேசம் செய்யும் போது சித்திரை மாதம் பிறக்கிறது. அதுபோலவே, பத்தாவதான 'மகர' இராசிக்குள் சூரிய பகவான் பிரவேசம் செய்யும்போது தைமாதம் பிறக்கிறது.

தைமாதப் பிறப்பு மற்றொரு வகையிலும் சிறப்புப் பெறுகிறது. அதாவது பூவுலக மக்களுக்குரிய ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒருநாளாக அமைந்துள்ளது. அந்த வகையில் தை முதல் ஆனி மாதம் வரையிலான ஆறுமாத காலம் பகற்பொழுதாகும். இது உத்தராயணம் எனப்படுகிறது. ஆடி முதல் மார்கழி மாதம் வரையிலான ஆறுமாத காலம் இரவுப் பொழுதாகும். இது தட்சணாயணம் எனப்படுகிறது. தேவர்களுக்குரிய பகற்பொழுதின் ஆரம்பமே தைமாதப் பிறப்பாகும். எனவேதான் இந்த நாள் பூவுலக மக்களுக்கு பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.

உழவர் பெருமக்கள் தங்கள் வயல்நிலங்களில் விதைத்து அறுவடை செய்த நெல்லிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தரிசியைப் பயன்படுத்தி சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து தைமாதப் பிறப்புத் திருநாளைக் கொண்டாடுவதே தைப்பொங்கல் வரலாற்றின் ஆரம்பமாக அமைந்திருந்தது. இதன் காரணமாகவே 'உழவர் திருநாள்' என்ற பெயரிலும் தைப்பொங்கல் அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இது இந்து மக்களது பண்டிகைகளுள் ஒன்றாக மாறியதால், உழவர் பெருமக்களுடன் இணைந்து அனைத்து இந்து மக்களும் தைமாதப் பிறப்பு நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது வழக்கமாகிவிட்டது.

தைமாதப் பிறப்பன்று தங்கள் வீட்டின் முற்றத்திலேயே பொங்கல் செய்வதை நீண்டகால பாரம்பரிய வழக்கமாக இந்து மக்கள் மேற்கொண்டு வருகிறார்கள். முற்றத்தில் நீள் சதுரமான பெரிய அளவிலான நிலப்பகுதியை தேர்ந்தெடுத்து, அதனை பசுவின் சாணத்தால் மெழுகி கோலமிட்டு, அந்த இடத்தைச் சுற்றிவர மாவிலை, தோரணங்களால் அலங்கரித்து, தலைவாழை இலையில் பூரண கும்பம் வைத்து, குத்துவிளக்கேற்றி, இஞ்சி இலை, மஞ்சள் இலை, மாவிலை என்பன கட்டிய புதுப் பானையில் பொங்கல் செய்வது தொன்மைமிகு மரபாகும்.

இவ்வாறு இந்து மக்கள் முற்றத்தில் பொங்கி முடித்தபின்னர் அதே இடத்திலேயே தலைவாழை இலையில் பொங்கல் படைத்து சூரிய பகவானை வழிபாடு செய்யும் நிகழ்வானது தெய்வ வழிபாட்டுக்குச் சமமான உன்னத செயற்பாடாக அமைந்துள்ளது. இந்தவகையில் பொங்கல் சாதமானது சூரிய பகவானுக்குரிய நைவேத்தியப் பொருளாக சிறப்புப் பெறுவதுடன், அவரது அருளால் பெற்றதை அவருக்கே நன்றியுடன் நிவேதனம் செய்யப்படுவதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையில் தைப்பொங்கல் பண்டிகை ஒரு சமய விழா என்பதற்கும் மேலாக உழவர் திருநாள் என்பதுடன், தமிழர் திருநாளாகவும், தமிழ் மக்களின் கலாசாரப் பெருவிழாவாகவும் கொண்டாடப்பட்டு வருவது சிறப்புக்குரியது. தைப்பொங்கல் கருமத்தின்போது பால் பொங்கிப் பெருகுவது அல்லது பொங்கி வழிவதுபோல ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் வாழ்வில் இன்பம் பொங்க வேண்டும், ஆரோக்கியம் பொங்க வேண்டும், செல்வம் பொங்க வேண்டும் என்ற பல்வேறு சிறப்பான எதிர்பார்ப்புகளுடன் தைப்பொங்கல் விழாவை கொண்டாடுகிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மையாகும். இதனையே "தை பிறந்தால் வழி பிறக்கும்" என நம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

இந்து மக்கள் திருமணம் போன்ற மங்களகரமான காரியங்கள், புதுமனைப் பிரவேசம், புதிய கல்வி நிறுவனங்கள், புதுவிற்பனை நிலையம், பயிர்ச்செய்கை போன்ற பல்வேறுபட்ட சுபகருமங்களை தைமாதத்திலேயே மேற்கொள்வார்கள். தை மாதத்தில் ஆரம்பிக்கும் கருமங்கள் வெற்றியையும், சிறப்பையும் கொடுக்கும் என்பதில் இந்து மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை காலமும் எமது நாட்டில் நிலவிவந்த துன்ப துயரங்கள் நீங்கி, எதிர்காலத்தில் அனைவரினதும் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கவேண்டும் என நாளை (15.01.2024) உதயமாகும் தைத்திருநாளிலே இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

**அ. கனகசூரியர்**




- உண்மைச் சொத்து முகவர்கள்
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள்
- காசினோக்கள்
- சட்டவாளர்கள்
- நொத்தாரிசுகள்
- நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது கம்பனிப் பணிகள் வழங்குவோர், அல்லது
- கணக்காளர்கள்

ஆகியோருடன் கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்றவரா?

அவ்வாறாயின்

மேற்குறிப்பிட்ட நிதியல்லா வியாபாரங்கள் உங்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது அல்லது உங்கள் தகவல்களைக் காலாந்தர அடிப்படையில் இற்றைப்படுத்தும் பொழுது கீழேயுள்ள தகவல்களைத் தயவுசெய்து வழங்கவும்.

- முழுப் பெயர்
- நிரந்தர வதிவிட மற்றும் அஞ்சல் முகவரி
- தொழில், தொழில்தருநரின் பெயர், வியாபாரம் அல்லது பிரதான நடவடிக்கை
- உங்கள் புகைப்படத்தினைத் தாங்கிய அதாவது வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரரின் அலுவல்சார் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் (உ-ம் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமப்பத்திரம்)
- பிறந்த திகதி
- தேசியம்
- நிதிகளின் மூலம்
- கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம்
- தொலைபேசி இலக்கங்கள் (வதிவிடம், அலுவலகம் அல்லது செல்லிடத் தொலைபேசி)

தாங்கள் வழங்கிய தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது மேற்குறிப்பிட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது தங்களின் பொறுப்பாகும்.

நிதியல்லா வியாபாரங்கள் அவர்கள் வழங்குகின்ற பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காக உங்கள் தகவல்களைச் சேகரிக்கும் போது நிதியியல் குற்றங்களின் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் சட்டபூர்வ தேவைப்பாடுகளைப் பின்பற்றவும்.

நிதியல்லா வியாபாரங்களினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற தகவல்களை வழங்குவதும் சாத்தியமான நிதியியல் குற்றங்களிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட சுமுகமானதும் விளைத்திறன் மிக்கதுமான நிதியியல் பணிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஒத்துழைப்புக்களை நல்குவதும் உங்களின் பொறுப்பாகும்.

எனவே, இது தொடர்பில் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது.

கூடுதலான தகவல்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட 2018 ஜனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இல.2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன) விதிகளைப் பார்வையிடுவதற்கு கியூஆர் குறியீட்டினை ஸ்கேன் செய்யவும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை தனித்த யானையாக தனது பயணத்தை ஆரம்பித்து, நாட்டை முன்னேற்றும் போராட்டத்தில் இறங்கியுள்ளார்.

பிரச்சினைகளை மட்டும் பேசிக் கொண்டிருப்பதா? பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கிச் செல்வதா? என்ற கேள்வியைக் கேட்டால், புத்தியுள்ள மனிதரெனில் தீர்வை நோக்கி செல்வதே சிறந்தது என்ற பதிலையே சொல்வார்கள்.

எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளை மட்டுமே பேசிக் கொண்டிருக்கின்றன. அவற்றை வைத்து அரசியல் செய்துகொண்டிருக்கின்றன. 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடு கொளுந்துவிட்டெரிந்த போது யாரும் தீர்வுகளைத் தேட வில்லை. என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை. பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட இளைஞர்களின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல வழியின்றி அரசியல் தலைவர்கள் தவித்தனர். அப்போது ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக ஜனாதிபதி பதவியை ஏற்றார். நாட்டை வழிநடத்தினார். ஒவ்வொரு பிரச்சினையாக அலசி ஆராய்ந்து, தூர நோக்கு சிந்தனையுடன் முடிவுகளை எடுத்து தீர்வுகளைக் கண்டுவருகின்றார். இதற்கமைய குறுகிய காலப் பகுதிக்குள் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்கு உடன் தீர்வுகளை வழங்கிவருகின்றார். நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளுடன் திட்டங்களை வகுத்துள்ளார்.

நாட்டை மீட்பதற்கான இந்த பயணத்தில் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். ஒரு தடவை அல்ல பல தடவைகள் இவ்வாறு அழைப்புகள் விடுக்கப்பட்டன. எனினும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிட்ட வகையில் அந்த அழைப்பை எதிரணிகள் நிராகரித்துவருகின்றன.



# பொருளாதாரத்தை முன்னேற்றும் பயணத்தில் ஜனாதிபதி ரணில்

**தேர்தல் வருடம்!**

இந்த வருடம் தேர்தல் வருடம். தேர்தல் சமரை சந்திக்க கட்சிகள் தயாராகிவருகின்றன. இதனால் அரசியல் களமும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்தில் வருடத்தின் முதல் பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு விஜயம் செய்தார். தேர்தல் வருடமென்பதால் இந்த பயணத்துக்கும் அரசியல் சாயம் பூசப்பட்டது. உண்மை அதுவல்ல. இது அரசியல் பயணம் அல்ல, அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான பயணமாகும். வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தொடரவிடக்கூடாது. அவற்றுக்குத் தீர்வு கண்ட பின்னர், நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்த வேண்டும் என்ற தெளிவான செய்தியையே தனது வடக்கு பயணம் மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

' இவ்வருடத்தில் முதல் ஆறு மாதங்களுக்கு பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளை செய்ய வேண்டும். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், அதன் பின்னர் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் பிரதேச சபைத் தேர்தல்களை நடத்த முடியும்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தல் வருடம் என்றாலும் வடக்கு பயணத்தில் ஜனாதிபதி, நாட்டின் அபிவிருத்தியை மையப்படுத்திய, கூட்டங்களையும், சந்திப்புக்களையும் அதிகமாக நடத்தியிருந்தார்.

பொதுவாக தெற்கில் இருந்து அரசியல் தலைவர்கள் வடக்குக்கு செல்லும்போது போரினால் ஏற்பட்ட பிரச்சினைகளை மட்டும் கதைத்துவிட்டு வருவார்கள்.

உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்து தற்போது 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும் போரினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வுகள் எட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

யுத்தத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை இந்த இரண்டு வருடங்களில் முழுமையாக தீர்க்க வேண்டும். அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும் என்பதே ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாடாகும்.



**யாழ்ப்பாண விஜயத்தில் என்ன நடந்தது?**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஜனாதிபதி நடத்தியிருந்தார். பின்னர் வன்னி தேர்தல் மாவட்டத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை வவுனியாவில் நடத்தியிருந்தார்.

இதன்பின்னர் பூநகரி நகரை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் குறித்து ஆராய்ந்தார். அத்துடன் பூநகரி கோட்டையைப் பார்வையிட்டதுடன், பெண் தலைமைத்துவத்தில் இயங்கும் வன்னி மரமுந்திகை தொழிற்சாலைக்கும் சென்றிருந்தார்.

## பிரச்சினைகளை மட்டுமே பேசிக்கொண்டு இருக்கும் எதிர்க்கட்சிகளால் விளையும் பயனென்ன?



சர்வதேச ரீதியாக சாதனை செய்த கில்மிசா, அகிலநாயகி ஆகியோரையும் சந்தித்து கௌரவப்படுத்தினார். உற்சாகப்படுத்தினார். 72 வயதில் சர்வதேசத்தில் சாதனை செய்த அகில நாயகியை, வடக்கில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த ஆலோசனை வழங்குமாறு அழைப்பு விடுத்தார்.

அதேபோல், யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தித்திருந்தார். ஜனாதிபதியை சந்தித்த மாணவர்களை வடக்கிலுள்ள ஊடகங்கள் விமர்சித்திருந்தன. ஆனால், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை முதல்தர பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார். அடுத்த இரண்டு வருடங்களில் யாழ். பல்கலைக்கழகத்தை முதல்தர பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்று அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

சுகாதாரத் துறையினர், சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள், சிவில் அமைப்பினர், மீனவ, விவசாய சங்கப் பிரதிநிதிகள் என பல தரப்பினரையும் ஜனாதிபதி தனது விஜயத்தில் சந்தித்திருந்தார்.

சுகாதார துறையினர் முதல் மீனவச் சங்கங்கள் வரை அனைத்துத் தரப்பினரும் தற்போதிருக்கும் நடைமுறைப் பிரச்சினைகளை முன்வைத்தனர். அதற்கான விளக்கங்களையும், தீர்வுகளையும் ஜனாதிபதி முன்வைத்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதிருப்பதற்கும் சுபீட்சமான எதிர்காலத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஜனாதிபதி தெளிவாக முன்வைத்தார்.

**கட்டுப்படியான ரயில் பெட்டிகள்**

நாட்டின் 50 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்தில் மட்டுமே பெருமளவில் தங்கியிருக்கிறது. ஏனைய 8 மாகாணங்களிலும் 40 வீதமான பொருளாதாரம் தங்கியிருக்கிறது. எனவே, இந்த ரயில் பெட்டிகளில் (மாகாணங்களில்) மேலும் நான்கு எஞ்ஜின்களைப் பொருத்தி, பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஐந்து என்ஜின்களுக்கு ஐந்து பெட்டிகள் என்ற வகையில் பொருளாதாரத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார். அதன்பின்னர் ஏனைய நான்கு பெட்டிகளுக்கும் இன்னும் இரண்டு பெட்டிகளை இணைக்கத் திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் 2024ஆம் ஆண்டில் 2 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும்.

2025ஆம் ஆண்டு இதனை 5 வீத வளர்ச்சியாக மேம்படுத்த முடியும். இதனை தொடர்ந்து இயக்கினால் 2030ஆம் ஆண்டு 78 வீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். இந்தப் பயணம் நீடித்தால் அடுத்த பத்து வருடங்களில் நாடு அதிவேக பொருளாதார வளர்ச்சியை எட்டும். இதுவே ஜனாதிபதியின் திட்டமாகும். இதனை தெளிவாக வடக்கில் பொதுமக்களுக்கு விளக்கினார் ஜனாதிபதி.

அதேநேரம் 2048ஆம் ஆண்டில் இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றவேண்டும் என்ற இலக்கை ஜனாதிபதி கூறி வருகிறார். இலங்கை சுதந்திரமடைந்து 2048இல் நூறு ஆண்டுகள் பூர்த்தியாகும் என்பது ஒரு காரணமாக இருந்தாலும் தற்போது இலங்கை பெற்றுள்ள சர்வதேச கடன்களை சலுகை அடிப்படையில் செலுத்தி முடிக்க இன்னும் 20 ஆண்டுகள், அதாவது 2044 ஆம் ஆண்டு வரையில் செல்லும்.

எனவே அதுவரையில் கடன் செலுத்துவதையும் ஏனைய நிதிச் செயற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

இந்த தூரநோக்குடனேயே ஜனாதிபதி அந்த இலக்கை வைத்துள்ளார். அதேபோல் அதற்கான ஆரம்ப புள்ளியை இட்டுவரும் ஜனாதிபதி, மறுமுனையில் எதிர்கால சந்ததியினர் எவ்வாறான இலக்குகளை கொண்டு நகர வேண்டும் என்ற விடயங்களையும் தனது பேச்சுக்களில் அதிகம் கூறி வருகிறார்.

**வடக்கின் வளம்!**

வடக்கில் காற்றாலை இருக்கிறது. இதனை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். காற்றாலை, சூரியசக்தி ஆகியவற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இவற்றில் 10 வீதத்தை உள்நாட்டுத் தேவைக்குப் பயன்படுத்திய பின்னர், மீதமுள்ளதை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முடியும்.

இதன்மூலம் பாரியளவு வெளிநாட்டு வருமானத்தைப் பெற முடியும். இதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால திட்டமாக இருக்கிறது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், மின்சாரத்தின் விலையும் வெகுவாக குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அத்துடன், பூநகரி நகரை அபிவிருத்தி செய்து, வடக்கின் முக்கிய வர்த்தக மையமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கின் பொருளாதார கேந்திர நிலையமாக பூநகரி நகரை அபிவிருத்தி செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மன்னார் முதல் திருகோணமலை வரை தீவுகளை இணைத்து சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை கல்வி கேந்திரமாக மாற்றி, வெளிநாட்டு மாணவர்களையும் உள்ளீர்ப்பதற்கான திட்டத்தை ஜனாதிபதி பரிந்துரைத்தார்.





# அகவை எண்பத்தேழில் சிவானந்தினி துரைசுவாமி



இலங்கை இந்துப் பேரவையையும் சிவானந்தினி துரைசுவாமியையும் பிரித்துப் பார்க்க முடியாது. இந்த அமைப்பின் ஸ்தாபகத் தலைவரான அமரர் யோகேந்திரா துரைசுவாமியின் மனைவியான இவர் இந்துப் பேரவையின் மிகச் சிறந்த செயற்பாட்டுத் தலைவராகவும், மூத்த உறுப்பினராகவும் விளங்கி,வழிநடத்தி வருகிறார்.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக கொழும்பு சைவ மங்கையர் கழகத் தலைவியாகவும், இலங்கையில் முன்னணிப் பாடசாலையாக விளங்கும் சைவ மங்கையர் வித்தியாலயத்தின் முகாமையாளராகவும் விளங்கி அரும்பணியாற்றியவர். பல சமூக நிறுவனங்களுடன் ஆத்மார்த்தமான உறவுகளைப் பேணி தன் சமூகத்திற்கு தொண்டாற்றி வருபவர்.

பெண்களின் முன்னேற்றத்தின் மூலம் ஒரு சமூகத்தை தலைநிமிரச் செய்ய முடியும் என்ற இலட்சிய நோக்கத்துடன் செயற்பட்டு வரும் இவரின் பணிகளை இலங்கை இந்துப் பேரவை என்ற அமைப்பினூடாகவும் அறிந்து கொள்ள முடியும். இலங்கை இந்துப் பேரவை முப்பத்தொன்பது ஆண்டுகளை நிறைவு செய்து வளர்ந்து நிற்கிறது.

இந்துப் பேரவையின் வளர்ச்சியையும், அதன் கடந்தகாலப் பணிகளையும், சமூக கலாசாரப் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்கும் பண்பையும் எண்ணிப் பாரக்கும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்துப் பேரவையானது கடந்த கால வரலாற்றில் கட்டி எழுப்பிய சாதனைகளும் மேன்மைகளும் போற்றுதற்குரியன ஆகும்.

இதன் முப்பத்தொன்பது கால வரலாற்றை மீள் நோக்கிப் பார்த்தால் அது செய்த சேவைகளும் பணிகளும் அதன் சாதனைகளும் இந்துப் பேரவையை தோற்றுவித்தவர்களையும் அதனை வழிநடத்திச் சென்றவர்களையுமே சாரும்.

1985களில் ஏற்பட்ட சில இடர்ப்பாடுகள் காரணமாகவும், அதைத் தீரப்பதற்கு எடுத்த முயற்சிகளின் பலனாகவும் உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் இலங்கை இந்துப் பேரவை ஆகும். முன்னாள் யாழ் அரசாங்க அதிபரும் மிகச் சிறந்த ராஜதந்திரியுமான அமரர் யோகேந்திரா துரைசுவாமியால் உருவாக்கப்பட்டு முதல் தலைவராக அவர் செயற்படத் தொடங்கினார்.



இப்பேரவையின் நோக்கம் இந்துசமயப் பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு, கல்வி ஆகியவற்றின் வளர்ச்சியுடன் இவற்றின் மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுமாகும். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டு தமிழும், சைவமும் தழைத்தோங்க இலங்கையின் பல பாகங்களிலும் இணைப்பாளர்களை இணைத்து பல கைங்கரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தாபகத் தலைவரின் மறைவுக்குப் பின்னர் தலைவியாகவும், தற்போது உபதலைவர்களில் ஒருவராகவும் விளங்கி செயற்படுவதுடன் ஏனைய உறுப்பினர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குகிறார். நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின் போது இப்பேரவை பெரும்பணியாற்றியது. வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி மீளளிப்புக் கடன் போன்ற சிறந்த திட்டங்களை குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ஆதரவு நல்கும் வகையில் செயற்படுத்தி வருகிறது.

இவையாவற்றுக்கும் உந்து சக்தியாக விளங்கிய தாபகத் தலைவரையும், அவர்தம் துணைவியான சிவானந்தினி அம்மையாரையும் நன்றியுடன் நீள நினைந்து, வணங்கி நிற்கிறது. இப்பணிகள் மேலும் சிறக்க இறைவன் ஆசியையும் இப்பேரவை வேண்டி நிற்கிறது.

## அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# நாட்டை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் சந்திப்பு

**நாட்டை மீட்டெடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து எம்முடன் அவர் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.**



**கே: தொழில்சார் வல்லுநர்கள் தற்பொழுது பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை நாட்டின் பொருளாதார வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில்: தொழில்சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது புதிய விடயம் அல்ல. ஆனால் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரதூரமான நிலைமை ஏற்படலாம். நாடு தற்போது பொருளாதார ரீதியாக சாதகமான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதைய நெருக்கடி தற்காலிகமானது, சரியான பாதையில் சென்றால் இதனை வென்றிட முடியும்.

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் ஏற்படவில்லை. உலகின் மற்றைய நாடுகளைப் போலவே நாமும் சரிந்தோம். ஆனால் உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாம் விரைவாக மீட்சிபெற்றோம். எங்களின் கஷ்டங்கள் அனைத்தும் விரைவில் தீர்ந்துவிடவில்லை. இதற்கு சிறிது காலம் எடுத்தாலும், தற்போது பொருளாதாரம் சாதகமாக இருப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளோம். ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டுவது நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழியாக அமையாது. இது ஒரு தற்காலிக நிலைமை. எதிர்காலத்தில், இழந்த நம்பிக்கைகள் அல்லது நன்மைகளை மீண்டும் பெறுவோம்.

**கே: வரி அறவீடு அதிகமாக இருப்பதே தொழில் வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. இதில் உண்மை உள்ளதா?**

பதில்: 2022 இல் அதிகமான தொழில் வல்லுநர்கள் வெளிநாடு செல்லத் தொடங்கினர். நாட்டின் மீது நம்பிக்கை இல்லாத காலம் அது. இந்த நிலையை அரசியல் கோணத்தில் பார்க்கக் கூடாது. இன்று ஒரு நம்பிக்கையான நாடு உள்ளது. இன்றைய நிலையில், அனைவரும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணலாம். ஆனால் இந்த பொருளாதார நெருக்கடிதான் அதிகாரம் பெறுவதற்கு சரியான சந்தர்ப்பம் என்று சிலர் நினைக்கிறார்கள். இது குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதைப் போன்றதாகும்.

**கே: ஆனால், மக்களுக்குப் பெரும் துன்பங்களும் பொருளாதாரக் கஷ்டங்களும் இருக்கின்றன, இல்லையா?**

பதில்: ஒரு நாடாக நாம் மிகவும் கடினமான முடிவுகளை எடுத்துள்ளோம். இன்று நாடு ஒரு குறிப்பிட்ட நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. சந்தர்ப்பவாத, அரசியல் கோணத்தில் இருந்து பார்க்காமல் சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும். மக்களுக்கு சிரமம் உள்ளது. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் அதை நிராகரிக்கவில்லை. வீழ்ச்சியுற்ற நாட்டை ஒரேயடியாக மீட்க முடியாது. சிரமங்களிலிருந்து விடுபட, முதலில் ஒரு திட்டம் தேவை. குறுகிய கால சிரமங்கள் இருக்கும். அந்த அசௌகரியங்களைத் தவிர்க்க சமூக நலத்திட்டங்களை வழங்கியுள்ளோம். செழிப்பைப் பார்க்கும் அதே கண்களால் வறுமையைப் பார்க்காதீர்கள்.

**கே: சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நீடிக்கப்பட்ட கடன் வசதிகளைப் பெற்ற பிறகு பொருளாதாரத்தில் ஒரு பெரிய மறுமலர்ச்சி எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பார்க்கும் போது பாரிய மாற்றங்கள் தென்படவில்லையே?**

பதில்: ஒரு நாடாக வங்குரோத்து நிலையில் இருந்து மீள, உலகில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களின் ஆதரவை நாட வேண்டும். ஆனால் நிதி ஒழுக்கத்தைப் பேணுவது அவசியம். இந்த நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிக்காததால்தான் நாங்கள் சரிவைச் சந்தித்தோம். இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கே நாம் 2022 ஆம் ஆண்டு தொடர்பான அனைத்து விடயங்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

**கே: அரசாங்கத்தின் இந்த பொருளாதார நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் மீது ஏமாற்றமடைந்தால் என்ன செய்வது?**

பதில்: 22 மில்லியன் மக்களின் வாழ்வோடு விளையாட முடியாது. அந்தப் பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இன்று நாம் பிரபலமான முடிவுகளை எடுக்க வேண்டியதில்லை. குறுகிய காலத்தில் சில சிரமங்கள் ஏற்பட்டாலும், இன்று எடுக்கப்பட்ட இந்த முடிவுகளால் பொருளாதாரம் காப்பாற்றப்பட்டது. விமர்சனம் எளிதானது, பழி எளிதானது என்பதை மக்கள் எதிர்காலத்தில் புரிந்து கொள்வார்கள்.

**கே: வற் வரியை 18 வீதம் ஆக உயர்த்துவது நம் நாட்டு மக்களின் பொருளாதாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் அல்லவா?**

பதில்: நமது நாட்டில் பணவீக்கம் 70 வீதம் ஆக இருந்தது. வற் வரி அதிகரிப்புடன், பணவீக்கம் 2 வீதம் ஆக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இதற்கிடையில், தேவையான பொருளாதார கருவிகளைப் பயன்படுத்தி அதைக் கட்டுப்படுத்தும் நோக்கம் உள்ளது. மேலும், இந்த விமர்சனங்களும் விளக்கங்களும் சரியல்ல என்பது இரண்டாவது விடயம்.

வற் வரி 15 வீதம் முதல் 18 வீதம் வரை அதாவது 3 வீதம் மட்டுமே அதிகரிக்கும். மேலும், வற் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட 138 பொருட்களில் 94 பொருட்களுக்கு இந்த வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு தயாரிப்பு 15 வீதத்திலிருந்து 18 வீதம் வரை மட்டுமே செல்கிறது. உயர்த்தப்பட்ட வற் வரியை முறையாகப் பெற்றால் மட்டுமே, வரிக் குறைப்பைப் பரிசீலிக்க முடியும். அரசின் வருவாயை அதிகரிப்பதே இதன் நோக்கம். அந்த வருமானம் கிடைத்தால்தான் பொதுச்சேவைகளை நடத்த முடியும். அஸ்வெசும போன்ற சமூகநலப் பணிகளைச் செய்ய முடியும். உர மானியம், ஊனமுற்றோர் உதவித்தொகை, சிறுநீரக நோயாளர் உதவித்தொகை, மருத்துவமனை நலன்புரி, கல்வி, ஓய்வூதியம் போன்றவற்றை வழங்கலாம். மேலும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. உண்மையை உள்ளபடியே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

விரல்களை நீட்டுவதும் விமர்சிப்பதும் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்தி, அதற்கேற்ப செயல்பட்டு வருகிறோம். மேலும் நாங்கள் மிகவும் சிக்கலான ஆபத்து சூழ்நிலையில் இருக்கிறோம். ஏனென்றால் எதிர்காலத்தில் இன்னும் ஆபத்தான சூழ்நிலைகள் வரலாம். பழைய பழக்கவழக்கங்களோடு வாழலாம் என்று நினைத்தால் அது நல்ல முடிவு அல்ல.

**கே: இந்த பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தில் நாம் ஒரு நல்ல நிலையை அடைய முடியும் என்று நினைக்கிறீர்களா?**

பதில்: வரி செலுத்த வேண்டிய மக்களை வரி செலுத்த ஊக்குவிக்க வேண்டும். 12 இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நாட்டின் வரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இல்லையெனில், தேவையான தீர்வுகளை எங்களால் மேற்கொள்ள முடியாது. அவர்கள் கடனைச் செலுத்த வேண்டும். மற்றபடி குறைந்த வரி செலுத்தியோ, வரி கட்டாமல் இருந்தோ வரி அதிகம் என்று கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை. பொருளாதார நெருக்கடியால், இந்த நிலையைப் புரிந்துகொள்வது பலருக்கு கடினமாக உள்ளது.



> விரல்களை நீட்டுவதும் விமர்சிப்பதும் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்தி, அதற்கேற்ப செயல்பட்டு வருகிறோம். நாங்கள் மிகவும் சிக்கலான ஆபத்து சூழ்நிலையில் இருக்கிறோம். எதிர்காலத்தில் இன்னும் ஆபத்தான சூழ்நிலைகள் வரலாம். பழைய பழக்கவழக்கங்களோடு வாழலாம் என்று நினைத்தால் அது நல்ல முடிவு அல்ல!

# உலகமே உற்றுநோக்கும் வகையில் களைகட்டுகிறது அயோத்தி நகரம்!



## இந்திய வரலாற்றில் அதிசிறப்பு வாய்ந்த தினம் இம்மாதம் 22 ஆம் திகதி!

அயோத்தி இராமர் கோயில் விவகாரம் இந்திய அரசியலில் தவிர்க்க முடியாதபடி முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுமானம் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. இக்கோயில் இம்மாதம் 22 ஆம் திகதி திறக்கப்படவிருக்கிறது. கோயில் அறக்கட்டளை சார்பில் சமீபத்தில் மொத்தம் 7 ஆயிரம் சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

அதேபோல், இராமர் கோயில் அமைவதற்கு ஆதரவாக இருந்த பத்திரிகையாளர்களுக்கும், இராமர் கோயிலுக்காகப் பாடுபட்ட 50 கரசேவகர்களின் குடும்பத்தினருக்கும், குறைந்தபட்சம் 50 நாடுகளில் இருந்து தலா ஒரு பிரதிநிதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை இந்தியாவில் உள்ள இந்துக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஜனவரி 22 ஆம் திகதி அதேநேரத்தில், அந்த நாளில்தான் தங்களுக்குப் பிரசவம் பார்க்க வேண்டும் என்று கூறி ஏராளமான கர்ப்பிணிப் பெண்கள் காத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அன்றைய தினம் தங்களுக்குப் பிரசவம் பார்க்குமாறு ஏராளமான கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கான்பூரில் உள்ள கணேஷ் சங்கர் வித்யார்த்தி நினைவு மருத்துவக் கல்லூரியின் கீழ் உள்ள தாய் சேய் மருத்துவமனை மருத்துவர்களிடம் பல கர்ப்பிணிப் பெண்கள் ஜனவரி 22 ஆம் திகதி ' சிசேரியன்' மூலம் பிரசவம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். அரசு மட்டுமின்றி பல தனியார் மருத்துவமனைகளுக்கும் இது போன்ற கோரிக்கைகள் வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது



அன்றைய தினம் கூர்ம துவாதசி. மிருகசீரிடம் நட்சத்திரம் உள்ளது. பிற்பகல் 11 மணி 51 நிமிடம் முதல் 12 மணி 33 நிமிடம் வரை உள்ள நல்ல நேரத்தில் சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. இது அபிஜித் முகூர்த்த நேரமாகும். ஆன்மிக ரீதியாக மட்டுமல்ல, ஜோதிட ரீதியாகவும், வானியல் சாஸ்திர ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சிறப்பானதாக இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு மிகக் கவனமாக இராமர் கோவில் திறப்புவிழாவிற்கான நாளும், முகூர்த்த நேரமும் குறிக்கப்பட்டுள்ளன.

புராணங்களின்படி சிவபெருமான் திரிபுராசுரன் என்ற அசுரனை வதம் செய்தது அபிஜித் முகூர்த்தத்தில்தான் எனச் சொல்லப்படுகிறது. அதனால் இது அனைத்து விதமான தோஷங்களையும் நீக்கக் கூடிய நேரம் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

இராமர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள பிரபலங்களுக்கு அழைப்பிதழ்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல் அரசியல் பிரமுகர்களுக்கும் பா.ஜ.கவினர் நேரில் சென்று அழைப்பிதழ் கொடுத்து கும்பாபிஷேக நிகழ்ச்சியில் பங்கேற்க அழைப்பு விடுத்து வருகின்றனர். இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதியன்று நாடு முழுவதும் மக்கள் தங்களது வீடுகளில் விளக்கேற்றி வழிபட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திறப்புவிழாவுக்கான அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், அயோத்தி வழக்கு விவகாரத்தில் முஸ்லிம் தரப்பு மனுதாரராக இருந்த இக்பால் அன்சாரிக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இராமர் கோயில் கும்பாபிஷேக அழைப்பிதழ் வழங்கப்பட்டமை தொடர்பாக இக்பால் அன்சாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், " இராமர் கோயிலில் இராமர் சிலை நிறுவப்பட உள்ளமை எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவ சமூகங்களின் நல்லிணக்கத்திற்கான இடம் அயோத்தி. இது அப்படியே தொடர வேண்டும். உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்புக்கு நாடு முழுவதும் உள்ள முஸ்லிம்கள் மதிப்புக் கொடுத்தனர். எங்குமே போராட்டம் நடைபெறவில்லை. அயோத்தி மக்கள் மகிழ்ச்சியில் உள்ளார்கள். நானும் மகிழ்ச்சியில் உள்ளேன்" என்றார்.

அயோத்தி இராமர் கோயில் எதிர்வரும் 22 ஆம் திகதி கும்பாபிஷேகத்துடன் திறக்கப்பட உள்ளது. பிரதமர் நரேந்திரமோடி கோயில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள இராமர் சிலையை எடுத்து வந்து வழங்க உள்ளார்.

இது ஒருபுறமிருக்க, அயோத்தியில் இராமர் கோயில் திறக்கப்பட உள்ள நிலையில், இந்நகரை சுற்றுலா நகரமாக மட்டுமல்லாது, மிகப்பெரிய வணிக நகரமாகவும் மாற்ற முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரப் பிரதேச அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்தக் கோயிலின் கும்பாபிஷேகம் முடிந்த பின்னர், தினந்தோறும் சுமார் 3 இலட்சம் பக்தர்கள் கோயிலுக்கு வந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இதற்கேற்ப அயோத்தியின் உட்கட்டமைப்புகள் சிறப்பாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அயோத்திக்கு ரூபா 15,000 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.மொத்தமாக 875 சதுர கி.மீ பரப்பளவில் இந்த வளர்ச்சிப் பணிகள் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

அயோத்திக்கான தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்கிய கட்டடக் கலைஞரும் நகர்ப்புறத் திட்டமிடுபவருமான திக்ஷு குக்ரேஜா, 21 ஆம் நூற்றாண்டில் உலகத் தரம் வாய்ந்த நகரங்களில் இருக்க வேண்டிய அனைத்து நவீன வசதிகளும் அயோத்தி கட்டமைப்பில் முன்மொழியப்பட்டிருக்கின்றன என்று கூறியுள்ளார்.

இதனிடையே, ஜனவரி 22 ஆம் திகதி அயோத்தியில் ஸ்ரீ ராம் மந்திர் கும்பாபிஷேக விழாவின் நேரடி ஒளிபரப்பு, இந்தியா முழுவதும் சாவடி மட்டத்தில் ஒளிபரப்பப்படுவதோடு மட்டுமல்லாமல், அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் உள்ள சின்னமான டைம்ஸ் சதுக்கத்திலும் நேரடியாக ஒளிபரப்பப்படும் என 'இந்தியா ருடே' செய்தி வெளியிட்டுள்ளது.

அன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடி இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பகவான் இராமரின் பக்தர்கள் அனைவருக்கும் உரையாற்றவிருக்கிறார்.

இதற்கிடையில், சாவடி மட்டத்தில் ஸ்ரீராமர் கும்பாபிஷேகத்தை நேரடியாக ஒளிபரப்பவதற்கு பெரிய திரைகளை அமைக்குமாறு ஆளும் பா.ஜ.க தனது பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

## இராமர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு அனைத்து ஏற்பாடுகளும் துரித கதியில்!

எஸ்.சாரங்கன்...

# "அஸிதிஸி" வெகுஜன ஊடக புலமைப்பரிசில் வழங்கல் – 2023

## 16ஆம் திகதி அமைச்சர் பந்துல தலைமை

அனைத்து ஊடகவியலாளர்களையும் அறிவு, திறன் மற்றும் அணுகுமுறைகளுடன் தொழில்முறை வெகுசன ஊடகத்துறையொன்றை உருவாக்கும் நோக்கில் வெகுசன ஊடகத்துறை அமைச்சினால் வருடாந்தம் செயற்படுத்தப்படும் "அஸிதிஸி" வெகுஜன ஊடக புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்காக புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவின் பங்கேற்புடன் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 01.00 மணிக்கு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள, பயிற்சிப் பாடநெறிகள் மூலம் ஊடகவியலாளர்கள் தங்களது தொழில்முறை திறன்களை வளர்த்துக் கொள்ளவதை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் மூன்றாண்டுகள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த, முழு நேர அல்லது பகுதி நேர அடிப்படையில் சேவையிலுள்ள 18 – 55 வயதுக்குட்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்படுகின்ற ஊடகவியலாளர் அடையாள அட்டை பெற்றுள்ள ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் இணைய ஊடகவியலாளர்களுக்காக திருப்பிச் செலுத்தப்படாத அடிப்படையில் இப்புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இளமாணி மற்றும் முதுமாணி பாடநெறிகளுக்காக இரண்டு இலட்சம் ரூபா (200,000) மற்றும், குறுகியகால நீண்டகால சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்காக அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபா (1,00,000) என்ற அடிப்படையில் இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

இப்புலமைப் பரிசில்களை பெறுவோர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், உயர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் ஊடகத்துறை தொடர்பான பாடநெறிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

எவ்வித கட்டணங்களும் அறவிடாமல் இலவசமாக வழங்கப்படுகின்ற இந்த புலமைப்பரிசில் திட்டம் மூலம் ஊடகவியலாளர்களுக்கு இருமுறை பயன்பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. முதற் சந்தர்ப்பத்தில் தகைமை பெற்று ஐந்து வருடங்கள் கடந்த பின்னர் முதற் பாடநெறியியை முழுமையாக நிறைவு செய்த ஊடகவியலாளர்களுக்கு இரண்டாவது தடவைக்காகவும் விண்ணப்பிக்க முடியும். புலமைப் பரிசில்களுக்காக தகுதி பெற்ற ஊடகவியலாளர்களுக்காக பாடநெறியின் ஆரம்பத்தில் பாடநெறிக் கட்டணத்தில் 50 வீதத்தை முதற் தவணையாகவும், மீதமுள்ள 25 வீதத்தை பாடநெறியின் இரண்டாவது தவணையாகவும், மீதமுள்ள 25 வீதத்தை பாடநெறியை நிறைவு செய்து சான்றிதழ் சமர்ப்பித்த பின்னரும் வழங்கப்படும். வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினல் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவினால் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சந்திரத்து ஞானவைரவர்

# ஆலயத்தில் பட்டிப்பொங்கல்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பட்டிப்பொங்கல் விழா மற்றும் கோமாதா உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் கே.கே.எஸ். வீதியை அண்டி அமைந்துள்ள சந்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. திருமுறைப்பாராயணச் செல்வர் ப.பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. அன்றையதினம் நண்பகல் 12.00 மணிக்கு பட்டிப்பொங்கல், பஜனை, மங்கள இசையும் பிற்பகல் 2.00 மணிக்கு கோபூசையும் கோதனத் திருமுறை ஓதல், கோபவனியும் நடைபெறவுள்ளன.

# வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீகஜனின் மாமியாரின் இறுதிக்கிரியை

## 16ஆம் திகதி செவ்வாயன்று பொரளையில்



*வீரகேசரி நாளிதழ் மற்றும் வீரகேசரி வார இதழ் ஆகியவற்றின் பிரதம ஆசிரியரான எஸ்.ஸ்ரீகஜனின் மாமியாரும் சக்தி தொலைக்காட்சியின் முன்னாள் ஊடகவியலாளர் சூரியபிரபாவின் தாயாருமான திருமதி சாந்தாதேவி சூரியமூர்த்தி அம்மையார் நேற்று முன்தினம் சென்னையில் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (14) ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணி முதல் இரவு 8.00 மணிவரையும் அதன் பின்னர் செவ்வாய்க்கிழமை (16) காலை 9.00 மணி முதல் கொழும்பு, பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்றையதினம் மாலை 3.00 மணிக்கு ஈமக்கிரிகைகள் இடம்பெற்று, பொரளை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுமென, குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர். சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த இவர், சென்னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.*

# இந்திய அரசின் இலவச ரயில் எஞ்சின்கள் விரைவில் நாட்டுக்கு

## பெப். 04க்கு முன் கிடைக்கும் – ரயில்வே GM

இந்திய அரசினால் இலவசமாக வழங்கப்படும் ரயில் என்ஜின்கள் எதிர்வரும் 04ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு கிடைக்குமென ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார கூறினார். இலங்கையில் ரயில் சேவையை அதிகரிக்க இந்திய அரசாங்கத்தினால் 23 என்ஜின்கள் கிடைக்கவுள்ளதாகவும், கடந்த மாதம் ரயில்வே பொறியியலாளர்கள் குழுவொன்று இந்தியா சென்று இது தொடர்பான பணிகளை மேற்கொண்டதாகவும், அதன்படி உரிய என்ஜின்களை இலங்கைக்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று இலங்கையில் இயக்குவதற்கு இரண்டு என்ஜின்களை வழங்குமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



அதன்படி, போக்குவரத்து அமைச்சு மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முயற்சியின் கீழ் இம்மாதம் இறுதியில் 02 என்ஜின்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்தார்.

மற்ற என்ஜின்கள் பின்னர் பெறப்படும். அந்த என்ஜின்களின் மொத்த மதிப்பு 3,000 கோடி ரூபாயை விட அதிகமென்றும், அனைத்து என்ஜின்களையும் இலவசமாக வழங்க இந்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## கிராமப்புற பெண்களுக்கு...

பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கிராமிய மட்டத்தில் காளான்கள் போன்று நுண்நிதி நிறுவனங்கள் முளைத்துள்ளதாகவும், மிகவும் கவர்ச்சிகரமான முறையில் கடன்களை வழங்குவதாகவும், அதிக வட்டி விகிதங்களை அறவிடுவதாகவும் கூறி, மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்குவதாக கோகிலா குணவர்த்தன எம்.பி பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்றை சமர்ப்பித்து பேசும்போது தெரிவித்தார். பிரேரணையை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் மேலும் கூறியதாவது: "மைக்ரோ ஃபைனான்ஸ்" கடன் வாங்கிய பிறகு பெண்களும் குடும்பங்களும் நிர்க்கதியாகி விடுவதாக செய்திகள் வருகின்றன. பதிவு செய்தவர்களும் உண்டு. இல்லாதவர்களும் உண்டு. பெண்களுக்கு கடன் வழங்குவதன் மூல மக்களின் வாழ்வு அழிக்கப்படுகிறது. நுண்கடன் கொடுப்பவர் கிராமத்தில் மீட்பர் போல் நடந்து கொள்கிறார். அவர்களுக்கு எளிதான வழியில் கடன் வழங்குவதற்காக சங்கங்களை உருவாக்குவதன் மூலம் இந்த பெண்கள் கடன் வலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கடனை அடைக்க முடியாமல் போனால் உயிரைக் கொடுத்துவிடுகின்றனர். இது மிகவும் ஆபத்தான நிலை. தற்போது முகநூல் மூலமும் கடன் வழங்கப்படுகிறது. கவர்ச்சிகரமான முறையில் இந்த கடன் வழங்குவது போன்று நடந்து கொள்கிறார்கள். ஆனால் திரும்பிப் பார்த்தால், இந்தக் கடன் 200 முதல் 300 சதவிகிதம் ஆண்டு வட்டியில் வழங்கப்படுகிறது. சமுர்த்தி வங்கியின் ஊடாகவும் நுண்கடன்கள் வழங்கப்படுகின்றன அவர் தெரிவித்தார்.

## உலகத் தமிழ் தலைவர்கள்...

கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமான் இடம்பிடித்துள்ளார். தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் தலைமையில் சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கத்தில் 11ஆம், 12ஆம் திகதிகளில் இரண்டு நாட்களாக இடம்பெற்ற அயலக தமிழர் மாநாட்டு நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

## பெண்ணின் வயிற்றிலிருந்த...

தொங்கிய நிலையில் அவர் சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு சென்ற போது, Liposuction என்ற சத்திர சிகிச்சை சுமார் மூன்று மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்டதாக, விசேட சத்திர சிகிச்சை நிபுணர் ஜயவர்தன தெரிவித்தார்.

சத்திர சிகிச்சையின் பின்னர் இவர் நலமுடன் இருப்பதாகவும், அவ்வைத்தியர் தெரிவித்தார்.

# எங்கள் கருத்து...

# அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்துள்ள யதார்த்தம்!

முன்வராத சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்வதற்காக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே இலங்கை நீண்ட காலமாக பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களின் வட்டி மற்றும் தவணைகளைச் செலுத்திக் கொள்ள முடியாத கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. இலங்கைக்கு கிடைத்த வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வருமானம் அனைத்தும் கொரோனா தொற்று காரணமாக இழக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டில் தொழில்புரிபவர்களிடமிருந்து ஐந்து சதம் பெறுமதியான டொலரும் இலங்கைக்குக் கிடைக்கவில்லை. வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாமல் கறுப்புப்பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டதால், எமக்குக் கடன் வழங்கிய ஒருவர் அமெரிக்க நீதிமன்றத்தில் எமக்கு எதிராக வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வாறான அனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்த போது, அதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த நேரத்தில் எங்களுக்கு இருந்த ஒரேவழி சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது மட்டுமேயாகும். அந்த உண்மை ஒருதரப்பினருக்குப் புரியவுமில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அந்த நிதியத்திடமிருந்து முதல் கடன் தவணையைப் பெற்றவுடன், இந்நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து, நாடு படிப்படியாக வங்குரோத்து நிலையிலிருந்து மீளத் தொடங்கியது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாவது கடன் தவணையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதன் மூலம் முழு நாட்டிற்கும் கிடைத்த பொருளாதார நன்மைகளை அனுபவித்தவாறு, இந்நாட்டின் எதிர்க்கட்சிகள் தங்களது அரசியல் வீரத்தைக் காண்பிப்பதற்காக பல்வேறு கதைகளைக் கூறத் தொடங்கின. அவர்கள் முதலில் கூறியது ‘கடன் வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை மாற்றுவோம்’ என்பதாகும்.

தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் திருப்பிச் செலுத்தப் போவதில்லை என்றும் அவர்கள் கூறினர். இவ்வாறான முட்டாள்தனமான கதைகளை அரசியல் களத்தில் எம்மால் அடிக்கடி கேட்ட முடியும். உதாரணமாக நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வரும் போது முன்வைத்த முக்கிய வாக்குறுதியாக இருந்தது ‘துறைமுகநகரை மீளப் பொறுப்பேற்போம்’ என்பதாகும்.

துறைமுகநகர் என்பது சீன ஜனாதிபதியும், இலங்கை ஜனாதிபதியும் நேரடியாகவே கைச்சாத்திட்ட ஒரு ஒப்பந்தமாகும். அவ்வாறான ஒரு ஒப்பந்தத்தை ரத்துச் செய்தால், அவ்வாறு ரத்துச் செய்த தரப்பினருக்கு ஏற்படப் போகும் ஆபத்து இலேசானதல்ல. சீனா என்பது ஆசியப் பொருளாதார வலயத்தில் பலம் வாய்ந்த நாடாகும். துறைமுக நகர ஒப்பந்தத்தை ரத்து செய்ய நல்லாட்சி அரசாங்கத்தால் ஒருபோதும் முடியவில்லை. மாறாக, சில சிறிய திருத்தங்களை மட்டுமே செய்ய முடிந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அத்தகைய விளையாட்டை விளையாட முடியாது. எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே நடந்து கொள்ள வேண்டும். தம்மால் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த முடியாவிட்டால் “செலுத்த வழியில்லை மச்சான் என்று பிரச்சினையை முடித்துக் கொள்ள ஜே.வி.பி. அரசாங்கத்தால் முடியும்” என சுனில் ஹந்துன்நெத்தி அண்மையில் கூறியிருந்தார்.

அப்படியானால் “சரி மச்சான், பின்னர் பணம் இருக்கும் போது மீளத்தாருங்கள்” என்று வெளிநாட்டுக் கடன் கொடுத்தவர் கூறுவார் என நினைக்கிறீர்களா?

சர்வதேச நாணய நிதியம் என்பது எருமை மாடு அல்ல. அவர்கள் எமக்கு கடன் வழங்கும் போது முன்வைக்கும் நிபந்தனைகளை இருதரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் நாம் கொண்டுசெல்ல வேண்டும். அவ்வாறில்லாமல் அந்த நிபந்தனைகளை மீறி ஒப்பந்தத்தை ரத்துச் செய்யப் போனால் உலகில் எந்த ஒரு நாடும் எமக்கு ஒரு சதத்திற்கும் உதவி செய்யப் போவதில்லை.

மேற்குறித்த விடயங்கள் அனைத்தையும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தனது புத்தகத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கலாநிதி பந்துல குணவர்தன தனது புத்தகத்தின் மூலம் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார். இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் செயற்பட்டால் இந்நாடு இரண்டு வாரங்களுக்குக் கூட நிலைத்திருக்காது.

## பஸ் சீசன் டிக்கெட்டுகளுக்கு...

எஞ்சிய 93 வீதத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறதென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான மாதாந்த பருவகாலச் சீட்டுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

| வகை | 2022ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மாதாந்த பருவகாலச்சீட்டுகளின் எண்ணிக்கை | 2023ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மாதாந்த பருவகாலச்சீட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலை | 285,000 | 440,000 |
| தொழில்நுட்பக் கல்லூரிகள் | 6,690 | 15,260 |
| பல்கலைக்கழகங்கள் | 6,052 | 8,190 |

மாணவர்களுக்கு மானிய கட்டணத்தில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசாங்கம் செலவிடும் பணம், நாட்டின் நெடுஞ்சாலை கட்டமைப்பை சீர்செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட அதிக தொகையை அரசாங்கம் செலவிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் பாடசாலை விடுமுறை காலம் என்பதனால் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பருவகாலச் சீட்டு வழங்கும் உரிமை இல்லையென்றாலும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக பருவகாலச் சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கடந்த வெள்ளிக்கிழமை (12) பாராளுமன்றத்தில் தெரிவிக்கையில்,

இந்த சலுகை திட்டத்தில் மாணவர்களிடமிருந்து 1,638 மில்லியன் ரூபாவே அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார். பருவச் சீட்டுக்காக பாடசாலை மாணவரிடமிருந்து மொத்த செலவில் 07 வீதம் மாத்திரம் அறவிடப்படும் எனவும் எஞ்சிய 93 வீதத்தை அரசே ஏற்கும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார். மேலும், பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களிடமிருந்து சீசன் டிக்கெட்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பில் 21 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுவதாக குறிப்பிட்ட அமைச்சர், மீதமுள்ள 79 சதவீத தொகையை அரசு ஏற்கும் என்றார். அத்துடன், 2022ஆம் ஆண்டு சலுகை முறையின் கீழ், 14,941 மில்லியன் ரூபா பெறுமதியான பருவச் சீட்டுகளை வழங்குவதற்காக மாணவர்களிடமிருந்து 1153 மில்லியன் ரூபா மாத்திரமே வசூலிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அதற்கான அரசாங்க செலவீனமாக இபோசவுக்கு 33,000 மில்லியன் ரூபா இரண்டு வருடங்களுக்கு 14,000 மில்லியன் மாத்திரமே கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையால் இபோசவை பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக, பாடசாலை மாணவர்களுக்கான சிசுசெரிய பாடசாலை பஸ் சேவைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கும் திறைசேரியால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவைக்காக 790 இலங்கை போக்குவரத்து சேவை பஸ்களும் 710 தனியார் பஸ்களும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில், 5,331 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 1,15,500 மாணவர்கள் பயணம் செய்துள்ளனர், இதற்காக போக்குவரத்து சபை 493.71 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு சிசுசெரிய திட்டத்துக்காக 1,660 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட தொகை 1,580 மில்லியன் ரூபா மட்டுமே. இத்திட்டத்தில் பயன்படுத்தப்படும் பஸ்கள் மூலம் கிடைக்கும் வருமானம் செலவுகளுக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கிறது. எனினும், கல்விக்கு உதவும் சமூக அக்கறை செயலாக இந்த சேவையை இலங்கை போக்குவரத்துச் சபை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார். சிசுசெரிய சேவைக்கு மேலதிகமாக, மேலும் 1,450 பஸ்கள் தினமும் பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரம் மற்றும் நிறைவு செய்யப்படும் நேரங்களின்படி பயன்படுத்தப்படுகின்றன, இந்த சேவை நாடு முழுவதும் தொடர்ந்து செயற்படுகிறது. அத்துடன், அலுவலக பணியாளர் மற்றும் பாடசாலை மாணவர்களென இருபாலரும் பயன்படுத்தக்கூடிய பொதுச் சேவையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

| பாடசாலை/பல்கலைக்கழகம்/தொழில்நுட்பக் கல்லூரி | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | வருடத்தில் விற்பனை செய்த பருவகாலச்சீட்டுகளின் வருமானம் (ரூ.மி.) | திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை (ரூ.மி.) | திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை (ரூ.மி.) | சபைக்கு வரவேண்டிய வருமானம் (ரூ.மி.) |
| 2022 | 14,941.52 | 13,788.38 | 6,100.00 | 7,688.38 |
| 2023 | 21,775.66 | 20,136.98 | 8,000.00 | 12,136.98 |

கல்லூரி மாணவர்களிடமிருந்து பருவகாலச் சீட்டுக்காக 21 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுவதாகவும், மீதமுள்ள 79 சதவீதம் அரசால் ஏற்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டு வழங்கிய மாதாந்த பருவகாலச் சீட்டுகளுக்கு 14,941 மில்லியன் ரூபா வருமானமாக கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023ஆம் ஆண்டில் பருவகாலச் சீட்டு விற்பனை மூலம் 7,834 மில்லியன் ரூபா வருமானமே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். 2023ஆம் ஆண்டு பருவகாலச் சீட்டுக்காக 8,000 மில்லியன் ரூபாவை அரசாங்கத்தின் செலவீனமாகப் பெறப்பட்டுள்ளதாகவும் மேலும் 12,136 மில்லியன் பெறப்பட உள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், மாணவர்களிடமிருந்து 1,638 மில்லியன் ரூபா மாத்திரமே அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு பருவகாலச் சீட்டுக்காக அரசாங்கத்திடமிருந்து 6,100 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளதாகவும், மொத்தத் தொகை 13,788 மில்லியன் ரூபா எனவும், மாணவர்களிடமிருந்து 1,153 மில்லியன் ரூபா மட்டுமே அறவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, பாடசாலை, பல்கலைக்கழகம்

## இலங்கை ஐயப்ப பக்தர்கள்...

இலங்கையை சேர்ந்த 16 ஐயப்ப பக்தர்கள் படுகாயமடைந்துள்ளனர். இலங்கையை சேர்ந்த 03 பெண்கள் உட்பட 16 பேர் சபரிமலை ஐயப்ப பக்தர்கள், சபரிமலை செல்வதற்கு இலங்கையிலிருந்து சென்னை சென்றுள்ளனர். சென்னை விமான நிலையத்திலிருந்து இலங்கையை சேர்ந்த 16 ஐயப்ப பக்தர்களும் சபரிமலைக்கு செல்வதற்கு வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சென்று கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா விஜயகோபாலபுரம் என்ற இடத்தில் வந்த போது வேனின் டயர் திடீரென வெடித்தது. இதைடுத்து வீதியோரமாக வேனை நிறுத்தி சில்லு மாற்றும் வேலையில் சாரதி ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்த மற்றொரு வேன் சாரதியும் அவரது வண்டியை நிறுத்திவிட்டு வந்து சென்னை வேன் சாரதிக்கு உதவி செய்து கொண்டிருந்தார். இந்நிலையில் சென்னையிலிருந்து கம்பம் என்ற இடத்தை நோக்கி சென்ற தனியார் பஸ் முன்னால் நின்ற சென்னை வேனின் பின்புறம் மோதியது. பெரம்பலூர் பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளதையடுத்து அப்பகுதியிலுள்ள சற்குணராஜா என்பவர் ஸ்தலத்துக்கு விரைந்து காயமடைந்தவர்களுக்கு உதவி புரிந்துள்ளார். இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் அணியிலுள்ள ராஜாமணி என்பவரின் மகன் என்றும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்தவரென்றும் தெரிய வருகிறது.

## மின் கட்டணத்தில்...

தெரிவித்துள்ளார். மேற்கொள்ளவுள்ள கட்டண திருத்தத்தின் மூலம் கீழ்மட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே மின்சார சபையின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 30, 60 மற்றும் 90 மின்அலகுகளுக்கு இடைப்பட்ட மின்சாரத்தை உபயோகிக்கும் மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக சந்தையில்...

தாக்குதல் நடத்தியதையடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக, செங்கடலில் பயணிக்கும் வர்த்தகக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்களை இலக்குவைத்து ஹவுத்தி (Houthi) கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையிலான பரபரப்பான சர்வதேச கடல் வர்த்தகப் பாதையாகக் கருதப்படும் செங்கடலில் மோதல் ஆரம்பிப்பதால் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் நெருக்கடி ஏற்படும் அபாயமுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## பொருளாதார சீர்திருத்த...

இலங்கையின் சாதகமான முன்னேற்றங்கள் சர்வதேச உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்களிடையே உலகளவில் நம்பிக்கையை அதிகரிக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகளுக்கிடையில் (11) ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட சவாலான பொருளாதார சீர்திருத்தங்களைப் பாராட்டியது.

ஆசியாவின் முன்னோடி முயற்சியான ஆட்சியைக் கண்டறியும் அறிக்கையை (Governance Diagnostic Report) வெளியிடுவதில் இலங்கையின் முயற்சிகளை இதன்போது பாராட்டினர்.

குறிப்பாக, கொள்கை சார்ந்த விடயங்கள் மற்றும் நிதித்துறையில் ஸ்திரத்தன்மை ஆகியவை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூவர் (Peter Breuer) தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலப் பகுதியில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் படி இலங்கை நம்பிக்கையுடன் அரசாங்க வருமானத்தை உயர்த்தியுள்ளதாக சமீபத்திய சந்திப்பில் தெரியவந்துள்ளதாகவும், அதன் மூலம் சர்வதேச சமூகம், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் கடன் வழங்குநர்களின் நம்பிக்கை அதிகரிக்க காரணமாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பணவீக்கத்தை கணிசமாகக் குறைப்பதில் இலங்கையின் வெற்றியை, பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதாகவும், நிதியியல் கொள்கை மற்றும் செலவுகளைக் குறைக்கும் இலங்கை அரசின் கொள்கைகளே அதற்கு காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிப்பு போன்ற சாதகமான முடிவுகள் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் அவதானித்துள்ளது.

குறிப்பாக மூலதனம் மற்றும் பொறிமுறை உருவாக்கம், மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்துள்ளதாகவும், தற்போதுள்ள ஆட்சிப் பொறிமுறையின் சீர்திருத்தங்களில் இது சாதகமான குறிகாட்டிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

## ஜனாதிபதி ரணில் நேற்று...

தலைப்பிலேயே ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். அத்துடன், பல்வேறு பிரமுகர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளார்.

இதன் பின்னர், சுவிட்சர்லாந்து விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி எதிர்வரும் 18ஆம் திகதி உகண்டாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றும் நோக்கிலேயே ஜனாதிபதி உகண்டாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி எதிர்வரும் 24ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருமலை மாவட்டத்தின் தவிர்க்க முடியாத அரசியல் சொத்து எம்.எஸ் தெளபீக்



எவருக்கும் அடிபணியா ஆளுமை, எல்லோருக்கும் முன்மாதிரியான முன்னோடி, முஸ்லிம் அரசியல்வாதிகள் சாணக்கியம் நிறைந்த தலைமைத்துவம், வெறும் திண்ணைப் பேச்சு நடத்தும் முஸ்லிம் அரசியலிலிருந்து வேறுபட்டு மக்களுக்கான அரசியலை நடத்தும் சமூகப் போராளி. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம். எஸ். தெளபீக்கின் 53 ஆவது பிறந்த நாள் இன்றாகும்.

கிண்ணியா மண்ணில் 1971. 01. 07ம் திகதி வியாழக்கிழமை முகம்மது சரிப், ஆமீனா தம்பதிகளுக்கு மகனாக தெளபீக் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை கிண்ணியா முஸ்லிம் மத்திய கல்லூரி, மூதூர் முஸ்லிம் மத்திய கல்லூரிகளில் கற்றார். பின்னர் ஆசிரியராக தனது பணியினை சரி வர செய்து மாணவர்கள் மிகவும் நேசிக்கும் ஆசிரியராக காணப்பட்டார்.

**அரசியல் பிரவேசம்**

சமூகப் பணியில் அதிக ஆர்வம் கொண்ட இவர், மக்கள் பணியாற்றுவதற்காக தான் நேசித்த அரசியல் தலைவர் எம். எச்.எம் அஷ்ரப் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் 2000 ஆம் ஆண்டு இணைந்து தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். இளமையிலிருந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும் இவரது அரசியல் ஆரம்பம் எதிர்பாராத விதமாகவே நடைபெற்றது.

**எதிர்கொண்ட முதல் தேர்தல்**

தான் எதிர்கொண்ட அறிமுகத் தேர்தலில் போட்டியிட்டு அதில் அமோக வெற்றியினை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகி கிண்ணியாவிலே 07 ஆவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெயரை கிண்ணியா வரலாற்றில் பதித்தார்.

இன்றுவரை 24 வருட அரசியல் வாழ்வில் பாராளுமன்ற உறுப்பினராக, மாகாணசபை உறுப்பினராக பணியாற்றியதுடன் வெற்றி தோல்விகளை கடந்து மக்களுக்காக தன்னை அர்ப்பபணித்துக்கொண்டிருக்கிறார்.

**மக்கள் பணிகள்**

அரசியல் மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் தன்னால் இயன்ற பல சேவைகளை செய்து தனக்கென ஒரு இடத்தினை பிடித்தார்.

வீதி அபிவிருத்தி மற்றும் இளைஞர் வேலை வாய்ப்புகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் விஸ்தரிப்புகள் மற்றும் பல பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதான புனரமைப்பு என்று பல பணிகளை செய்திருக்கிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் அளவில்லா சேவைகள் செய்ததன் மூலமாக மக்கள் சேவகன் என்ற பெருமையை தனதாக்கிய எம். எஸ். தெளபீக் தனது அரசியல் வாழ்க்கையின் மாபெரும் சேவையாக "இலங்கையில் மிக நீளமான பாலத்தினை" சவூதி அரேபியாவின் நீதி உதவியுடன் கட்டி முடித்து இலங்கையின் நீளமான பாலம் இருக்கும் ஊர் என்ற பெருமையினை எமது கிண்ணியாவுக்கு பெற்றுக் கொடுத்தார்.

மனதில் பட்டத்தை நேரே பேசும் குணம், விமர்சனங்கள் ஆயிரம் வந்தாலும் தனக்கு எது சரி என்று தோன்றுகின்றதோ அதனை தைரியமாக செய்யும் வல்லமை, துணிச்சலுடன் பிரச்சினைகளை அணுகி ஆராயும் தன்மை, சவால்களைக் கண்டு பின்வாங்காத ஆளுமை, நிதானமும், அனுபவமும் கொண்ட என்றும் மக்கள் மனதில் வாழும் தலைவனுக்கு இன்றைய பிறந்தநாளில் இறையாசிவேண்டி பிராத்திக்கிறோம்.

**எஸ். சினீஸ் கான்.**

# பூரித்த பொங்கல்...

அடுப்பங் கல் மூன்று
பாலை விறகு அதில் மூட்டி;
மண் பானை அதில் ஏற்றி

புத்தரிசி புதுப் பொங்கல்;
உரலில் தீட்டிய புத்தரிசி
வறுத்த பயறுடன் சர்க்கரை சேர்த்து;
பாலுடன் பக்குவமாய்
பொங்கல் செய்ய;

அன்று அம்மாவின் பொங்கல்
அமிர்தமாய் இருந்ததுவே;
பிள்ளைகள் புடைசூழ
பூரித்த பொங்கலது;
நாதனய்யா வீட்டினிலே
நவாஸ் நா நா பொங்கலுண்டு;
எல்லாப் பெருநாளும்
எல்லோர்க்கும் திரு நாளே;

காலமெல்லாம் மாறியதே
கால நிலை பொய்த்ததுவே;
நீர்நிறைந்து பயிரழுகி
கதிரறுக்க அரிசியில்லை;

அடுப்பெரிய விறகில்லை
ஆர்ப்பரிப்பார் யாருமில்லை;

தினம் விடியும் பொழுதினைப்போல்
இதுவும் ஓர் நாளாக:
அன்றுண்ட பொங்கல்
என்றுதான் வருமோ;
இன்பம் தான் சேர்த்திடுமோ....!!

~ மஸாஹிரா கனி~





## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

# கல்வி இளமாணி சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டம

## கல்வியாண்டு 2024/2025

**அனுமதித் தகைமைகள்**

a) க.பொ.த. உயர்தர விஞ்ஞான பிரிவுக்குரிய பாடங்களில் எத்தனை அமர்வுகளிலாயினும் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல், **அல்லது**

b) இயற்கை விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படும் அடிப்படை விஞ்ஞானப் பாடநெறியின் மட்டம் 2 இலிருந்து ஆகக்குறைந்தது 30 திறமைச் சித்திகளை, மட்டம் 3 இற்கு தெரிவு செய்யப்படுவதற்கு ஏற்ற மூன்று பாடங்களில் பெற்றிருத்தல். **அல்லது**

c) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க சமமான அல்லது உயர்ந்த தகைமையைப் பெற்றிருத்தல்.

**மட்டம் 5 இலிருந்து விலக்களிப்பு**

தேசியகல்வியியற் கல்லூரிகளில் 3 வருட ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்து விஞ்ஞான / கணித பாடங்களைக் கற்பித்தலில் டிப்ளோமா சித்தி பெற்றவர்கள் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5 இலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**Open Days**
Day 1 : 12th January 2024
Day 2 : 17th February 2024

| Session | Dates/ Date | Medium | SessionPlan | Zoom Link |
|---|---|---|---|---|
| **Session 01** CRC, KRC, MRC, JRC,ARC & BRC | **12th January 2024** (Morning) 09.30 a.m -12.30 p.m | English/ Sinhala/ Tamil | **Onsite** | - |
| **Session 02** (Repeat) | **17th February 2024** (Morning) 09.30 a.m - 1.00 p.m | English/ Sinhala/ Tamil | **Online** | **Meeting ID: 916 87947500 Passcode: 1^y#pCU*** |

**Orientation**
Day : 14th March 2024

| Session | Dates/ Date | Medium | SessionPlan | Zoom Link |
|---|---|---|---|---|
| **Session 01** Colombo Reginal Centre | **14th March 2024** (Morning) 10.00 a.m - 1.00 p.m | English | **Onsite** | - |

உதவிப் பதிவாளர் / இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்: 0112881226 / 0112822738 / 0706993134

Log on to **https://ou.ac.lk/nsc/**

**Apply Online Only**

https://reginfo.ou.ac.lk/applyonline/ என்ற எமது இணைய தளத்திற்குப் பிரவேசித்து நிகழ்நிலை (Online) மூலம் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பப் படிவக் கட்டணம் **ரூபா. 500/-**
விண்ணப்பங்கள் : **06.01.2024 தொடக்கம் 10.03.2024 காலப்பகுதியினுள் ஏற்றுக்கொள்ளப்படும்**

**www.ou.ac.lk என்ற இணைய தளத்தில் பிரவேசித்து, குறிப்பிட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய கை நூலைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

பற்று / கடன் (Debit/Credit) அட்டை / eZ Cash மூலம் விண்ணப்பக்கட்டணங்களை செலுத்த முடியும். பற்று / கடன் அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையில் (Online) சமர்ப்பித்த பின்னர் அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பணத்தைச் செலுத்தலாம். நிகழ்நிலை மூலமான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வது தொடர்பான உதவிகள் தேவைபடுவோர் அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**நிகழ்நிலை முறை மூலமான (Online) விண்ணப்பித்தல் தொடர்பான விபரங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதாவது பிராந்திய அல்லது கற்கை நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.**

கொழும்பு (நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி (பொல்கொல்ல), மாத்தறை (நூபே), பதுளை, குருநாகல், அம்பாறை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பலாந்தோட்டை, ஹட்டன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், மாத்தளை, அம்பலாங்கொடை மற்றும் வவுனியா.

மேலதிக விபரங்களுக்கு - பொது தகவல் அலுவலகம் (தொலைபேசி 011-2881000)

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

# நலிவடைந்த மக்களின் நலன்களை பேணுவதில் தவிர்க்க இயலாதது வரி!

## அரச வருமானத்துக்கு வேட்டு வைக்கும் ஏய்ப்பாளர்கள் மீது நோட்டம்!

**ஒரு நாட்டை ஆட்சிசெய்யும் அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும் பங்காற்றும் விடயமாக வரி அறவீடு காணப்படுகிறது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவீனங்களுக்கான நிதியும் வரி வருமானம் போன்ற மார்க்கங்களிலிருந்து கிடைக்கப்பெறுவதே உலக வழக்கமாக இருக்கிறது.**

இருந்தபோதும், இலங்கையில் கடந்த காலத்தில் வரி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களுக்கு வழி ஏற்படுத்தின என்பதை எவரும் மறக்க முடியாது.

வரி அறவீட்டைப் பொறுத்தவரையில் அது நேர்முகவரி மற்றும் மறைமுகவரி என இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. நேரடிவரி என்பது ஈட்டப்படும் வருமானம் தொடர்பில் நபர் ஒருவருக்கு அல்லது சொத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். மறைமுகவரி என்பது பரிவர்த்தனையின் போது விதிக்கப்படும் வரியாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நேர்முகவரியின் வீதம் அதிமாகவும், மறைமுவரியின் வீதம் குறைவாகவும் காணப்படுகின்றன. இருந்தபோதும் இலங்கையில் நிலைமை தலைகீழாகவே காணப்படுகிறது.

வரி அறவீடு தொடர்பில் இலங்கைக்கு நிலையான கொள்கை இல்லாமையால் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள் தமது ஆட்சிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அல்லது ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துக்காக வரிகளில் ஏற்ற இறக்கங்களைச் செய்தனர். குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு மாத்திரம் வரி விலக்களிப்புகளை வழங்கினர்.

குறிப்பாக தேர்தல்களில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாடு பற்றியோ அல்லது நாட்டின் வருமானம் தொடர்பிலோ சிந்திக்காது தாங்கள் நினைத்தவாறு வரிகளில் ஏற்ற இறக்கங்களைச் செய்தனர். இதற்கு சிறந்த உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தைக் குறிப்பிட முடியும்.

தாம் ஆட்சிக்கு வந்தால் வரி அறவீடுகள் இலகுபடுத்தப்படும் என்று வழங்கியிருந்த உறுதிமொழியைக் காப்பாற்றும் நோக்கில் சேர் பெறுமதி வரியை 15 வீதத்திலிருந்து 8 வீதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த வரிக் குறைப்பானது வியாபாரிகள் உள்ளிட்ட ஒரு சில தரப்பினருக்கு நன்மையை ஏற்படுத்தியிருந்தாலும் அரசாங்கத்தின் வரி வருமானம் வெகுவாகக் குறைந்து நாடு பொருளாதார ரீதியில் பாதிப்பு அடையும் நிலைக்கு வழிகோலியிருந்தது.

இவ்வாறான பின்னணியில், நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்டெடுக்கும் பொருட்டு வரி அறவீடுகளை அதிகரிக்கும் நிலைமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தள்ளப்பட்டது. நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், அரசாங்கத்தின் வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நிபந்தனையாக வந்தது.

இதனை நிபந்தனை எனக் கூறுவதற்குப் பதிலாக நாட்டை மீட்சிபெறச் செய்வதற்கு எடுக்கக் கூடிய களயதார்த்தமான நடவடிக்கை என்றே சொல்ல வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரை மற்றும் துறைசார் நிபுணர்களின் முன்மொழிவுகளுக்கு அமைய 8 வீதமாக இருந்த சேர் பெறுமதி வரி 8 வீதத்திலிருந்து 15 வீதமாக அதிகரிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட முன்னர் சேர் பெறுமதி வரியை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிப்பதற்கு சட்ட ரீதியாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.




**நாட்டை மீளக்கட்டியெழுப்புவதாயின் நேர்முகவரியும், மறைமுகவரியும் அவசியமானவையென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்து!**

சேர் பெறுமதி வரி அல்லது வற் வரி என்பது ஒரு பொருளின் மீது விதிக்கப்படும் நிலையான வரியாகும். இது சில சந்தர்ப்பங்களில் விற்பனை வரியைப் போன்று காணப்படும். விற்பனை வரியுடன், அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையும் விற்பனையின் போது நுகர்வோரால் செலுத்தப்படுகிறது.

2024 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையில் நிலையான சேர்பெறுமதி வரி வீதம் 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரித்தது. பொருட்களின் இறக்குமதி, பொருட்களின் விநியோகம் (மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் உட்பட) மற்றும் இலங்கையில் சேவைகள் வழங்கல் ஆகியவற்றின் மீது சேர் பெறுமதி வரி செலுத்தப்படுகிறது.

குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில், மாதந்தோறும் அல்லது காலாண்டுக்கு ஒருமுறை வருமானத்தை தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வரவுசெலவுத்திட்ட யோசனைக்கு அமைய சேர் பெறுமதி வரி 15 இல் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டாலும், பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் வற் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு வரி வருமானம் என்பது இன்றியமையாததாகும். அது மாத்திரமன்றி, தற்போதைய பொருளாதார நிலைமையினால் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நிதி இந்த வரி வருமானத்தின் ஊடாகவே அரசாங்கத்துக்குக் கிடைக்கிறது. எனவே வரி வருமானத்தை அரசாங்கம் அதிகரிப்பதில் எவ்வித தவறும் இல்லை என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது.

இருந்தபோதும், அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தை பிழையாகப் பயன்படுத்தி மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் அதேநேரம், இலாபம் சம்பாதிக்கும் வகையிலும் குழுவொன்று செயற்பட்டு வருகிறது. மக்களைத் தவறாக வழிநடத்துவதற்கும், அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் பகையுணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் சமூக ஊடகப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மக்களை தவறாக வழிநடத்தும் அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம். அது மாத்திரமன்றி, கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பன்படுத்தி மக்களை ஏமாற்றும் வர்த்தகர்கள் கும்பலொன்றும் காணப்படுகிறது.

வரி விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, "உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யாமல், போலிப் பற்றுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி, இலாபம் ஈட்டும் வர்த்தக மாபியாக்களை முற்றாக நிறுத்துவதற்கு சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும்" எனக் கூறினார்.

எதிர்காலத்தில் வரி சேகரிப்பு செயற்பாடுகளை விஸ்தரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் நேரடி வரி வீதம் 40 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேநேரம், வரி அதிகரிப்பைக் காரணமாகப் பயன்படுத்தி பல்வேறு பொருட்களின் விலைகளை வர்த்தகர்கள் நியாயமற்ற விதத்தில் அதிகரித்துள்ளனர். இவ்வாறானவர்கள் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு நியாயமான முறையில் நடந்துகொள்வதும் அவசியமாகும்.

இது இவ்விதமிருக்க, இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது. முதலாவது மீளாய்வின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயும் நோக்கில் இந்தச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

**பி.ஹர்ஷன்...**




# காஸா மக்களை வெளியேற்றும் உரிமை இஸ்ரேலுக்கு கிடையாது!

**காஸா மீதான யுத்தம் ஆரம்பமாகி நாளையுடன் (15 ஆம் திகதி) நூறு நாட்களாகின்றன. இப்போரை உடனடியாக நிறுத்துமாறும், காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தங்குதடையின்றிச் செல்ல இடமளிக்குமாறும் ஆரம்பம் முதல் முழுஉலகமுமே இஸ்ரேலைக் கோரி வருகின்றன.**

இதன் பொருட்டு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை அதற்கான தீர்மானங்ளை நிறைவேற்றியுள்ளது. இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைப் பல நாடுகள் துண்டித்துள்ளன. இப்போருக்கு இஸ்ரேலுக்கு முதலில் ஆதரவு நல்கிய நாடுகளும் இக்கோரிக்கையை விடுத்துள்ளன. இதே கோரிக்கையை முன்வைத்து லெபனானின் ஹிஸ்புல்லாவும், யெமனின் ஹூதிக்களும், ஈராக்கின் போராளிக்குழுக்களும் ஆயுதரீதியான தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன.

இஸ்ரேல் இவை எதனையும் கருத்தில் கொள்ளாது யுத்தத்தை முன்னெடுத்து வரும் நிலையில், அந்நாட்டின் இரண்டு அமைச்சர்கள் முன்வைத்துள்ள யோசனை அல்லது கருத்து முழு உலகினதும் எதிர்ப்புக்கும் கண்டனத்திற்கும் உள்ளாகியுள்ளது. அவர்களது கருத்துக்கள் இரண்டு வாரங்களுக்கும் மேலாக உலகில் பெரும் பேசுபொருளாகியுமுள்ளன.

'காஸா மக்களை வேறு இடத்திற்கு இடமாற்ற வேண்டும். அவர்கள் காஸாவிலிருந்து வெளியேற வேண்டும். அவர்களைப் பொறுப்பேற்க நாடுகள் முன்வர வேண்டும். 23 இலட்சம் பலஸ்தீனியர்கள் இருக்க வேண்டிய பிரதேசமல்ல காஸா. அங்கு ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் பலஸ்தீனியர்கள் இருந்தாலேயே போதும்' என்பதே அவர்களது கருத்தாகும்.

இஸ்ரேலிய நிதியமைச்சர் பெஸாலெல் ஸ்மோட்ரிச், தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடமர் பென் க்விர் ஆகிய இருவருமே இக்கருத்தை முன்வைத்துள்ளனர். இதனை ஹமாஸும் பலஸ்தீன அதிகாரசபையும் மாத்திரமல்லாமல் பலஸ்தீன மக்களும் முற்றாக நிராகரித்து, கடும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளனர்.

காஸாவானது பலஸ்தீனின் ஒரு பகுதியாகும். இது மத்திய தரைக்கடலை அண்மித்த ஒரு கரையோரப்பகுதி. 365 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தின் கிழக்கு எல்லையாக மத்திய தரைக்கடலும், தென்மேற்காக எகிப்தும், கிழக்கு மற்றும் வடக்காக இஸ்ரேலும் எல்லையாக உள்ளன.

முதலாம் உலகப் போர் காலத்தில் அன்றைய பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஆதர் ஜேம்ஸ் பெல்போர் யூதர்களுக்காக இஸ்ரேல் என்ற நாட்டை பலஸ்தீனில் அமைத்துத் தருவதாக 1917 இல் உறுதியளித்தார். அதற்கான எழுத்துமூலக் கடிதத்தை அதேயாண்டு நவம்பர் 2 இல் அவர் வழங்கினார். அதுவே பெல்போர் பிரகடனமாக அறியப்படுகிறது. அதனைத் தொடர்ந்து மேற்குநாடுகளைச் சேர்ந்த யூதர்கள் 1920 முதல் பிரித்தானிய ஆதரவுடன் பலஸ்தீனில் கட்டம் கட்டமாக குடியேறலாயினர். இதன் விளைவாக பலஸ்தீனியர்கள் தம் இருப்பிடங்களை இழக்கும் நிலைமை உருவானது. யூதர்களது குடியேற்றத்தின் தாக்கங்களை உணரத் தொடங்கிய பலஸ்தீனியர்கள், 1929 முதல் வேலைநிறுத்தம் உள்ளிட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். அந்நடவடிக்கைகள் வெற்றியளிக்காத நிலையில் 1948 ஆகும் போது இலட்சக்கணக்கான பலஸ்தீனர்கள் தத்தமது பூர்வீக வாழிடங்களை இழந்து அகதிகளாகினர்.இந்நிலையில் ஐ.நா. 1948 மே 15 இல் இஸ்ரேலை அங்கீகரித்தது. 1948 இல் ஏற்பட்ட வெளியேற்றமே 'நக்பா' என வருடா வருடம் அனுஷ்டிக்கப்படுகிறது.

பலஸ்தீனில் இஸ்ரேலை நாடாக அங்கீகரித்தமைக்கு அரபுஇஸ்லாமிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, முதலாவது அரபு இஸ்ரேல் யுத்தம் 1948 இல் ஏற்பட்டது. அதனால் காஸா பகுதியை எகிப்து கைப்பற்றியது. அதன் பின்னர் 1967 இல் இடம்பெற்ற ஆறு நாட்கள் அரபு இஸ்ரேல் யுத்தத்தின் ஊடாக இஸ்ரேல் காஸாவை தம்வசப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து 2006 வரையான 39 வருடங்கள் காஸா இஸ்ரேல் வசமிருந்தது. ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலம் உருவான பலஸ்தீன அதிகார சபையின் கீழ் காஸா கொண்டு வரப்பட்டதோடு அங்கிருந்து இஸ்ரேல் வெளியேறியது.

23 இலட்சம் மக்களைக் கொண்ட காஸாவில் 17 இலட்சம் பேர் அகதிகளாவர். இவர்கள் காஸாவிலுள்ள 08 பாரிய முகாம்களில் தங்கியுள்ளனர். ஜபாலியாவில் 116,000, சாட்டியில் 90,000, புரைஜ்ஜில் 90,000, நுசெய்ரத்தில் 85,000 டெய்ர் அல் பலாஹ்வில் 26,000, மகாஸீயில் 33,000, கான் யூனுஸில் 88,000, ரபாவில் 133,000 என்றவாறு எட்டு முகாம்களில் பலஸ்தீனியர்கள் தங்கியுள்ளனர்.

இம்முகாம்கள் உட்பட காஸாவிலுள்ள அனைத்துக் குடியிருப்புக்களும் கடந்த 3 மாதங்களாக நீடிக்கும் யுத்தத்திற்கு இலக்காகியுள்ளன. இதனால் இற்றைவரை 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, 57 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

தரைவழி யுத்தத்தின் ஊடாக காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேலியப் படையினர் முதலில் காஸா மக்களை வடக்கில் இருந்து மத்திய காஸாவுக்கு இடம்பெயருமாறும், அதன் பின்னர் மத்திய காஸா மீது படையெடுத்ததும் அங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்லுமாறும் கூறினர். அதனால் 19 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்தவர்களாக உள்ளனர்.

இவ்வாறான சூழலில் காஸா மக்களை ருவண்டா, சாட் மற்றும் கொங்கோ குடியரசு ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் "அவ்வாறான பேச்சுக்கள் எதுவும் இடம்பெறவில்லை. அவை பிழையான தகவல்கள்" என்று ருவண்டா வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. அதேபோன்று சாட்டும் கொங்கோ குடியரசும் இதனை ஏற்கனவே மறுத்துள்ளன. ஆனால் காஸா மக்களை வெளியேற்றும் திட்டத்தைத் தடுத்து நிறுத்த ஐ.நாவும் சர்வதேச சமூகமும் முன்வர வேண்டும் என்று ஹமாஸ் அழைப்பு விடுத்துள்ள அதேநேரம், பலஸ்தீன அதிகார சபை ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், பலஸ்தீனியர்களை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் நிராகரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இந்த அமைச்சர்களின் கூற்றுக்களை முற்றாக நிராகரித்துள்ள இஸ்ரேலிய நட்பு நாடான அமெரிக்கா, "காஸா பலஸ்தீனின் நிலம். அது பலஸ்தீன நிலமாகவே இருக்கும். அதில் நாங்கள் தெளிவாகவும், உறுதியாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி இருக்கிறோம்" என்று கூறியுள்ளது.

காஸா மக்களை பலவந்தமாக வெளியேற்றி வேறு நாடுகளில் குடியேற்றும் யோசனையை நிராகரித்துள்ள ஐரோப்பிய நாடுகள், காஸாவில் யூதகுடியேற்றங்களை முன்னெடுக்கும் திட்டங்களையும் எதிர்த்துள்ளதோடு இவை ஜெனீவா சமவாயத்தையும் ரோம் சட்டத்தையும் அப்பட்டமாக மீறும் செயல் எனவும் கண்டித்துள்ளன. காஸா மக்களை பலவந்தமாகப் புலம்பெயரச் செய்யவோ அவர்களது தலைவிதியைத் தீர்மானிக்கவோ இஸ்ரேலுக்கு உரிமை கிடையாது. பலஸ்தீன மக்கள் எங்குவாழ வேண்டும் என்பதை இஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானிக்க முடியாது என்று பிரான்ஸ் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய யூனியன் மற்றும் பிரித்தானியா, துருக்கி, ஜோர்தான், சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இந்த யோசனையை நிராகரித்து கண்டித்துள்ளன. இவ்வாறான சூழலில் மத்திய கிழக்குக்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனியோ பிளிங்கன் துருக்கி, ஜோர்தான், கட்டார், சவூதி, ஐக்கிய அரபு இராச்சியம், இஸ்ரேல் ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது, 'சுதந்திரமான பலஸ்தீன நாட்டை உருவாக்க வேண்டும். மேற்குக் கரையும் காஸாவும் பலஸ்தீனத் தலைமையின் கீழ் ஒன்றுபட்டிருக்க வேண்டும்' என்றுள்ளார்.

ஆகவே காஸா மக்களை அவர்களது வாழிடங்களில் இருந்து வெளியேற்றும் யோசனை, கருத்தை உலகம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அதன் பிரதிபலிப்பே இந்த கண்டனங்களும் எதிர்ப்புக்களுமாகும். அதனால் சர்வதேச சட்டங்களையும் மனிதாபிமான சட்டங்களையும் உலகளாவிய கோரிக்கைகளையும் மதித்து செயற்பட வேண்டிய பொறுப்பு இஸ்ரேலுக்கு முன்பாக உள்ளது எனலாம்.



**மர்லின் மரிக்கார்...**

**பலஸ்தீன மண்ணுக்கு சொந்தமானது காஸா! உறுதியான நிலைப்பாட்டில் அமெரிக்கா**



காஸா அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள்



கண்டனத்துக்குரிய கருத்துக் கூறிய இஸ்ரேல் அமைச்சர்கள் இருவர்

**உலகளாவிய கண்டனத்திற்கு உள்ளாகியுள்ள இஸ்ரேலிய அமைச்சர்களின் யோசனை!**





இடம்பெயர்ந்து செல்லும் காஸா மக்கள்

**பலவந்தமான நடவடிக்கைகளுக்கு சர்வதேசம் கடும் கண்டனம்!**






# புதிய பாதையில் பயணிக்கவுள்ள யாழ்தேவி...




**"மௌன்றாம் பிளாட் பாரத்திலிருந்து யாழ்தேவி எக்ஸ்பிரஸ் புகையிரம் காலை 6.00 மணிக்கு காங்கேசந்துறையை நோக்கிப் புறப்படும். இந்தப் புகையிரதம் ராகமை, பொல்கஹவலை, குருணாகல், மாஹோ சந்தி, கல்கமுவ, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா..... ஆகிய புகையிரத நிலையங்களில் நிறுத்தப்படும்"**

இந்த அறிவிப்பை முதன் முறையாகக் கேட்டது 1956ஆம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி திங்கட்கிழமையாகும். யாழ்தேவி தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்த கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திலேயே இந்த அறிவிப்பை கேட்க முடிந்தது.

அதன் பின்னர் யாழ்தேவியின் பயணத்தில் படிப்படியாக வெயன்கொடை, தமுத்தேகம போன்ற இன்னும் புகையிரத நிலையங்கள் இணைந்து கொண்டதோடு, தற்போது யாழ்தேவியை விடவும் வேகமாகப் பயணிப்பதற்கு சேவைக்கு வந்த நகரங்களுக்கிடையேயான விரைவு புகையிரதங்களும் உள்ளன.

வடக்கு தெற்கை இணைப்பதற்கு பல புகையிரத சேவைகள் தற்போது வந்துள்ள போதிலும், யாழ்தேவியின் அளவு வேறு எதுவும் பெயர் பதிக்கவில்லை.

யாழ்தேவிக்கு ரயில் பாதை உருவாக்கப்பட்டது 1894 பெப்ரவரி 14ஆம் திகதியாகும். அந்த வழித்தடத்தில் பயணிகள் புகையிரதச் சேவைகள் 1905/1906 ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. அது இரவு தபால் புகையிரதச் சேவையாகும். சுமார் 12 மணிநேரம் சென்ற இரவு தபால் புகையிரதத்துக்கு மேலதிகமாக பகல் நேர புகையிரதச் சேவைக்கான தேவை ஏற்பட்டதால் யாழ்தேவி புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு யாழ்தேவிக்கு 1956ஆம் ஆண்டில் சுமார் 7 மணி நேரமும் 20 நிமிடங்களும் எடுத்தது. கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடாவிலிருந்து கொண்டுவரப்பட்ட எம் 2ஆம் தர புகையிரத என்ஜினின் மூலமாகவே அந்தப் புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அதன் பின்னர் அதன் வேகம் அதிகரித்தது 1975ஆம் ஆண்டு கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம் 4ஆம் தர புகையிரத என்ஜின் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னராகும்.



அதன்பிரகாரம் காலை 5.45 க்கு பயணத்தை ஆரம்பித்த யாழ்தேவி காலை 9.35 க்கு அநுராதபுரத்தைச் சென்றடைந்து பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தது.

பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக யாழ்தேவியின் பயணம் 1986ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறுத்தப்பட்டது. வவுனியா வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட யாழ்தேவி 1989ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் கீழ் மீண்டும் பயணத்தை ஆரம்பித்த போதிலும், அது 1990ஆம் ஆண்டிலிருந்து 24 வருடங்கள் தடைப்பட்டிருந்தது.

இந்தியன் இர்கான் நிறுவனத்தின் மூலம் அந்தப் புகையிரதப் பாதை முழுமையாகப் புனரமைக்கப்பட்டதன் பின்னர் 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் 13ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஓமந்தைக்கு அடுத்ததாக காங்கேசந்துறை வரைக்குமான அனைத்து புகையிரத நிலையங்களும் இந்நாட்டின் பிரதான வங்கிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டன.

அந்தப் பங்களிப்பு அவ்வாறிருந்த போதிலும், மாஹோ முதல் ஓமந்தை வரையிலான புகையிரத பாதைக்குத் தற்காலிக திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டனவே தவிர, அதற்கான நிரந்தர தீர்வுகள் கிடைக்கவில்லை.

அந்நேரம் கொழும்பிலிருந்து காங்கேசந்துறை செல்ல யாழ்தேவி விரைவு புகையிரதத்திற்கு 8 மணி நேரமும், நகரங்களுக்கு இடையேயான விரைவு புகையிரதத்துக்கு 6 மணி நேரமும் எடுத்தது. நேர அட்டவணையில் அவ்வாறு இருந்தபோதிலும், புகையிரதப் வழித்தடத்தில் இருந்த பலவீனம் காரணமாக பயணத்திற்கு மேலதிகமாக இன்னும் 45 நிமிடங்களுக்கும் அதிக நேரம் எடுத்தது.

இது தொடர்பாக இந்திய உதவியின் கீழ் மாஹோ சந்திக்கும் ஓமந்தைக்கும் இடையிலான புகையிரதப் பாதையின் முழுமையான புனரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, அதனை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது படிப்படியாக பின்னோக்கிச் சென்று கொவிட் 19 தொற்றுநோய் காலத்தின் பின்னர், அது மேலும் மந்தமாகியது.

2014ஆம் ஆண்டு வடக்கு புகையிரதப் பாதை நிர்மாணிக்கப்பட்ட பின்னர், இந்திய கடன் திட்டத்திற்கு அமைய மாஹோ, ஓமந்தை புகையிரதப் பாதை நவீனமயமாக்கல் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்கான கேள்வி மனு கோரப்பட்டது 2019ஆம் ஆண்டிலாகும். அதன்பிரகாரம், மாஹோவிலிருந்து ஓமந்தை வரையிலான 128 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணியும் வடக்கு புகையிரதப் பாதையினை நிர்மாணித்த இந்திய அரச நிறுவனமான இர்கோனுக்கு வழங்கப்பட்டது.

எனினும் 2019ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரைக்கும் அது செயல்படுத்தப்படவில்லை.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் தலையீட்டின் மூலம், அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த கோபால் பாக்லே, இந்திய கடனுதவியின் கீழ் உடனடியாக அந்த புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தார்.

அதன்பிரகாரம், இந்தியன் இர்கோன் நிறுவனத்தின் தலைமையில் மாஹோவிலிருந்து ஓமந்தை வரையிலான 128 கிலோமீற்றர் நீளமான புகையிரதப் பாதை இரண்டு கட்டங்களாக முழுமையாக புனரமைக்கப்பட்டது.

மாஹோவிலிருந்து ஓமந்தை வரைக்குமான புகையிரதப் பாதையைப் (128 கிலோ மீற்றர்) புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மதவாச்சியில் சிறப்பான முறையில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த முழுமையான வேலைத்திட்டம் 91.27 மில்லியன் டொலர் செலவில் முன்னெடுக்கப்படுகிறது.

இதனடிப்படையில் முதலாம் கட்டத்துக்கான பணிகள் கடந்த 2023 ஜனவரி 07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரைக்குமான 61.6 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்ட புகையிரதப் பாதை முழுமையாக மூடப்பட்டு புகையிரதப் பாதையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் கீழ் அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரைக்குமான பரசன்கஸ்வெவ, மதவாச்சி மற்றும் வவுனியா ஆகிய மூன்று புகையிரத நிலையங்கள் மற்றும் மிஹிந்தலை சந்தி, சாலியபுர, மெதகம, பூனேவ, இரட்டைப் பெரிய குளம் மற்றும் தாண்டிக்குளம் ஆகிய உப புகையிரத நிலையங்கள் அனைத்தும் நவீனமயமாக்கப்படவுள்ளன.

ஆறு மாதங்களை அண்மித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்தப் பயணம் வெற்றியளித்ததோடு, அதன் பின்னர் கொழும்பிலிருந்து மீண்டும் வடக்குக்கான புகையிரதப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நவீனமயமாக்கப்பட்ட யாழ்தேவியின் பயண நேரத்தை ஏழரை மணித்தியாலங்களாக குறைக்க முடிந்தது.

அநுராதபுரத்தில் மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்க முடிந்தாலும் மாஹோவிலிருந்து அனுராதபுரம் வரைக்கும் புகையிரதத்தின் வேகம் மணிக்கு 5 கிலோ மீற்றரிலிருந்து 32 கிலோமீட்டர் எனும் மிக மோசமான நிலையில் இருந்தது. இதன் காரணமாக அநுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரைக்குமான புகையிரதப் பாதையை முழுமையாகப் புனரமைப்பு செய்ததன் மூலமும் முழுமையான பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது போனது. எனவே சில மாதங்களில் வடக்கு தெற்கு புகையிரத சேவையின் பின்னர் இரண்டாம் கட்டமான மாஹோவிலிலிருந்து அநுராதபுரம் வரையான புகையிரத பாதையின் புனரமைப்புப் பணிகள் கடந்த 07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், அப்பதை ஊடான புகையிரத பயணங்களும் நிறுத்தப்பட்டன.

கடந்த ஏழாம் திகதி கல்கமுவ புகையிரத நிலையத்தில் மாஹோ அநுராதபுரம் புகையிரதப் பாதையின் புனரமைப்பு பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முதல் செயலாளர் இரினா டாகூர்,

ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார உள்ளிட்ட அதிதிகள் பலர் கலந்து கொண்டனர். போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, புகையிரத பொது முகாமையாளர் எச். எம். கே. டப்ள்யூ. பண்டார, புகையிரத சிரேஷ்ட அதிகாரிகள், இந்திய இர்கோன் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

மாஹோ சந்தி புகையிரத நிலையத்திலிருந்து ரயில் பஸ் வண்டி ஒன்றின் மூலம் பயணித்து புகையிரதப் பாதையை அதிதிகள் பார்வையிட்டனர். இதன் போது பிரித்தானிய யுகத்திலிருந்து இன்று வரைக்கும் பயன்படுத்தப்படும் 100 வருடங்களுக்கும் மேல் பழமையான டெப்லட் சமிக்ஞை முறை தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருக்கு புகையிரத அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மாஹோ, அனுராதபுரம் புகையிரதப் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் கல்கமுவ புகையிரத நிலையத்தில் அனைத்து முக்கியஸ்தர்களின் பங்களிப்புடனும் பாரம்பரிய நிகழ்வுகளுடனும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் மாஹோ சந்தியிலிருந்து அநுராதபுரம் வரையான மொத்த புகையிரத வீதியும் முழுமையாக நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

இங்கு, 5 முக்கிய புகையிரதப் பாலங்களும் புதிதாக அமைக்கப்படவுள்ளன. புகையிரதப் பாதை தற்போதையதை விடவும் 500 மி.மீ (20 அங்குலம்) உயரத்தைக் கொண்டிருக்கும். எனவே, புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரதக் கடவைகளையும் அதற்கேற்ப நவீனப்படுத்த வேண்டும். அதற்காக புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத கடவைகள் தொடர்பான பணிகளை புகையிரதத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நவீனமயப்படுத்தலின் கீழ் அம்பன்பொல, கல்கமுவ, செனரத்கம, தமுத்தேகம, தலாவ மற்றும் சாவஸ்திபுர ஆகிய புகையிரத நிலையங்ளும், ரத்தெனிகம, அநுராதபுரம் புதிய நகரம் ஆகிய இரண்டு உப புகையிரத நிலையங்களும் முழுமையாக நவீனமயப்படுத்தப்படவுள்ளன.

புகையிரத வர்ண சமிக்ஞை கட்டமைப்பை முழுமையாக நவீனமயப் படுத்துவதற்காக இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 450 கோடி ருபா நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த புகையிரதப் பாதை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 2024ஆம் ஆண்டு பொசன் பௌர்ணமி தினத்திலிருந்து அநுராதபுரம் வரை மூன்று மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் பயணிக்க முடியும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் நகரங்களுக்கு இடையேயான விரைவு புகையிரதத்தின் பயண நேரம் ஒன்றரை மணி நேரத்தாலும், யாழ்தேவி உள்ளிட்ட ஏனைய விரைவு புகையிரதங்களின் பயண நேரம் சுமார் 2 மணிநேரத்தாலும் குறையும். இது புகையிரத வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் இயங்கும் மிகச்சிறந்த திறன் கொண்ட புகையிரதம் என்ற பெருமையை பதிவு செய்யும்.



அதனடிப்படையில் புகையிரதப் பாதையின் புனரமைப்பு நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் வடக்கு புகையிரதங்களின் பயண காலம் நகரங்களுக்கு இடையான விரைவு புகையிரதம் ஒன்றரை மணி மற்றும் யாழ்தேவி உள்ளிட்ட ஏனைய புகையிரதங்கள் 2 மணி நேரத்தினால் குறைவடையும்.

இந்த வருடத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டமாக இருப்பது மாஹோ அநுராதபுரம் புகையிரதப் பாதையை முழுமையாகப் புனரமைப்புச் செய்யும் திட்டமாகும். இந்தப் புனரமைப்புடன் கல்கமுவ, தமுத்தேகம மற்றும் தலாவ புகையிரத நிலையங்களும் புதிய தோற்றத்தைப் பெறவுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணியினால் கொழும்பிலிருந்து மாஹோ வரை மாத்திரம் வடக்குப் புகையிரதம் பயணிப்பதால் அநுராதபுரத்திற்கு அல்லது யாழ்ப்பாணம் வரைக்கும் பயணிக்கும் பயணிகளுக்காக வீதி சீரமைக்கும் வரை 20 இ.போ.சபை பஸ்களை மாஹோவிலிருந்து அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் வரைக்கும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது அமைச்சரின் அறிவுரைகளுக்கு அமைவாகவாகும்.

அநுராதபுரம் மற்றும் காங்கேசன்துறைக்கு இடையில் நான்கு புகையிரத சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் எச். எம். கே. டப்ளிவ். பண்டார தினகரனுக்குத் தெரிவித்தார். அதனடிப்படையில் அநுராதபுரத்திலிருந்து காலை 8.20 க்கும், பகல் 2.30 க்கும் காங்கேசன்துறை வரைக்கும், காங்கேசன்துறையிலிருந்து அநுராதபுரத்திற்கு காலை 6.00 மணி மற்றும் மாலை 2.40 மணிக்கும் புகையிரதச் சேவைகள் இடம் பெறும். அதேபோன்று பெலியத்தையிலிருந்து அநுராதபுரம் வரைக்கும் பயணிக்கும் ரஜரட்ட ரெஜின புகையிரதமும் மாஹோ சந்தி வரைக்கும் சேவையில் ஈடுபடும் என்றும் அவர் கூறினார். அதேபோன்று யாழ்தேவி புகையிரதமும் பழைய நேரத்திற்கே கொழும்பிலிருந்து புறப்பட்டு திருகோணமலை வரைக்கும் சேவையில் ஈடுபடும் என்றும், அந்த புகையிரதம் மாஹோவிற்குச் சென்று அநுராதபுரத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் பஸ் வண்டிகளில் அல்லது அநுராதபுரத்திற்குச் சென்று யாழ்ப்பாணம் வரை புகையிரத்திலும் மீண்டும் பயணிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு புகையிரதப் பாதையின் அபிவிருத்தியுடன் மீண்டும் 50 வருடங்களுக்கு அந்தப் பாதையை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் பொது முகாமையாளர் தெரிவித்தார். இந்த பாதையை நவீனமயப்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாணம் மாத்திரமன்றி மன்னார் புகையிரதப் பயணிகளும் பெருமளவு நன்மையடைவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**தாரக விக்ரமசேகர**
**தமிழில்:**
**எம்.எஸ். முஸப்பிர்**

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் கொழும்பு எம்.ஏ.ரஹீமா



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 16 ஆம் திகதி (16.01.2024) செவ்வாய் இரவு 8.15 க்கு ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் முஸ்லிம் சேவைக்குப் பங்களிப்பு வழங்கி பெருமிதம் தேடிக்கொண்டோர் வரிசையில் பிரபல சிறுகதை பெண் எழுத்தாளர் கொழும்பு எம்.ஏ. ரஹீமா அதிதியாக கலந்து கொள்கிறார்.

1980 தொடங்கி 90 வரையிலான கால கட்டத்தில், இளையோர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றதோடு, "மாதர் மஜ்லிஸ்" நிகழ்ச்சிக்கு தொடராக பிரதியாக்கம் செய்திருக்கிறார். இன்னும் சிறுகதைகள் எழுதியதோடு, விசேட நாட்களில் ஒலிபரப்பான கவியரங்குக்கு, கவிதைகள் எழுதி குரலும் கொடுத்துள்ளார்.

பின்னாட்களில், எழுத்துத் துறையை விட்டும் தூரமாகி இருந்த இவர் மீண்டும் இலக்கிய பணியாற்ற முனைந்திருப்பது பாராட்டுக்குரியதே. சமகால நிகழ்வுகளை, சமூகத்தில் நிறைந்திருக்கும் குறைகளை மையப்படுத்தி எழுதுவதில் மெச்சத்தக்க தைரியம் கொண்ட பெண் எழுத்தாளராக இலக்கிய பரப்பில் புகழ் தேடிக் கொண்ட ஒருவர். அண்மையில் இவர் தலைநகரில், வெளியிட்ட "சூல்சோறு" சிறுகதை தொகுதி இவரது எழுத்துத் திறமைக்குச் சான்றாக அமைகிறது. கொழும்பு, வாழைத்தோட்டம் மிஹிந்து மாவத்தை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கல்வி கற்று, உயர் கல்வியை திஹாரிய தாருஸ்ஸலாம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார்.

குருநாகல் தெலும்புகல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற இவர், கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தொடர்ச்சியாக 22 வருடங்கள் பணியாற்றி, 2008 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

இவரிடம் கல்வி கற்ற எத்தனையோ மாணாக்கர்கள், இலக்கியப் பரப்பிலும், பல்வேறு உயர் பதவிகளிலும் இருந்து வருகிறார்கள். எம்.எஸ்.எம். ஜின்னா நேர்காணல் செய்யும் இந்நிகழ்ச்சியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை அதிகாரி எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.



# 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்

# பொருளாதார விஞ்ஞான நோக்கு



## ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் நூல் வெளியீட்டு விழா

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 2500 நிறுவனங்களிடையே எட்டு ஏற்றுமதி நிறுவனங்கள் மாத்திரமே உள்ளன என பேராசிரியர் ஸ்ரீமல் அபேரத்ன தெரிவித்தார்.

இதில் பெரியதொரு பிரச்சினை இருப்பதாகக் கூறிய அவர், இந்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக தெளிவான கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் கூறினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் எழுதப்பட்ட "2024ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பொருளாதார விஞ்ஞான நோக்கு" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். இந்நிகழ்வு கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை மாலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம் பெற்றது.



பேராசிரியர் ஸ்ரீமல் அபேரத்ன

இந்நிகழ்வில் கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, ஜகத் குமார, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், லேக்ஹவுஸ் ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நூலில் உள்ளடக்கம் தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன தெளிவுபடுத்தியதைத் தொடர்ந்து அதன் முதற்பிரதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வழங்கப்பட்டது.

இந்தக் கேள்விக்கு விடை காணாமல் நாடு நத்தை வேகத்தில் பயணிக்குமாயின் மீண்டும் எழுந்து வர பல ஆண்டுகள் ஆகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"இலங்கையில் பிரதான வர்த்தகர்கள் 40 பேர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். அவர்களில் எவரும் ஏற்றுமதியாளர்கள் இல்லை. உற்பத்தி நிறுவனங்களும் இல்லை. நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்ற நிறுவனங்களின் உரிமையாளர்கள்தான் அந்த பிரதான வர்த்தகர்களிடையே வந்திருந்தார்கள்" என்றும் அவர் மேலும் கூறினார்.

பொருளாதாரத் துறையுடன் தொடர்புடைய 50க்கும் அதிக நூல்களை எழுதியுள்ள அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் ஆய்வுகளுடனான "2024ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பொருளாதார விஞ்ஞான நோக்கு" என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீமல் அபேரத்ன மேலும் கூறியதாவது,**

பொருளாதாரத்தில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று கருத்துக்கள் மற்றும் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம். மற்றது கொள்கை அடிப்படையிலான பொருளாதாரம். தற்போது இவை இரண்டையும் ஊக்குவித்து, பொருளாதார கோட்பாடுகளை அடிப்படையாக் கொண்டு தற்போதைய பொருளாதாரத்தை பகுப்பாய்வு செய்த கலாநிதி பந்துல குணவர்தன அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டம் மற்றும் அந்நியச் செலாவணி விவகாரம் தொடர்பில் பேசப்பட்டது. வருமானத்தை விடவும் செலவு அதிகரித்ததால் கடன் பெறப்பட்டது. அதனால் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அதிகமானவை வெளிநாட்டுக் கடன்களாகும். அவை டொலர்களில் பெறப்பட்ட கடன்களாகும். கடந்த காலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டாலும் அவை ரூபாவினால் பெறப்பட்ட வருமானமாகும். டொலர்களின் மூலமே கடன்களைச் செலுத்த வேண்டும்.

எம்மால் டொலரை அச்சிட முடியாது. ரூபாய்களை அச்சிட எம்மால் முடிந்தாலும் அது டொலர்களுக்கும் தாக்கத்தைச் செலுத்தும். வரவு செலவுத் திட்டமும், அந்நிய செலாவணியும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளது. அதற்கான பதிலைத் தேடாமல் இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வர முடியாது. தற்போது நாட்டுக்குள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. அதனால் அந்நிய செலாவணி அதிகமாகக் கிடைக்கின்றது தானே என சிலர் கேட்கின்றனர்.

அந்நிய செலாவணி அதிகரிப்பு செழுமையின் அடையாளம் என்றாலும், அது நமது வறுமையின் பிரச்சினை. நம் நாட்டு மக்கள் அறிவுக்கு ஏற்ற சம்பளம் பெற முடியாததால், வேலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இது நமது வறுமை துயரம் தொடர்பான பிரச்சினை யாகும். வியட்நாம் 25 ஆண்டுகளில் 5 பில்லியன் டொலர்களிலிருந்து 250 பில்லியன் டொலர்கள் வரை ஏற்றுமதி வருமானத்தை ஈட்டியுள்ளது. அந்த காலப்பகுதியினுள் எம்மால் 12.5 பில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துக் கொள்ளவே முடிந்தது. ஒரு நாளைக்கு 1000 ரூபாய் சேமித்தால், ஒரு பில்லியன் டொலர்களை சேமிக்க இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகும்.

**பேராசிரியர் பிரியங்க துனுசிங்க**

இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டதையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகிறேன். 30 வருடங்களுக்கு முன்னர் கல்வித் துறையில் நான் உட்பட ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தைக் கற்பித்த ஆசிரியர். பந்துல குணவர்தன வெளியிட்டுள்ள புத்தகங்களை வாசிக்காவிட்டாலும் மறு பிறவியில் புத்தகங்களை உண்ணும் பூச்சியாக மாறியாவது அந்தப் புத்தகங்களை உண்ண வேண்டி ஏற்படும் எனக் கூறினார். அப்படியொரு பிறவியைப் பெறுமளவுக்கு அவர் ஒரு துரதிர்ஷ்டசாலி அல்ல என நான் நினைக்கிறேன்.



பேராசிரியர் பிரியங்க துனுசிங்க

என்னையும் சேர்த்து ஆயிரக்கணக்கானோருக்கு இலவசமாகக் கற்பித்த ஆசிரியர் அவர். ஜனசவிய மற்றும் முத்திரை அட்டைகளைக் கொண்ட குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பித்தவர் அவர்,. ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு பொருளாதார பாடத்தைக் கற்பித்தார். அவ்வாறு கற்பித்த கௌரவம் அவருக்கு கிடைக்கவே வேண்டும். அன்று முதல் இன்று வரை பாராளுமன்றத்தில் மணிக்கணக்கில் ஆற்றிய உரைகளும், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்துக்காக ஆற்றப்பட்ட உரையும் இன்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

ஒரு மனிதனின் உள்ளத்திலிருக்கும் விடயங்களை இரண்டு முறைகளில் சமூகத்திற்கு வெளிப்படுத்த முடியும். அதில் ஒன்று பேசுவதின் மூலமாகும். அடுத்தது, பேனாவினைப் பயன்படுத்தி புத்தகம் ஒன்றை எழுதியாகும். நான் இந்த இரண்டையும் ஒரே தடவையில் செய்வதற்கு முயற்சித்தேன். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது 2022ஆம் ஆண்டிலாகும். அடுத்ததாக 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியிலாகும். 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த போது, அது தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது அதைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு ஐம்பது நிமிடங்கள் கிடைத்தது. கதை மிகவும் பயனுள்ளதாக இருக்க, எனது வாதத்தை நிரூபிக்க பல புத்தகங்கள் மற்றும் பிற அறிவார்ந்த ஆதாரங்களில் இருந்து உண்மைகளை முன்வைக்க வேண்டும். உதாரணமாக, இந்நாட்டின் நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவிற்கு அமைய பாராளுமன்றத்துக்கு உள்ளது. அதிலிருக்கும் பிரிவு தொடர்பான உறுதியான புரிதலை வார்த்தைகளால் கூறக்கிடைக்காத காரணத்தால் அந்த பிரிவினை நான் முன்வைத்தேன். நான் இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர், 1989இல் முதன்முதலாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டபோது, ஒரு பாராளுமன்ற உறுப்பினராக எனது கன்னி உரையை ஆற்றியபோதும் இந்த நெருக்கடியை நான் கண்டிருக்கிறேன். என்று அந்தக் உரையில் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். எனவே அந்தக் உரையை நான் முன்வைத்தேன்.



பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த

2048/50 ஆம் ஆண்டாகும் போது இலங்கை மக்கள் கடனைச் செலுத்தும் முறையினை இங்கிருக்கும் பலரால் வேறு உலகத்திலிருந்து பார்க்க முடியும். இது தற்காலிக நெருக்கடி அல்ல. மிகப் பெரியதொரு நெருக்கடி. எமக்கு 4843 பில்லியன் டொலர் வெளிநாட்டு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட கடனின் கீழ் 665 மில்லியன் டொலரை வழங்குவதற்கும், வரவு செலவுத் திட்ட நிதிக்காக 850 மில்லியன் டொலரை வழங்கவும் உறுதியளித்துள்ளது. 800 மில்லியன் டொலரை வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 450 மில்லியன் டொலரை வழங்க இணங்கியுள்ளது. கடன் சலுகை கிடைக்கும் என நினைக்கிறேன். இவை கிடைக்காவிட்டால் எமக்கு மீண்டும் எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. உணவு மற்றும் பானங்கள் இல்லை. 2028ஆம் ஆண்டாகும் போது அந்நிய வள இடைவெளி 3911 பில்லியன்களாகும். இதில் 329 ஐ சர்வதேச நாணய நிதியம் வழங்கும். அதற்குப் பிறகு வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் 600 மில்லியன் டொலரை வழங்கும். உலக வங்கி 300 மில்லியன் டொலரையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலரையும் வழங்கும். 2027ல் சர்வதேச சந்தைக்கு சென்று 1.5 பில்லியன் இறையாண்மை பத்திரத்தை வெளியிட முடியும். அதுவரைக்கும் சர்வதேச சந்தைக்கு செல்ல முடியாது. 2027இல் தான் போக முடியும். இந் நூலில் அவை தொடர்பில் எழுதப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசாங்கங்களும் இந்த மூன்று விதிமுறைகளையும் ஒரே மாதிரியாக முன்னெடுத்திருந்தால், நாடு ஒருபோதும் வங்குரோத்து அடைந்திருக்காது.

**பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த**

இந்த நூலின் பெயர் "2024ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பொருளாதார விஞ்ஞான நோக்கு" என்பதாகும். எமது இலங்கையின் நிதி அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டதா, அவற்றைப் பயன்படுத்துவதற்கு என்ன தடைகள் இருந்தன, நாம் எங்கு தவறு விட்டோம் போன்ற விடயங்களை இந்தப் புத்தகம் வெளிப்படுத்துகிறது. தரவுகளை அடிப்படையாக வைத்தே நாம் ஒரு விடயத்தை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்துகிறோம். அவர் அதற்காகப் பெரும் முயற்சிகளைச் செய்திருக்கிறார். தரவுகளுடன் ஒரு விடயத்தை முன்வைத்தால்தான் அதிக பெறுமதி இருக்கும். பொதுமக்களுக்கோ, வேறு எந்த ஒருவராலோ இது தொடர்பில் வாதங்களை முன்வைக்க முடியும். ஆதாரங்களுடன் முன்வைக்கப்படும் வாதங்கள் இந்த புத்தகத்தில் உள்ளன. இவ்வாறான பணியினைச் செய்வதற்கு எல்லோரும் முன்வருவதில்லை. இந்த புத்தகத்தில் ஒன்பது அத்தியாயங்கள் உள்ளன. நமது பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஒரு பெரிய செய்தி வழங்கப்பட்டுள்ளது. ஒரு முக்கியமான உரையின் அவசியத்தை அவர் இந்நூலின் மூலம் எழுப்புகிறார். ஆழ்ந்த ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார். இது மிகவும் சுவாரஸ்யமானது.

**எம். எஸ். முஸப்பிர்**



# டிஜிட்டல் மயமாகும் போக்குவரத்துத் துறை

## பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு!

தற்போது நாம் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு நேரடியாகவே தாக்கத்தைச் செலுத்தும் காரணிகளிடையே பிரதான துறையாக போக்குவரத்துத் துறையைக் குறிப்பிட முடியும். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின் போக்குவரத்துத் துறையில் பாரிய மாற்றங்களைச் செய்ய வேண்டியது அத்தியாவசியமானதாகும். நிலையான அபிவிருத்தி மூலோபாயத்தின் கீழ் இந்தச் செயற்பாட்டை எவ்வாறு அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வது என்பது தொடர்பில் இத்துறையில் பரந்த அனுபவங்களைக் கொண்ட மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் விநியோக தொடர் கற்கைகள் திணைக்களத்தின் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்த கருத்துக்களிலிருந்து இக்கட்டுரை தொகுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது அனைத்து மக்களும் பொருளாதார ரீதியாக மிகவும் கடினமான காலகட்டத்தை கடத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே, இந்த நிலையில் இருந்து எப்படி விரைவில் மீள்வது என்பது பலரது எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இது தொடர்பில் அவதானத்தைச் செலுத்தும் போது இதற்கு அடிப்படையாக அமைந்த பல காரணிகள் உள்ளன. இவற்றை அரசியல், பொருளாதாரம், சமூகம் என வகைப்படுத்தி அதற்கேற்ப தீர்வு காண்பது மிகவும் அவசியமாகும். இங்கு, நான் எனது கவனம் செலுத்தப்பட்டிருப்பது பொருளாதாரத்தை நேரடியாகப் பாதித்த ஒரு விடயத்திலாகும். அதுதான் இந்த நாட்டின் போக்குவரத்துத் துறையாகும். குறிப்பாக மக்களாகிய நாம் இடத்திற்கு இடம் பயணம் செய்ய விரும்புகிறோம். போக்குவரத்து என்பது அதற்குத் தேவையான வசதிகளை எவ்வாறு வழங்குவது என்பதற்கான கட்டமைக்கப்பட்ட முறையாகும். அதன்பிரகாரம் காலத்துக்குக் காலம், இத்துறை உள்நாட்டிலும், உலக அளவிலும் விரிவடைந்து முன்னேறி வருகிறது.

இதனடிப்படையில் நாம் பணத்தை ஈட்டுவதற்கும் அதேபோன்று பணத்தைச் செலவு செய்வதற்கும் போக்குவரத்து அவசியமாகும். இந்த இரண்டு செயல்பாடுகளுக்கும் இடையில் சமநிலையை பேணுவது அவசியமாகும். எனினும் கடந்த காலத்தை நோக்கும் போது இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் சுமார் 20 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி செலவிடப்பட்டுள்ளது. அப்படியானால், செலவழித்த இந்த தொகைக்கு ஏற்ப நாம் வருமானத்தையும் ஈட்ட வேண்டும். ஆனால் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் எம்மால் இந்த தொகையை நாம் சம்பாதிக்க முடியாது. எனவே, மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலாளர்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியே இதற்கு செலவிடப்படுகிறது.

இவ்வாறு ஈட்டப்படும் அந்நியச் செலாவணியில் 8 சதவீதம் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. அதேபோன்று இதற்குத் தேவையான மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு ஆண்டுதோறும் 16 முதல் 17 சதவீதம் செலவிடப்படுகிறது. காரணம் ஒரு பெரல் மசகு எண்ணெய் விலை 80 முதல் 90 அமெரிக்க டொலர்கள் வரை உள்ளதாலாகும். அதன்படி, மசகு எண்ணெயின் விலை உயர்வு மற்றும் வீழ்ச்சியைப் பொறுத்து இந்த மதிப்பு வேறுபடும். அதேபோன்று நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் 34 வீத அன்னியச் செலாவணியை செலவிடுகிறோம். இதன்பிரகாரம் இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 25 முதல் 30 வீதம் வரை போக்குவரத்துத் துறைக்கே செலவிடப்படுகிறது. உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்த மதிப்பு மிக அதிகமாகும். இதற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பது நாட்டில் மோட்டார் வாகனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை இல்லாததேயாகும்.

அப்படி இருந்தும் நாம் அதிகளவில் வாகனங்களை இந்நாட்டிற்குள் இறக்குமதி செய்யும் நாடாக ஆகியிருக்கின்றோம். தற்போது இலங்கையில் தனியார் வாகன உரிமையாளர்களின் எண்ணிக்கை 1000 பேரில் 257 ஆக உள்ளது. உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது, 4000 டொலருக்கும் குறைவான தனிநபர் வருமானத்தைக் கொண்ட நாடு என்ற வகையில், வாகனங்களை இறக்குமதி செய்வதில் நாம் அவர்களை விட முன்னால் இருக்கின்றோம். இதன்மூலம் எமது பொருளாதார மட்டத்தைத் தாண்டி நாம் வாகனங்களை வைத்திருப்பதாகத் தெரிகிறது. எனினும் எமது நாடு வாகனங்களை உற்பத்தி செய்யும் நாடு அல்ல. அத்துடன் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடும் அல்ல. இவை அனைத்தையும் நாம் எமது அந்நியச் செலாவணியைச் செலவழித்தே இறக்குமதி செய்ய வேண்டும். அத்துடன் நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்காக நாங்கள் பெறும் கடன் பணத்தையே செலவிடுகிறோம்.

அதன்பிரகாரம், எமது அந்நியச் செலாவணி பற்றாக்குறை பாதிக்கப்பட்டதன் முக்கியக் காரணம், இத்தகைய செலவினங்களைக் குறைக்க திட்டமிடாததேயாகும் என்பது தெரிகிறது. மறுபுறத்தில் எமது வருமானத்தை விடவும் செலவுகள் அதிகரித்த வாழ்க்கை முறையும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. சமூகத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் தங்கள் சமூக பெறுமதியைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிப்பது நெறிமுறையான வாழ்க்கையை நடத்துவதன் மூலம் அல்லாமல் விலையுயர்ந்த நுகர்வோர் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலமேயாகும். நாட்டுக்கு கிடைக்கும் டொலர் வருமானத்தில் அதிக சதவீதத்தை அதற்காக செலவிட வேண்டியுள்ளது. அவ்வாறு பார்க்கும் போது வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், எரிபொருள் மற்றும் வீதிகளைப் பராமரிக்க என செலவிடப்படும் நிதி எமது உணவு, பால்மா, மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களுக்குச் செலவிடப்படும் அந்நியச் செலாவணியை விடவும் அதிகமாகும்.

போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்த டிஜிட்டல் போக்குவரத்துத் துறை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள நிலையில், இதற்கான புதிய கொள்கையை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பில் செயற்படுவதற்கு எனக்கும், இன்னும் சில நிபுணர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நாங்கள் இந்த பணிகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு செயற்படும் போது, நாம் கண்டது போக்குவரத்தை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் நாம் மேலே குறிப்பிட்டுள்ள செலவை மிகக் குறைந்த நிலைக்கு கொண்டு வர முடியும் என்பதாகும். அதாவது போக்குவரத்து துறையை நாட்டின் பொருளாதாரத்தில் சுமையாக இல்லாமல் பராமரிக்க முடியும் என்பதாகும்.



மொரட்டுவை பல்கலைக்கழக போக்குவரத்து முகாமைத்துவ மற்றும் விநியோக கற்கை நெறிப் பிரிவின் பேராசிரியர் அமல் குமாரகே.

இந்த டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையை பொதுப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்துவது காலத்திற்குத் தேவையான ஒரு நடவடிக்கையாகும். இதன் மூலம் அதிக மக்களை ஈர்க்கக்கூடிய போக்குவரத்து சேவையை உருவாக்க முடியும். எனவே, டிஜிட்டல் பஸ் சேவையினை இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக முன்னெடுப்பது உத்தமம் என நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். எனினும் டிஜிட்டல் பஸ்களை மாத்திரம் ஈடுபடுத்தி இதனை முன்னெடுப்பது சிரமமானதாகும். டிஜிட்டல் பஸ்களுடன், பஸ் சேவையை நவீனமயப்படுத்துவதும் அவசியமானதாகும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் கால அட்டவணையினைப் பார்த்துக் கொள்ளுதல், உரிய நேரத்திற்கு பஸ்கள் வருவது, ஒழுக்கமுள்ள பணியாளர்கள், வீதியில் போட்டித் தன்மையுடன் பயணிக்காமை போன்ற விடயங்களும் இதனுடன் மாற்றமடைய வேண்டும். நாம் இப்போதுள்ள முறையிலேயே வாகனங்களை இறக்குமதி செய்து, அவற்றை பெட்ரோலுக்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கக் கூடியதாக இருந்தால், எரிபொருளுக்கான செலவைக் குறைத்துக் கொண்டாலும், வாகனங்கள் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்குமான செலவை வழமைபோலவே செய்ய வேண்டியிருக்கும். அதேபோன்று வாகன நெரிசல்களின் போது ஏற்படும் எரிபொருள் எரிப்பு மற்றும் கார்பன் வெளியேற்றம் அவ்வாறேதான் இருக்கும். எனவே, பெற்றோல் வாகனங்களை மின்மயமாக்குவதை விட அதன் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் முழுமையாகவே மின்சார போக்குவரத்திற்கு செல்ல வேண்டும்.

மறுபுறம் பொதுப் போக்குவரத்துச் சேவையிலிருந்து விலகி சொந்த வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு காட்டும் அக்கறையை இங்கு மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும். மேல் மாகாணத்தினுள் மக்கள் சனத்தொகை அடர்த்தியைக் கருத்தில் கொள்ளும் போது, போக்குவரத்துத் துறையில் சுமார் 60 வீதமானது பொதுப் போக்குவரத்தாக இருக்க வேண்டும். ஏனெனில் மக்கள் தொகை அடர்த்தி அதிகரிக்கும் போது சிறந்த பயணிகள் சேவையை வழங்குவது எளிதாகும்.

வாகனம் இருப்பவர்களாக இருந்தாலும் சிறந்த பொதுப் போக்குவரத்துச் சேவை ஒன்று இருக்குமாயின் தனது வாகனத்தைச் செலுத்திக் கொண்டு கொழும்பு நகருக்குச் செல்வதற்கு விரும்பமாட்டார்கள். இதற்கு காரணம் தற்போதைய வாகன நெரிசல்களில் சிக்கி, வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான தரிப்பிடங்களைத் தேடி அலைவதை விட இந்த பொதுப் போக்குவரத்து இலகுவானதாக இருப்பதேயாகும்.

எனினும் உரிய நேர காலத்தில் வருவதற்கும் போவதற்கும் பொதுப் போக்குவரத்துச் சேவை இல்லாத காரணத்தினால்தான் அவர்கள் அவ்வாறான சிரமங்களையும் தாங்கிக் கொண்டு தமது வாகனங்களில் கொழும்புக்கு கொண்டு வருகின்றார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்காக தரமானதாக பொதுப் போக்குவரத்துச் சேவையை புதிய முறையில் ஆரம்பித்தால் வாகன நெரிசல், காபன் வெளியீடு, போக்குவரத்திற்காகச் செலவாகும் பணம் என்பன குறைவடைவதோடு, மனித உறவுகளும் இதனை விடவும் மேம்படும்.

2000ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 70 வீதமாக இருந்த பொதுப் போக்குவரத்துப் பெறுமானம் தற்போது வரலாற்றில் முதற்தடவையாக 39 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இவ்வாறான நெருக்கடியினுள் நாம் இன்று வீழ்ந்திருப்பதற்கான காரணமாக இருப்பது இவ்வாறான நிலைமைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாமையாகும். எனினும் இந்த புதிய மூலோபாயத்தின் ஊடாக உள்நாட்டுக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கு எமக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

**ரசிக கொட்டுதுரகே**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

உங்களின் வியாபாரத்திற்கு இந்தியாவிலிருந்து அல்லது சீனாவிலிருந்து எந்தவொரு அம்சத்தையும் இறக்குமதி செய்வதற்கு தயவு செய்து Whatapp 0706723953 உடன் தொடர்பு கொள்ளவும்.003205

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

பன்னிப்பிட்டியில் 8 பேர்ச் புதிதாகக் கட்டப்பட்ட வர்த்தக கட்டிடம் விற்பனைக்கு. முதன்மையான அமைவிடம். 174 பஸ் பாதை (பொரளை வீதிக்கு) பக்கவாட்டில் உள்ளது. பன்னிப்பிட்டி ரெயில்வே நிலையத்திற்கு முகப்பாக+94770159440 003557

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கொள்ளுப்பிட்டியில் 4000 சதுர அடி வாடகைக்கு சிற்றுண்டிச்சாலை/ அலுவலகம்/ IT கம்பனிகளுக்கு உகந்தது. தரகர் வரவேற்கப்படுகின்றனர். 0759723953 003387

## வேலைவாய்ப்பு

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

ஜூகீ மெசின் இயக்கக்கூடிய அனுபவமுள்ள ஆண்/ பெண் தையல் கலைஞர் தேவை. அபாயா, குர்தா தைக்கும் அறிவு அவசியம். தங்குமிட வசதியுண்டு. 077 2838397, (நுகேகொடை). 002891

விஞ்ஞான ரீதியில் பெட்டன் தயாரிப்பதற்கு மற்றும் வெட்டுவதற்கு அறிவுடைய ஒருவர் தேவை. அபாயா, குர்தா ஏனைய பெண்களின் ஆடைகள் வெட்டுவதற்கு தெரிந்திருத்தல் வேண்டும். 077 2838397 (நுகேகொடை). 002894

ஹேண்ட் எம்புரெயிடர் மற்றும் பீட் வேலை செய்யக் கூடிய பெண் கலைஞர்கள் தேவை. பிரசீலியன் எம்புரொயிடர் அறிவு விரும்பத்தக்கது. நுகேகொடைக்கு அருகில் அல்லது வருகை தரக்கூடியதாக இருத்தல் வேண்டும். 077 2838397. 002897

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கார்கில்ஸ் ஐஸ்கிரீம் முச்சக்கரவண்டிக்கு சாரதி தேவை (கொழும்பு). தொலைபேசி 0771674665 / 0770233268. 002220

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

Baker Baker கொழும்பு 12 இல் அமைந்துள்ள Bake Shop இற்கு ஆண் பேக்கர் செப் (Baker Chef) ஒருவர் தேவை. அனுபவம் குறைந்த பட்சம் 2 வருடம். கவர்ச்சியான சம்பளம், இலவச உணவு பானங்கள், தங்குமிட வசதிகள், இலவச சீருடை, நலன்புரி வசதிகள் உங்களது விண்ணப்பத்தை What App மூலம் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்புங்கள் (0772300450/ 0777227381) 003472

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

அஹுங்கலலையில் சுற்றுலா ஹோட்டலொன்றின் மரக்கறி தோட்டமொன்றைப் பராமரிப்பதற்காக தோட்ட வேலையாள் ஒருவர் தேவை. தகைமைகள் நிலத்தை சீராக்குதல், கன்றுகளை நடுதல், விளைச்சல்களை அறுவடை செய்யும் வரையில் மரக்கறிச் செய்கையை பராமரித்தல், பீடை நாசினி சிக்கல்களை அறிந்து தயார் செய்தல், உரங்களை தயாரித்துக் கொள்ளல் மற்றும் உரம் இடுதல். விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பவும். ஆயுர்வேத லங்கா ஹொஸ்பிட்டல் (தனியார்) நிறுவனம். இல. 162/19, வந்துரேகம, அஹுங்கல்ல. hr@lotusvilla.lk0 91-2264062. 002989

யட்டியந்தொட்ட முதல் 25KM தூரத்தில், 5 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை கண்காணிக்கும் சேவையை விரும்பும் தம்பதி தேவை. நீர் மின்சாரத்துடன் வீடு உண்டு.071 6807171 003288

25 ஏக்கர் தென்னந் தோட்டத்திற்கு காவற்கார குடும்பம் தேவை. மினுவங்கொடை 0777807536, 0773830900 002890

### 325 தொழில்துறை பொது

பிளாஸ்டிக் தொழிற்சாலைக்கு உதவியாளர் / உதவியாளர் / தொழிலாளி தேவை. ஆண், 40 வயதிற்கு கீழ்ப்பட்டவர் விண்ணப்பிக்கவும் அல்லது வத்தளை, மாபோல, நீர்கொழும்பு வீதி 785 ஆம் இலக்கத்திற்கு சமுகமளிக்கவும். தொலைபேசி 0723587587 002372

## காணி/தோட்டம்

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கிரிபத்கொட வர்த்தக சொத்து, மூன்று படுக்கையறைகள், இணைந்த குளியலறைகள், A/C, உயர்ந்த சுற்றுச் சுவர்கள், போதுமான வாகன நிறுத்துமிடம் 80,000/, 2600 சதுர அடி077 2579159071 8186370 003500

வத்தளை, கல்யாணி மாவத்தையில் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் 3 அறைகளை கொண்ட 7.05 பேர்ச்சில் அமைந்துள்ள வீடு உடனடி விற்பனைக்கு உள்ளது. 145 இலட்சம். விலை பேசி தீர்மானிக்கலாம். தொடர்பு 0772300011 003200

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777282147 புத்தாண்டிற்கு கண்டியில் வீடு, காணி, ஹோட்டல் தோட்டம், தற்போது நடத்திச் செல்லப்படும் வியாபார நிலையங்கள் நம்பமுடியாத விலையில் சகல வசதிகளுடன் விற்பனைக்கு/ குத்தகைக்கு உண்டு . 07 77438169 084067



தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
(PV 120625) No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
Zinc Aluminium Sheet
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

LAND 7.5 P AND 15.6 P
OFF PARK ROAD COLOMBO 5
HAVELOCK CITY
2 ROOMS APARTMENT FOR SALE
Tel : 0764 849 843, 0717 440 731 0703 737 240

G.M.T.SORABORA VILLAGE HOTEL (PVT) LTD MAHIYANGANAYA
Whatsapp : +9477 2515 458
Email: gmtsoraboravillage@gmail.com
www.facebook.com/ Gmtsoraboravillage
For Reservation : 077 2515 458 / 055 2257 149
All 40 Rooms
Swimming Pool
Restaurant
Kids Play Area
Parking Area
Birds Park

LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

பண்டாரவளை
தளபாடங்களுடனான வீடொன்று விற்பனைக்கு அல்லது வாடகைக்கு
பண்டாரவளை நகரிலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் (பூனாகலை வீதியில்) 20 பேர்ச் காணி, தரைப்பரப்பு 1584 ச.அடி, 3 படுக்கையறைகள், 02 குளியலறைகள் சுமையலறை, பான்ரி, உணவு அருந்தும் பகுதி மற்றும் அமரும் பகுதி, பராமரிப்பவருக்கான தனியான அறை மற்றும் குளியலறை, SLT இணைப்பு, இணையம், Wi-fi, Peo TV, CCTV, வெப்ப நீர், கிணற்று நீர் மற்றும் பிரதான நீர் குழாய். விடுமுறை இல்லத்திற்கு பொருத்தமானது.
விற்பனை விலை 17.5 மில்லியன் (பேசித்தீர்க்கலாம்)
வாடகை விலை மாதமொன்றிற்கு 70,000
0772 518 926

ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පිලි 0.47 (mm)
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

காணிகள் விற்பனைக்கு
பிட்டகோட்டே – டி.ஈ. பெரேரா மாவத்தை – 15 பேர்ச் காணி – பேர்ச்சொன்று 6 மில்லியன்
நாவல – ஜயசுந்தர மாவத்தை – 20 பேர்ச் காணி – பேர்ச்சொன்று 4.5 மில்லியன்
மஹரகம – பமுணுவ வீதி, 30 பேர்ச் காணி பேர்ச்சொன்று 2.5 மில்லியன்
மாலபே – செவன பிரதேசம் உடவத்த வீதி இரண்டு 20 பேர்ச் தொகுதிகள் – பேர்ச்சொன்று 2 மில்லியன்
மாலபே – செவன பிரதேசம் 17 பேர்ச் காணி பழைய வீடொன்றுடன் – பேர்ச்சொன்று 2 மில்லியன்
மாலபே – நகரம் – எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்னால் – இரண்டு 10 பேர்ச் தொகுதிகள் – பேர்ச்சொன்று 3.5 மில்லியன்
077 66 93 994 / 077 2 337 233

சேதன தேங்காய் பால்
இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது
ஏற்றுமதிக்கான தரமுடையது 400 மி.லீ. சேதன தேங்காய் பால் இலங்கையின் உற்பத்தி உடனடியான விற்பனைக்கு உள்ளது
EXPORT QUALITY
தெங்கு அபிவிருத்தி சபை மற்றும் CU இனால் அங்கீகரிக்கப்பட்டது
மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை ஏற்றுக் கொள்ளப்படும்
மொத்தக் கொள்வனவு மற்றும் ரொக்கப்பணக் கொடுப்பனவிற்கு விஷேட கழிவு
AALAM HOLDINGS (PVT) LTD.
NO.20/1, KOTHALAWELA AVENUE.COLOMBO 4.
மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
0712 727 920 அல்லது 0117 173 864

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியில் அபிவிருத்திக்கான வீடமைப்பு செயற்றிட்டத்தில் 7 வீடுகள் விற்பனைக்கு
அம்சங்கள்
- 65 பேர்ச்சுக்கள்
- 3 வீடுகள் + 4 வெற்றுக் காணித் துண்டுகள்
- அனைத்து அங்கீகாரங்களும் உள்ளன
- 3 இல்லங்கள் நிருமாணிக்கப்பட்டுள்ளதுடன குடிபுகலுக்கு ஆயத்தமாக உள்ளன
- 2 வெற்றுக் காணித் துண்டுகள் (முன்பக்கமும் பின்பக்கமும்) மீதி 4 இல்லங்களை நிருமாணிப்பதற்காக, பல மாடிக் கட்டிடமொன்றை, ஓய்வெடுப்பதற்கான திறந்த வெளியிடம் அல்லது நீச்சல் தடாகத்திற்காக பாவிக்கப்படலாம்.
முழுத் தொகுதியின் விலை 150 மில். ரூபா
+94 77 789 9934

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் !!! பாராளுமன்றத்தில் ஆராய்வு!




லோரன்ஸ் செல்வநாயகம்

மலையகம் 200 விரிவான நிகழ்வுகளோடு, நீண்ட காலமாக பல்வேறு பற்றாக்குறைகள் மற்றும் பிரச்சினைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக பெருந்தோட்ட மக்கள் பக்கம் அரசாங்கத்தின் பார்வை திரும்பியுள்ளது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் மலையகப் பெருந்தோட்டப் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த மக்கள் தொடர்பில் மிகுந்த கரிசனையுடன் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்து வருகின்றமை பல்வேறு தளங்களிலும் இடம் பெற்று வருகிறது.

அதேவேளை, நாட்டின் ஜனாதிபதியொருவர் முதல் தடவையாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மிகவும் முனைப்பாக செயல்படுவதுடன் அந்த விடயத்தில் நேரடியாகவே தலையிட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்கது.



தொழில் அமைச்சு, பெருந்தோட்ட நிறுவனங்களை நிர்வகிக்கும் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து அதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதுடன் 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் தீர்மானத்தை அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வந்தாலும் தற்போது அதற்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார். அத்துடன் ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தோட்டப்புறங்களில் உள்ள காணிகளை குத்தகைக்கு விடுவதற்கும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் புதிய சட்டத்தை கொண்டு வருவதற்குமான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார். இத்தகைய பின்னணியிலேயே கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்து தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விடயங்களை முன்வைத்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு, அவர்கள் எதிர் நோக்கும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் அவர்களுக்கான காணி வழங்கும் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அதன் மூலமாக முன்வைக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அது தொடர்பான கேள்விகளையும் அவர் எழுப்பினார்.

அதன் போது விடயத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அது தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் சபையில் தெளிவுபடுத்தினார். எவ்வாறாயினும் அதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இதன் மூலம் வெளிப்படுகிறது.

### இனி விவாதங்களை பார்ப்போம்...

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய:

மலையக பெருந்தோட்டப் பகுதியில் ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் காணிகளை குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. அது தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை அடுத்த வாரம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் புதிய சட்டமொன்றை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்த திட்டத்தின் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புகளும் உருவாகும். புதிய பெருந்தோட்ட மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் ஏற்றுமதி செய்யக்கூடிய பயிர்களை உற்பத்தி செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. அதற்காக 300 ஏக்கர் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. நேர்மையான விதத்தில் இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இந்த விவசாயக் காணியை குத்தகைக்கு விடுவதற்கான வசதிகளை வழங்குவதற்கான புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. காணிகளை இனம் காணுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக நிபுணர்கள் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கான அடிப்படை வரைபும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பில் தற்போது அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது. அவர்களது சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியின் நேரடி தலையீட்டுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெருந்தோட்டத்துறை மக்களுக்கு இரண்டு அல்லது மூன்று ஏக்கர் *காணிகளை வழங்கி சுயமாக அவர்கள் தேயிலைப்* பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான திட்டங்களை செயல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில தோட்டங்களில் பரீட்சார்த்த நடவடிக்கையாக ஒரு ஏக்கர் வீதம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக கலபொட, கெந்தல் ஓய, மவுன்ஜின், நாகஸ்தென்ன போன்ற தோட்டங்களில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாதாந்தம் அதிலிருந்து 6500 கிலோ தேயிலைக் கொழுந்து கிடைப்பதுடன் பல்வேறு பிரச்சினைகள் அங்கு நிலவிய போதும் பரீட்சார்த்த நடவடிக்கையாக தொடர்ந்தும் அது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

### பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார்

வீழ்ச்சியடைந்துள்ள பெருந்தோட்டத்துறையை இலாபமீட்டும் துறையாக மாற்றியமைக்க வேண்டுமானால் பெருந்தோட்டங்களை சிறுதோட்டங்களாக மாற்றியமைக்க வேண்டும். அதன் மூலமே இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பெருந்தோட்ட மக்கள் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து எவ்வாறு இலங்கைக்கு வந்தார்களோ அவ்வாறே இன்றும் அடிமைகள் போன்று வாழ்ந்து வருகிறார்கள்.



லயன் அறைகளிலேயே தங்கவைக்கப் பட்டுள்ளார்கள். அதனால் 200 வருடங்களாகியும் இந்திய வம்சாவளி மக்கள் கூலித் தொழிலாளிகளாகவும் அவர்களின் வாழ்விடம் லயன் அறைகளாகவுமே இருந்துவருகின்றன. அதில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.

அந்த மக்களின் வாழ்க்கையில் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் பெருந்தோட்ட தேயிலை கைத்தொழிலுக்கு பதிலாக தேயிலை சிறுதோட்ட முறைமையினை ஏற்படுத்தும் பிரேரணையை நான் சபையில் முன்வைத்திருக்கிறேன்.

அத்துடன் 1948 காலப்பகுதியில் நாட்டின் அந்நிய செலாவணியில் 90 வீதமானவை பெருந்தோட்ட கைத்தொழில் மூலமே பெறப்பட்டு வந்திருக்கிறது. அதேபோன்று அரசாங்கம் சம்பாதித்த மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 24வீதம் பெருந்தோட்டக் கைத்தொழில் மூலமே கிடைத்துள்ளது.

தனியார் துறையிலிருந்து அரசாங்கத்தால் 1972ஆம் ஆண்டின் சட்டத்தின் ஊடாக இந்த பெருந்தோட்டத்துறை பொறுப்பேற்கப்பட்டு 3 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.

எனினும் ஜே.ஈ.டி,பி மற்றும் எஸ்.எல்.எஸ். பி.சி நிறுவனங்கள் ஊடாக பெருந்தோட்டத்திறை 1.5 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளதாக 1992இல் இனம் காணப்பட்டிருந்தது. இற்றைக்கு 30 வருடங்களாக இந்த நிறுவனங்கள் *நட்டமடைந்தே* வருகின்றன. ஆனால் எந்தவொரு அரசாங்கமும் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. அத்துடன் தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கு 90வீத உற்பத்தி பெருந்தோட்ட துறையில் இருந்தே பெறப்பட்டது. இதில் 3லட்சத்து 89ஆயிரத்து 549 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் இருந்தார்கள். ஆனால் நூற்றுக்கு 90 வீத உற்பத்தியை பெற்றுக்கொடுத்துவந்த பெருந்தோட்டத் துறை தற்போது நூற்றுக்கு 22, 23வீத உற்பத்தியையே பெற்றுக்கொடுக்கிறது. ஆனால் இப்போதும் இந்த கம்பனிகளிடம் 40வீதமான காணிகள் இருந்து வருகின்றன. பெருந்தோட்டத்துறை முறை இன்று தோல்வியடைந்த முறையாக மாறி இருக்கிறது. அதே போன்று ஜே.ஈ.டி,பி மற்றும் எஸ்.எல்.எஸ்.பி.சி நிறுவனங்கள் 20 வருடங்களாக நட்டமடைந்த நிறுவனங்களாக மாறியுள்ளன. அதனால் பெருந்தோட்டத்துறையையும் இந்த நிறுவனங்களையும் மறுசீரமைப்பு செய்ய நடவடிக்கை வேண்டும். அவ்வாறு செய்வதானால். பெருந்தோட்டங்களை சிறுதோட்டங்களாக மாற்ற வேண்டும். தற்காலத்தில் சிறுதோட்டத் துறையே வெற்றியடைந்த துறையாக இனம் காணப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச:

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு எனது தந்தை ரணசிங்க பிரேமதாச பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தது போன்று அந்த மக்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்ற ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் போது நடவடிக்கை எடுக்கும்.



தோட்டத் தொழிலாளர் சமூகம் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றது. அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசியல்வாதிகளால் வாக்குறுதிகளில் அவர்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

மலையக மக்கள் காலங்காலமாக தோட்டத் தொழிலாளர்களாக இருக்கவேண்டும் என நாம் நினைப்பதில்லை. மாறாக அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதைவிட அந்த மக்களை தொழில் முயற்சியாளர்களாக்க வேண்டும். எனது தந்தை மலைநாட்டு மக்களுக்கு பிரஜா உரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அந்த மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்த அவர்களுக்கான காணி உரிமை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

### ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் எம்பி

பெருந்தோட்ட மக்களை வஞ்சிக்காது தோட்ட கம்பெனிகள் அவர்களுக்கான சம்பளத்தை உடனடியாக அதிகரிக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் தோட்ட கம்பனிகளுடனான உடன்படிக்கையை இரத்து செய்து அரசாங்கம் தோட்டங்களை அரசுடமையாக்க வேண்டும். பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவுகள் சடுதியாக உயர்வடைந்துள்ள நிலையில் பெருந்தோட்ட மக்கள் கடந்த மூன்று வருட காலமாக 1000 ரூபா சம்பளத்திலேயே வாழ்க்கையை நடத்துகின்றார்கள். பெருந்தோட்ட மக்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகாலமாக சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. பதுளை, நுவரெலியா, கண்டி, களுத்துறை, கேகாலை, மாத்தளை, இரத்தினபுரி, தெனியாய ஆகிய பெருந்தோட்ட பகுதிகளில் ஒருசில தோட்ட கம்பனிகள் நாட்டின் தொழில் சட்டத்தையும், மனித உரிமைகளையும் மீறி செயற்படுகின்றன.



இதற்கு எதிராக பெருந்தோட்ட அபிவிருத்தி மற்றும் தொழில் அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையக மக்களை துன்புறுத்துவதை கம்பெனிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எமது மக்களின் சாபத்துக்கு ஆளாகாமல் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு வழங்க வேண்டும். நட்டமடைவதாக குறிப்பிடும் தோட்ட கம்பனிகள் வெளிநாடுகளில் ஹோட்டல்களை நடத்தி வருகின்றன. அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

எவ்வாறெனினும் காலங்காலமாக பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கும் மலையக பெருந்தோட்டத்துறை மக்களுக்கு அதிலிருந்து விடிவு கிடைக்க வேண்டும். 1700 ரூபா சம்பள அதிகரிப்பு முன்னெடுப்புகள் வெற்றி பெற வேண்டும்.

நாட்டில் ஏனைய சமூகங்கள் போன்று சகல உரிமைகளையும் பெற்று அந்த சமூகத்தினர் இனியாவது வாழ வேண்டும். அதற்கு மலையக பெருந்தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கங்களை ஒரு புறம் வைத்துவிட்டு உண்மையாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

# ஹவுத்தி கிளர்ச்சியாளர் மீதான மேற்குலகத்தின் தாக்குதல் உத்தி ஏற்படுத்தப் போகும் அரசியல்?



பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

மேற்குலகத்தின் போர் இஸ்லாமிய நாடுகளை நோக்கி ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. படிப்படியாக அத்தகைய உத்தியுடன் தொடங்கப்பட்ட ஹமாஸ், இஸ்ரேலிய போர் தற்போது யெமன் நாட்டுக்குள் நீட்சி பெற்றுள்ளது. தலிபான்கள் மீது தொடங்கிய போர், பாரிய அழிவினை மேற்காசியா முழுவதும் நகர்த்தி மேற்கு தனது பொருளாதார இருப்பினைப் பாதுகாத்ததுடன், ஆக்கிரமிப்புக்கான அனைத்து வலுவையும் கடந்த தசாப்தங்களில் அடைந்திருந்தது. இஸ்லாமியரை அழிப்பதன் மூலம் மேற்காசிய வளங்களை சுரண்டவும் அவர்களை அடிமைகளாக்கவும் மேற்கு முன்னெடுக்கும் உத்தியே இஸ்லாமிய நாடுகள் மீதான போராகும். அதனை ஹமாஸ், இஸ்ரேலிய போர் மூலம் மீளவும் மேற்குலகம் தொடக்கியுள்ளது. இஸ்ரேல் மீது தென்னாபிரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழிந்துள்ள இனப்படுகொலைக் குற்றச்சாட்டின் நடவடிக்கை நிகழும் போது அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து யெமனில் அமைந்துள்ள ஹவுத்தி இலக்குகளை நோக்கி மேற்கொண்ட தாக்குதல் முக்கியமான பதிவாக உள்ளது. இத்தகைய சூழலில் மேற்கு இஸ்ரேலுடன் இணைந்து வகுத்துள்ள உத்திகளைத் தேடுவதாக இக் கட்டுரை அமையவுள்ளது. யெமனில் நிலைகொண்டுள்ள ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்க, பிரித்தானியப் படைகள் வான்வழித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செங்கடலில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களது நடவடிக்கை அதிகரித்துள்ளதுடன் வர்த்தகக் கப்பல்கள் மீது தாக்குதல்களும் கடத்தல்களும் தொடர்ச்சியாக நிகழ்வதாக மேற்கு நாட்டுத் தலைவர்கள் தெரிவித்துவருகின்ற நிலையிலேயே இத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இத்தாக்குதல் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிடும் போது எங்களுடைய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கப்பல்கள் செல்லும் வழித்தடத்தின் சுதந்திரத்தை கெடுக்கும் எந்த நடவடிக்கையையும் அமெரிக்காவோ, அமெரிக்க கூட்டுநாடுகளோ பொறுத்துக் கொள்ளமாட்டா என்பதை இத்தாக்குதல் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது என்றார்.

மேலும் அவர் குறிப்பிடும் போது, ஹவுத்தி கிளர்ச்சியாளரின் பொறுப்பற்ற தாக்குதலுக்கு எதிரான சர்வதேச சமூகத்தினது தாக்குதல் ஒற்றுமையானதும் உறுதியானதுமாக உள்ளது என்றார். செங்கடல்வழியே செல்லும் அமெரிக்கக் கப்பல்களே அதிகம் இலக்குவைக்கப் பட்டுள்ளன. அமெரிக்க, பிரித்தானியத் தாக்குதலுக்கு 20 க்கு மேற்பட்ட மேற்கு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இது தொடர்பில் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையானது, வணிகக் கப்பல்களை அச்சுறுத்தும் ஹவுத்திகளின் தாக்குதல்களுக்கு எதிரான முதல் அடி இதுவென்று குறிப்பிட்டுள்ளது. இத்தாக்குதலை ஓப்ரேசன் பெறஸ்பெரட்டி கார்டியன் என பெயரிட்டுள்ளன. இது 2023 டிசம்பர் 18 நிறுவப்பட்டுள்ளது. இது ஹவுத்தி கிளர்சியாளர்களின் செங்கடல் தாக்குதலுக்கு எதிரான கூட்டுத் தாக்குதலுக்கான அமைப்பாகவும் செங்கடலில் நிகழும் அனைத்துத் தாக்குதலையும் முறியடிப்பதற்கானதாகவும் வரையறுக்கப் பட்டு அமெரிக்க இராணுவ பாதுகாப்பு மையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.



யெமனின் தலைநகரான சானா, தாமர் மற்றும் ஹொடைடா பகுதிகளில் ஹவுத்திப் படைகளின் முகாங்கள் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனை ஹவுத்திப் படைகள் உறுதிப்படுத்தியதுடன் பதில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளன. இது ஒரு அமெரிக்க, சியோனிஸ்ட், பிரிட்டன் ஆக்கிரமிப்பு என தெரிவித்துள்ளன.

அதேநேரம் இத்தாக்குதலில் ஹவுத்தியின் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டதாக மேற்கு நாடுகளின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன. சானா விமானநிலையத்திற்கு அருகாமையிலுள்ள இராணுவத்தளம் டைஸ் விமான நிலையத்தின் பகுதியிலுள்ள விமானத்தளம் ஹொடைடாவில் அமைந்துள்ள கப்பல்தளம் மற்றும் ஹஜ்காவில் அமைந்துள்ள இராணுவத் தளங்கள் மீதும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. யெமன் உள்நாட்டுப் போரில் கணிசமான பகுதியை கட்டுப்பாட்டில் கொண்டுள்ள ஹவுத்திக் கிளர்சியாளர்கள் ஈரான், ரஷ்யா மற்றும் வடகொரியாவின் ஆதரவுடன் செயல்படுகின்றனர். செங்கடலானது ஏறக்குறைய ஐரோப்பிய, ஆசிய வணிகக் கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இதுவரை ஹவுத்திக் கிளர்ச்சிக் குழுக்களது தாக்குதலில் 27 கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. அதில் அனேகமானவை மேற்கு நாடுகளது கப்பல்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தாக்குதலுக்கு ஆளில்லாத விமானங்கள் மட்டுமல்ல ஹெலிக்கொப்டர்கள் மற்றும் பலஸ்டிக் ஏவுகணைகளும் பயன்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது. ஹவுத்திக் கிளர்ச்சி அமைப்பு பலமான இராணுவத்தைக் கொண்டுள்ளது போன்றே அதன் தாக்குதல் அணுகுமுறைகள் வெளிப்படுகின்றன. இதேநேரம் அமெரிக்க, பிரிட்டன் தாக்குதலுக்கு வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல் மட்டும் தான் காரணமாகக் கொள்ள முடியுமா என்பது பிரதான சந்தேகமாகவுள்ளது. அதனை விரிவாக நோக்குவது அவசியம். முதலாவது, சர்வதேச அரசியல் என்பது பொருளாதாரத்திற்கானதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. சமகாலத்தில் பொருளாதாரம் என்பது வர்த்தகத்தையும் சந்தையையுமே குறிப்பதாகும். அதற்கு பங்கம் ஏற்படுத்துவதை மேற்கு நாடுகளால் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்பது நிதர்சனமான உண்மையாகும். அதிலும் மேற்காசிய நாடுகளுடனான வர்த்தகம் என்பது மிகப்பிரதானமானது. கொன்ஸ்சாந்துநேபில் கைப்பற்றப்பட்டதன் விளைவே உலகளாவிய கண்டுபிடிப்புக்கும் தீவிர போர்களுக்கும், இஸ்லாமிய நாடுகள் மீதான அழிப்பு நடவடிக்கைகளுக்கும் வழிவகுத்தது. சிலுவை போர்களை தனித்து ஆக்கிரமிப்பாக கருதுவதைக் கடந்து வளங்களுக்காகவும் சுரண்டலுக்காகவும் ஆனவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதன் நீட்சியே தற்போதும் நிகழுகிறது. மேற்குலகத்தின் வர்த்தகம் என்பது கீழைத்தேசத்திலேயே தங்கியுள்ளது. கீழைத்தேசத்தை சுரண்டுவதன் மூலமே மேற்குலகம் தனது பொருளாதாரத்தையும் செழிப்பையும் பாதுகாத்து வருகிறது. அண்மையில் ரஷ்யா, உக்ரைன் போர் அத்தகைய நீண்ட நிலைத்திருந்த மேற்குலகத்தின் இருப்புக்கு நெருக்கடியானது. அதனால் திணறிப்போன மேற்குலகம் இஸ்ரேல், ஹமாஸ் போர் மூலம் அதனை சீர் செய்ய திட்டமிட்டது. அதற்கான வாய்ப்பினை ஒரு கிளர்ச்சிக்குழு தடைசெய்ய திட்டமிடுவதை மேற்குலகம் அனுமதிக்காது. அதற்காக எத்தகைய எல்லைக்கும் போகத் தயாராகவே உள்ளது. ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் ஹவுத்தி படைகள் மேற்குக்கு ஒரு பொருட்டாக அமையாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஹமாஸின் பலம் காஸாவில் மட்டுமே. ஹவுத்தியின் பலம் யெமனில். ஹிஸ்புல்லாவின் பலம் லெபனானில். என்பதை அந்த அமைப்புக்கள் புரிந்து கொள்வது முக்கியம். இன்றும் உலகளாவிய கடலில் அமெரிக்காவே முதலிடம் பெறுகின்றது. அதற்கு பின்னரே சீனாவும் ரஷ்யாவும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஹவுத்தியின் அணுகுமுறை முழுநீளப் போருக்கு மேற்குலகத்தை அழைப்பதாகவே தெரிகிறது. இதில் ஹமாஸ் மட்டுமல்ல அனைத்து மேற்காசியாவும் மீண்டும் ஓர் அழிவுக்கு போகும் நிலை ஏற்படும். ஈரானின் இருப்பும் பாதுகாப்பும் அதன் எல்லைக்குள்ளேயே. அதனை ஈரான் பாதுகாத்துக் கொள்வதே பொருத்தமானதும் தந்திரோபாயமானதுமாகும்.

இரண்டாவது, இஸ்ரேல் மீதான ஹமாஸின் போர், அதிக நெருக்கடியை கொடுத்து வருகிறது. ஏறக்குறைய இஸ்ரேலிய, ஹமாஸ் போரை மேற்கு நாடுகளே நிகழ்த்துகின்றன. ஹமாஸ் ஒழிந்ததென இஸ்ரேல் மட்டு மல்ல, மேற்குலகமும் கருதமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் அதற்கு உதவும் அனைத்து சக்திகளையும் தேடி அழிக்க வேண்டிய தேவை மேற்குலகத்துக்கு ஏற்பட்டுள்ளது. அதனையே அமெரிக்க, பிரிட்டன் கூட்டு தொடங்கியுள்ளது. இதன் விளைவு உலகளாவிய போர் ஒன்றும் ஏற்படாது. மாறாக இஸ்லாமிய நாட்டுத் தலைவர்களும் அந்த தேசங்களின் மக்களும் அழித்தொழிக்கப்படுவார்கள். மேற்காசிய வளங்கள் சுரண்டப்படும் அல்லது அழிக்கப்படும். மேற்காசியத் தலைவர்கள் மேற்குலகத்தின் அடிமைகளாவார்கள்.

09 ஆம் பக்கம் பார்க்க...




# TIN இலக்கம் என்றால் என்ன?

## அது ஏன் உங்களுக்கு அவசியம்?

**‘டின் இலக்கம் தொடர்பாக மக்களிடம் போதிய தெளிவு இல்லை. ஊடக வெளிச்சம் போதுமானது அல்ல’**

**‘அவசியமற்றது எனக் கருதப்பட்ட அடையாள அட்டை பின்னர் அத்தியாவசியமானது போலவே வரி எண்ணும் பிற்காலத்தில் அவசிய இலக்கமாக கருதப்படலாம்’**

இலங்கையில் உயர் பதவி வகிக்கும் ஒரு பெண்மணி சமீபத்தில் பீஜிங் சென்றுள்ளார். அங்கே சீன அதிகாரிகள் “உங்கள் டின் இலக்கம் என்ன? சொல்லுங்கள்” என்று கேட்டிருக்கிறார்கள். அவர் அதிர்ச்சி அடைந்தவராக, “டின்னா? அப்படி ஒரு இலக்கம் என்னிடம் இல்லையே!” என தயக்கத்துடன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தற்போதுள்ள 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு டின் இலக்கங்களை வழங்கத் தொடங்கி இருக்கிறது. Taxpayers Identification Number அதாவது வரி செலுத்துநர் அடையாள இலக்கம் என்பதன் சுருக்கமே (TIN) டின். வரி செலுத்தும் அனைவருக்கும் இந்த டின் இலக்கம் வழங்கப்படுகிறது. எனினும் முதல் தடவையாக 18 வயதுக்கும் மேற்பட்ட சகல இலங்கைவாசிகளுக்கும் வரி அடையாள இலக்கம் வழக்கப்படுவது இதுவே முதல் தடவை. கடந்த ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 18 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் வருமானவரிக் கோவை திறக்கப்பட வேண்டும் என்றும் இதன்மூலம் நாட்டில் வசிக்கும் அனைவரின் வருமான நிலைகளை கணிக்க முடியும் என்றும், மாணவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள், சொந்தத் தொழில் செய்பவர்கள், உத்தியோகம் பார்ப்போர், வர்த்தகர்கள் என சனத்தொகையை பல்வேறு பிரிவுகளின் கீழ் வைக்க முடியும் என்றும் கூடவே வரி ஏய்ப்புச் செய்பவர்களை அடையாளம் காண்பதற்கும் உதவும் என்றும் டின் வழங்கப்படுவதற்கான காரணங்கள் கூறினார்.

வருமானத்துக்கு ஏற்ற வரியை செலுத்துவோர் இந் நாட்டில் குறைவு. ஒரு தடவை பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே சபையில் உரையாற்றும்போது, இந் நாட்டின் மிகப் பெரும் வர்த்தகர்கள் வரியே செலுத்துவதில்லை என்று குற்றம் சாட்டினார். வரி செலுத்த வேண்டியவர்களின் பத்து சதவீதமானோரே வரி செலுத்துகின்றனர் என்றும் ஐம்பது சதவீதமானோர் வரி செலுத்தினால் வருடாந்த துண்டு விழும் தொகையை பெரிய அளவுக்கு சரிக்கட்டிவிட முடியுமென்றும் வருமானவரி வட்டாரத் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. வரி ஆலோசகர்களாக விளங்குவோர் பெரிய அளவில் சம்பாதிக்கிறார்கள். அதன் அர்த்தம் என்ன தெரியுமா? வரி கொடாமல் அல்லது வரியை மிகக் குறைவாக அரசுக்கு செலுத்துவது எப்படி என்பதை ஆலோசனையாக பண முதலைகளுக்கு சொல்லித் தருவதே இவர்கள் தொழில். வரி ஏய்ப்பை அகப்படாமல் செய்வது எப்படி என்பதை சொல்லித் தருகிறார்கள்.

டின் இலக்கம் மற்றும் பின் இலக்கங்களை வயதுக்கு வந்த மற்றும் வாக்களிக்கத் தகுதியான அனைவருமே வைத்திருக்க வேண்டும் என்பது அரசின் ஏற்பாடு. இதன்மூலம் வரி ஏய்ப்புச் செய்பவர்களை அடையாளம் காண முடியும், வரி செலுத்துவோரை ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டுவர முடியும் என அரசு இதன்மூலம் எதிர்பார்க்கிறது. நாம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அப்பொருளின் அடக்க விலைக்குள் வரி உள்ளது. இது மறைமுக வரி. வருமானத்தின் மீது செலுத்தப்படும் வரி. நேரடி வரி. இந்நேரடி வரியை ஒழுங்கமைத்து ஒரு கண்காணிப்புக்குள் கொண்டு வரவே டின்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எழுபதாம் ஆண்டுகளின் ஸ்ரீமாவோ அரசு அடையாள அட்டை முறையை நடைமுறைக்கு கொண்டுவந்தபோது அதைப் பலர் அவசியமற்ற வேலை என வர்ணிக்கவே செய்தனர். 1971 ஜே.வி.பி. ஆயுத போராட்டத்தை நடத்தியது. அதன் பின்னரேயே இலங்கை சனத்தொகை தொடர்பிலான விவரங்களை அரசு தன் கையில் வைத்திருக்க வேண்டும் எனக் கருதியது. இதன்மூலம் ஒருவருடைய முழுப் பெயர், அவர் வாக்களிக்கும் தகுதி உடையவரா இல்லையா என்ற விபரம், வதிவிடம், அவருடைய புகைப்படம் மற்றும் அவரை அடையாளப்படுத்தும் இலக்கம் என்பனவற்றை அடையாள அட்டை கொண்டிருந்தது. அது வழங்கப்பட்ட காலத்தில் பெரும்பாலானோர் தமது அட்டைகளை வீடுகளிலேயே வைத்திருந்தனர். வங்கிகளிலும் அவை கேட்கப்படுவதில்லை. பொலிசாரும் கேட்பதில்லை. பலர் அதை மறந்தே போயினர். வடக்கு கிழக்கில் ஆயுதம் உயர்த்தப்பட்ட பின்னரேயே அடையாள அட்டையின் அவசியத்தை அரசு உணர்ந்தது. விசாரிக்கப்படும் நபர் தமிழரா, சிங்களவரா, எத்தனை வயது, என்ன பெயர், எந்த ஊர் போன்ற முக்கியமான தகவல்களை உடனடியாக அறிந்து கொள்ள அது உதவியது. அடையாள அட்டையை கையோடு எடுத்துச் செல்வது கட்டாயமானது. இன்று அதன் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். அடையாள அட்டைக்கு முன்னர் குடும்ப அட்டை மற்றும் அரிசி கூப்பனும் ஒரு அவசிய ஆவணமாக பயன்பாட்டில் இருந்ததையும் இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

சிலர் கருதலாம், வருமானம் கைக்கும் வாய்க்குமே போதாமல் இருக்கையில் வருமானவரிக்கான டின் இலக்கம் நமக்கெதற்கு என்று. ஒரு காலத்தில் தேவைப்படாத ஒரு ஆவணமாகக் காணப்பட்ட அடையாள அட்டை, பின்னர் மிக அவசியமான ஒரு அட்டையாக மாறியது போலவே எதிர்காலத்தில் டின் இலக்கமும் மாறும் என்பதை மறக்க வேண்டாம். மேலும் மிக எளிமையான ஒரு நடைமுறையைப் பயன்படுத்தியே முற்றிலும் இலவசமாக உங்களுக்கு டின் இலக்கம் பெற்றுத் தரப்படுகிறது. இது எதிர்காலத்தில் முக்கிய ஆவனமாக வருமான ரீதியாக உங்களை அடையாளப்படுத்தும் இலக்கமாக மாறும் என்பதை மறக்க வேண்டாம்.

ஒரு அதிகாரிக்கு டின் தொடர்பாக ஏற்பட்ட சீன அனுபவத்தை கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதற்கான காரணம், உலக நாடுகளில், குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் டின் இலக்கம் பயன்பாட்டில் உள்ளதை சுட்டிக் காட்டுவதற்காகத்தான். மேலும் இன்று ஓட்டாண்டியாக இருக்கக் கூடியவர் அடுத்துவரும் காலத்தில் வர்த்தகராக, செல்வந்தராக ஆக முடியும். குறைகளை எவ்வகையிலும் சொல்ல முடியும் நிறைகளையும் எதிர்கால பயன்பாட்டைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

டின் தொடர்பான புதிய சட்டம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதுவரை 10 லட்சம் பேர் வரை டின் இலக்கங்களைப் பெற்றுள்ளனர். ஆனால் இலங்கையில் மொத்த மக்கள் தொகை 2 கோடியே 18 லட்சத்து நான்காயிரத்து 221. தற்போது புதிய சனமதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இலங்கையின் புதிய சனத்தொகை எண்ணிக்கை இவ்வருட இறுதிக்குள் தெரியவரும். தற்போது உள்ள சனத்தொகை மதிப்பீடுகளின் பிரகாரம் 15 வயதுக்குக் குறைவானோர் தொகை 54 லட்சத்து 34 ஆயிரத்து 569. 15க்கும் 64 வயதுக்கும் இடைப்பட்ட உழைக்கக் கூடிய மக்கள் தொகை ஒரு கோடியே 46 லட்சத்து 54 ஆயிரம் பேர். 64 வயதுக்கு மேற்பட்டோர் தொகை 17,11,820 பேர். டின் இலக்கத்தைப் பெற வேண்டியவர்கள் தொகை ஒரு கோடியே 80 லட்சத்துக்கும் சற்று அதிகமாக இருக்க வேண்டும். இவ்வளவு பேருக்கு, இன்றைய நடைமுறைகளின் கீழ், அடுத்த ஆறு மாதத்துக்குள் டின் இலக்கங்களை வழங்குவது சாத்தியமற்றது.

இறைவரித் திணைக்களத்துக்கு கொழும்பு மத்தி, கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு நகரில் அலுவலகங்கள் உள்ளன. ரீகல் பட மாளிகையைத் தாண்டி மக்கள் வங்கி தலைமைக் காரியாலயத்துக்கு அண்மித்ததாக இதன் தலைமையகம் அமைந்துள்ளது. மேலும் பதுளை, காலி, களுத்துறை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி, அநுராதபுரம், கம்பஹா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, கேகாலை, குருணாகல், தம்புளை மற்றும் நீர்கொழும்பு நகரங்களில் அதன்கிளை அலுவலகங்கள் உள்ளன. இங்கெல்லாம் நீங்கள் டின் இலக்க விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் வழங்கப்பட வேண்டிய மக்கள் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டால் இந்த 18 தலைமை மற்றும் கிளைக் காரியாலயங்களினால் டின் வழங்கும் செயற்பாட்டை விரைவாகவும் எளிமையாகவும் முன்னெடுக்க முடியும் எனக் கருத முடியவில்லை. முதலாவதாக, டின் இலக்கம் என்றால் என்ன, ஏன் பெற வேண்டும் என்பதில் பொதுமக்களுக்கு போதிய தெளிவில்லை. பலருக்கு அது தொடர்பாக எந்தத் தகவலும் தெரியாது. இது தொடர்பாக ஊடக வெளிச்சம் போதியதாக இல்லை. திணைக்களம் மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் விளம்பரங்கள் செய்த மாதிரியும் தெரியவில்லை. எனவே மக்களைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமே தவிர, இந்த இலக்கத்தை பெற்று வைத்திருக்காவிட்டால் ஐம்பதாயிரம் தண்டப் பணம் செலுத்த வேண்டியிருக்கும் என்று பயமுறுத்துவது, பாவம் செய்தால் நரகத்துக்கு போவாய் என பயமுறுத்துவதற்கு ஒப்பானது. ஏனெனில் ஒருகோடி பேருக்கு டின் இலக்கம் வழங்கப்பட்ட பின்னரேயே தண்டனை வழங்கப்படுவது பற்றி பேச முடியும். கொழும்பில் வசிப்பவர்கள் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தில் இருந்து கொம்பனி வீதி பக்கமாக நீளும் சேர் சிற்றம்பலம் கார்டினர் வீதியில் மக்கள் வங்கி தலைமையகத்துக்கு அருகில் அமைந்திருக்கும் இறைவரித் திணைக்களத்தின் (Inland Revenue Department) தலைமையகத்துக்கு காலை சுமார் 8.15 அளவில் செல்வது நல்லது. காலை 8.30 க்கு அலுவல்கள் ஆரம்பமாகின்றன. டின் விண்ணப்பங்கள் இரண்டாம் மாடியில் கிடைக்கின்றன. ஒரு பேனையையும் தேசிய அடையாள அட்டை, அதன் போட்டோ பிரதி மற்றும் உங்கள் வங்கி கணக்கு இலக்கம் என்பனவற்றை உங்களுடன் வைத்திருங்கள்.

உங்களுக்கு வழங்கப்படும் படிவம் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டை இலக்கம், ஆணா, பெண்ணா, ஆங்கிலத்தில் உங்கள் பெயர், அதுவே தமிழ் அல்லது சிங்களத்தில், வருமானத்துக்கான மார்க்கம், இணைய முகவரி, வீட்டு முகவரி போன்றன, எவ்வாறான வர்த்தகம், BOI பதிவு, வர்த்தக நிலைய முகவரி போன்ற தகவல்கள் கோரப்படுகின்றன. நீங்கள் வர்த்தகர் இல்லை என்றால் இதை பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.

இது நான்கு பக்க விண்ணப்பப் படிவம், நான்காம் பக்க மேலே உள்ள கட்டத்தில், நீங்கள் இப் படிவத்தை நிரப்பி வேறு ஒருவர் மூலம் சமர்ப்பிக்க விரும்பினால் அவரது பெயர், பதவி, அடையாள அட்டை எண் என்பனவற்றை குறிப்பிட வேண்டும். அடுத்த பிரிவில் உங்கள் பெயர், பதவி அடையாள அட்டை விபரங்களைக் குறிப்பிட்டு திகதியிட்டு கையொழுத்திட வேண்டும். இவ்வாறு நிரப்பப்பட்ட படிவத்தை அங்குள்ள அலுவலரிடம் கொடுத்தால் அந்த விபரங்களை சரிபார்த்து, தன் கணினியில் பதிவேற்றி உங்களை போகச் சொல்வார்கள். ஆரம்பத்தில் நீங்கள் டோக்கன் இலக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். நிரப்பப்பட்ட படிவத்தை பொறுப்பேற்றவரிடம் உங்கள் அடையாள அட்டையையும் டோக்கனையும் கையளிக்க வேண்டும். உங்கள் டோக்கன் இலக்கத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தலைமை அலுவலக இரண்டாம் மாடியில் பெரிய அளவில் கூட்டம் இல்லை. இளைஞர்களையும் சாதாரணமானவர்களையும் அரிதாகப் பார்க்க முடிகிறது. டின் தொடர்பான செய்தி பரவலாக மக்களை சென்றடையவில்லை என்பதையே இது காட்டுகிறது. எனவே நீங்கள் காலை 8.30க்கு கொழும்பு தலைமையகம் அல்லது கிளை அலுவலகங்களுக்கு சென்றீர்களானால் அடுத்த ஒரு மணித்தியாலத்தில் படிவத்தை கையளித்துவிடலாம். மேலும் இரண்டு மணித்தியாலங்களுக்கு அங்கேயே ஒரு இருக்கையைப் பிடித்து அமர்ந்தீர்களானால் டின் இலக்கம் வழங்கப்பட்டுவிடும். டின் இலக்கத்துடன் ஒரு பின் இலக்கமும் தருவார்கள் அங்கேயே அமர்ந்திருக்க விரும்பாதவர்கள் வெளியே சென்று அலுவல்கள் முடித்துக் கொண்டு, மாலை நான்கு மணிக்கு முன் அலுவலகம் திரும்பினால் உங்கள் டோக்கன் இலக்கத்தை குறிப்பிட்டு இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஒன்லைனிலும் படிவத்தை நிரப்பி பதிவேற்றம் செய்தால் இலக்கம் உங்களை வந்தடையும்.

இந்த இலக்கம், நீங்கள் வீடு, காணியை வாங்கும், விற்கும் போது அவசியப்படும், வாகனங்களை வாங்கும் போது, பதிவு செய்யும் போது கேட்கப்படும். பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் போது கேட்கப்படும். எதிர்காலத்தில் மேலும் பல தேவைகளுக்கு இந்த வரி இலக்கம் உங்களுக்கு உபயோகமாக இருக்கும். வரி என்றால் என்ன என்பதை நம்மைவிட வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அறிவார்கள். அந் நாடுகளில் வரிகளை ஒழுங்காக அறவிட்டு விடுகிறார்கள். வரி அதிகம் அறவிடப்படுகிறது என்பதால் சில செல்வந்தர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறி வரி அறவீடு குறைவாகக் காணப்படும் நாடுகளில் குடியேறுவதுண்டு.

இங்கிலாந்தில் வாழ்ந்த நகைச்சுவை நடிகர் சார்ளி சப்ளின் சுவிட்சர்லாந்தில் குடியேறி மரணித்ததும் அம்மண்ணில் தான். ஏனெனில் இங்கிலாந்தில் வரி அதிகமாம். ஆனால் வரி அறவீட்டில் கராறாக இருக்கும் நாடுகள் அல்லது மாநிலங்கள், வரிகள் மூலம் கிடைக்கும் பணத்தை கொள்ளையடிப்பதில்லை. விரயம் செய்வதில்லை. மக்கள் நலத் திட்டங்களாக அவற்றை திருப்பிச் செலுத்துகின்றன. தொழில் அற்றவர்களுக்கு சகாய நிதி. இலவச மருத்துவம், ஓய்வூதியம், முதியோர் கவனிப்பு என திருப்பி வழங்கப்படுகிறது. வரிகளை ஒழுங்காக அறவிட முடியுமானால் இலங்கையிலும் மேம்பட்ட மற்றும் அர்த்தமுடைய சமூக நலத் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம்.

எனவே வரி அறவீடு, ஏன் டின் நம்பர் முதன்மைபடுத்தப்படுகிறது என்பதை மக்கள் மத்தியில் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். டின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் அலுவலகங்கள் போதியனவாக இல்லை. இப்பணி பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டால் மட்டுமே கிராமவாசிகளை இச் செயலகங்களுக்கு அழைத்தவர முடியும்.

**அருள் சத்தியநாதன்**



# கொலை செய்யத் தூண்டுமா பள்ளிப் பருவக் காதல்?

## நெடுஞ்சாலையில் கொல்லப்பட்ட துலங்கலியின் மரணத்தில் துலங்கிய மர்மம்

பாடசாலை காதல் பலருக்கும் அழகான நினைவுகளைத் தரும். அழகாக மனதில் எங்கோ ஒரு மூலையில் அது குடியிருக்கும். பள்ளியில் காதலித்து அந்த வாழ்க்கைதான் வேண்டுமென்று உறுதியாய் இருந்து திருமணம் செய்வோர் மிகச் சொற்ப அளவினரே.

'96', ஆட்டோகிராப் போன்ற திரைப் படங்களில் காட்சிப்படுத்தப்படும், பள்ளிக்காதலின் சுவராஸ்யமான உணர்வுபூர்வமான காட்சிகள் பலருக்கும் கடந்த காலத்தை ஞாபகப்படுத்தும். ஆனால் அதே பள்ளிக்காதல் ஒருவரின் உயிரைப் பறிக்கும் அளவுக்கு ஆபத்தான ஒன்றாக மாறியிருப்பது இன்று அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.



அவர் பெயர் துலங்கலி அனுருத்திகா. வயது 45. 11 வயது பெண்பிள்ளையின் தாய். சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெண் அதிகாரியாக கடமையாற்றும் இவர், தினமும் தனது கணவருடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ ஊடாக சென்றுவருவது வழமை. எனினும் வழமைபோல் அன்று (9) கணவருடன் வேலைக்கு சென்றாலும் மாலையில் அதிக மழையுடனான காலநிலை காணப்பட்டமையால் நேரத்தோடு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு நிறுவனத்துக்கு சொந்தமான பஸ்ஸில் செல்ல தீர்மானித்தார் துலங்கலி. அதுவே அவரின் இறுதிபயணமாக இருக்கும் என்பதை அன்று அவர் அறிந்திருக்கவில்லை.

அன்று ஜனவரி மாதம் 9 ஆம் திகதி. மாலை 5 மணியிருக்கும். நிறுவனத்துக்கு சொந்தமான பஸ்ஸில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ நுழைவாயில் அருகில் வந்திறங்கிய துலங்கலி, தனது கையடக்க தொலைபேசியை பார்த்தவாறு வீதியை கடந்து, தொலைபேசி செயலியில் பதிவுசெய்த முச்சக்கர வண்டி சாரதி வரும் வரை காத்திருக்கின்றார். இதற்கிடையில் கறுப்பு நிற காரொன்று அவரைக் கடந்து வேகமாகச் சென்றது. துலங்கலி முச்சக்கரவண்டி வரும் வரை காத்திருந்தார். பலமுறை முச்சக்கரவண்டி சாரதிக்கு அழைப்பை ஏற்படுத்தி விரைவாக வருமாறு அறிவுறுத்தினார். எனினும் முச்சக்கரவண்டி வர தாமதித்தது. அவரை கடந்து சென்ற அந்த கறுப்பு நிற காரிலிருந்து இறங்கி வந்த நபரொருவர் பலரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே கூரிய ஆயுதத்தால் சராமரியாக துலங்கலியை தாக்கினார். அவர் தனது கைப்பையை வயிற்றில் வைத்து மறைத்துக் கொண்டு வலி தாங்கமுடியாமல் நிலத்தில் வீழ்ந்தார். எனினும் அதன் பின்னர் கூட அந்த படுபாதகன் விடுவதாய் இல்லை. கூரிய ஆயுதத்தால் பல இடங்களில் தாக்கினார். பலரும் பார்த்து கொண்டிருக்கையிலேயே இக்கொடூர சம்பவம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ நுழைவாயிலில் அரங்கேறியது. துலங்கலி இரத்தவெள்ளத்தில் குற்றுயிரும் குலையுயிருமாக கிடந்தார். அந்நபர் கத்தியைக் காட்டி அங்கிருந்தவர்களை மிரட்டி விட்டு காரில் ஏறி ஹோமாகம நோக்கி தப்பியோடினார். இதனையடுத்து அங்கு கூடியிருந்தவர்களில் பெண் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கவே சம்பவ இடத்துக்கு கஹதுடுவ பொலிஸார் வந்தடைந்தனர்.

துலங்கலியை வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், அவர் வழியிலேயே துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் கணவருக்கு தகவல் வழங்கப்பட்டு துரிதமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே துலங்கலியின் பாடசாலைக் காதல் பற்றிய பல தகவல்கள் வெளிவரத் தொடங்கின. துலங்கலியின் பாடசாலை காதலனுடைய இரு தொலைபேசி இலக்கங்களை கணவர் பொலிஸாருக்கு வழங்கினார். எனினும் அதில் ஒன்று நிறுவனமொன்றின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி இலக்கம். அந்த நிறுவனத்தின் பெயரை இணையத்தில் கண்டறிந்த பொலிஸார் அதனூடாக நிறுவன உரிமையாளரின் அடையாள அட்டையை கண்டுபிடித்தனர். அது கொழும்பிலுள்ள வெளிநாட்டு வீசா வழங்கும் நிறுவனம் என்பது இதன் போது தெரியவந்தது. அதுமட்டுமின்றி வெளிநாட்டிலுள்ள பாரிய போதைப்பொருள் வியாபாரியின் மூத்த சகோதரரான 47 வயதுடைய பிரசாத் எனும் நான்கு பிள்ளைகளின் தந்தை எனவும் இதன் போது தெரியவந்தது.

சந்தேகநபர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல்களின்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கஹதுடுவ பொலிஸார், சந்தேகநபரின் புகைப்படத்தை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அடையாளப் பிரிவிற்கு வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் சந்தேகநபரான பிரசாத் மலேசியா எயார் லைன்ஸ் விமானமான MH178 இல் மலேசியா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தார்.

இதன்போதே முக அடையாளம் காணும் கமரா அமைப்பு மூலம் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். விசாரணை அதிகாரிகள் சந்தேக நபரிடம் கடவுச் சீட்டைக் கேட்ட போது. தனது மனைவியுடன் வெளிநாடு செல்வதற்காக வந்ததாகவும் கடவுச்சீட்டு மனைவியிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தொடர்ச்சியான விசாரணைகளின் போது, சந்தேக நபர் விசாரணை அதிகாரிகளுக்கு தனது கடவுச்சீட்டை வழங்கினார். இதனையடுத்தே சந்தேக நபர் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டதோடு அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேநபரிடம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில்,

பிரசாத், துலங்கலி இருவரும் பாடசாலைக் காலத்திலேயே ஒருவரையொருவர் காதலித்தவர்கள் என்றும் 1996ஆம் ஆண்டளவில் பிலியந்தல பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்விகற்றனர் என்பதும் தெரியவந்தது. இவர்களுடைய காதலை ஆசிரியர்கள், சக நண்பர்கள் என பலரும் அக்காலத்தில் அறிந்திருந்தனர். எனினும் இரு வீட்டாருக்கும் தெரியவர கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் பாடசாலைக் காதலுக்கு இடைநடுவே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இருவரும் வேறுவேறு திசையில் பயணிக்க ஆரம்பித்தனர்.

பிரசாத் உயர்தர பரீட்சை எழுதிய கையோடு வேறொரு பெண்னை திருமணம் செய்து கொண்டார்.

நாட்கள் உருண்டோடியது. பிரசாத்துக்கு நான்கு பிள்ளைகள். துலங்கலி வைத்தியரொருவரை திருமணம் செய்து ஒரு பெண் குழந்தைக்கு தாயானாள்.

பிரசாத் பல வருடங்கள் வெளிநாட்டிலேயே தொழில்புரிந்தார். டுபாய், சிங்கப்பூர் , மாலைதீவு என 10க்கும் மேற்பட்ட நாடுகளில் தொழில்புரிந்தார். இந்நிலையிலேயே கடந்த 2019ஆம் ஆண்டு கொவிட் நெருக்கடியான காலப்பகுதியில் பிரசாத் நாடு திரும்பினார்.

இதனிடையே ஒரு நாள் துலங்கலியை சந்திக்கும் வாய்ப்பு பிரசாத்துக்கு கிடைத்தது. நாட்கள் செல்லச்



செல்ல இருவருக்குமிடையில் விட்டுப் போன பாடசாலை காதல் துளிர்விட ஆரம்பித்தது.

பிரசாத் துலங்கலியை சந்திப்பதற்காக அடிக்கடி தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ நுழைவாயிலுக்கு வருவது வழமை. நிறுவன போக்குவரத்து சேவை பஸ்சில் வரும் துலங்கலியை பிரசாத் அழைத்துச்செல்வான். நாளடைவில் இதை அறிந்த பிரசாத்தின் மனைவி அவரை விட்டு பிரிந்தார்.

எனினும் பிரசாத் துலங்கலியை விட்டு விலகவில்லை. அவள் மீது உரிமையுடன் நடந்துகொண்டான். அது துலங்கலிக்கு எரிச்சலை உண்டுபண்ணியது. எப்போதும் துலங்கலி மீது சந்தேகப்பட்டு சண்டைபோட்டான்.

இதனால் சுதாகரித்துக்கொண்ட துலங்கலி, எல்லாவற்றையும் நிறுத்திகொள்வோம் என பிரசாத்திடம் வேண்டினார். எனினும் பிரசாத் தொடர்ந்து அவளை தொந்தரவு செய்தான். அடிபட்ட நாகம் போல அவளை கொலை செய்யும் அளவுக்கு துணிந்தான். இதுதொர்பில் பிரசாத் வழங்கிய வாக்குமூலத்தில்,

துலங்கியுடனான உறவு காரணமாகவே என் மனைவி என்னை விட்டு பிரிந்தார். அது அவளுக்கு நன்றாகவே தெரியும். ஒரு நாள் துலா திடீரென்று இது எல்லாவற்றையும் நிறுத்துவோம் என்றாள்.

அதற்கான காரணத்தை தேடியபோது அவளுக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

அவளால் தான் எல்லாவற்றையும் நான் இழந்தேன். என் மனைவி, குழந்தைகள் என்னை விட்டுப் பிரிந்தார்கள். எனவே தான் எனக்கு கிடைக்காத பொருள் வேறு யாரும் சொந்தமாகக் கூடாது, என்றெண்ணி அவளை கொலைசெய்தேன் என அவன் தெரிவித்தான்.



**வசந்தா அருள்ரட்ணம்**



# உயர்வு தரும் பொங்கல்

பொங்கலடா நமது
பொங்கல்
போகி பொங்கல்
என மகிழ்வாய்
பங்கமிலா
பொங்கலடா
பால் பொங்கி
கொண்டாடுவாய்
திங்களாக வந்
தெம்மை
திகைக்க வைக்கும்
பொங்கலடா
மங்கையின் வாழ்வில்
ஒளிபெறவே
மகிழ்ச்சி தரும்
பொங்கலடா

தை பிறந்திடவே
தரணி சிறந்திட
தழைத்தோங்கி
வந்த பொங்கலடா
உண்மை உயர்ந்திட
உயர்வு பெற்றிட
உழைத்து வாழச்
சொல்லும் பொங்கலடா
வண்மை ஒழிந்திட
வான்மழை பொழிந்திட
வாழவைக்கும் பொங்கலடா
தன்மை தழைத்திட
தாய்மை தளிர்த்திட
தரணி சிறக்க வந்த
பொங்கலடா
பெண்மை பெற்றிட
பேருண்மை பொழிந்திட
பெற்றோர் மகிழும்
பொங்கலடா

உழுவோர் உழைத்திட
உண்மைகள் வாழ்ந்திட
உழைப்போர் போற்றிடும்
பொங்கலடா
பிழைப்போர் பிறந்திட
பிள்ளை பிறந்திட
பிறந்ததடா உண்மை
பொங்கலடா
திளைப்போர் திளைத்திட
தீந்தமிழ் உயர்ந்திட
திக்கெட்டும் ஓங்கும்
பொங்கலடா
ஏழைகள் எழுந்திட
ஏற்றங்கள் கண்டிட
ஏழ்மை ஒழிக்கவந்த
பொங்கலடா

உடப்பூர் வீரசொக்கன்

# புத்தொளி வீசிடும் பொங்கலே வருக

புத்தொளி வீசிடும்
பொங்கலே வருக
இத்தரை செழித்திட
இன்பத்தைத் தருக
மற்றோரை மதித்திடும்
மனிதத்தைத் தருக
கற்றோரும் மிகைத்திடும்
உலகைத் தருக

மத்தாப்பு ஒளியால்
மண்ணும் மின்னவே
தித்திக்கும் மகிழ்வால்
உள்ளமும் துள்ளவே
எட்டுத் திக்கும்
ஐக்கியம்
பெருகவே
எட்டு வைத்திடு
இன்பப்
பொங்கலே

புத்தரிசி எடுத்தே
புதுப்பானையில்
இட்டே
பாலுடன் சீனியையும்
பக்குவமாய்க் கலந்தே
எரியும் நெருப்பில்
எடுத்தே வைத்திட
பாலும் வழிந்தே
பொங்கல் சிறக்குமே
புத்தாடை
அணிந்தே
பூலோகம்
மணக்கும்
பூசிடும்
மருதாணியும்
பூத்தே சிவக்கும்
உறவுகள் சேர்ந்திட
உன்னதம் பூக்கும்
உழவன் தியாகமும்
உலகை
வியக்கும்..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்.






# எட்டாக் கனி




எரிவாயு சிலிண்டர் இனி
ஏழைகளுக்கு முற்றிலும்
எட்டாக் கனியாகப் போகிறது.

அடுப்பிலே பற்றி
எரிய வேண்டிய நெருப்பு இனி
ஏழைகள் வயிற்றிலே எரியுமோ?
தெரியவில்லை.

எரிக்காமல் சமைக்கும்
உணவிருந்தால் சொல்லுங்கள்
நாளைமுதல் உண்பதற்கு.

அ.ரூபிகா

# வானத்தை வெல்வோம்..!

எள்ளளவும்
சந்தேகமில்லை
நான்
இயற்கையை
மிகவும்
நேசிக்கின்றேன்
காலை முதல்
மாலை வரை
ஏராளமான
சந்தோஷம்,
சந்தேகமில்லை !...

ஏன் என்றால்
நான்....
இயற்கையை
மிகவும்
இன்பமாக
நேசிக்கின்றேன்,
நீங்களும்
இயற்கையை
நேசியுங்கள்...
எள்ளளவும்
சந்தேகமில்லை
ஏன் என்றால்
இறைவன்
படைப்பில்
எல்லாம்
மிகவும்
இன்பமானவையே !



சி. மௌனேஷ்
மட்டக்களப்பு.



# வேண்டுதல்

விழிகளில் ஈரம் கொண்டு
விண்ணப்பம் செய்கிறேன் இறைவா எம்
வழிகளில் வனப்பைப்
பெருக்கிட வாய்ப்பைத்
தந்துவிடு விரைவா

கஷ்டங்களும் கடினங்களும்
கலந்தே வருகின்றன இறைவா எம்
காலங்கள் இருக்கையிலே இதற்கு
கடிவாளம் இடணும் விரைவா

தேசத்தின் எதிர்காலமிங்கு
தெம்பாய் ஆகணும் இறைவா எம்
நேசத்தில் புதிர் களைந்து மகிழ்வாய்
நிமிஷங்கள் மாறணும் விரைவா

நிலைமைகள் யாவும் சீராயமைந்து
நிர்க்கதிகள் விலகிடணும் இறைவா
தலைமைகள் யாவரும் ஒன்றாயிணைந்து
தக்க உபாயம் தந்திடணும் விரைவா.

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.



# சிரித்துப் பேசிட முடியாமல் .....

இரு புறத்து வேலிகள்
நடுவே
அமைந்துள்ள
வீட்டின் யன்னல்கள்
திறந்து
கிடக்கின்றன.
உள் நுழையும்
முன் கதவை
காற்று
மூடித்திறக்கிறது.

ஆரவாரமற்று
உறங்கிக்கிடக்கும்
அந்த அமைதியை
பார்த்திட
தடுத்து
நிறுத்தியது மனசு

பாதங்களை
மெல்ல மெல்ல
நகர்த்தி
உள்ளே செல்ல
எத்தனிக்கிறேன்.

முதுகுக்குப் பின்னால்
ஓடி வந்து என்னை
கட்டித் தழுவும்
அழகியதோர்
குரலின் ஈர்ப்பில்
திரும்பிச் செல்கிறேன்.

அந்தக்
குரலுக்குச்
சொந்தமானவள்
இந்த நிலத்திற்குச்
சொந்தமானாள்
என்னை விட்டும்!

ஏ. எம். கஸ்புள்ளா



# அமைதிக்கு என்ன வழி?

செல்வந்தர் வயிறு புசிக்கும்
சிறப்பா யது பெருக்கும்
ஏழைக ளிதயம் சகிக்கும்
எளிமையை யது ருசிக்கும்

சாராயக் கடைகள் பெருகும்
சந்தோச மதால் குறையும்
பேராசை நெஞ்சில் நிறையும்
பேராபத்துக ளதில் உறையும்

சாலையில் சண்டைகள்
நடக்கும்
சமத்துவத்தை யவை
உடைக்கும்
கல்விச் சாலைகள் பல
முளைக்கும்
கல்வியை காசுக் கவை
விற்கும்

அரசியலை ஆணவம் ஆளும்
அசுத்த மதனுடன் சேரும்
அறிவை செல்வம் வெல்லும்
அடிமைத் தனம்
குடி கொள்ளும்

ஒழுக்கம் எரிந்து போகும்
உயர்வுக ளதில் வீழ்ந்து சாகும்
அழுக்குகள் வந்து மோதும்
அகிலமே யதில் மூழ்கும்

நான்கு சுவர்கள் விரியும்
நடப்ப தெல்லாம் தெரியும்
ஊனக் கண்கள் திறக்கும்
உயர் மானமெழுந்து
பறக்கும்

மடமை அரியணை யேறும்
முடமை புவிதனை யாளும்
கடமை கைதவறி போகும்
காசினியே கந்தலென ஆகும்

பணக்கார முதலைகள்
மிகையாகும்
பண்பான உயிர்களவை
வதைக்கும்
பணத்திற்கு ளெல்லாம் வீழும்
பாசம் வெந்தணலில் வேகும்

பெண்மை பெருமையை
இழக்கும்
பெரும் ஆடையை யது
குறைக்கும்
ஆண்மை உழைப்பை
வெறுக்கும்
அடுத்தவரை யது
கருவறுக்கும்

உலகம் இப்படியே மாறும்
உணர்வுள்ளோர்
மனம் நோகும்
அளவுடன்
எல்லாம் வேண்டும்
அப்போதுதான்
அமைதி தோன்றும்

வரக்காமுறையூர் ராசிக்



# நான் ஆழ்கடலில் இருக்கிறேன்...

இனியில்லை எதுவும்
இத்தோடு
முடிந்துவிட்டது என்று
தத்தளிக்கும் நிலையில்
துடுப்பிழந்து
துடிக்கும் இதயம்
கைக்கும் வரும்
என்று பயந்து
கடல் நடுவே
கடல் ஆழத்தின்
கருமைக்கு
இரவின் இருள்
துணை சேர

படகில் நானும்
கரை முகம் காண
பயத்தில்
திக்கும் தெரியா
தவிக்கும் நேரம்
காற்றுக்கும் திசை
மறந்து எல்லாம்
ஒரே திசை என
சூழன்றடிக்க
தூரமே தெரிந்த
உன் முகம் பார்த்தேன்

கரையேறுவேன்
என்ற நிச்சயம் இல்லை
என்றாலும்
மூழ்கமாட்டேன்
எனும் திடம் தந்தாய்

முடிந்த ஆண்டிற்கு
காற்புள்ளியிட்டு
தொடங்கிய
ஆண்டில்
காலடிவைத்து
நீந்தி வருகிறேன்
கரை
காணவில்லை கரை
ஓரமாய் தனியே
நின்றிருக்கும்
உனை மட்டும்
கண்டவளாய் நீந்தி
வருகிறேன்...

காண்பதுவோ
கானல்
என்றிட வேண்டாம்
நானோ
இருப்பது
பாலையில்லை
நம்புங்கள்...
நான் ஆழ்கடல்
இருக்கிறேன்...

இமையி

# உண்போர்க்கு ஒரு பொங்கல் உழவனுக்கு மூன்று பொங்கல்

உழவனுக்கு இங்கே
மூன்று தைப் பொங்கல்!
கதிர் விளைத்தறுக்கக்
கருணை செய்த அந்தக்
கதிரவனுக்கு
ஒரு பொங்கல்!

உழவடிக்க உதவி செய்த
கலப்பை மாடுகளுக்கும்
கனிவாய் ஒரு பொங்கல்!

அள்ளியுண்ண
அமுதளித்த அந்த
அன்னை
வயலுக்கோர் பொங்கல்!

கங்குல்லறுத்துக்
கதிரவன்
உதிக்கும் முன்னே
செங்கல்லடுப்பு மூட்டிப்
பாலரிசிப்பானையேற்றி

முழுமையாய்ப்
பொங்கல் ஆக்கி
முறைப்படி
படையலிட்டுத்
மூன்று தெய்வங்களையும்
பணிகின்ற
உழவனுக்கு
மூன்று பொங்கல்!

உழவனின் தை(யே)
தை தை நிலத்தை உழவன்
உழுது நெல்விதைத்த தை!
நீர் இறைத்த தை
பயிர் வளர்த்த தை
பாதுகாத்த தை
அது அவன் சிரத்தை!
கதிர் அறுத்த தை
புதிர் எடுத்த தை
கதிரவனுக்கே விருந் தை
பொங்கிப் படைத்த தை!
அருந்தை பெருந்தை இது
வித்தைகாரனின்
வீர சூரத்தை விளக்கும்
இத் தை!
எத்தை வந்தாலும்
அத்தை முழுவதும் இந்த
உலகத்தை உய்விக்கும்
உழவனின் தை தையே!

பாண்டியூர். ‘பொன்பா வேந்தன்’
ஏ.பி.எல்.நவநீதன்,
கல்முனை



# உழவன் ஒரு வீரன்

உழவன் ஒரு வீரன்
ஏரெடுத்து எடுப்பாக
எருது ரதம் மோட்டி
புழுதி கிளம்பப்
புவிகீறிக் கிழித்து
போராட வந்த
உழவன் ஓர் வீரன்!

பகல் சுட்டென்ன
மழையடித் தென்ன
கூதல் பிடித்தென்ன
எதையும் எதிர்த்துப் போராடும்
உழவன் ஒரு வீரன்

நெல் விதைப்பான்!
நீர் இறைப்பான்
பயிர் வளர்ப்பான்
பகலிரவாய் அதைப்
பாதுகாக்கும்
உழவன் ஒரு வீரன்!

அர்த்த ராத்திரியில்
ஆனை வந்தால் லென்ன
பூனை போல் வோடான்!
அதிரடி வெடி கொழுத்தி
அதை விரட்டியடிக்கும்
உழவன் ஓர் வீரன்!

கத்தியெடுப்பான் முற்றியது
கதிர்க்கத்தைக் கழுத்தறுப்பான்!
புதிர் எடுப்பான்
பகலவனுக்கே – அதைப்
பொங்கிப் படையவிடும்
உழவன் ஒரு வீரன்!

# பிரித்தானிய இளவரசி Anne MAS ஹோல்டிங்ஸூக்கு விஜயம்



பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவுகளின் 75 வருட பூர்த்தியை முன்னிட்டு, பிரித்தானியாவின் இளவரசி Anne உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளார். இந்த விஜயத்தின் போது, இளவரசி Anne, அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திம தி லோரன்ஸ் மற்றும் அரச தூதுக்குழு மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேதகு அன்ட்ரூ பேட்ரிக் ஆகியோர், கட்டுநாயக்கவில் உள்ள MAS ACTIVE தயாரிப்பு உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் MAS Nirmaanaவிற்கு விஜயம் செய்தனர். அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டது. MAS Holdings இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளர் மற்றும் நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வேலை வழங்கும் நிறுவனமாகும்.

MAS Nirmaanaவில் அவர்கள் நிறுவனத்தின் ஆடை நிபுணத்துவம் மற்றும் கண்டுபிடிப்பு திறன்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ மற்றும் MAS Active இன் பிரதம நிறைவேற்று அதிகாரி முடித பெர்டினாண்டோ ஆகியோர் இந்த கண்காணிப்புச் சுற்றுப்பயணத்திற்கு இராஜரீகமான பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# Colombo Motor Show 2023இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக மீண்டும் செலான் வங்கி



செலான் வங்கி, இலங்கையின் மிகப்பெரிய சர்வதேச மோட்டார் மற்றும் மோட்டார் பாகங்களின் கண்காட்சியான Colombo Motor Show 2023இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக தொடர்ந்து 6ஆவது வருடமாக இணைந்தது. இந்நிகழ்வு சிறிமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நவம்பர் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடைபெற்றதுடன் 60,000க்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்த்தது.

Colombo Motor Show உடனான செலான் வங்கியின் இணைவு, வாகனத் துறையில் நிதி வலுவூட்டல் மற்றும் அணுகல்தன்மைக்கு வழிவகுப்பதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது. இந்நிகழ்வில் வங்கியின் பரந்த அளவிலான சேவைகள் பற்றியும் அதன் தீர்வுகள் தொடர்பாகவும் பங்கேற்பாளர்கள் நேரடியாகத் தெரிந்து கொண்டதுடன் குறிப்பாக சிறப்பு வட்டி வீதங்களைக் கொண்ட வங்கியின் லீசிங் வசதிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

Colombo Motor Show 2023இல் மோட்டார் வாகனங்கள், மோட்டார் பாகங்கள், உதிரிப்பாகங்கள், lubricants, டயர்கள் மற்றும் பட்டரிகள் என அனைத்தையும் உள்ளடக்கிய 200 காட்சிகூடங்கள் வைக்கப்பட்டிருந்தன. உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக செலான் வங்கி, செலான் லீசிங் ஊடாக வாடிக்கையாளர்களின் வருமானத்தைப் பொறுத்து நெகிழ்வான திருப்பிச் செலுத்தும் திட்டம் மற்றும் சிறப்பு வட்டி விகிதத்துடன் வாடிக்கையாளர்களுக்கு புத்தம் புதிய அல்லது மறுசீரமைக்கப்பட்ட வாகனங்களை 7 ஆண்டுகள் வரையிலான திருப்பிச் செலுத்தும் காலத்துடன் வாங்குவதற்கான வாய்ப்பை வழங்கியது.

# இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கொமர்ஷல் வங்கி



இலங்கையின் மிக சிறந்த வங்கியான கொமர்ஷல் வங்கி இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் ஒரு புதிய கூட்டு ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் செயற்பாடுகளில் ஒன்றாக வங்கி இதனை செய்துள்ளது. சிறந்த ஊழியர் விதிமுறைகளை உறுதிசெய்வதில் வங்கியின் உறுதிப்பாடு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகள் மற்றும் வங்கி, தொழிற் சங்கம் மற்றும் ஊழியர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் மூலம் திறமையான தொழில் சூழலைப் பேணுதலை கருத்திற் கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டு ஒப்பந்தமானது, கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் வங்கியின் நிரந்தர வேலை ஒப்பந்தங்களில் பணிபுரியும் தொழிற் சங்க உறுப்பினர்கள், நிறைவேற்று உதவியாளர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தரப்பினர் மற்றும் நிறைவேற்று தரம் அற்ற ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினருக்கும் இடையே கையெழுத்தானது.

இவ்வாறு கையெழுத்திடப்பட்ட இந்த கூட்டு ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தமானது 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிவரை அமுலில் இருக்கும்.

# இலங்கைக்கு வரும் Brooks Running பாதணிகள்



உலகின் அதிவேகமாக வளர்ந்து வரும் தடகள பாதணி பிராண்டான Brooks Running, அதன் உள்ளூர் பங்காளியான Asriel Holdings (Pvt.) Ltd உடன் இணைந்து, அண்மையில் அதன் வர்த்தகநாமத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது

Warren Buffet's Berkshire Hathaway Inc. இன் துணை நிறுவனமான Brooks Running என்பது செயல்திறன் மற்றும் புத்தாக்கத்துக்கு ஒத்ததாக வேகமாக வளர்ந்த ஒரு வரத்தகநாமம் ஆகும். அமெரிக்காவில் 25% சந்தைப் பங்கையும், கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 100% ஆண்டு விற்பனை வளர்ச்சியையும் பெற்றுள்ளது, Brooks Running விளையாட்டு வீரர்கள் மத்தியில் மிகவும் விருப்பமான பிராண்டாக உலகம் முழுவதும் பெருகிய முறையில் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"Brooks Running விளையாட்டு வீரர்களுக்கு சீரான சிறந்த ஓட்ட அனுபவத்தை வழங்குகிறது. பொறியியல், Biomechanics மற்றும் 3D Printing தொழில்நுட்பத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, விளையாட்டு வீரர்களின் விளையாட்டின் மிக உயர்ந்த மட்டத்தில் செயல்படும் விளையாட்டு வீரர்களுக்கு நிகரற்ற சௌகரியம், செயல்திறன் மற்றும் நீடித்துழைப்பு ஆகியவற்றை வழங்கும் தடகள பாதணிகளை உருவாக்குவதற்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு எங்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.

"இந்த சந்தையில் அபரிமிதமான வளர்ச்சி திறனை நாங்கள் காண்கிறோம், மேலும் சந்தையில் மிகச் சிறந்த பாதணிகளுடன் இலங்கையின் விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி கலாசாரத்தை ஆதரிப்பதற்கான ஒரு முக்கிய வாய்ப்பையும் நாங்கள் காண்கிறோம்" என Brooks Runningஇன் Country Manager Kartik Shah கூறினார்.

# FSSC 22000 சான்றிதழைப் பெற்ற முதல் கோழி இறைச்சி உற்பத்தியாளராக New Anthoney's Farms



நம்பிக்கையான, தூய்மையான, பசுமையான மற்றும் உயர் தரமான கோழி இறைச்சியை தனது புகழ் பெற்ற 'green' label ஊடாக வழங்கும் New Anthoney's Farms, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெருமைக்குரிய சான்றிதழான FSSC 22000 ஐப் பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது கோழி இறைச்சி உற்பத்தியாளராகத் திகழ்கின்றது.

இந்த தரச் சான்றிதழைப் பெற்றுள்ளதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு சந்தையில் காணப்படும் பாதுகாப்பான கோழி இறைச்சியை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் நியமத்தை மேம்படுத்தி, நியமத்துக்கு அப்பால் செல்லும் வகையில் New Anthoney's Farms அமைந்துள்ளது.

FSSC 22000 சான்றிதழை பெற்றுக் கொண்டதனூடாக, புதிய தொழிற்துறை நியமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், கோழி இறைச்சித் துறையில் தரம், பாதுகாப்பு மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் உயர் நியமத்தை உறுதி செய்துள்ளது. அத்துடன் இதர கோழி இறைச்சி உற்பத்தியாளர்களையும் தம்மைப் பின்தொடர்ந்து விநியோகத் தொடரில் தரத்தை மேம்படுத்தவும், நம்பிக்கையை கட்டியெழுப்பவும் அழைக்கின்றது.

New Anthoney's Farms (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர அணியினருக்கும், பங்காளர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் இந்த செயன்முறைக்கு ஆதரவளித்தமைக்காக நன்றியை தெரிவித்திருந்தார்.

# 3 விருதுகளையும் தனதாக்கிக் கொண்டது Softlogic Life



இலங்கையின் இரண்டாவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life ஆனது அதன் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை மற்றும் பேண்தகைமை என்பனவற்றிற்கான தனது நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம், 58வது CA TAGS விருது வழங்கல் விழாவினில் பல விருதுகளினைத் தனதாக்கிக் கொள்வதன் மூலம் சிறந்த செயல்திறனை வெளிக்காட்டியுள்ளது.

மேலும் இந்நிறுவனமானது நான்கு முக்கிய விருதுகளினை தனதாக்கிக் கொள்வதன் மூலம், எம் நாட்டின் பலம் வாய்ந்த பெருநிறுவனங்களில் ஒன்றாக தனது திறமையினைப் பறைசாற்றியுள்ளது. இச்சாதனைகள், இலங்கையில் நிதி அறிக்கையிடல் நடைமுறைகளினை மேம்படுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகள் ஊடாக நிறுவனத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பனவற்றிற்கு Softlogic Life இன் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

உறுதிப்பாடற்ற சந்தை நிலவரம் மற்றும் கடினமான பொருளாதார நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும், Softlogic Life ஆனது குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றுள்ளது, இது தொடர்ச்சியான அதன் வர்த்தகம் தொடர்பான வேகத்தையும் தனிச்சிறப்புவாய்ந்த நிதி ஆற்றலினையும் நிரூபிக்கின்றது. இச்சாதனைகள் இந்நிறுவனத்தினை இலங்கையின் காப்புறுதித் துறையில் மிகவும் செல்வாக்கு மிக்கதொன்றாகவும், எம்நாட்டின் பெருநிறுவனத் துறையின் உயர் மட்டத்திலும் செல்வாக்குமிக்க வீரராக நிலைநிறுத்தி இருக்கின்றது. CA TAGS விருதுகள் 2023 இல் அது தனதாக்கிக் கொண்ட விருதுகள் ஆவன, நிதி அறிக்கையிடலில் உயரிய தரத்தினைப் பராமரிப்பதில் Softlogic Life இன் உறுதிப்பாட்டினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன,

# விரிவுபடுத்திய யட்டிநுவர காட்சியறையை திறந்துள்ள ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட்



ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட் (Sriyani Dress Point) யட்டிநுவர கிளையானது, கண்டி நகரத்தில் அதன் சொந்த அடையாளமான காட்சியறையை விரிவாக்கம் செய்து, பெருமையுடன் மீண்டும் திறந்து வைத்துள்ளது.

தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நம்பகமான மற்றும் சிறந்த சேவையை வழங்குவதற்காக நவீனமயமாக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ள இந்த காட்சியறையானது, ஒப்பிட முடியாத கொள்வனவு அனுபவத்தை வழங்குகிறது.

இது, புதிதாக சேர்க்கப்பட்ட புதிய இரண்டு தளங்களுடன், ஒப்பிடமுடியாத தள்ளுபடிகள் மற்றும் தனித்துவமான பேஷன் ஆடை வகைகள் உள்ளிட்ட பெரும் ஆடைத் தெரிவு வகைகளை கொண்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட், கேகாலை, குருணாகல், மாத்தளை, நீர்கொழும்பு, இரத்தினபுரி மற்றும் மலையகத்தின் மையப்பகுதியான கண்டி நகரில் காணப்படும் அதிக கேள்வியை ஈடுசெய்யும் வகையில் இரண்டு காட்சியறைகள் உள்ளிட்ட நாடு முழுவதிலும் உள்ள காட்சியறைகள் அனைத்தும் தினமும் திறக்கப்படுவதன் மூலம், இலங்கையின் முன்னணி ஆடை வணிக வலையமைப்புகளில் ஒன்றாக மாறியுள்ளது.

அதன் யட்டிநுவர காட்சியறையானது, இலக்கம் 41, யட்டிநுவர வீதி, கண்டி எனும் முகவரியில், நகரின் முக்கிய இடங்களிலிருந்து இலகுவாக அடையக் கூடிய வகையில் வசதியான இடத்தில் அமைந்துள்ளது.

அதன் நவீனமயப்படுத்தலானது, வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்கும், அமைதியான மற்றும் விசாலமான இடப்பரப்பில் விரிவான தெரிவுகளை வழங்குவதற்குமான நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

புதுப்பிக்கப்பட்ட காட்சியறையானது, தற்போது பாரிய தெரிவுகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள், பரந்த அளவிலான நாகரீக ஆடைகள், ஆபரணங்கள், அணிகலன்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் நவீன வீட்டுத் தேவைப் பொருட்களை பார்வையிடவும், கொள்வனவு செய்யவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# உயர் கல்விக்கான ஆலோசகர் வைர விருது இலங்கையின் பெவர்லி இன்டர்நெஷனலுக்கு



ஆசியாவின் வெளிநாட்டு உயர் கல்விக்கான ஆலோசகர் நிறுவனத்திற்கான வைர விருது இலங்கையின் பெவர்லி இன்டர்நெஷனல் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த அங்கீகாரம், உயர்தரமான சேவைகளை, ஆலோசனைகளை வழங்கியதன் விதிவிலக்காகவும் மாணவர்களின் "சர்வதேச கல்வி முயற்சிகளில்" ஆதரவளிப்பதாலும் கிடைத்ததை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடரும்போது அவர்களுக்கான சிறந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை அதிகரிக்கும் என பெவர்லி இன்டர்நெஷனல் தலைவர் உபுல் ஹேரத் தெரிவித்தார்.

பெவர்லி இன்டர்நெஷனல் பணிப்பாளரான ஜிசேலா கொம்பிரிங் விசா சம்பந்தமான உத்தியோகபூர்வ ஆலோசனைகளையும், சேவைகளையும் வழங்குவது பெவர்லி இன்டர்நெஷனல் நிறுவனத்துக்கு மேலும் பக்க பலமாக உள்ளது.

டுபாயில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் மிகச் சிறந்த வெளிநாட்டு உயர் கல்விக்கான ஆலோசகர் மற்றும் மாணவர் ஆட்சேர்ப்பு முகவராக இலங்கையின் பெவர்லி இன்டெர்நெஷனல் மதிப்பு மிக்க வைர விருதை பெற்றுக்கொண்டதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

The Asia's Best of the Best Awards ஆசியா முழுவதிலும் உள்ள பல்வேறு துறைசார்ந்த சிறந்த நிறுவனங்கள் மற்றும் வணிகத் தலைவர்களை இணங்கண்டு அங்கீகரித்து கௌரவிக்கின்றது. பெவர்லி இன்டர்நெஷனல் அதன் சிறந்த செயல்திறன், சேவையில் சிறந்து விளங்குதல், புதுமையான நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் கல்வித் துறைக்கான பங்களிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆண்டு பெறப்பட்ட 1000 பரிந்துரைகளில் இருந்து வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(பொங்கல் சிறுகதை)

# சந்தேகம்



ரஞ்சனிக்கு இரண்டு தினங்களாக மனதில் புயலைக் கிளப்பி விட்டிருந்தது. எதுவும் அவளுக்குப் புலப் படவில்லை. மனம் தவித்தது. தன் கணவன் விக்கியிடம் கேட்டு குடும்ப உறவில் தேவையற்ற கீறலை ஏற்படுத்தவும் ரஞ்சினி விரும்பவில்லை. பேசாமல் அதை அதன் போக்கில் விடவும் அவள் மனது இடம் கொடுக்கவில்லை. அவள் கணவன் விக்கியுடன் வழமை போல் சகஜமாக பழகினாலும் அவளது உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

விக்கியும் ரஞ்சனியும் கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரிகள். மாவட்டத்தின் இரு வேறு பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவானவர்கள். இருவரும் பல்கலைக்கழகம் வந்த முதலாம் வருடத்திலேயே காதலர்களாகி விட்டனர். இவர்கள் காதலுக்கு பெற்றார் எதிர்ப்புக் காட்டாததால் காதல் வானில் சிறகு கட்டிப் பறந்தவர்கள். மூன்று வருட பொதுப்பட்டத்தோடு பல்கலைக்கழக வாழ்வுக்கு விடை கொடுத்து வெளிவந்த இவர்கள் விரைவாக அரச துறையிலும் இணைந்தனர்.

ரஞ்சினிக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அதுவும் ஏ.எல் வரை உள்ள பக்கத்து ஊர் பாடசாலை . விக்கிக்கு அபிவிருத்தி அலுவலர் பதவி ரஞ்சினியின் பாடசாலையை அண்மித்து இருந்த பிரதேச செயலகத்தில். அவர்கள் மகிழ்வுக்கு சொல்லவா வேண்டும். அந்த காதலர்க்கு இரு வீட்டார் இணைந்து செய்து வைத்த திருமணம். அவர்களின் இரு மனம் இணைந்த காதல் வாழ்க்கைக்கு சாட்சியாக ஆணும், பெண்ணுமாக இரு குழந்தைகள். கடி மணம் புரிந்த காதல் தம்பதிகள் தாம் பத்திய வாழ்விலும் எந்தக் குறையும் இன்றி இனிக்கத்தான் வாழ்ந்தனர்.

அன்று ஞாயிற்றுக் கிழமை காலையில் கடற்கரைக்கு மீன் வாங்கப் போயிருந்தான் விக்கி. அவன் போனைக் கொண்டு போக மறந்து விட்டான். அவன் மறந்தது போனது பிரச்சினை இல்லை. அடிக்கடி இவ்வாறு நடப்பதுதான். அன்று போனில் வந்த 'குறுஞ்செய்தி' தான் பிரச்சினையை கொண்டு வந்தது. விக்கியின் போனுக்கு 'குறுஞ்செய்தி' வர. அலாரம் ஒலி எழுப்பி விட்டு ஓய்ந்தது போன். தற்செயலாக ரஞ்சினி அதனைப் பார்த்து விட்டாள். அந்த குறுஞ்செய்தி இதுதான். "மறந்து போனாயா விக்கி அவசியம் நாம் சந்திக்க வேணும் உமா" அவ்வளவே அந்த செய்தி. ஆடிப் போனாள் ரஞ்சினி.

"விக்கியுடனான தன் பல வருட காதல் வாழ்வில் அறிந்திராத ஒரு புதிய பெயர். இன்று வரை 'உமா' பற்றி விக்கியும் சொன்னதில்லை. யாராக இருக்க முடியும்". குழப்பமாக இருந்தது, ரஞ்சினிக்கு. "சரி விக்கி வந்தவுடன் கேட்டால் யாரென்று சொல்லுவான்" மனதில் நினைத்துக் கொண்டாள். "நானாக அதைக் கேட்டால்.. சந்தேகிப்பதாக விக்கி நினைத்து விட்டால் என்ன செய்வது" மனதில் தோன்றிய மறு கணம் விக்கியிடம் கேட்பதை கை விட்டாள்.

கடற்கரை சென்ற விக்கி பாரை மீன் வாங்கி வந்திருந்தான். காலையில் போனில் வந்த 'குறுஞ்செய்தி' விக்கியை பார்த்ததும் ரஞ்சினியை உறுத்தியது. "விக்கி..". "என்ன.. ரஞ்சினி சொல்லன்". "உங்களது.." சொல்ல தொடங்கியவள் சற்று நிதானித்து விட்டு நிறுத்தினாள். "என்ன ரஞ்சினி..". "ஒன்றுமில்ல.. உங்கட கழுவும் உடுப்புகளை எல்லாம் நீங்க சொன்னது போல ஊறப் போட்டிருக்கன்.. பாருங்கள்". "சரி நான் அத பாக்கன்". "இன்று நல்ல பாரை மீன் கிடைச்சிருக்கு என்னப்பா..". 'குறுஞ்செய்தி' பற்றி அவள் எதுவும் கேட்காமல் விட்டாள். "அவனாகச் அதை சொல்லட்டும்" மனதில் நினைத்துக் கொண்டாள். "ரஞ்சினியிடம் திடீரென ஏதோ வித்தியாசம்" அவன் உள்ளுணர்வு சொல்லியது. ரஞ்சினியிடம் கண்ட தடுமாற்றத்தை விக்கி கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அவன் வழமையான தனது வேலைகளில் கவனம் செலுத்தினான்.

அன்றும் வழமை போல் போனை நோண்டினான் விக்கி. காலையில் வந்திருந்த உமாவின் குறுஞ்செய்தி கண்டான். மகிழ்ச்சி பிரவாகம் எடுத்தது. "உமாவோடு கதைத்தும் மிக நீண்ட காலமாச்சு" மனதில் ஒரு கணம் நினைத்தான். உமாவுடனான பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்தான். "விரைவில் சந்திப்பேன்" அவனும் குறுஞ்செய்தி அனுப்பி வைத்தான். தன் மகள் காவியா அப்பா என்று அழைத்தபடி ஓடிவர அவளைத் அள்ளி அணைத்து தோளில் போட்டவன் அனைத்தையும் மறந்து போனான். அடுத்த நாள் பாடசாலை வந்த ரஞ்சினிக்கு நேற்றைய அந்த குறுஞ்செய்தி ஞாபகந்தான் அடிக்கடி வந்து போனது. அதனால் படிப்பிப்பதில் பெரிதாக ஈடுபாடும் இருக்கவில்லை. "நேற்றே விக்கியிடம் கேட்டு இதற்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கலாம். ஆனால் விக்கியும் இது பற்றி வாயே திறக்கவில்லையே. அப்படியானால் நான் சந்தேகிப்பது போல விக்கிக்கு விட்டுப் போன. உறவுதான் உமாவா. உமாவுடன் தொடர்பு இன்னும் இருக்குமா. பல வருடங்களாக காதலித்து கரம் பிடித்த எனக்கு இதுவரை இது தெரியாமல் போனது ஏன்" ரஞ்சினி மனதளவில் அவஸ்தைப்பட்டாள். அவளது மனதுக்குள் ஏதேதோ.. செய்தது.

பிறி பாட வேளை அது. ஓய்வு அறையில் இருந்தாள் ரஞ்சினி. "ரஞ்சினி என்ன யோசனை பலமாக இருக்கு" ரஞ்சினியின் நெருங்கிய நண்பி 'பிரியா ரீச்சர்' பக்கத்தில் வந்தமர்ந்தாள். "ஒன்றுமில்ல பிரியா..கொஞ்சம் தலைவலி அதுதான்". "இல்லையே மனதில்தான் வலி போல தெரியுது. ஒரு நாளும் நீ தலைவலி என்று இருந்ததை நான் காணல்ல. அப்ப மன வலிதானே ரஞ்சினி. இப்ப சொல்லு என்னதான் பிரச்சினை. எதையும் என்னிடம் மறைக்க மாட்டாயே நீ. என்னால் முடிந்தால் நான் ஏதாவது செய்யலாம்". "எனக்குத் தெரியாதா பிரியா உன்னைப்பற்றி". "அப்ப சொல்லன் ரஞ்சினி". "இது சொல்லக் கூடியதல்ல. அதுதான் பிரியா". "சரி ரஞ்சினி.. ஆனால் யாரிடமாவது உன் மனச்சுமையை பகிர்ந்தால் மனப்பாரம் குறைந்து விடும். ஏன் விக்கியிடமாவது சொல்லிப் பார் ரஞ்சினி". "அங்குதான் பிரியா பிரச்சினையே". நீ சொல்வது எதுவும் புரியல்ல.. ரஞ்சினி". "நீங்க இருவரும்தானே எப்போதும் விட்டுக் கொடுத்து வாழும் இனிய காதல் தம்பதிகள் உங்களுக்குமா பிரச்சினை". "பிரச்சினை எதுவும் எங்களுக்குள் இன்னும் இல்ல பிரியா. ஆனா எனக்குத்தான் எதுவும் புரியாமல் இருக்கு". எனக்கு கொஞ்சம் புரியும் படி சொல்லு ரஞ்சினி". விக்கியின் மொபைலுக்கு உமாவிடம் இருந்து வந்த 'குறுஞ்செய்தி'யை பிரியாவிடம் சொல்லி முடித்தாள் ரஞ்சினி. "ரஞ்சினி இவ்வளவும். நடந்திருக்கா. விக்கியுமா இப்படி இருக்கிறான். என்னால இதை நம்ப முடியல்ல. எல்லா ஆண்களும் இப்படித்தானா". "எத நம்புற.. எதுவும் தெரியல்ல". "ரஞ்சினி இதை விக்கியிடம் நேற்றே கேட்டு முடித்திருக்க வேணும். இத இவ்வாறு நீடிக்க விடுவது எனக்கு பிடிக்கல்ல". "விடு பிரியா அத நான் பாக்கிறன்". "நீ இத மனதில் போட்டு அமைதி இழந்து அவதிப்பட வேணாம். நான் போனில் விக்கியுடன் கதைக்கன்" பிரியாவும் ஒன்றாக படித்தவள். அதனால் விக்கியிடம் உரிமையோடு கதைக்க முன் வந்தாள். "பிரியா வேண்டாம். இதை நான் பார்க்கிறன். இதனால் இந்த சிறு பிரச்சினை பெரிதாய்ப் போய் விடும். எங்களிடம் இதுவரை எந்த ஒளிப்பும் மறைப்பும் இருந்ததில்லை பிரியா. ஆனாலும் இதனை ஏன்தான் விக்கி மறைக்கிறார். அதுதான் எனக்குள்ள ஒரேயொரு கேள்வி பிரியா". "அப்போ உனக்கு விக்கி மேல் சந்தேகமா ரஞ்சனி". "இல்லை இன்னும் எனக்கு குழப்பமாகத்தான் இருக்கு". அடுத்த பாட வேளை மணி ஒலிக்க இருவரும் அவரவர் வகுப்புகளுக்கு போனார்கள். அன்று பாடசாலை விட்டுப் போகும் போது "எப்படியும் விக்கியிடம் கேட்டு விடவேண்டும்" என்ற முடிவோடுதான் ரஞ்சினி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வழமை போன்று விக்கி அன்றும் அலுவலகத்திலிருந்து ஐந்து மணிக்கு வீடு வந்தான். ரஞ்சினி அவன் வருகையை எதிர்பார்த்துஇருந்தாள். "எப்படியும்இன்றுஅந்தஉமாவின் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும்" முடிவே செய்திருந்தாள். விக்கி வந்த நேரம் அவளது தாயும் கூட இருக்கவே அந்த விடயத்தை பற்றி ரஞ்சினிக்கு கதைக்க முடியாமல் இருந்தது எனினும் ரஞ்சினியின் உள்ளம் குமுறிக் கொண்டு வரும் போது விக்கி ரீ.வி க்கு முன் அமர்ந்திருந்தான். ரஞ்சினி கொடுத்த டீ யை பருகினான். "ரஞ்சினி பாடசாலை தவணை விடுமுறைக்கு இன்னும் மூன்று நாள்தானே இருக்கு" ."ஓம்.. அதுக்கென்ன.. " அவள் குரலில் சற்று விறைப்பு இருந்தது. "ஏன் ரஞ்சினி கதையே கொஞ்சம் காரமாக இருக்கு.." "என்ன, அப்படி இல்லையே". "வழமையாக கதைப்பது போல தெரியல்ல எனக்கு. ஏதோ வித்தியாசம் தெரியுது". "சரி சொல்ல வந்ததை நீங்க சொல்லுங்க" அவனுக்குள் ஏதோ உறுத்தியது. ஆனால் என்னவென்றுதான் புரியவில்லை. "பொங்கல் வருது புது உடுப்பு எடுக்க வேணும். கடைசி நேரத்தில் போனால் கடைகளில் கூட்டம் அதிகமிருக்கும். அதனால் ஸ்கூல் விடுமுறைக்கு அடுத்த நாள் ரவுணுக்கு போவோம் ரஞ்சனி". "நான் வரல்ல " வெடுக்கன வந்தது பதில். புரியாமல் குழம்பினான்" ஒரு நாளும் இப்படி ரஞ்சனி நடந்ததில்லையே " விக்கி மனது கனத்தது. "அவள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பதுதான் சரியான வழி". "அப்போ எப்ப போகலாம் ரஞ்சினி" "நீங்க போவதாக இருந்தால் போங்க" "எப்பவும் இப்படி பேச மாட்டாயே. ஏன் ரஞ்சனி இப்படி கதைக்கிறாய், ஏதும் பிரச்சினை என்றால் சொல்லு ரஞ்சினி நாம் இரண்டு பேரும் போகாமல் நான் மட்டுமா போவது. அப்படி, இதுகால வரை நடந்ததா சொல்லு". "புரிந்தால் சரி". "இப்பெல்லாம் நீ பொடி வைச்சு பேசுவது நல்லா இல்லையே. எனக்கு ஒரு மண்ணுமே புரியல்ல". விக்கி எழுந்து பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடப் போனான்.

கடந்த சில நாட்களாக ரஞ்சினி மறக்கவும் முடியாமல் விக்கியிடம் கேட்கவும் முடியாமல் மனம் புளுங்கினாள். "கொஞ்சம் விட்டுப் பாப்பம் அவசரப்பட்டு உறவை கொச்சைப் படுத்துவது அழகல்ல" சிந்தனையில் இருந்து விடுபட்ட ரஞ்சனி தனது வழமையான காரியங்களில் ஈடுபட்டாள்.

"என்ன ரஞ்சினி இப்ப நீ மகிழ்வா இருப்பது போல தெரியுது. உன் சிக்கல் தீர்ந்து விட்டதா" பாட ஓய்வு வேளையில் சந்தித்துக் கொண்ட ரஞ்சினியின் தோழி பிரியா ரீச்சர் விசாரித்தாள். "எங்க, பிரியா, எதுவும் நடக்கல்ல". "விக்கியிடம் அந்த உமாவை பற்றி கேட்டால் உன் சந்தேகம் போய் விடும்". "நீ வேற பிரியா, நான் விக்கியிடம் கேட்கல்ல, எனக்கு கேட்கவும் தோணல்ல. விக்கி மேல் இருக்கும் எனது காதல் ஆழமானது. அது புனிதமானது. விக்கி உமா விசயத்தை அவராக சொல்லும் வரை அமைதி காப்பது என முடிவு செய்து விட்டன் பிரியா. விக்கி இன்று வரை எதையும் மறைத்ததும் இல்லை அதுதான்". "சந்தேகம் என்பது புற்று நோய் போலகொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும். அதை வளர விடக்கூடாது ரஞ்சினி". "உண்மை எதுவென்று தெரியாது நான் மனதளவில் உடைந்து போய் இருக்கிறேன். அது உனக்கு மட்டும்தான் தெரியும்". "ரஞ்சினி வீணான சந்தேகங்கள் பல குடும்பங்கள வீதியில கொண்டு விட்டிருக்கு. நீ 'ஈகோ' பாக்காம விக்கியிடம் மனம் விட்டு கதையன் அதுதான் நல்லது". "எனக்கு ஈகோ எதுவுமில்ல பிரியா. எங்கட காதல், உனக்கு தெரியாதா? நான் இத போய் விக்கியிடம் கேட்டால் "என் மேல் உனக்கு சந்தேகமா" என்று விக்கி திருப்பி கேட்டுவிட்டால் அத என்னால தாங்க முடியாதே". "அப்ப இதுக்கு என்னதான் வழி ". "பிரியா, இதை யாரிடமும் நீ போட்டு உடைத்து விடாத எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு". "நான் இது பற்றி மூச்சு விட மாட்டன் ரஞ்சினி. சரி நான் பாடத்துக்கு போறன்".

"பாடசாலைக்கு லீவும் விட்டாச்சு. நாளைக்கு எப்படியும் ரவுணுக்கு போக வேணும்" முடிவு செய்த விக்கி அலுவலகத்துக்கும் விடுமுறைக்கு அறிவித்து விட்டான். உமாவிடம் இருந்து வந்த குறுஞ்செய்திக்குப் பின் இரு தடவை மொபைல் மூலமும் கதைத்து விட்டான். "இன்று எப்படியும் உமாவை ரவுண் இல்லத்தில் சந்திக்க வேணும், போற கையோட பொங்கலுக்கு புது உடுப்புகளயும் வாங்கலாம்" திட்டமிட்டான், விக்கி. "இன்றைக்கு நீங்க லீவா விக்கி 'ஒபீஸ்' போகல்லையா". ரஞ்சினி வழமை போலத்தான் கேட்டாள். "ஓம் நான் லீவுதான் போகல்ல ரஞ்சினி ஏன் கேக்கிறா"."ஏன் என்னாச்சு உங்களுக்கு ஏதாவது பிரச்சினையா" "எனக்கு ஒண்ணுமில்ல நீ பதற வேணாம் ரஞ்சினி". "இல்ல ஏதோ வித்தியாசமா இருக்கே அதுவும் லீவு போட்டு நிக்கிறிங்க அதுதான்". "நான் அன்று சொன்னன்தானே. நீதான் அத மறந்து போனா. இன்னைக்கு நாம ரவுணுக்கு போறம் பொங்கலுக்கு உடுப்பு எடுக்க". "நான்தான் சொன்னனே வரமாட்டன் என்று". "சரி உனக்கு என்னாச்சு, அத விடு. இனி நான் பொங்கலப் பற்றி கதைக்க மாட்டன்". முடிவாகச் சொல்லி விட்டான் விக்கி."விக்கிக்கு கோபம் வந்திட்டு போல வேற வினையே வேணாம்". அவள் மனம் சொன்னது. "சரி, சரி கோவத்த காட்ட வேணாம், நான் வாறன் வெளிக்கிடுங்க போவம்" கோவத்தக் வெளிக் காட்டாமல் குழைந்தாள் ரஞ்சினி. "ரஞ்சினி ரவுணுக்கு போறதோட எனக்கும் அங்க ஒரு அலுவல் கிடக்கு அதையும் பாக்க வேணும் போகும் போது சொல்றன் வெளிக்கிடு" .

"எப்ப இருந்தாலும் ரவுணுக்கு போக வேணும் பொங்கலுக்கும் புது உடுப்பு எடுக்கும் வேலையை முடித்தும் விடலாம்". "இன்னும் என்ன ரஞ்சினி வெளிக்கிடன் உனக்கு என்னதான் பிரச்சினை நீ அதையாவது சொல்லன்..". "எனக்கு எதுவுமில்லை, சரி வாறன், வாறன் இருங்க எதுக்கு சத்தம் போடுறீங்க". அடுத்த சில நிமிடங்களில் ரஞ்சினி ஆயத்தமானாள். அவன் எதிரில் வந்து நின்றாள். இருவரும் உந்துருளியில் புறப்பட்டனர். "நாம் புது உடுப்புகள் எடுப்பது என்றால் இரண்டு மூன்று கடைகளாவது ஏறி இறங்கத்தான் வேணும். நல்லதாக ஒரு கடைக்கு மட்டும் போனால் தேவையானத எடுக்கலாம்". "சரி றோட்டப் பார்த்து பைக்கை ஓட்டுங்க புறகு கதைக்கலாம் அங்க போய்க் கதைக்கலாம்". "நான் பாத்து கவனமாகத்தான் போறன். நீதான் எல்லாத்துக்கும் எடுத்தெறிஞ்சு கதைக்கிறா ". கதையோடு கதையாக உந்துருளி ரவுணை அண்மித்தும் விட்டது.

விக்கிக்கு உமாவின் ஞாபகம் வந்தது. "முதலில் உமா வீட்டுக்குப் போனால் என்ன" யோசித்தான் விக்கி. "ரஞ்சினி. நான் சொல்ல மறந்து போனன்.. எனக்கு தெரிந்த உமாவின் வீட்டுக்கு முதலில் போவோம் புறகு நேரமிருக்காது". அவள் இதை எதிர்பாக்கவில்லை எதிர்பாராத அதிர்ச்சிக்கு உள்ளானாள் ரஞ்சினி. "என்ன சொல்ல வாறீங்க விக்கி நீங்க ". "ஓ.. உனக்கு சொல்லாமல் விட்டுத்தன்". "ஆ.." வாயைப் பிளந்தாள் .அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. ரஞ்சினி அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. இவ்வளவு நாளாக தன்னை வாட்டி எடுத்த பிரச்சினை அல்லவா அது. "என்ன உமாவின் வீட்டுக்கா". "என்ன ரஞ்சினி உமாவை முன்னமே தெரியுமா ரஞ்சினி நானும் சொல்லவில்லை ".

"எனக்கு எப்படித் தெரியும். நீங்க இப்ப சொன்னதால் கேட்டேன்" சமாளித்தாள் ரஞ்சினி. "சரி ரவுணுக்குள் உமாவின் வீடு இருக்கு வா போவம்". "உங்களுக்கு உமாவுடன் நல்ல பழக்கமா". நான் ஏ.எல் படிக்கிற காலத்தில இருந்து நல்ல பழக்கம்தான். நீண்டகாலத் தொடர்பு விட்டுப் போயிருந்தது". "அப்ப ஏன் எனக்கு சொல்லவேயில்ல".

"நான் இப்பதானே சொன்னன் தொடர்பு விட்டுப் போய் இருந்தது". "ஓ, அப்படியா "அவளது மனதில் தீ பற்றி எரிந்தது. "பள்ளிக் காலத்து காதல் போலும்". அவள் சந்தேகம் மனதில் உறுதியாக நங்கூரமிட்டது. "ரஞ்சினி, எனக்கு இப்பதானே போன் நம்பர் கிடைச்சது. எனக்கு அன்று 'எஸ்.எம்.எஸ்' வந்த புறகுதான் நான் போன் பண்ணிக் கதைத்தன்". "ஓ. . போனில் கூட கதைச்சாச்சா நான்தான் எதுவும் தெரியாத முட்டாளாக இருந்திட்டன்". ரஞ்சினியின் மனம் ஓலமிட்டது. 'பொறுமை.. பொறுமை' என அவள் மனம் எச்சரித்தது. "நீங்கதான் எதுவும் சொல்லவில்லையே விக்கி". உனக்கு நான் எதை சொல்லாமல் விட்டன். இது என்ன பெரிய விசயமா. எனக்கு கூட சொல்ல ஞாபகம் வரல்ல".

(18 ஆம் பக்க பார்க்க)

விவேகானந்தம்
வெல்லாவெளி

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 104



திரு/திருமதி.செல்வி ........................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..................................................................

திகதி ........................ கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 104
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 104

### இடமிருந்து வலம்

1. நமது நாட்டுக்கு இது கிடைத்து 76 வருட நிறைவு அடுத்த ஆண்டு வருகின்றது.
7. பாவம் செய்தவர்
8. சாவி (குழம்பியுள்ளது)
10. ஆற்றல் அல்லது சக்தி
12 வேலை அல்லது சேவை
14. ஆண், அல்லது பெண் என்று சொல்லமுடியாத நபர்
15. வீட்டின் வளர்ப்புப் பிராணி
16. பழம்
18. ஒரு காட்டு மிருகம் (திரும்பியுள்ளது)
19. அழகு
21. ஒன்றுடன் உடன்படுவதைத் தெரிவிக்கும் சொல்
22. சூரிய அஸ்தமனத்தின் பின்னர் இது வருவது வழக்கம்
23. சுலபமாக இல்லாத நிலை என்பதால் குழம்பிவிட்டது.
24. பூமி

### மேலிருந்து கீழ்

1. குணவிசேடம் அல்லது குணவியல்பு
2. ஓர் இசைக்கருவி
3. ஒரு செயலைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கான வழிமுறைகளை வகுக்கும் நுட்பம்
4. மன்மதனின் மனைவி
5. சினம் (குழம்பியுள்ளது)
6. உயிரிழப்பு
9. உயரமான மரங்களிலும் வேகமாக ஏறக்கூடிய சிறிய பிராணி
11. சுவையான தின்பண்டம்.
13. தூக்கத்தில் காணும் காட்சி (குழம்பியுள்ளது)
15. ஓர் உறவுமுறை
17. சிறுபிள்ளைகளுக்குப் பிடித்தமான தித்திப்புச் சுவை (குழம்பியுள்ளது)
18. திருப்பித் தருவதாகக் கூறி பெற்றுக் கொள்ளும் பணம் (தலைகீழ்)
19. காடு (குழம்பியுள்ளது)
20. குதிரை
21. ஒரு தமிழ் மாதம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 103

### விடைகள்

**இடமிருந்துவலம்**

| | |
|---|---|
| 1. மணிமேகலை | 19. நாளை |
| 5. நிதி | 20. மாசி |
| 7. நண்பன் | 22. ஜோதி |
| 9. தாழ்மை | 24. மாற்றம் |
| 10. அனல் | 25. சவாரி |
| 13. உணவு | 27. குன்று |
| 15. புகை | 28. புதையல் |
| 17. தாடி | |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. மத்தாப்பு | 14. உளைச்சல் |
| 2. மேன்மை | 16. கைமாற்று |
| 3. கண் | 18. ஜோடி |
| 4. அபலை | 21. சிறகு |
| 6. சிசு | 23. திரிபு |
| 8. நனவு | 24. மான் |
| 11. நாணல் | 26. வாதை |
| 12. ஊதா | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 96

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எச்.எம்.எம். லெப்பே,** இல 38/1 வெலகெதர வீதி, பதுளை. | **எஸ். சிறிகிருஷ்ணராஜா** 8/25 செல்வநாயகம் வீதி, முதலாம் குறுக்கு, மட்டக்களப்பு. | **எம்.எம்.எம். நிஸாம்,** 176/14, ஒல்கொட் மாவத்தை, காலி. |

### பாராட்டு பெறுவோர்

1. **ஏ.சீ.ஸ்ரீதரன்,** யாழ்ப்பாணம்
2. **அஷாபா பாஸி,** வெலிகம
3. **கே.எப். மில்ஹானி** ஏறாவூர்
4. **இல்யாஸ் தாஸிம்,** பாணந்துறை
5. **கே. புண்ணியநேசன்,** காரைதீவு
6. **எஸ்.எச்.எம். ஜிப்ரி** கொழும்பு 10
7. **ஏ.எல்.பிர்தௌசியா,** இறக்காமம்
8. **எஸ். செல்வராஜா** பதுளை
9. **டி.நாகையா,** கல்முனை
10. **கே. உதயராஜன்,** கல்முனை

# முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

## லங்கா சதொச லிமிட்டடுக்கு E-BILLING முறைமையை வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/04/E-Billing System/2024

தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

லங்கா சதொச வாடிக்கையாளர்களுக்கு செயல்திறன் மிக்க சேவை ஒன்றை வழங்கும் நோக்கில் விற்பனையகங்களுக்கு E-BILLING முறைமைகளை நிறுவுவதற்கு தகுதியுடைய மற்றும் அனுபவம் பெற்ற மென்பொருள் நிறுவனங்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிட் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

இதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டு விலைமனுதாரர்கள் கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான குறித்த முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை **1,500.00 ரூபா (மீளளிக்கப்படாதது) கேள்விக் கட்டணத்தை செலுத்தி 2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி வரையான காலத்தில்** கீழுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகை பிரிவு (3ஆவது மாடி),**
**இல. 27, CWE செயலக கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஜனவரி 22 ஆம் திகதி** மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

முன்மொழிவுகளை **2024 பெப்ரவரி 06 ஆம் திகதி** பி.ப. 02.00 **அல்லது அதற்கு முன்னர்** பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/04/E-Billing System/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து முன்மொழிவுகளும் இலங்கையில் உள்ள உள்ளூரில் இயங்கும் **உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட ரூபா 228,000.00 தொகையின் நிபந்தனையற்ற விலைமனு பிணை (மீளளிக்கப்படும்)** ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2024 பெப்ரவரி 06 ஆம் திகதி** பி.ப. 02.00 இற்கு நிறைவடைவதோடு அதன் பின் விலைமனுதாரர்கள் முன்னிலையில் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.

ஏதேனும் தெளிவை பெற, அழைக்கவும்,
திரு அனுஷ்க - 070 3611459

இந்தக் கேள்வி/ ஒப்பந்தம் தொடர்பில் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** எடுக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# Ceylon German Technical Training Institute

Ministry of Education
Skills Development, Vocational Education, Research and Innovation Division

## Renewable Energy Technology
## NVQ Level 4 & 5 Courses
### Industry Collaboration Training Programme

Applications are invited from qualified candidates who are interested in the following renewable and green energy technology courses conducted by the Ceylon German Technical Training Institute, Moratuwa.

### Key Training Areas

- Renewable Energy Technology (NVQ-5)
- Wind Power Technician (NVQ-4)
- Solar PV System Technician (NVQ-4)
- Applied Green Technology

### Related Technology Areas

According to the local and global industry requests with full hands-on experience in projects-based training. Applied Integrated Mechatronics Systems to develop Green Knowledge and Skills, Innovations, Research & Development with collaborative industries.

- **Delivery Time** : Weekdays from 07:30 to 15:30 hrs.
- **Time Duration** : 4 Years Training - 2 Years of Institutional Training
  - 2 Years of Relevant Industrial Training
- **Age Limit** : Between 16 and 22 Years
- **Eligibility** : Successfully completed G.C.E (O/L) (including Mathematics, Language with 6 Subjects in one attempt)

### APPLICATION FORM

Scan the QR code to get the course details, fees and online application. Submit the completed online application. The closing date is January 31, 2024.

Manager - Administration and Human Resources
Ceylon German Technical Training Institute,
No. 582, Galle Road, Moratuwa.
Tel : 0112605625, 0112605535, Fax : 0112632391 Email : cgtti@sltnet.lk Web: www.cgtti.lk

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

National Lotteries Board — செவ்வாய் 2024.01.11 — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5356 — ரூ. 30,535,016.00
K — 4 5 5 4 9 2

3598 — 2024.01.11 — ரூ. 61,372,785.44
Q — 37 62 71 79 — Q — 35754

Mega Power — 1704 — 2024.01.11 — 75890 — ரூ. 420,330,346.00
K — 13 — 19 37 79 80
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

VIP — 2024.01.11 — 0182
L — L — 5 5 3 5 9 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 23,083,705.64

ராசி சுப மஙக — 2024.01.11 — 665 — ரூ. 3,613,844.32
கும்பம் — 25 45 55 61 — 45680 — 14

தன நிதானய — 1386 — 2024.01.11 — ரூ. 129,490,873.76
E — 05 42 67 71 — E — 76167

## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## சர்வதேச போட்டிரீதியிலான விலைக்கோரலுக்கான அழைப்பு

### 01/05/2024 முதல் 30/04/2025 வரையான காலகட்டத்தில் 30% கட்டாய மீள்காப்புறுதித் தடையை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகை

1. தலைவர், நிலையான அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, (இனிமேல் SCAPC என அழைக்கப்படுகிறது) தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சார்பாக (இனிமேல் NITF என அழைக்கப்படுகிறது) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு 01/05/2024 முதல் 30/04/2025 வரையிலான 30% கட்டாய மீள்காப்புறுதி அமர்வை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகைக்காக தகுதியான சர்வதேச மீள்காப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தகுதியான தரகர்களிடமிருந்து விலைமனுக்களை அழைக்கின்றது

2. NITF 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தால் நிறுவப்பட்டது, பின்னர் 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டு உள்ளூர் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கட்டாய மீள்காப்பீட்டு அமர்வுகளை ஏற்க NITF அதிகாரம் பெற்றது. அதன் பிரகாரம் இலங்கையில் பொது காப்புறுதி வணிகத்தை பரிவர்த்தனை செய்யும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் தங்கள் மீள்காப்புறுதி அமர்வுகளில் 30% ஐ NITF இற்கு ஒப்படைப்பது கட்டாயமாகும். 30% கட்டாய மீள்காப்புறுதி திட்டத்திலிருந்து எழும் அதன் சாத்தியமான பொறுப்புகளை நிர்வகிப்பதற்காக, NITF 01/05/2024 முதல் 30/04/2025 வரையிலான காலத்திற்கு பின்னடைவு திட்டத்தை பெற முடிவு செய்துள்ளது.

3. ஆர்வமுள்ள தரப்பினர், 2024 பெப்ரவரி 22ஆம் திகதி வரை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவு மூலம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமான 100,000.00 இலங்கை ரூபா அல்லது 305 USD செலுத்திய பின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தியதன் பின் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், 4வது மாடி, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரியிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை 09:00 மணித்தியாலம் முதல் 15:00 மணித்தியாலம் வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை NITF (www.nitf.lk), நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு (www.treasury.gov.lk), அல்லது வெளிநாட்டு விவகார அமைச்சு (www.mfa.gov.lk) என்பவற்றின் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய வங்கி வரைவைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | இல. ரூபாவுக்கான வங்கிக் கணக்கு | **USD** க்கான வங்கிக் கணக்கு |
|---|---|---|
| வங்கியின் பெயர் | மக்கள் வங்கி | மக்கள் வங்கி |
| கிளை | குயீன்ஸ் கிளை | குயீன்ஸ் கிளை |
| கணக்கின் பெயர் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் |
| கணக்கிலக்கம் | 033-1-001-0-0000061 | 033-4-021-4-2467951 |
| **Swift Code** | PSBKLKLX | PSBKLKLX |

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ‘‘01/05/2024 முதல் 30/04/2025 வரையிலான 30% கட்டாய மீள்காப்புறுதி அமர்வை உள்ளடக்கிய பின்வாங்கல் திட்டத்தின் பெறுகை - **NITF/ADM/PRO/SCAPC/2023/03**” எனக் குறிப்பிட்டு 2024 பெப்ரவரி 26ஆம் திகதி 13:00 மணித்தியாலம் இலங்கையின் நிலையான நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

5. சர்வதேச மீள்காப்பீட்டாளர்கள் / சர்வதேச மீள்காப்பீட்டுத் தரகர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தரகர்கள் அல்லது உத்தியோகபூர்வ அங்கீகாரக் கடிதத்துடனான அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் சமுகத்துடன் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 4ஆம் தளத்திலுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கூட்டத்தில் விலைமனுதாரர்களின் பெயர்கள் மற்றும் விலைகளை NITF அறிவிக்கும்.

6. கடித மொழிமூலம் ஆங்கிலமாகும். எவ்வாறாயினும் மேற்படி ஆவணங்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதேனும் மொழியில் இருந்தால் அத்தகைய ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பும் இருத்தல் வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு இறுதியாகக் கருதப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தகவல்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

7. அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொறு வர்த்தக வணிக வங்கியிலிருந்தோ அல்லது வேறொரு நாட்டில் உள்ள வங்கியிலிருந்தோ பெறப்பட்ட விலைக்கோரல் பிணை முறியை வழங்குதல் வேண்டும். ஆனால் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியால் உறுதி செய்யப்பட்ட உத்தரவாதமாக இருக்க வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி 11,500,000.00 ரூபா அல்லது 35,385 USD ஆக இருத்தல் வேண்டும். 2024 ஆகஸ்ட் 05ஆம் திகதி வரையில் இலங்கை, கொழும்பு 02, இல. 95, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு முகவரியிடப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட NITF வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

8. ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் நபர்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய நபர் : முகாமையாளர் - மீள்காப்புறுதி மற்றும் SRCC & T
நேரடி தொலைபேசி : +94 112026699
தொலைநகல் : +94 114700988
மின்னஞ்சல் : pro_reinsurance@nitf.lk

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02, இலங்கை.**



SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

SriLankan Airlines

## கொள்முதல் அறிவிப்பு
## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்

குறிப்பு எண்: 202332469
தூய்மைப்படுத்தல், கழிவறை சுத்தம் செய்தல், பூந்தோட்டம் பேணுதல் போன்றவற்றின் விலைமனுக்கோரலுக்கான அழைப்பு

ஏல விற்பனைக்கான படிவத்தினை பதிவிறக்கம் செய்ய:
https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices 2024 ஜனவரி 14ஆம் திகதி முதல்.

ஏல விற்பனைக்கு முன்னரான மெய்நிகர் கூட்டம் 2024 ஜனவரி 23ஆம் திகதி இலங்கை நேரப்படி 10.00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (GMT +5:30 Time Zone).

2024 பெப்ரவரி 06ஆம் திகதி இலங்கை நேரப்படி 10.00 மணிக்கு முன்னர் உங்கள் விலை மனுக்கோரல்களை genproctenders@srilankan.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக சமர்ப்பிக்கவும். (GMT +5:30 Time Zone)

**நிறுவன கொள்முதல் குழுவின் தலைவர்**
**ஸ்ரீலங்கன் எயார்லையின்ஸ் இற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK

Funded by
The European Union

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

### விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - (ASMP)

## விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் – (ASMP)

### ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்
### கொள்கை ஆய்வு கற்கைகளுக்காக ஆய்வு அணிகளை வாடகைக்கு அமர்த்துதல்

உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) மற்றும் ஐரோப்பிய யூனியன் இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மானியமொன்றினாலும் நிதியிடப்பட்ட கடன் வசதியினாலும் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சினாலும் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டமானது அமுலாக்கப்படுகின்றது. பின்வரும் கொள்கை ஆய்வு கற்கைகளை கையேற்பதற்காக தகைமையுள்ள தனியார் துறை நிறுவனங்கள் அல்லது பதிவு பெற்ற தொழில்சார் சங்கங்களிடமிருந்து உசாத்துணையாளர்களின் அணிகளை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை பாவிப்பதற்காக ASMP ஆனது உத்தேசிக்கின்றது.

1. பயிர்ச்செய்கை உற்பத்தியாளர் நிறுவனங்கள் (பயிர்ச்செய்கை கம்பனி) மற்றும் திட்டவட்டமான பயிர்ச்செய்கை துறைகளுக்காக பொருத்தமான பங்குடமை ஒப்பந்த மாதிரிகளை அடையாளம் காண்பதற்கான கொள்கை ஆராய்ச்சி ஆய்வு (பழங்கள், மரக்கறிகள், பருப்பு வகைகள்/எண்ணெய் பயிர்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள்).

   பெறுகை இல.: LK-MOA-PMU-397457-CS-CQS

2. ஏற்றுமதி சந்தைகளுக்கு பழங்கள், மரக்கறிகள் மற்றும் ஏனைய உயர் பெறுமதி பயிர்ச்செய்கை துறைகளுக்கான முக்கிய பயிர்களின் பெறுமதி சங்கிலிகளை மேம்படுத்துவதற்கான கொள்கை ஆராய்ச்சி.

   பெறுகை இல.: LK-MOA-PMU-397458-CS-CQS

3. ASMP இன் கீழ் தற்போது நிலவும் தொழில்நுட்பவியல்களுக்கு மாறாக பழங்கள் மற்றம் மரக்கறி பயிர்ச்செய்கை துறைகளுக்காக சர்வதேச சேவை வழங்குநரினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பவியல்களின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மதிப்பீடு.

   பெறுகை இல.: LK-MOA-PMU-397461-CS-CQS

4. சிறு அளவிலான துறைகளின் பயிர்ச்செய்கை உற்பத்தி நிறுவனங்கள்.: பயிர்ச்செய்கை கம்பனிகளுக்காக பொருத்தமான நிதியிடல் அனுசரணை முறையை (முறைகளை) அடையாளம் காண்பதற்கான கொள்கை ஆராய்ச்சி.

   பெறுகை இல.: LK-MOA-PMU-397462-CS-CQs

   தெரிவு செய்யப்பட்ட உசாத்துணையாளர் அணிகள் வடிவமைத்தல், திட்டமிடல் மற்றும் ஆய்வுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பெறுபேறுகளை பரிந்துரைகளுடன் ASMP இற்கும் கமத்தொழில் அமைச்சு மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கும் சமர்ப்பிக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றன.

2. உசாத்துணை நிறுவனத்தின் தகைமை மற்றும் அனுபவம்: உசாத்துணை நிறுவனங்கள் / தொழில்சார் அமைப்புக்கள் சிறந்த முறையில் இலங்கையில் தாபிக்கப்பட்ட நிறுவனங்களாகவும் நிகரான உசாத்துணை பணியில் 10 வருட அனுபவத்தையும் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

   ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோளானது பதிவு செய்யப்பட்ட திகதி, கம்பனியின் பணி அனுபவம் கடந்த 5 வருடங்களுக்கான வருடாந்த நிதிப்புரள்வு, கடந்த 5 வருடங்களில் கையேற்கப்பட்ட நிகரான ஒதுக்கீட்டுப் பணிகள் ஆகியவற்றை சமர்ப்பிப்பதன் மூலம் அவர்கள் இந்த செயற்பணியை பாரமேற்பதற்கு தகைமையுடையவர்களென குறித்துரைக்கப்படுவதுடன் உசாத்துணையாளர்களின் தகைமை மற்றும் அனுபவம் ஆகியவற்றையும் குறித்துரைத்தல் வேண்டும்.

3. தெரிவு செய்யும் தகவுத்திறன்:
   (i) நிறுவனம் / கம்பனியின் அனுபவம்.
   (ii) நிகரான உசாத்துணைகளை பாரமேற்ற அனுபவம்
   (iii) நியதிக் குறிப்புக்களின் பிரகாரம் உசாத்துணையாளர்களின் தகைமை மற்றும் அனுபவம் (முக்கிய பதவி அலுவலர்கள்) அத்துடன் சேர்க்கப்பட்ட மேலதிக நிபுணர்கள்.
   (iv) உலக வங்கி / ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது ஏதாவது நன்கொடையாளர் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாக பணி ஒதுக்கீடுகளில் ஈடுபட்ட அனுபவம்.

4. தகுதித்தன்மை/நலன்களின் மோதல் எதிர்பார்க்கப்படும் உசாத்துணை நிறுவனங்கள் 2015 ஏப்ரலில் உலக வங்கியினால் வழங்கப்பட்ட IBRD Loans and IDA Credits and Grants ஆகியவற்றின் கீழ் உசாத்துணையாளர்களை தெரிவு செய்தலுக்கான வழிகாட்டியில் அமைக்கப்பட்டுள்ள பொதுவான ஏற்பாடுகளை பார்வையிட்டு அவைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

5. தெரிவு செய்தல் முறை:

   ஆர்வத்தை வெளிப்படுத்தும் வேண்டுகோள்கள் செயற்றிட்டத்தினால் நியமிக்கப்பட்ட உசாத்துணை பெறுகைக் குழுவினால் (PCPC) நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட உசாத்துணை அணிகள் தெரிவு செய்தலுக்காக பரிசீலனை செய்யப்படுவதற்காக முழுமையான தொழில்நுட்ப முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். உசாத்துணை அணிகள் பொருத்தமான உசாத்துணை அணியை தெரிவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு/PCPC இற்கு முன்னிலைப்படுத்தலொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

   மேலேயுள்ள 4 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உசாத்துணையாளர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டியில் அமைக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு அமைவாக உசாத்துணை அணியொன்று தெரிவு செய்யப்படும்.

6. ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைத்தலை சமர்ப்பித்தல் உசாத்துணை சேவையை வழங்குவதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தை குறித்துரைக்குமாறு தகைமையுள்ள தனியார் துறை அமைப்புக்கள் அல்லது பதிவு பெற்ற தொழில்சார் சங்கங்களை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் PCPC ஆனது இப்போது அழைக்கின்றது. ஆர்வமுள்ள உசாத்துணை நிறுவனங்கள் ASMP இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நியதிக்குறிப்பின் https://www.asmp.lk/advertisements என்பதனை பார்க்கவும். இது தொடர்பான எந்தவொரு தெளிவுறுத்தல்களையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மின்னஞ்சல்கள் வழியாக தொடர்பு கொள்ளவும்.

   ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்கள் முத்திரையிடப்பட்ட உறையில் 2024 ஜனவரி 25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட பணி ஒதுக்கீட்டின் பெயரான "EOI for Policy Research Project on (insert relevant procurement number)" என்பதனைக் குறிப்பிடவும். விளம்பரத்தில் வழங்கப்பட்டுள்ளவாறு ஒரு உசாத்துணை கம்பனி/ தொழில்சார் சங்கமானது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கொள்கை ஆய்வு திட்டத்திற்கான முன்மொழிவை சமர்ப்பிக்கலாம்.

**தலைவர்,**
**செயற்றிட்ட உசாத்துணை பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டத் கைத்தொழில்கள் அமைச்சு,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**மின்னஞ்சல்: agriculturesectormodernizationproject@hotmail.com / policyspecialistasmp@hotmail.com**
**தொலைபேசி: 0094 112877550 – நீடிப்பு: 202- Ms Asoka Jayakody Ext 211 –Mr. W. Dhanachandra**

29.01.2024

---

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு
### இலங்கைத் துறைமுக அதிகார சபை

### கொழும்பு 01 இலங்கைத் துறைமுக அதிகார சபை இடப்பரப்பிலுள்ள வேலைத்தள கட்டிடத்திற்கு வீதி மற்றும் முற்றவெளி நடைபாதை வேலைகள்

## முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்

1. 2023 டிசம்பர் 17 மற்றும் 20ஆம் திகதிகளில் பிரசுரமான பின்வரும் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக இதுஅச தலைவரின் சார்பாக இலங்கை துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| செயற்றிட்டத்தின் பெயர் | முன்னைய முடிவுறுத்தல் திகதி | புதிய முடிவுறுத்தல் திகதி |
|---|---|---|
| கொழும்பு 01 இலங்கைத் துறைமுக அதிகார சபை இடப்பரப்பிலுள்ள வேலைத்தள கட்டிடத்திற்கு வீதி மற்றும் முற்றவெளி நடைபாதை வேலைகள் ஒப்பந்த இலக்கம்: SLPA/DD/COL/WS/01 | 2024 ஜனவரி 16ஆம் திகதி | 2024 ஜனவரி 30ஆம் திகதி |

2. சகல விலைமனுக்களுடனும் 950,000.00 ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. விலைமனுக்களை 2024-01-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நகல் பிரதிகள் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் அவை உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

4. ஏதேனும் மேலதிக தகவல்களை பின்வரும் முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளர் (அபிவிருத்தி) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. +94(0) 112325049 தொலைநகல் இல. +94(0) 112424543)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

---

## ரணவிரு எபரல்
## இலங்கை இராணுவ ஆடை தொழிற்சாலை
### 2024/2025ஆம் ஆண்டிற்கு விற்பனைதாரர்களை பதிவு செய்வதற்கான விலைமனுக்கோரல்

1. 2024/2025 ரணவிரு எபரல் ஆடை தொழிற்சாலைக்கு தேவையான பொருட்கள்/வேலைகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக விற்பனைதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி வகை | பொருட்கள் |
|---|---|
| i. | உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பொத்தான், சில்வர் நிற மற்றும் ப்லாஸ்டிக் ஸ்னாப் பொத்தான் (Silver colour & Plastic Snap Button), பி(f)யூசிங், சிப்பர், அய்லட், சில்வர் ஹுக், காகித ஊசிகள் (Paper pin), ரிப்பன், மெயின் லேபில், சய்ஸ் லேபில், வெல்க்ரோ, வெல்போன், டெல்க் ஷீட் (Talc sheet), லெமினேட் செய்யப்பட்ட ரெக்ஸீன் டேப், கொக்கிநாடா (Buckle Tape), போலிஷ் செய்யப்பட்ட கொக்கி, இலாஸ்டிக், உருளை மற்றும் தட்டை வடிவிலான இலாஸ்டிக், ட்வில் டேப், வெயிஸ்ட் கோட், கோட் ஸ்டொபர், கொலர் மற்றும் ஸ்லீவ் பிராண்ட்ஸ் சட்டை குப(f)னர் (Shirt Kufner) |
| ii. | நெய்த மற்றும் நெய்யப்படாத துணி வகைகள் ட்வில், ட்ரைகோட், சிங்கள் ஜர்ஸி, வெட் லுக், போலோ நிட்டட் (PK), பொலியெஸ்டர், பருத்தி, பாக்கெட் துணி (Pocketing Fabric), பிஜாமா துணி, விஸ்கோஸ், பொப்லின், நுளம்பு வலை தைப்பதற்கான துணி, பொலிப்ரொப்பலைன் துணி (Polyproperline), பஜரோ மர்ஷிலா, கெஸ்பர் மற்றும் ஆகியன. |
| iii. | ரெக்ஸீன்/டயரி துணி (Rexene Materials/Diary Cloth), ஸ்பொன்ச் ஷீட், Poncho Cape Material ஆகியன. |
| iv. | நூல் வகைகள். |
| v. | பொதி செய்வதற்கு தேவையான பொருட்கள் பொலி பேக், கம் டேப், செலோ டேப், லேபில் ரோல் (Label Rolls). |
| vi. | ஊசி மற்றும் ஏனைய தேவைகள் (Marker paper, Plotter paper, Bristol board, Box board, Screen printing Ink, Ink Roll, Plotter machine Ink, white Oil etc.) |
| vii. | தொழில்சார் தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் வாடகைக்கு எடுத்தல் |
| viii. | தைக்கப்பட்ட ஆடைகளுக்கான எம்பிராய்டரி மற்றும் அச்சிடல் சேவைகள். |
| ix. | அலுவலக எழுதுகருவிகள். |
| x. | ஆடை உற்பத்தித்துறைசார் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள். |
| xi. | பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமான பணிகளுக்கான கட்டுமான மற்றும் ஹாட்வெயார் உபகரணங்கள் (Hardware items). |
| xii. | மின் சாதனங்கள்/ மின் உபகரணங்கள் மற்றும் மின் பாகங்கள் (Electrical Items/ Goods & Electrical Equipments/ Parts). |
| xiii. | கட்டுமான பணிகளுக்கான மரக்கட்டை/பலகை வகைகள் (Timber items). |
| xiv. | அலுமினிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் அலுமினிய உற்பத்திசார் சேவைகள் (Aluminium Partition). |
| xv. | அச்சிடல் சேவை (புத்தகங்கள், படிவங்கள் மற்றும் ஸ்டிக்கர் ஆகியன). |
| xvi. | ஏசி இயந்திரங்கள், கணணி மற்றும் கணணி உதிரிப்பாகங்கள், புகைப்பட நகல்/அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (A/C Machines/Computers/Photocopy Machines/Printers & Parts, Toners, Plotter Machine Ink & Accessories). |
| xvii. | அனைத்து வகையான சேவைகள் மற்றும் இயந்திரங்கள் பழுதுபார்க்கும் வேலைகள் (Industrial Sewing Machines, A/C Machines , Computers, Photocopy Machines, Printers, Air Compressor, Generator) |
| xviii. | சலவை திரவியங்கள் (Detergents, Air Freshner, Dettol, Glass Cleaner, Tile Cleaner etc). |
| xiv. | நீச்சல் குளம் சார் அனைத்து தேவைப்பாடுகள் (உபகரணங்கள் மற்றும் இரசாயன திரவியங்கள்). |
| xv. | முக கவசம்/பாதுகாப்புக் கவச ஆடை உற்பத்திக்கு தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் இரசாயன திரவியங்கள் (கம்பி, பொலிதீன்,கிருமி நாசினி வேதிப்பொருட்கள் ஆகியன). |
| xvi. | அனைத்து சங்கீத உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள். |

2. அனைத்து விண்ணப்பதாரிகளும் 2024ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு அமைச்சில் அல்லது ரெயின்போ/ மஞ்சல் பக்கங்களில் (Rainbow Pages or Yellow Pages) அல்லது உள்நாட்டு வியாபார நிறுவனமாக அல்லது கம்பனியாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. அனைத்து விண்ணப்பதாரிகளும் பொருட்கள்/வேலைகள் மற்றும் சேவைகளுக்கான விலைப் பெறுமதியினை இலங்கை ரூபாயில் குறிப்பிடல் வேண்டும். அக் கொடுப்பனவுகள் ரணவிரு எபரல் நிறுவனத்தால் செலுத்தப்படும்.
4. விலைமனுப் பத்திரத்தின் மொத்தப்பெறுமதி ரூபாய் 2,000,000.00 க்கு மேற்படுமானால், பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடக்கப்படாத பெறுமதியில் 1% வங்கிப் பிணைப் பத்திரம் (Bid bond) வழங்கப்படல் வேண்டும். மற்றும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யும் போது உள்நாட்டு உற்பத்தியாளர் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும்.
5. விண்ணப்பதாரிகள் தமது நிறுவனம் பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின், பெ.சே.வரி தொடர்பில் நடப்பு ஆண்டிற்கு செல்லுபடியாகும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணம் (VAT Active Letter) மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களால் குறிப்பிடப்படும் விலைப் பெறுமதிகள் 2024.06.01ஆம் திகதி முதல் 2025.05.31ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் பொருட்கள்/சேவைகளுக்காக செல்லுபடியாவதுடன், இலங்கை இராணுவத்தால் வழங்கப்படும் விவரக் குறிப்புகளுக்கமைவாக மாதிரிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் 2024.02.27ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப 8.30 முதல் பி.ப 4.30 மணி வரை பின்வரும் முகவரியில் விநியோகிக்கப்படும். கணக்காளர், ரணவிரு எபரல், டேவிட் மெரிக் பீரிஸ் மாவத்தை, கிரிந்திவெல வீதி, யக்கல. (மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு உருப்படிகளுக்கும் பதிவுக் கட்டணமாக ரூபாய் 1,500.00 அறவிடப்படும்)
8. தபால் மூலம் விண்ணப்பிப்போர் "Account Payee Only" என வரையப்பட்ட காசோலையை Ranaviru Apparel பெயரிடப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டு உரிய வைப்புச் சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.
9. விண்ணப்பங்கள் 2024.02.28ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன் பூர்த்தி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி/பதிலி மூலம் ரணவிரு எபரல், டேவிட் மெரிக் பீரிஸ் மாவத்தை, கிரிந்திவெல வீதி, யக்கல எனும் முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காலம் தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
10. விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு முன்னர் மதிப்பீடு செய்யப்படும்.
11. மேலதிக தகவல்களுக்கு: கொள்முதல் செயலாளர் ரணவிரு எபரல், டேவிட் மெரிக் பீரிஸ் மாவத்தை, கிரிந்திவெல வீதி, யக்கல. தொ.பே.இல : 033 2234430, 033 2224031 மின்னஞ்சல் -rvapl.purchasing@gmail.com/ rvapltender@gmail.com, இணையதளம்: www.army.lk/ranaviruapparel ஐ தொடர்பு கொள்ளவும்.

**Commandant**
**Ranaviru Apparel**
**David Merick Peiris Mawatha**
**Kirindiwela Road, Yakkala.**

---

(16 ஆம் பக்க தொடர்ச்சி)

"கொஞ்சம் கூட விக்கி குற்ற உணர்வு கூட இல்லாமல் கதைக்கிறானே ஏன்". ஆச்சரியமாக இருந்து அவளுக்கு. "உமாவின் வீடு வந்து விட்டது." சொல்லிய படி தன் உந்துருளியை உரிமையோடு திறந்திருந்த இரும்பு கேற் ஊடாக உள்ளே விட்டான். ரஞ்சினிக்கு விக்கியின் பேச்சும் நடத்தையும் ஆச்சரியத்தையே கொடுத்தன. என்னிடம் இவர் இவ்வளவு சர்வசாதாரணமாக இந்த விடயத்தை கூறுகிறார். ரஞ்சினி மனதில் நினைத்து கலவரப்பட்டாள்.

வீட்டுக்கு வெளியில் எவரையும் காணவில்லை."உமா, உமா.."சத்தமிட்டு விக்கி அழைத்தான். ரஞ்சினிக்கு எதுவும் புரியவில்லை உமாவின் அம்மாதான் குசினிப் பக்கமிருந்து வந்தாள். "தம்பி விக்கி வாங்க. எங்கள மறந்து போச்சா". "அப்படி இல்லம்மா, உமா 'யூக்கே' போன பின்பு நானும் வரல்ல.. இவதான் என் 'வைவ்"ரஞ்சனி. எங்கட உறவு எதுவும் ரஞ்சினிக்கு தெரியாது". "இருங்க மகள், உமா வரட்டும்" வாசலில் கார் வந்து நின்றது. காரில் இருந்து இறங்கிய உமா வீட்டில் விக்கியும் ரஞ்சினியும் அம்மாவுடன் கதைத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து "விக்கி " வாஞ்சையுடன் அழைத்தபடி வந்த உமாவை விக்கி அவர்கள் முன் கட்டி அணைத்து தழுவிக் கொண்டான். "ரஞ்சனி இவன்தான் உமாசங்கர். 'உமா'என்று அழைத்துப் பழகிப் போனது எனக்கு". ரஞ்சினி நிலை குலைந்து போனாள்.

"கடவுளே என்னை நீ காப்பாற்றி விட்டாயப்பா. என்னை மன்னித்து விடு விக்கி. உங்கள, நான் சந்தேகப்பட்டு விட்டனே". மனதுக்குள் மன்றாடினாள். "விக்கியிடம் அமைதி காத்தது, நல்லதாக போய் விட்டது. நான் அவசரப்பட்டு சந்தேகத்தை கொட்டியிருந்தால் நம்பிக்கை அல்லவா உடைந்து போய் இருக்கும். குடும்ப வாழ்வில் பொறுமை, நிதானம், மிக முக்கியம்". புரிந்தது அவளுக்கு.

"எங்கள் இனிய காதல் வாழ்வு சிதைந்து போகாமல், விக்கியை மட்டமாக நினைக்காமல் என்னைக் காப்பாற்றியது என் பொறுமைதான்" ஓராயிரம் எண்ணங்கள் ஒரு நொடியில் மனதுக்குள் வந்து போனது ரஞ்சினிக்கு. "ரஞ்சினி என்ன, நீ திகைத்துப் போய் இருக்கிறாய்". "உண்மைதான்.. நான் திகைத்துத்தான் போனன் விக்கி. உங்களுக்குள் இவ்வளவு அன்பா" கேட்க நினைத்தாள். அவள் கேட்கவில்லை. "சொரி.. ரஞ்சனி உமா வெளியில போய் நீண்ட காலமாக ஒரு தொடர்பும் இல்லாமல் போனது. நானே மறந்து போனன். அதுதான் நான் சொல்லல்ல. உமாவை நேரில் வந்து சந்திப்பம் என்று இருந்து விட்டன்". "சரி அதை விடுங்க ". "கண்மூடித்தனமாக நாம் சந்தேகிக்கிக்க கூடாது எதையும் மனம் விட்டுக் கதைத்தால் எந்தக் குழப்பமும் வரவே வராது. என் சந்தேகம் என்னை சாகடிக்கப் பாத்தது". மனதில் தெளிவு பிறந்தது ரஞ்சினிக்கு. உமா வீட்டில் தடபுடலான அன்றைய மதிய உணவு அவர்களை மகிழ்வித்தது. "விக்கி இந்த பொதி உங்களுக்குத்தான் வைத்து இருக்கன். உங்களுக்கான புதிய ஆடைகள் இதில் இருக்கு. பிள்ளைகள் இருவருக்கும் அளவுகள் கூட சரியாக இருக்கும். கூடவே 'சுவீட்ஸ்' பார்சல் இதில் இருக்கு. மாமா தந்ததாக சொல்லு விக்கி" பொதியை வழங்கி விக்கியை வழியனுப்பி வைத்தான் உமா சங்கர். "அம்மா நீங்க இருவரும் தைப்பொங்கலுக்கு கட்டாயம் எங்கள் வீட்டுக்கு வரவேணும்". மகிழ்வோடு ரஞ்சினியும் விக்கியும் அழைப்பு விடுத்தனர். "நீங்கள் அழைக்காவிட்டாலும் எங்கள் பொங்கல் கொண்டாட்டம் இந்த வருடம் உங்களது வீட்டில்தான்". உமா சொல்லி மகிழ்ந்தான்."சரி அம்மா, உமா, நாங்க வாறம்" மகிழ்வுடன் விக்கி தம்பதியர் விடை பெற்றனர்." இனி எதுக்கு புடவைக் கடைக்கு நாம போகணும் வாங்க வீட்டுக்கே போவம்". மகிழ்ச்சி மேலிட ரஞ்சினி விக்கியிடம் சொன்னாள்." அப்பாடா, இப்பதான் நீ நீயாக இருக்கிறா ரஞ்சினி உனக்கு என்ன நடந்தது. எனக்குத்தான் எதுவும் புரியல்ல". ரஞ்சினியின் சிரிப்பில் கரைந்து போனான் விக்கி.

## ஹவுத்தில் கிளச்சியாளர்

*(12 ஆம் பக்கத் தொடர்)*

மீளவும் இரு தசாப்தங்கள் அந்த நாடுகளை கட்டியெழுப்புவதற்குத் தேவைப்படும். அதன் பின்னர் இத்தகைய தாக்குதல்கள் நிகழும் அதில் மீளவும் கட்டியெழுப்பட்ட அனைத்தும் அழித்தொழிக்கப்படும். இதுவே மேற்காசிய வரலாறாகும். இதுவே மேற்கு, இஸ்ரேல் கூட்டுத்திட்டமிடலாகும். இதற்கு மேற்காசியத் தலைவர்களும் ஆட்சியாளர்களும் வழிவகுத்து செயல்படுகின்றனர். மேற்கின் இராஜதந்திரத்திற்கு முன்னே மேற்காசியத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் அடிமைகளாகவே உள்ளனர். மேற்காசியாவின் தரைத்தோற்றம் மேற்குலகத்தை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கான நிலம் என்பதை சரிவர எந்த மேற்காசிய அரசியல் திட்டமிடலும் இருக்கவில்லை. மூன்றாவது, 11.01.2024 சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இஸ்ரேலின் இனப் படுகொலைக்கு எதிராக தென்னாபிரிக்கா குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளது. விசாரணை தொடங்கப்படும் சந்தர்ப்பத்தில் மேற்குலகம் ஹவுத்திக் கிளர்ச்சிக் படைகளின் தாக்குதலுக்கு எதிரான போரைத் தொடங்கியுள்ளது. இது உலகளாவிய ரீதியில் இஸ்ரேலுக்கு எதிராக ஏற்பட்டுள்ள நிலையை கையாளும் தேவைப்பாடும் நோக்கமும் உள்ளது போல் தெரிகிறது. காரணம் இஸ்ரேல், ஹமாஸ் தாக்குதல் பரவலடையும் போது அதன் இஸ்ரேல் மீதான இனவழிப்புக்கான நியாயப்பாட்டுக்கான முக்கியத்துவத்தை குறைத்துவிடும் என மேற்கு கருத வாய்ப்புள்ளது. இதனை ஒரு சர்வதேச பிரச்சினையாக முன்னெடுக்க முயலும் போக்கை இத் தாக்குதலுக்கூடாக விருத்தி செய்ய முடியும். அத்தகைய போக்கிலேயே தாக்குதலும் அதற்கான உத்திகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன.

எனவே ஹவுத்தி கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிரான தாக்குதலை பல நோக்கங்களை கொண்டு மேற்குலகம் கொண்டு தொடக்கியுள்ளதாகவே தெரிகிறது. மேற்குலகத்திற்கு எதிரான அணியினது அணுகுமுறைகள் தற்போதுவரை பலவீனமாகவே தெரிகின்றன. குறிப்பாக ரஷ்யா, சீனா என்பன மேற்குலகம் மீதான போரை அனுசரிப்பது போன்றே தெரிகிறது. காரணம் மேற்கு எதிர்நோக்கியுள்ள போர் அதன் பொருளாதாரத்தை சிதைப்பதுடன் கவனம் முழுவதும் மேற்காசியாவில் குவிக்கப்பட்ட போது தமது இருப்பையும் பொருளாதாரத்தையும் கட்டமைக்க முடியுமென கருதுகின்றன. அது மட்டுமன்றி போர்கள் எப்போதும் எல்லாத்தரப்புக்கும் அழிவை ஏற்படுத்தக் கூடியது. அதன்விதியிலேயே கீழைத்தேச சக்திகளது நகர்வுகள் அமைந்துள்ளன. ஹமாஸ், இஸ்ரேல் போர் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இலாபகரமானது என்ற அடிப்படையில் நகர்கிறது. ஆனால் மேற்குலகம் இத்தகைய போரை கூட்டாக எதிர்கொள்கிறதே அன்றி அமெரிக்காவோ பிரிட்டனோ தனித்து எதிர்கொள்ளவில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும். இரண்டாம் உலகப் போருக்கு பின்னர், தனித்து ஒரு போரை அமெரிக்கா நிகழ்த்தவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். வேண்டுமாயின் தாக்குதல்களை தனித்து மேற்கொண்டிருக்கலாம். ஆனால் போர்கள் எதனையும் தனித்து மேற்கொள்ளவில்லை என்பது முக்கியமான போர் அரசியலாகும்.

---

## தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
## கைத்தொழில் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**விலைக்கோரலின் பெயர்: இரத்தினபுரி - பெல்மடுல்ல சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சிக்கான நிகழ்வு முகாமைத்துவ சேவை - 2024**

**விலைக்கோரல் இல. NGJA/18/16/2024**

1. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் இரத்தினபுரி - பெல்மடுல்ல - ''கிரேன்ட் சில்வர் ரே'' ஹோட்டல் இடப்பரப்பில் 2024 மார்ச் மாதம் 30, 31 மற்றும் ஏப்ரல் 01ஆம் திகதிகளில் நடாத்தப்படுவதற்குள்ள சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சிக்கு நிகழ்வு முகாமைத்துவ சேவையை வழங்குவதற்காக தகைமைவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. சேவையின் நோக்கம் தொடர்பான முழுமையான விபரங்கள் விலைக்கோரல் ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | விலைக்கோரல் பிணை முறி | செல்லுபடிக் காலம் |
|---|---|---|
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சிக்கான நிகழ்வு முகாமைத்துவ சேவை | ரூபா 300,000.00 | 2024-02-29 |
| விலைமனுக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இறுதி நாள் | 2024-01-29ஆம் திகதி | |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் (திகதி/நேரம்/இடம்) | 2024-01-30ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு தே.இ.ஆ.அதிகாரசபை - வழங்கல் பிரிவு | |

3. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB) என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகைமை மற்றும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள சகல விலைமனுதாரர்களும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் (GOSL) பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் கலந்துகொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-16ஆம் திகதி முதல் 2024-01-28ஆம் திகதி வரையில் கொழும்பு-03, இல. 12, அல்பிரட் ஹவுஸ் கார்டன், மெக்சன்ஸ் டவர், 04ஆம் மாடி, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, வழங்கல் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து வேலை நாட்களில் வேலை நேரங்களில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி/தொலைநகல்: 2332197, மின்னஞ்சல்: supply@ngja.gov.lk
5. எழுத்துமூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 + SSCL 2.5% + VAT 18% தொகையை (மொத்தத் தொகை ரூபா 4,233.25) தொகையை 2024-01-16ஆம் திகதி முதல் 2024-01-29ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் செலுத்தியதன் பின் கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'', 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வழங்கல் பிரிவில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. மேற்கூறிய முகவரியிலுள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் 2024-01-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் இடம்பெறும்.
7. விலைமனுக்களை 2024-01-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, இல. 12, மெக்சன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-03, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, 4ஆம் மாடி வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் முத்திரைக் குறியிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நிகழ்வு முகாமைத்துவ சேவைகள் - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி மூன்று இலட்சம் (300,000.00 இல. ரூபா) ரூபாவிற்கான வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைக்கோரல் பிணை முறி அல்லது கொடுப்பனவு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
10. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவடைந்தவுடன் 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
11. விலைமனுக்களைத் தயாரிப்பது தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்பட்ட எந்தவொரு கிரயம் மற்றும் செலவுகளுக்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை பொறுப்பு கூறாது.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி 0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல் 0112320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

## உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவி
## (POST OF BIO MEDICAL ENGINEER)

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட விஞ்ஞான இளமாணிப் பட்டம் (B.sc.) (மின்சாரம் / இலத்திரனியல் / பொறிமுறை / உயிரியல் மருத்துவ பொறியியல்)

அனுபவம் ஒரு விசேடத் தகுதியாகக் கருதப்படும்.

**வயது** : 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : SL 1 தரம் III - ரூபா 64,280 - 10x1800 - ரூபா 82,280.00

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவன தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2024 பெப்ரவரி 05ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்றுபகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**
**2024-01-10.**

---

Repeat Your Ad For Better Offers

---

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி
## SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதில் முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்கள் கோருகிறோம்.

**இணக்க அதிகாரி**

**முக்கிய பொறுப்புகள்**

- ஒழுங்குமுறை தேவைகளை மீறுதல் மற்றும் வங்கியின் புகழுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அச்சுறுத்தலை இல்லாமல் செய்தல் மற்றும் குறைப்பதற்கு அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்தல் மற்றும் அந்த கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகள் கடிதம் மற்றும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- இணக்கம் என்பது ஒரு பாதகமான செயல்முறையன்று வங்கியின் வெற்றிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்யும் ஒன்று என்பதை வணிகம் முழுவதும் பரப்புவதன் மூலம் இணக்கத்தின் கொள்கைகள் மற்றும் முக்கியத்துவம் அனைவரினாலும் அறியப்படும்.
- உள்ளூர் ஒழுங்குமுறை தேவை மற்றும் உள்ளக இணக்கம் மற்றும் நெறிமுறை தரங்களை உறுதி செய்வதற்கு புதிய உற்பத்திகள் மற்றும் முறைமைகளின் வடிவம் மற்றும் கட்டமைப்பில் ஆரம்ப ஈடுபாட்டை பாதுகாத்தல்.
- தெளிவான மற்றும் நேரத்துக்கு தொடர்பாடலை மேற்கொள்ளல் மற்றும் கட்டுப்பாட்டாளரின் நோக்கங்களின் பரஸ்பர புரிதல் அடிப்படையில் கட்டுப்பாட்டாளர்களுடன் தொடர்ச்சியான தொடர்பு மற்றும் சிறந்த வேலை உறவை பேணுதல்.
- ஒழுங்குமுறை விதிகள் மற்றும் உள்ளக இணக்க தரங்களுடன் இணக்கத்தை மதிப்பிடுவதற்கு பொருத்தமான முறையில் மீளாய்வுகளை மேற்கொள்வதை உறுதி செய்தல்.
- இணக்கப் பரப்பில் சிறந்த நடைமுறையை மேம்படுத்தல், இணக்க வலையமைப்பு முழுவதையும் ஊக்குவித்தல்.
- வங்கியின் வர்த்தகத்திற்கு தொடர்புடைய அனைத்து புதிய சட்ட மற்றும் ஒழுங்குமுறை மேம்பாடுகளை புரிந்துகொள்ளல் மற்றும் செயற்படுத்தல்.
- தொடர்புடைய உள்ளக மற்றும் வெளி குழுக்களில் இணக்க செயற்பாட்டை பிரதிநிதித்துவம் செய்தல்.
- இணக்க கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் முகாமைத்துவம் மற்றும் பணி உறுப்பினர்களுக்கு தெளிவாக தெரியப்படுத்துவதை உறுதி செய்தல்.
- சிரேஷ்ட முகாமையாளர் உட்பட முகாமைத்துவத்திற்கு நேரத்திற்கு அறிக்கைகளை வழங்கல், அது வங்கியின் வர்த்தகத்திற்கு தொடர்புடைய இணக்க விடயங்களை வெளிப்படுத்துவதாக ஒழுங்குமுறை மேம்பாடுகள், சட்டத்தில் மாற்றங்கள் மற்றும் இதுவரையிலான மற்ற முன்னேற்றங்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும்.
- தீவிரமான அல்லது தொடர்ச்சியான இணக்கச் சிக்கல்களை முன்னிலைப்படுத்தி, பொருத்தமான இடங்களில், அவை ஏற்றுக்கொள்ளக்கூடிய நேரத்திற்குள் சரிசெய்யப்படுவதை உறுதிசெய்ய நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுதல்.

**தகைமைகள்**
வங்கியியல், வர்த்தகம், வணிகம், பொருளியல், கணக்கியல், சட்டம் அல்லது சட்டத்தரணி துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (ICASL)/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA UK)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA UK) அல்லது AIB (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) நிறுவனத்தில் இருந்து முழுமையான தகைமைகள்.

வங்கி ஒழுங்குமுறை இணக்கத்தில் உள்ள தகைமைகள் விரும்பத்தக்கது.

**வேலை அனுபவம்**
வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் ஒட்டுமொத்தமாக 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் குறைந்தது 03 ஆண்டுகள் முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அபேட்சகர் இணக்க செயற்பாட்டில் அனுபவம் மற்றும் முழுமையான அறிவு, ஒழுங்குமுறை இணக்கம், பணச் சலவை தடுப்பு நடைமுறைகள், கூட்டிணைந்த ஆளுகை மற்றும் நெறிமுறைகளில் போதுமான அறிவை பெற்றிருத்தல் வேண்டும்..

**ஊதியம்**
**சம்பள அளவு** - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 158, 315 - 4,390 x 12 - 210,995.

**வயது** - 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**பொதுவான நிபந்தனைகள்**
தேர்வு முறை வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு இடம்பெறும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி - 2024.01.28**

**எவ்வாறு விண்ணப்பிப்பது**
ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை ரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும்.

விண்ணப்பங்கள் careers@amib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.

---

# கொள்முதல் அறிவிப்பு

## லங்கா சதொச லிமிட்ட் நிறுவனத்திற்கு போக்குவரத்து சேவைகளை வழங்கல்

தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

லங்கா சதொச லிமிடெட் நிறுவத்திற்கு பின்வரும் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கு தகுதியுடைய மற்றும் அனுபவம் பெற்ற வர்த்தக நிறுவனங்களில் இருந்து லங்கா சதொச லிமிட்ட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| S/N | கேள்வி இலக்கம் | விபரம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்புத் திகதி | விலைமனு திறக்குமவிலைமனு திறக்கும்/ மூடும் திகதி/ நேரம | விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LSL/PRO/05/12/ Freezer Trucks/2024 | லங்கா சதொச லிமிட்டடின் முட்டைகளை விநியோகிப்பதற்கு உறைவிப்பான் டிரக் வண்டிகளின் வழங்கல் டிரக்கின் கொள்ளளவு: 14.5ft, 16.5ft,18.5ft, 20ft (5T, 10T, 15T, 20T) | 24.01.2024, 11.00 a.m. | 06.02.2024 12.00 p.m. | 500.00 | 1,600,000.00 |
| 2 | LSL/PRO/05/11/ Transport- Orugodawatta WH/2024 | ஒருகொடவத்தை விநியோக களஞ்சியத்தின் போக்குவரத்து சேவையை வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளல் லொறியின் கொள்ளளவு 2T, 5T, 20T (10ft, 14.5ft, 20ft) | 26.01.2024, 11.00 a.m. | 06.02.2024 12.30 p.m. | 500.00 | 420,000.00 |

விபரக்குறிப்பு: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு

மேல் குறிப்பிடப்பட்டவாறு **மீளளிக்கப்படாத விலைமனு கட்டணத்தை செலுத்தி 2024 ஜனவரி 16 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி 06 ஆம் திகதிவரை** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இருந்து அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியை ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் பெறலாம்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகை பிரிவு (3ஆவது மாடி),**
**இல. 27, CWE செயலக கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **குறித்த கேள்வி குறிப்பு இலக்கங்களை குறிப்பிடுதல் வேண்டும்.**

லங்கா சதொச தலைமை அலுவலக, பெறுகைப் பிரிவு, 3ஆவது மாடியில் மேல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் விலைமனுக்களை ஏற்பது நிறைவடைவதோடு அதன் பின் விலைமனுதாரர்கள் முன்னிலையில் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்க-

ஏதேனும் தெளிவை பெற, அழைக்கவும்,
திரு. சஞ்சீவ - 070 1560791

இந்தக் கேள்வி/ ஒப்பந்தம் தொடர்பில் **இறுதி முடிவு லங்கா சதொச லிமிட்ட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** எடுக்கப்படும்.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிட்ட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

NILIS

## நூலக மற்றும் தகவல் அறிவியலுக்கான தேசிய நிறுவனம்
## கொழும்புப் பல்கலைக் கழகம்

### 2024/ 2025 கல்வி ஆண்டுக்கான பட்டப்பின் டிப்ளொமா/டிப்ளோமா/ உயர்தர சான்றிதழ்க் கற்கை நெறிகளுக்கான ஆரம்பம்

| கற்கைநெறி | காலம் | நுழைவுத் தராதரம் | ஊடகம் | கட்டணம் (Rs.) |
|---|---|---|---|---|
| 1. நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGLIS) | 1 year | எமது வலைத் தளத்தை நாடுங்கள் nilis.cmb.ac.lk | சிங்களம் தமிழ் ஆங்கிலம் | 100,000 இரு தவணைகளில் செலுத்தலாம். |
| 2. நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவ டிப்ளோமா (DLIM) | 1 year | GCE (A/L) **அல்லது** GCE (OL) உடன் NILIS வழங்கிய CSL / CPL /ACSL / ACPL /ACL | (எந்த ஊடகம் ஆயினும் கற்கை நெறியானது போதுமான எண்ணிக் கையில் மாணவர்கள் இருந்தால் மட்டுமே நடாத்தப் படும்). | 29,000 இரு தவணைகளில் செலுத்தலாம். |
| 3. பாடசாலை நூலகவியல் டிப்ளோமா (DSL) | 1 year | | | 29,000 இரு தவணைகளில் செலுத்தலாம். |
| 4. நூலவியலில் உயர்தரச் சான்றிதழ் (ACL) | 6 months | எமது வலைத் தளத்தை நாடுங்கள் nilis.cmb.ac.lk | | 25,000 |

**மேலே விளம்பரப் படுத்தப்பட்ட சகல கற்கைநெறிகளும் நிகழ்நிலையிலேயே நடைபெறும் (ஆனால் எழுத்துமூல பரீட்சைகள் NILIS இல் நேரடியாக இடம்பெறும்).** விண்ணப்படிவங்களைத் தரவிறக்க எமது வலைத் தளத்தை நாடுங்கள் **(nilis.cmb.ac.lk)** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **31st January 2024** அல்லது அதற்கு முன்னராக பின்வரும் விலாசத்தை அடையவேண்டும். நேர்காணல்த் திகதி மற்றும் நேரம் பின்னர் அறியத்தரப்படும். கற்கை நெறிகள் 24th February 2024அன்று ஆரம்பம் ஆகும்.

**Deputy Registrar**
**National Institute of Library & Information Sciences (NILIS)**
**University of Colombo**
**Colombo 03**

**Tel: 0112507150/ 0701478679**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

CWIT
Colombo West International Terminal (Private) Limited

**வரையறுக்கப்பட்ட கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (தனியார்) நிறுவனம்**

## (COLOMBO WEST INTERNATIONAL TERMINAL (PVT) LTD)

## கொழும்பு துறைமுகத்தில் மின்சார அளவீடல் உபநிலைய 01A இலக்க கேட் முதல் சமிஞ்ஞை விளக்கு சந்தி வரை நிலத்திற்குக் கீழான கேபிள் குழாயை நிர்மாணித்தல்

**(ஒப்பந்த இலக்கம்: SLPA/PD/SH/SER/02)**

1. விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ''கொழும்பு துறைமுகத்தில் மின்சார அளவிடல் உபநிலைய 01A இலக்க கேட் முதல் சமிஞ்ஞை விளக்கு சந்தி வரை நிலத்திற்குக் கீழான கேபிள் குழாயை நிர்மாணித்தல் (ஒப்பந்த இலக்கம்: SLPA/ PD/SH/SER/02)'' எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (தனியார்) நிறுவனம் (CWIT) அழைக்கின்றது.

   இந்த வேலைத்தளம் கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ளது. பணியானது கடுமையாக தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பணிகள் முக்கியமாக மின்சார விநியோகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிலக்கீழ் கேபிள் குழாய்களை நிர்மாணிப்பதை உள்ளடக்கியது. முன்மொழியப்பட்ட குழாய் பாதையின் மொத்த நீளம் ஏறத்தாழ 650 மீற்றர் ஆகும், மேலும் இது நான்கு இடங்களில் வீதிக்குக் குறுக்கே கட்டப்பட வேண்டும். மேலும் முன்மொழியப்பட்ட வழித்தடத்தில் சுமார் 15 மேன்ஹோல்களை வழங்குவது அவசியமாகும், மேலும் விரிவான விசாரணை மற்றும் தற்போதுள்ள சேவைகளின் இடமாற்றம் ஆகியவை தேவைப்படும் போது மற்றும் தேவைப்படும் இடங்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

   மொத்த வேலைகளினதும் முடிவுறுத்தல் காலம் 90 நாட்களாகும்.

2. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கு தகுதியான சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவர்களாக மற்றும் பின்வரும் தகுதித் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - வீதி நிர்மாணத்தில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது) C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ். இதை இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் இணையதளத்திலிருந்து நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - கடந்த 05 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 200 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்த்து ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதிகள் 200 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை CWIT ஒப்பந்தம் மற்றும் வர்த்தக முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (0779511748) மேலும் கொழும்பு-01, இல. 11, யோர்க் வீதி, வ/ப கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (தனியார்) நிறுவன அலுவலகத்தில் 2024-01-18ஆம் திகதி முதல் 2024-02-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் (CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது) C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள்) மீளளிக்கப்படாத 35,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-01-18ஆம் திகதி முதல் 2024-02-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு - 01, இல. 11, யோர்க் வீதி, வ/ப கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (தனியார்) நிறுவன அலுவலகத்தின் செயற்றிட்டத் தலைமைக்கு (நிறுவனக் கடிதத் தலைப்பில்) எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொழும்பு துறைமுகத்தில் மின்சார அளவிடல் உபநிலைய 01A இலக்க கேட் முதல் சமிஞ்ஞை விளக்கு சந்தி வரை நிலத்திற்குக் கீழான கேபிள் குழாயை நிர்மாணித்தல் (ஒப்பந்த இலக்கம்: SLPA/PD/SH/SER/02)'' எனக் குறிப்பிட்டு 2024-02-06ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு-01 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்கூறிய விலாசத்தில் உள்ள பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

9. சகல விலைமனுக்களுடனும் 2,500,000.00 ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி 2024-07-02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-01-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை, தொழில்நுட்ப நூலகத்தில் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து வேலைத்தள விஜயமும் இடம்பெறும்.

**செயற்றிட்ட தலைவர்,**
**வ/ப கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (தனியார்) நிறுவனம்,**
**117, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | **3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம்** |
|---|---|
| **ஒப்பந்த இலக்கம்** | **தலைப்பு** |
| MOH/STHRD/SB/E53: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E70: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடம் மற்றும் நூலகத்திற்கான உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E65: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான Metrology Universal Calibration இயந்திரங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/F04B: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் வேலைத்தளம் 2 இற்கான தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2024-02-14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.

2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்காக (“பொருட்கள்'') தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். ஒப்பந்தம் கையளிக்கப்படும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 90 நாட்களாகும்.

3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| **பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரங்கள்** | **கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். இல. ரூபா** | **கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. இல. ரூபா** |
|---|---|---|
| **MOE/STHRD/SB/E53:** | | |
| Lot 01-Equipment for Pharmaceutical Lab | 10,324,542.35 | 25,811,355.88 |
| Lot 02-MS detector for Waters HPLC System | 13,030,400.00 | 32,576,000.00 |
| Lot 03-Equipment for Pharmaceutical Lab | 2,230,318.00 | 5,575,795.01 |
| **MOE/STHRD/SB/E70:** | | |
| Lot 01-Furniture for Library Building | 2,000,000.00 | 5,000,000.00 |
| Lot 02-Smart Boards for Library Building | 20,000,000.00 | 50,000,000.00 |
| Lot 03-Finger print solution for Library Building | 800,000.00 | 2,000,000.00 |
| **MOE/STHRD/SB/E65:** | | |
| Item 01-Universal Calibration Machine | 28,000,000.00 | 70,000,000.00 |
| **MOE/STHRD/SB/F04B:** | | |
| Lot 01-Storage Cabinets | 3,920,000.00 | 9,800,000.00 |
| Lot 02-Sinks | 1,008,000.00 | 2,520,000.00 |
| Lot 03-Bin Storages | 2,128,000.00 | 5,320,000.00 |
| Lot 04-Welding tables | 3,360,000.00 | 8,400,000.00 |
| Lot 05-Tool Holders | 924,000.00 | 2,310,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அதிகாரி,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP code: 70140**
   **தொலைபேசி: 045-2280081**
   **மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் மேற்கூறப்பட்ட பெறுகை இலக்கங்களில் குறிப்பிடப்படும் விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2024.01.16ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.

7. 2024.02.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப் பிணையின் மூலப் பிரதியுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
   **STHRDP செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**

   பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.

| **ஒப்பந்த இலக்கம்** | **தலைப்பு** |
|---|---|
| MOH/STHRD/SB/E53 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மருந்தாக்கல் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E70 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடம் மற்றும் நூலகத்திற்கான உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E65 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான Metrology Universal Calibration இயந்திரங்களின் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/F04B: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் வேலைத்தளம் 2 இற்கான தளபாடங்களின் பெறுகை (''பொருட்கள்'') |

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

திகதி: 2024-01-24.

# உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்த வர்த்தக மாநாடு











உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இணைந்து உலகத்தமிழ் வம்சாவளி மாநாட்டு நிறைவு நாள் நிகழ்வாக நடத்திய குளோபல் கனெக்ட் கான்ஃபரன்ஸ் (Global Connect Conference) என்ற நிகழ்வு ஜனவரி 7ஆம் திகதி தமிழ்நாடு திறந்த நிலை பல் கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ M. சரவணன் மற்றும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் Dr. V. ராதா கிருஷ்ணன் துவக்கி வைக்க, மேலும் பல்வேறு நாட்டு தூதர்கள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாட்டு தொழில் வல்லுநர்கள் கலந்து கொண்டு எந்த நாட்டில் தொழில் வாய்ப்புகள் உள்ளன, அரசாங்கங்களின் மானியங்கள் என்னென்ன, சிறு மற்றும் குறுந்தொழிலில் கடன் வசதிகள் பற்றி அரிய வகையில் வங்கி அதிகாரிகளும் கருத்துரைத்தனர். இந்நிகழ்வில் சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களும் பெண் தொழில் முனைவோரும் MBA மாணவர்களும் தொழில் தொடங்க வாய்ப்புகள் கிடைத்தன. இந்நிகழ்வில் ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்பவர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.




ஜெம் ஸ்ரீலங்கா இரத்தினக்கல் கண்காட்சி தென்னிலங்கை பெந்தோட்டை சினமன் பீச் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை (11) நடைபெற்றது. அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் சங்கத்தின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் கூட்டாக எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம்.

# மஹமேருவ ஓட்டப்பாதை இன்று திறந்து வைக்கப்படுகிறது

*(வஜிர லியனகே)*



இலங்கையில் தனியார் துறையினரால் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய ஓட்டப் பாதையான மஹமேருவ ஓட்டப் பாதை இன்று ஜனவரி 14ம் திகதி திறந்து வைக்கப்படுவதாக ஸ்லார்டர் (SLARDAR) இன் தலைவர் பிரஷான் விஜேநாயக்க தெரிவித்துள்ளார். இந்த பாதையை அமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை இருபத்தைந்து மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதற்காக ஜப்பானிய ஓட்டப்பந்தய சம்பியனான புமியோ நுட்டஹாரா இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இன்று 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் மஹமேருவ ரெலிகுரோஸ் ஓட்டப் போட்டியில் கார் ஓட்ட வீரர்கள் 80 பேரும், மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டியாளர்கள் 110 பேரும் கலந்து கொள்வதற்காக இதுவரைக்கும் பதிவு செய்துள்ளனர்.




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, இரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். மனதில் ஆன்மிக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு அடுத்தவர்கள் செயல்கள் கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம். கலைத்துறையினருக்கு நிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி குறையும். எதையும் அவசரப்படாமல் நிதானமாக செய்வது நல்லது.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். அரசாங்கத்தின் மூலம் உதவிகளை பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை குறையும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. பெண்கள் அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. கலைத்துறையினருக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள், சக மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பு உண்டாகும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை இலாபகரமாக செய்வார்கள். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணியிட மாற்றம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு மனதில் இருந்து வந்த சஞ்சலம் நீங்கும். கலைத்துறையினருக்கு மனதில் தெம்பு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்வீர்கள். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லாவிட்டாலும் நிதானமாக இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. நீண்ட நாட்களாக தொழிலில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கூறுவதற்கு மாற்று கருத்துக்களை கூறாமல் இருப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். தம்பதிகள் ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. பெண்கள் மாற்று கருத்துக்களை மற்றவர்களிடம் கூறாமல் இருப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு பேச்சுத் திறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு எதையும் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசித்து செய்வது நன்மை தரும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

வீண் அலைச்சல் குறையும். குறிக்கோள் நிறைவேறும். சுணங்கி கிடந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்க முற்படுவர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் உண்டாகும். குறிக்கோளை அடைவதை லட்சியமாக கொண்டு செயல்படுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த வாக்குவாதங்கள் அகலும். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். சுபச்செலவுகள் ஏற்படும். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். பெண்களுக்கு எண்ணிய காரியம் கை கூடும். கலைத்துறையினருக்கு காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்கள் கூடுதல் மதிப்பெண் பெற எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

எதிர்ப்புகள் விலகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களின் ஆலோசனையை கேட்டு செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரிகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். உறவினர், நண்பர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். பெண்கள் மற்றவர்கள் ஆலோசனைகளை ஏற்கும் முன் அது பற்றி பரிசீலிப்பது நல்லது. கலைத்துறையினருக்கு உயர்நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். மாணவர்கள் எதிலும் நல்லது கெட்டதை யோசித்து அதன் பின்பு அந்த காரியத்தில் ஈடுபடுவது நன்மை தரும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரம் விரிவுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகள் கூறுவதை மறுத்து பேசாமல் அனுசரித்து செல்வது நன்மையை தரும். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பம் நீங்கி தெளிவு உண்டாகும். கலைத்துறையினர் நெருக்கமானவர்களுடன் இனிமையாக பேசி பொழுதை கழிப்பீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பதும், பாடங்களில் இருக்கும் சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு தெரிந்து கொள்வதும் வெற்றிக்கு உதவும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எல்லாவிதத்திலும் நன்மை உண்டாகும். இராசியதிபதி செவ்வாய் சஞ்சாரம் மனோ தைரியத்தை தரும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. எதிர்ப்புகள் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவார்கள். பொருளாதாரம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமாக பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் கூடுதல் உழைப்பின் மூலம் செய்து முடிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். தம்பதிகள் இருவரும் எந்த ஒரு முடிவையும் நிதானமாக யோசித்து எடுப்பது நன்மை தரும். பெண்களுக்கு எதிர்ப்புகள் நீங்கும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். மாணவர்களுக்கு கூடுதலாக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும். தேவையான உதவிகள் கிடைக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக செய்து முடிப்பீர்கள். வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சினால் எதிலும் இலாபம் காண்பர். வர்த்தக திறமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையால் முன்னேற்றமடைவார்கள். இழுபறியாக இருந்த வேலையை துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக வராமல் இருந்து வந்த பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். விருந்தினர் வருகை இருக்கும். குடும்பப் பிரச்சினைகளில் சாதகமான முடிவே உண்டாகும். பெண்கள் துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். கலைத்துறையினருக்கு அதிக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். மாணவர்கள் கஷ்டமான பாடங்களையும் துணிச்சலாக படித்து முடிப்பர்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

பல வழிகளிலும் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். தாய் தந்தையின் உடல் நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மெத்தனப் போக்கு காணப்பட்டாலும் தேவையான பணவரத்து இருக்கும். நீண்ட நாட்களாக முடங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சல் காரியங்களில் இழுபறி என்ற நிலையை காண்பர். குடும்பத்தில் சுமுகமான நிலை காணப்படும். ஆனாலும் மனதில் குடும்பம் தொடர்பான கவலை, பிள்ளைகள் பற்றிய கவலை இருந்து வரும். வாக்குவாதத்தை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு தொல்லைகள் குறையும். கலைத்துறையினர் கடமைகளைச் சரிவரச் செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு ஏற்படாமல் தீவிர கவனத்துடன் பாடங்களை படிப்பது வெற்றிக்கு வழி வகுக்கும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

உங்கள் திறமையை கண்டு அடுத்தவர்கள் வியப்பார்கள். வேளை தவறி உணவு உண்ணாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். ஆனால் வேலை செய்பவர்களிடம் கோபப்படாமல் தட்டி கொடுத்து வேலை வாங்குவது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு பாராட்டு பெறுவார்கள். எடுத்து கொண்ட பணிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் கவனம் செல்லும். பிள்ளைகள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். பெண்கள் திடீர் என்று கோபம் உண்டாவதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு கடன் சுமைகள் குறையும். மாணவர்கள் கோபத்தை குறைத்து நிதானத்தை கடைப்பிடிப்பது முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். திருப்திகரமான லாபம் கிடைக்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு உயரதி காரிகளின் பாராட்டு கிடைக்கப் பெறுவர். கடினமான பணிகளை கூட எளிதாக முடிக்கும் ஆற்றல் வரும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். குழந்தைகள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. சுபச் செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் மன திருப்தியை தருவதாக இருக்கும். கலைத்துறையினருக்கு செலவினங்கள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றத்திற்கு எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும்.



# படித்ததும் பகர்வதும் 174



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### புது வருட பிரகடனங்கள்!




புது வருடமொன்று பிறந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு விடைபெற்று 2024ஆம் ஆண்டு வருகை தந்துள்ளது. வீட்டில், நாட்டில், உலகில் எத்தனையோ வகையான பிரச்சினைகள் சோதனைகள், நிகழ்ந்து கொண்டிருந்த போதும் அவற்றை எல்லாம் கடந்து, அல்லது மறந்து புதிய வருடத்தில், புதிய சிந்தனைகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிறப்பது சகஜமானது தவிர்க்க முடியாதது என்பதுடன் சிறப்பானதும் கூட.

இவ்வாறு எழுகின்ற, பிறக்கின்ற, உதிக்கின்ற புதிய சிந்தனைகளை நன்னோக்கம் மிக்கதாக, நேர்மையானதாக, நன்மை பயப்பனவாக, நல்லவற்றுக்கு பயன்படுத்தக் கூடியதாக, நேர் சிந்தனைகளை மட்டுமே கொண்டதாக ஆக்கிக் கொள்வதே புத்திசாலிகளின் செயலாகும்.

பல்வேறு கனவுகளுடனும், பல்வேறு எதிர்பார்ப்புகளுடனும், பல்வேறு நோக்கங்களுடனும் ஒவ்வொருவரும் புத்தாண்டை சந்தித்துள்ளனர். இவ்வாண்டில் இத்தகைய தமது எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், கனவுகள் நிறைவேற வேண்டும் என்றே ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். அதுவே நேரிய சிந்தனையாகும். அவை அவ்வாறே நல்லவையாக, வெற்றிகரமாக நிறைவேற நாமும் வாழ்த்துகிறோம்.

பிறந்துள்ள இப் புத்தாண்டில் ஏதாவது ஒரு நல்ல விடயத்தையோ, ஒரு சில நல்ல விடயங்களையோ தவறாது செய்வதற்கு, ஒவ்வொருவரும் தமக்குள் உறுதி கொள்ள வேண்டும். அவை தீமைகளை தவிர்ப்பனவாகவோ நன்மைகளை தருவனவாகவோ இருக்க வேண்டியது அவசியம்.

கடந்த வருடத்தில் புகை பிடித்தவர்கள், மது அருந்தியவர்கள், தவறான வழிகளில் உழைத்தவர்கள், மற்றவர்களை ஏமாற்றியவர்கள், பிறருக்கு துரோகமிழைத்தோர் போன்றவர்கள் இத்தகைய தவறான செயல்களை முற்றுமுழுதாக விட்டு விட வேண்டும். இவ்வாறான பெரிய தவறுகளை செய்யாதவர்கள் குறைந்தபட்சம் “பொய் சொல்லுதல்” போன்ற ஒரு தவறான விடயத்தையேனும் முழு மனதோடு முற்றாக விட்டு விட முன்வர வேண்டும். அவற்றை வாழ்வில் மீண்டும் ஒருபோதும் செய்வதில்லை என உறுதிகொள்ள வேண்டும்.

இதே போன்று, ஒவ்வொருவரும் தமது தவறுகளைத் திருத்திக் கொண்டு, மற்றவர்களையும் தவறு செய்விலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் செயல்பட முன்வர வேண்டும்.

இதேபோன்று ஏதாவது ஒரு புதிய, நன்மையான காரியம் ஒன்றையேனும் புத்தாண்டிலிருந்து தொடர்ச்சியாக செய்து வரத் தீர்மானித்து, செயற்பட வேண்டும். உதாரணமாக பாதை ஒன்றில் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் கல் ஒன்றை அப்புறப்படுத்தல், வாழைப் பழத் தோலை பாதையில் எறியாமல் குப்பைத் தொட்டியில் போடுதல், பாதையில் கண்ட கண்ட இடங்களில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து செல்லாமல் பாதசாரிகளுக்கென ஒதுக்கப்பட்ட கடவைகளில் மட்டுமே பாதையை கடத்தல். போன்ற எண்ணற்ற சின்னஞ் சிறிய விடயங்களில் ஒவ்வொருவரும் தாமாக முன்வந்து செயற்பட முடியும்.

இத்தகைய விடயங்கள் சிறிய செயல்களாயினும் பொதுவாக எல்லோருக்கும் நன்மையளிக்கும் விடயங்களாக இருப்பதோடு ஒழுக்கக் கட்டுப்பாடுள்ள, நல்லதொரு சமுதாயத்தை உருவாகுவதற்கும் வழிவகுக்கும். நல்லதொரு சமுதாயம் நாளை மலரும்.

இத்தகைய விடயங்களை ஒவ்வொருவரும் தமது சிந்தனைக்கெடுத்து ஒன்று அல்லது ஒரு சில குறித்த நன்மைகளை செய்வதற்கும், அதே போன்று, குறிப்பிட்ட கெட்ட விடயங்களை கைவிடுவதற்கும், தவறுகளை திருத்திக் கொள்வதற்கும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். இதுவே புது வருட பிறப்பில் நன்மைகளை கொண்டு வருவனவாக அமையும்.

இவற்றைக் கவனத்தில் எடுத்து, பொருத்தமான பிரகடனங்களை இப்புது வருடத்தில் தீர்மானமாக செயற்படுத்த ஒவ்வொருவரும் முன்வருவோம்!

## நெஞ்சுக்கு நீதி

**அல்லல்கள் அகிலத்தில் அகன்றிடவே உறுதி கொண்டு
நல்லவைகள் நாள்தோறும் நிறைவாகச் செய்திடுவோம்
உள்ளத்தில் இவ்வெண்ணம் உறுதியாக நிலைத்திட்டால்
கள்ளமில்லா மகிழ்ச்சி வெள்ளம் கரை தாண்டி ஓடிடுமே**

## பிரிந்தார் பெருமை

### தனித்துவ ஆளுமை ஏ. ஏ. எம். புவாஜி

இலங்கையின் பிரபல வரலாற்று ஆசிரியரும், நாடறிந்த கல்விமானும், பாடசாலை அதிபரும் பன்னூலாசிரியருமான ஏ.ஏ.எம். புவாஜி கடந்த 06 ஆம் திகதி (2023.12.06) அன்று தனது 82 வது வயதில் இவ்வுலகை விட்டும் பிரிந்தார். 1941 ஒக்டோபர் 20 ஆம் திகதி மாத்தளையில் பிறந்த இவர் பிரபல மாத்தளை சாஹிரா கல்லூரியிலிருந்து தெரிவான முதலாவது முஸ்லிம் பட்டதாரி என்ற பெருமைக்குரியவராவார். ஆசிரியராக கடமையாற்றிய



இவர் பின்னர் அதிபராகி ஹன் தேஸ்ஸ அல் மனார் தேசிய பாடசாலை, அக்குரணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை என்பவற்றோடு தான் கற்ற மாத்தளை சாஹிரா கல்லூரியினதும் அதிபராகி கடமையாற்றி சேவை செய்தவர்.

கல்விடிப்ளோமா வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சகர், ஆசிரியர் பயிற்சி போதனா ஆசிரியர், பேராதனை பல்கலைக்கழக ஆங்கில மொழி போதனாசிரியர், கல்வித்திணைக்கள பாடவிதானக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகளை வகித்து கல்வித்துறையில் சேவையாற்றியவர்.

சிறந்த வரலாற்று ஆசிரியரான ஏ.ஏ.எம். புவாஜி மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும், மாத்தளை மாவட்ட தமிழர்களின் வரலாறும் பாரம்பரியமும், கண்டி மாவட்ட முஸ்லிம்கள் கவிமணி எம்.எம். ஸுபைர், பேராசிரியர் அல்லாமா எம்.எம். உவைஸ் போன்ற பல நூல்களை தந்துள்ளார். சர்வதேச உச்சநீதி மன்ற துணைத் தலைவராகவும் இலங்கையின் உச்சநீதிமன்றின் நீதிபதியாகவும் இருந்த சி. ஜே. வீரமந்திரி எழுதிய 'இஸ்லாமிய சட்டவியல்: ஒரு சர்வதேச பார்வை' என்ற பிரபலமான நூலையும் தமிழில் மொழி பெயர்த்த பெருமையும் இவரையே சாரும். இவற்றோடு, 'மாத்தளை ஸாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர் எம். வி. மத்தாய்', 'மாத்தளை கல்விமான் உமர்தீன்' ஆகிய இரு கல்விமான்கள் வரலாறுகளையும் இரு நூல்களாக தந்துள்ளார்.

தனது இலக்கிய பணிகளுக்காக மத்திய மாகாண சாகித்திய விருது, மத்திய மாகாண சபையின் இலக்கிய சுடர் விருது, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு விருது என்பவற்றோடு அரசின் கலாபூஷணம் விருதையும் வென்ற ஏ.ஏ.எம். புவாஜி, அகில இலங்கை கம்பன் கழகம் உட்பட பல அமைப்புகளினால் விசேடமாக கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இவரது தனித்துவமான ஆளுமைகளைக் கவனிக்கும் போது, இத்தகைய ஆற்றல்மிக்க இன்னும் ஒருவரை சமுதாயம் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

## புது வரவு

### கொழும்பு எம்.ஏ. ரஹீமாவின் “சூல்சோறு”




நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக எழுத்துலகில் தனித்துவமாக ஆக்கங்கள் படைத்து வரும், கொழும்பு எம்.ஏ. ரஹீமா தந்துள்ள புதிய சிறுகதைத் தொகுதி “சூல்சோறு” ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

(1) கனவுகள் கலைகின்றன, (2) ஸீகுவின்ஸ், (3) சூல்சோறு, (4) மரண அறிவித்தல், (5) ஒரு பெண்புலி சீறுகிறது, (6) அவர்கள் விழித்து விட்டார்கள், (7) கல்யாணக் கோலங்கள், (8) பார்வை, (9) சுமைகள், (10) உயிர்ப்பு, (11) உப்பைத் தின்றவள், (12) எதிரொலி, (13) இழுக்கத்தின் பழி, (14) அந்த நீர்ப்பாத்திரம் எனும் தலைப்புகளில் பதினான்கு சிறுகதைகள் இந்நூலை அலங்கரித்துள்ளன. இவை வீரகேசரி, தினகரன், ஜீவநதி, விடிவெள்ளி, அஷ்ஷூரா என்பவற்றோடு, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு சிறுகதை மலர் என்பவற்றில் பிரசுரமானவையாகும்.

“ரஹீமா தனது கதைகளில் சமூகவெளியின் பல பரப்புகளில் ஊடாட்டம் செய்வதை அவதானிக்க முடிகின்றது. அந்தந்தக் களங்களுக்கேற்பவே அவரது கதாபாத்திர உரையாடல்களும் அமைவதைக் காணலாம் எழுத்து அனுபவமும் வாசிப்பு குணமும் கதைகளில் பிரதிபலிக்கின்றன. சில கதாமாந்தர்களையும் சில சம்பவங்களையும் பின்னி விடுவதால் ஒரு நல்ல கதை உருவாகப் போவதில்லை. அவற்றினூடாக நல்ல தொனிப் பொருளை வெளிக் கொணர வேண்டுமென்பதை நன்கு உணர்ந்தே கதைகளைச் சிருஷ்டித்துள்ளார். இச் சிறுகதைகளை வாசித்து முடித்த பின்னரும் காலிநானா ஜெனீபர் சமீரா ஹஜரும்மா போன்ற இவரது கதாபாத்திரங்கள் எம்மோடு வாழும் மாந்தர்களாகி விடுகின்றனர்.” என்று பிரபல சிறுகதையாசிரியர் திக்குவல்லை கமால், ரஹீமாவின் கதைகள் குறித்துக் கருத்துக் கூறியுள்ளார்.

யதார்த்தமான கதாபாத்திரங்களை, தனது அனுபவங்களோடு இணைத்து, தனக்கேயுரிய பாணியில் கொழும்பு எம்.ஏ. ரஹீமா தந்துள்ள இச்சிறுகதைகள் வாசிப்போரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும்.

நூல்: சூல்சோறு (சிறுகதைகள்), ஆசிரியர்: கொழும்பு எம்.ஏ. ரஹீமா, முதற்பதிப்பு: கார்த்திகை 2023, பக்கங்கள்: 100, விலை: 500/=, வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய், தொடர்புகளுக்கு: 0773782606

## சிந்தனை செய் மனமே

### தாய்க்குத் தண்டனையா?



தன்னை பெற்றெடுத்து, பாலூட்டி, தாலாட்டி, அன்பு காட்டி வளர்த்த தாயை, பாசம் காட்டி, அன்போடு அரவணைத்து, ஆதரித்து, பேணி பாதுகாக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் இதற்கு மாற்றாக தன்னை பெற்றெடுத்த தாயை மின்கம்பத்தில் கட்டி வைத்து அடித்துள்ளான் ஒருவன். நம்ப முடிகிறதா?

ஆனால், தன்னுடைய தோட்டத்தில் காலிஃபிளவர் பறித்த தனது தாயை, சொந்த மகனே மின்சாரக் கம்பத்தில் கட்டி வைத்து அடித்த இந்த உண்மைச் சம்பவம் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின், கியோஞ்சர் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்று, சமூக வலைத் தளங்களில் இப்போது வைரலாகியுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட 70வயது தாயாரின் பெயர் சுபத்ரா மஹந்த். இவருக்கு இரண்டு மகன்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் கணவரை இழந்துவிட்ட சுபத்ரா, தன்னுடைய மூத்த மகன் கருணா வீட்டில் வசித்து வந்துள்ளார். ஆயினும், சில ஆண்டுகளுக்கு முன்னர், சுபத்ராவின் மூத்த மகனும் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளார்.

சுபத்ராவின் இளைய மகன் சத்ருகன், தன்னுடைய மனையுடன் தனியாக வசித்து வந்திருக்கிறார். சுபத்ரா கடந்த வாரம் தன் இளைய மகனது தோட்டத்தில் காலிஃபிளவர் பறித்து, சமைத்துச் சாப்பிட்டிருக்கிறார். இதனால் கோபமடைந்த சத்ருகன் தன்னுடைய சொந்த தாயென்றும் பாராமல் சுபத்ராவை தனது வீட்டருகே இருந்த மின் கம்பத்தில் கட்டி வைத்து அடித்திருக்கிறான்.

அதனை தடுக்க வந்த தன் மனைவியையும் சத்ருகன் அடித்திருக்கிறான். கிராம மக்கள் தலையிட்ட போது கூட அவர்களையும் அவன் மிரட்டியிருக்கிறான். பின்னர், இது பற்றி தகவலறிந்து உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், சுபத்ராவை மீட்டு சமூக சுகாதார மையத்தில் சேர்த்துள்ளனர்.

இது குறித்து பேசிய சுபத்ரா, ``காலிஃபிளவர் பறித்ததற்காக என் இளைய மகன் என்னை அடித்துத் துன்புறுத்தி மின் கம்பத்தில் கட்டிவைத்தான். தடுக்க வந்த அவனுடைய மனைவியையும் அவன் அடித்ததால், என் மருமகளாலும் என்னைக் காப்பற்ற முடியவிவில்லை" என்றார்.

அதைத் தொடர்ந்து, சத்ருகனை கைது செய்த போலீஸார், அவன் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**




# மரத்தின் மீதிருந்த செல்வராகவனின் இறந்த தேகம் துர்காவின் மீதே ஏற்படுத்தி விட்டது சந்தேகம் !

எல்லோரும் திரும்பிப் பார்த்த அந்தப் பகுதியில்,
அந்தப் புல்தரையின் மீது,
இருந்தது,
பெண்கள் அணியும்,
ஒரு காலணி!
அதைக் கையில் எடுத்து,
அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்த இன்ஸ்பெக்டர்
“ம், இதுவும் நமக்குப் பயன்படலாம்!” என்று சொல்லியபடியே,
அதைக் கொண்டுவந்து,
சிரஞ்சீவியிடம் கொடுத்தார்.

“இந்த சப்பாத்து சகதியில் மூழ்கியதால் காலை விட்டு அது கழன்றிருக்க வேண்டும். ஏற்பட்டிருந்த பரபரப்பினால் அதை எடுக்காமல் போயிருக்க வேண்டும்! ஆனாலும் பாதை இங்கே இருக்கும் போது புல் தரைப் பகுதிக்கு அவள் ஏன் போனாள் என்பதுதான் தெரியவில்லை! காலணியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தபடியே சிரஞ்சீவி சொன்னார்!

“காலடித் தடயங்கள் பதிவதைத் தவிர்ப்பதற்காக அப்படி செய்திருக்கலாம்!” இதுவரை அமைதியாக இருந்த சார்ஜண்ட் சொன்னார்.
தலையை மெல்ல ஆட்டிய படியே,
சப்பாத்தின் உள்பக்கத்தைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தார் சிரஞ்சீவி!
என்ன ஆச்சரியம்!
உள்ளே,
டி.எஸ். (D.S) என்ற இரண்டு எழுத்துக்கள்,
வெட்டப்பட்டிருந்தன!
அதைப் பார்த்ததும்,
சிரஞ்சீவியின் விழிகள்,
வியப்பால் விரிந்தன!
டி.எஸ். துர்கா சேகர்
அவரது அதரங்கள்
மெல்ல உச்சரித்தன!
“துர்கா சேகரா! அடக்கடவுளே அவ எப்படி இங்கே வந்தா? இல்லை அப்படி நடந்திருக்க வாய்ப்பே இல்லை!”
பரபரப்படைந்த சிந்துஜன்,
கொஞ்சம் படபடப்புடன் சொன்னான்!
இப்போது,
சிரஞ்சீவிக்கு,
நேற்று இரவு காட்டப்பட்ட அந்த விளக்கு வெளிச்சைகை ஞாபகம் வந்தது!

இந்த பைத்தியக்காரப் பெண் அந்த நேரத்தில் இந்த சகதி பதித்த இடத்திற்கு எங்கே போக வந்தாளோ!” என்று எண்ணியபடியே,
சிந்துஜனின் முகத்தைப் பார்த்தார்!
அது,
பிணத்தைப் போல்,
வெளுத்துப் போயிருந்தது!
அதற்குக் காரணமும்,
அவர்கள் இருவர்களுக்கு மட்டும்தான் தெரியும் என்பதினால்,
இருவரும்,
ஓரளவு நிம்மதியடைந்தார்கள்!

“ம். இன்ஸ்பெக்டர் அந்த பங்களாவில் இருக்கும் தோமஸைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவோ? சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு,
சிரஞ்சீவிதான் கேட்டார்.

“அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், நல்லதொரு வர்த்தகர், அடக்கமான ஒரு மனிதர். செல்வி செல்வராகவுடன் இறுக்கமான ஒரு நட்பில் அவர் இருக்கிறார். ஆனாலும் இது சம்பந்தமாக செல்வராகவனுக்கு எதுவும் தெரியாது!”
அவர் இறுதியாக சொன்ன வார்த்தைகளில் இருந்து,
சிரஞ்சீவிக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது.
அதாவது
துர்கா,
செல்வராகவனின் மகள் அல்ல என்ற உண்மை,
இன்ஸ்பெக்டருக்கு இன்னும் தெரியவில்லை!
“இந்த தோமஸ் இந்தப் பகுதிக்கு குடியிருக்க வந்து எவ்வளவு காலமிருக்கும்?”
“சுமார் ஒரு நாலு வருடங்கள் இருக்கும், இல்லையா சார்ஜண்ட்?”
ஆமாம் என்பதைப் போல்,
அவரும் தலையை ஆட்டினார்.
“திருமதி செல்வராகவன் இறந்து இப்போது ஐந்து வருடங்களாகின்றன. அவர் இறந்து மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் இந்த தோமஸ் இந்தப் பகுதிக்கு குடியிருக்க வந்தார்!”
அதற்கு முன்பு அவர் எங்கே இருந்தார் என்ற தகவல்கள் எதுவும் தெரியுமா?” எதிர்பார்ப்புடன்,
அவர்கள் இருவரையும் பார்த்தபடியே கேட்டார் சிரஞ்சீவி
“சரியாகத் சொல்லத் தெரியாது. ஆனால் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, வெளிநாட்டில் பிஸ்னஸ் பண்ணியதாக ஒருமுறை சொன்னதாக ஞாபகமிருக்கிறது!”
“வெளிநாட்டிலா?” என்று கேட்டுவிட்டு,
சிந்தனையுள் மூழ்கினான் சிரஞ்சீவி!
“ம்.. நீங்கள் சொன்ன அந்த துர்கா சேகர் என்பது யார்?” சிரஞ்சீவியின் கையில் இருந்த அந்த சப்பாத்தைப் பார்த்தபடியே கேட்டார் இன்ஸ்பெக்டர்.
அவர் இப்படிக் கேட்டதும்,
சிந்துஜனின் முகம்,
மீண்டும் வெளுத்துப் போனது!
ஆனாலும்,
அவனுக்கு நிம்மதி ஏற்படும் விதத்தில்,
பதில் ஒன்றைச் சொல்லி,



இன்ஸ்பெக்டரை ஏமாற்றினார் சிரஞ்சீவி!
“அவள் கொழும்பில் இருக்கிறாள் எங்களுக்குத் தெரிந்த ஒரு பெண்! D.S என்ற எழுத்தினால் அவள் ஞாபகம் வந்தது!”
மீண்டும்,
எல்லோரும் கஜு மரத்தடிக்கே வந்தார்கள்.
பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் அங்கேயே விட்டுவிட்டு,
சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு,
தோமஸைப் பார்க்கச் சென்றார் சிரஞ்சீவி!
வரவேற்பு மேசையில் அமர்ந்திருந்த பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு,
“முக்கியமான ஒரு காரியத்திற்காக, தோமஸை சந்திக்க வேண்டும்.!” என்று சொல்லியபடியே,
தனது விஸிட்டிங் கார்ட்டை அந்தப் பெண்மணியிடம் கொடுத்தார்.
அதை வாங்கிக் கொண்டு,
“இப்படி கொஞ்சம் அமர்ந்திருங்கள்!” என்று சொல்லிவிட்டு,
எதிரில் இருந்த அறைக்குள் சென்று
சில நிமிடங்களில் திரும்பி வந்து,
“போங்க சேர், உங்களை வரச் சொன்னார்!” என்றாள்.
அடுத்து,
இருவரும் அறைக்குள் சென்றார்கள்.
“வணக்கம் மிஸ்டர் சிரஞ்சீவி, அமருங்கள். என்னை சந்திக்க நீங்களே நேரில் வந்ததில் மகிழ்ச்சி !” என்று அவர்களை,
மகிழ்ச்சி பொங்க வரவேற்று அமரச் செய்தார் பண்பட்ட மனிதரான தோமஸ்.
அவரைக் கொஞ்சம் உற்றுப் பார்த்தார் சிரஞ்சீவி!
இன்ஸ்பெக்டர் சொன்னது போல்,
அவர் ஓர் உயர்ந்த மனிதராகவே தோற்றமளித்தார்.
“சரி மிஸ்டர் சிரஞ்சீவி என்னால் உங்களுக்கு என்ன ஆகவேண்டும்!”
கேட்டுவிட்டு,
புன்னகையை வதனத்தில் தவழவிட்டபடியே,
அவர்கள் இருவரையும் பார்த்தார் தோமஸ்.
“ம்..செல்வராகவனைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வதற்காகத்தான் நாங்கள் உங்களைத் தேடி வந்தோம்!” இப்படிக் கூறிவிட்டு,

அவர் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் சிரஞ்சீவி
விஜயராகவின் பெயரைக் கேட்டதும்,
அவர் முகத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படும் என்றுதான் சிரஞ்சீவி எதிர்பார்த்தார்.
ஆனால்,
அவர் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை!
சிறிது நேரம் இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு,
“அவரைப் பற்றித் தெரியும், ஆனாலும் அவருடன் பழகியதில்லை, அவர்தான் இப்போது உங்களை இங்கே அனுப்பினாரா?”
“இல்லை, செல்வராகவன் இறந்து விட்டார்!” சொல்லிவிட்டு,
அவர் முகத்தில் ஏற்படப்போகும் மாற்றங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்!
“என்ன, செல்வராகவன் இறந்துவிட்டாரா?” வியப்பு அவர் விழிகளில் விளையாடியது!
“ஆமாம்! மிஸ்டர் தோமஸ், அவரை யாரோ கொலை செய்திருக்கிறார்கள். இந்த தோட்டத்தில் இருக்கும் கஜு மரம் ஒன்றின் மீது அவரது பிணம் கிடக்கிறது!”
“இது மகா பயங்கரம் , கொலைகாரனை கண்டு பிடித்துவிட்டீர்களா?”
“இல்லை அவனைத்தான் நாங்களும் தேடிக் கொண்டிருக்கிறோம்!”
“நீங்களும் ஒரு துப்பறியும் நிபுணர் தானே?”
அவர் இப்படிக் கேட்டதும்
சிரஞ்சீவி மெல்லச் சிரித்தார்!
“நீங்கள் அப்படி நினைத்ததில் தப்பில்லை. ஆனாலும் பொலிஸ் வேலையில் இருந்து நான் இப்போது ஓய்வு பெற்றுவிட்டேன்”
“ஆமாம் உங்களைப் பற்றி நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். சரி என்னிடமிருந்து உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் கூறுங்கள், உங்களுக்கு உதவி செய்வதற்கு நான் தயாராகவே இருக்கிறேன். செல்வராகவுடன் எனக்கு தொடர்புகள் எதுவும் இல்லையென்றாலும், அவரு தூரத்து உறவுக்கார மகளைப்பற்றி எனக்கு நன்றாகவே தெரியும்!”
“ஓ! அப்படியா! சரி நேற்று இரவு அவள் இங்கே வந்தாளா?”
சிரஞ்சீவி இப்படிக் கேட்டதும்,
தோமஸின் முகம்,
திடீரென்று,
இருண்டுவிட்டதை,
சிரஞ்சீவி கவனித்து விட்டார்!
“இல்லை சில நாட்களாகவே நான் அவளைக் காணவில்லை!”
அவர் இப்படிச் சொன்னதும்,
சிரஞ்சீவி படாரென்று திரும்பி,
சிந்துஜனைப் பார்த்தார்!
அவன்,
விழிகளால் ஏதோ சாடை காட்டினான்!

(தொடரும்)

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 97

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | 14 |
| 15 | | 16 | 17 | 18 | |
| 19 | 20 | 21 | 22 | | 23 |
| | | 24 | | 25 | 26 |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) தண்மையான நீர் வெப்பமடைந்து வெம்மை நிலைக்கு மாற்றமடைந்தால் இப்பெயர் பெறும்.

(8) மீனுக்குள் மட்டுமன்றி, சிலவகைத் தாவரங்களின் உடலிலும் காணப்படுவது. இது கூர்மையானதென்பதால் நாம் அவதானமாகக் கையாள வேண்டும்.

(10) மாடுகளில் ஆண் இனத்தைக் குறிக்கும் மரபுச்சொல்.

(12) இரும்பினால் தயாரிக்கப்பட்ட கூர்மையான உபகரணம். பொருட்களை வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம். (தலைகீழான சொல்)

(16) மைதானங்களில் விளையாடப்படும் விளையாட்டுகள் பலவற்றில் பயன்படுத்தப்படுகின்ற கோளவடிவ பொருள்.

(19) ஒழுங்கான தளவுருக்களில் ஒன்று இது. நான்கு நேரான பக்கங்கள், நான்கு அகக்கோணங்கள், நான்கும் சமநீளமுள்ள பக்கங்கள் கொண்ட தளவுரு. (தலைகீழான சொல்)

(25) உறவுமுறைச் சொல் இது. தாயின் சகோதரனை அல்லது தந்தையின் சகோதரியின் கணவனை இந்த உறவுமுறையில் அழைக்கலாம்.

**மேலிருந்து கீழ்**

(1) மிளகாய் போன்று எமது அன்றாட உணவுகளுக்குச் சேர்க்கப்படுகின்ற சுவையூட்டிகளில் ஒன்று இது. உரித்துக் கொண்டே போகலாம். உள்ளே ஒன்றும் இருக்காது.

(3) உலகில் அத்தனை உயிரினங்களும் உயிர்வாழ வேண்டுமானால் இயற்கையின் கொடையான இந்தத் திரவம் இன்றியமையாதது.

(5) கூரிய முட்கள் கொண்ட தாவரம் இது. வரண்ட சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரம். (தலைகீழான சொல்)

(8) சிப்பிக்குள் விளைகின்ற பெறுமதியான பொருள். ஆபரணத் தயாரிப்பில் பயன்படுகின்றது.

(12) வீதிகள் சந்தித்துக் கொள்கின்ற இடம். (தலைகீழான சொல்)

(16) ஊவா மாகாணத்தின் மாவட்டங்களில் ஒன்று.

(23) அந்திப்பொழுதை அல்லது கழுத்தில் சூடிக்கொள்வதை குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 96

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சடப்பொருள் 10. கட்டுரை 14. ஆனி 16. மதி
19. கத்தரி 23. கவிதை 26. முள்

**மேலிருந்து கீழ்**

01. சனி 04. பொட்டு 06. வாள் 10. கனி
13. முத்திரை 14. ஆந்தை 17, மகள் 19. கரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 95

### பாராட்டு பெறுவோர்

**1. ரமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 10, அல் - அமான் மு.ம. கல்லூரி, கல்லொலுவ, மினுவாங்கொடை.

**2. சாஹிட் நூரி**
தரம் 05, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம், திஹாரிய.

**3. எம்.எப். ஹில்மா**
தரம் 06, அரபா தேசிய கல்லூரி, வெலிகம. இல. 29, மொஹமட் லேன், வெலிகம

**4. ஆலா பயாஸ்**
தரம் 05, வீதியாவல மு.வித்தியாலயம், வீதியாவல, நாகொல்லாகொட.

**5. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, இல. 12/12A, இளவதுறை, கம்பளை.

**6. யூசுப் உமர்**
தரம் 04, ஜமியுல் அசர் ம. கல்லூரி, இல. 17/1, தரகமுவ வீதி, உடதலவின்ன, மடிகே.

**7. ஏ.வி. அப்துர் றஹ்மான்**
தரம் 05C, வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை, இல. 207/2, கல்பொக்கை வீதி, வெலிகம.

**8. தி. சயந்தவி**
தரம் 06, மட்/ வின்சன்ட் ம.உ. பாடசாலை, இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 97
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல் : செயற்பால தோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும் பழி**

***தெளிவுரை :***

*ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய் யத்தக்கது அறமே. செய்யாமல் காத்து கொள்ளத்தக்கது பழியே.*

# மண் பானை பொங்கலின் மகத்துவம்




**தை** பிறந்தால் வழிபிறக்கும் தமிழர் அறிவரை. அதேபோல் தமிழர் பாரம்பரித்தை பரைசாற்றும் பண்டிகைகளில் தை பொங்கல் சிறப்பிடம் வகிக்கிற. அருகி வரும் பழக்கவழக்கங்களை அடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்ப்பது எமது கடமையாகும்.

பொங்கலை பொதுவாக மண்பானையில் தான் சமைக்க வேண்டும். அது தான் தமிழரின் தொன்று தொட்டு வரும் வழக்கம். ஆனால் இன்று பலர் பொங்கல் தினத்தன்று பொங்கலை குக்கரில் சமைத்து கொண்டாடி வருகிறார்கள். இது வருங்கால தலைமுறையினருக்கு மண்பானையில் ஏன் பொங்கலை சமைக்க வேண்டும் என்று கற்று தர வேண்டிய காலம். மண்பானையில் பொங்கலை சமைப்பதால், மண்பானையின் நுண் துளைகளின் வழியாக நீராவியும் காற்றும் உணவின் மீது சீராகவும் மெதுவாகவும் பரவும், இதனால் சுத்தம் செய்யப்படாத அரிசி, காய்கறிகளாக இருந்தாலும் மண் பானையில் சமைக்கும் போது கிருமிகள் அழிந்து விடும். அடுப்பைவிட்டு இறக்கினாலும் சூடு ஆறாமல் அதன் தன்மை கெடாமல் பாதுகாக்கும். உணவின் சத்துகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டு எளிதாகச் செரிமானமாகும், உடலுக்கு தரக்கூடிய அனைத்து பலத்தையும் மண்பானை பொங்கல் சேர்த்து விடும். பொங்கல் தினம் என்பது இயற்கையை வணங்கும் முறையாகும். மண்பானை என்பது இயற்கை தந்த வரமே. அதற்கு மனிதன் உருவம் கொடுக்கிறான் அவ்வளவே. ஆகையால் மண்பானையில் பொங்கலை வைத்து இயற்கையை வழிபடுவோம்.

# இவ்வார மழலை




எம். ரிஸ்வி – ஆர். நஸ்லி

சிறுவர் சித்திரங்கள்



**எம்.எஸ்.எப். ஷர்மா**
தரம் 09, பிரைட்டன் சர்வதேச பாடசாலை, காலி.



**ஹமானா ஹமீத்**
செண்ட். மேரிஸ் கல்லூரி, கொழும்பு 03



# 68 வருடங்கள் தொடர் விக்கல்

*ஒரு மனிதருக்கு 68 வருடங்கள் தொடர்ச்சியாக விக்கல் நிற்காமல் வந்திருக்கிறது என்றால் நம்ப முடிகிறதா?*

*தொடர்ந்து 5 நிமிடங்களுக்கு விக்கல் வந்தாலே நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. Charles Osborne என்ற அமெரிக்கருக்கு 1922ஆம் ஆண்டு வந்த விக்கல் 1990ஆம் ஆண்டு வரை நிற்கவே இல்லை.*

*1922ஆம் ஆண்டில் அதிக எடையுள்ள பன்றி ஒன்று அவர் மேல் விழுந்தபோது ஆரம்பித்திருக்கிறது இந்த விக்கல். அன்றிலிருந்து 1990ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு 10 நொடிக்கும் ஒருமுறை விக்கல் வருமாம்.*

*அறுவை சிகிச்சை, ஹார்மோன் தெரபி என என்னென்னவோ செய்து பார்த்தும் இது நிற்கவேயில்லை. 1990ஆம் ஆண்டு அவருடைய 97ஆம் வயதில் தானாகவே விக்கல் நின்றுவிட்டது. ஆனால் விக்கல் இல்லாமல் அவரால் உயிர்வாழ முடியவில்லையோ என்னமோ அதன் பிறகு ஒரே ஒரு ஆண்டு தான் அவர் உயிர் வாழ்ந்துள்ளார்.*

# பனிக்காலத்தில் உறங்கும் பூர்வில் (Poorwill)



மேற்கு மற்றும் மத்திய வட அமெரிக்கக் காடுகளில் காணப்படும் பறவை பூர்வில். இது விசித்திரமாக பனிக்காலத்தில் தூங்கி வழியும் பறவை. இரவில் பறக்கும் பூச்சிகளை உண்டு வாழும் இதன் பழக்க வழக்கங்கள் இதுவரை அறியப்படவில்லை. இந்த பூர்வில் பறவை 'இப்' என்னும் சத்தத்துடன் பாடலைப் பாடிக்கொண்டே பறக்கும். இதை அமெரிக்கப் பழங்குடியினர் 'தூங்கும் பறவை' என்றே அழைத்தனர்.

முதன் முதலில் பூர்வில் பறவையை தூங்கிய நிலையில் கண்ட விஞ்ஞானிகள் இறந்தவிட்டது என்றே நினைத்தனர். காரணம் இதன் கண்கள் மூடிய நிலையில் உடம்பு சில்லிட்டிருந்தது. அந்தப் பறவையைத் தொட்டபோது கண்விழித்து பறந்துவிட்டது. இந்தப் பறவையை பரிசோதனை செய்ததில் பூர்வில் பறவை மாதக் கணக்கில் தூங்கும் போது உடலில் உஷ்ணம் குறைந்து விடுகிறது. அப்போது இதன் உடம்பில் 7 கிராம் அளவு தான் கொழுப்புச் சத்து இருக்கும். இந்தக் கொழுப்பு 70 முதல் 100 நாட்கள் வரை இப்பறவை உணவில்லாமல் உயிர் வாழ உதவி செய்கிறது.

# தோமஸ் கார்லைல் எழுதிய நூல்

பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றை எழுதியவர் தோமஸ் கார்லைல். இந்நூல் உருவான விதம் அதிசயம். கார்லைலின் அபார ஞாபக சக்திக்கு இதுவொரு எடுத்துக்காட்டு. இவர் ஐந்து மாத காலம் தீவிரமாக ஆய்வு நூல் ஒன்றை எழுதி முடித்தார். எழுதி முடித்ததும் தம்மிடமிருந்த குறிப்பை எறிந்து விட்டார்.

பிறகு தமது நண்பரான ஜான் ஸ்டுவர்ட் மில்லிடம் கையெழுத்துப் பிரதியைப் படிக்கக் கொடுத்தார். மில்லுடைய சமையற்காரி அதை ஏதோ குப்பைக் காகிதம் என்றெண்ணி, அடுப்பில் போட்டு எரித்து விட்டாள். இதையறிந்த கார்லைல் வேதனைப்பட்டார். தம் மன வருத்தத்தை மறப்பதற்காக ஏராளமான நூல் வாசித்தார். சற்று வேதனை அடங்கியதும் மீண்டும் எழுத ஆரம்பித்தார். அவரிடம் எந்தக் குறிப்பும் இருக்கவில்லை. தனது நினைவில் இருந்த விபரங்களை கொண்டு எழுதினார். அது அற்புதமான நூலாக அமைந்தது. கார்லைல் எழுதிய நூல்களில் இதுவே சிறந்ததென குறிப்பிடப்படுகிறது.

**சாரணா கையூம்**

# பிரேசிலின் Snake Island



*பிரேசிலின் கடற்கரைக்கு அருகில் இருக்கும் ஒரு தீவுக்குப் பெயர் Ilha da Queimada Grande. ஆங்கிலத்தில் Snake Island. இந்தத் தீவில் மனிதர்கள் வாழ தடைவிதிக்கப்பட்டுள்ளது. காரணம் இங்கிருக்கும் பாம்புகள் தான். உலகிலேயே கொடிய விஷமுடைய பாம்புகளில் ஒன்றான Golden Lancehead Pitviper ஒரு சதுர மீற்றருக்கு ஒரு பாம்பு என்ற கணக்கில் இந்தத் தீவில் அதிகமாக உள்ளன.*

*இந்த வகைப் பாம்புகளில் இருக்கும் விஷத்தில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே விஷமுடைய ferdelance வகைப் பாம்புகள் தான் தென் அமெரிக்காவில் பாம்புகளால் நிகழும் 80% மரணங்களுக்குக் காரணமானவை என்றால், Golden Lancehead Pitviper பாம்புகளின் விஷம் எப்படியிருக்கும் என்று யூகித்துக்கொள்ளுங்கள். இந்த Golden Lancehead Pitviper பாம்புகளைத் தவிர, இத்தீவில் வேறெந்தவகைப் பாம்புகளும் இல்லை.*

*பிரேசில் அரசு, இங்கு வாழை மரங்களைப் பயிரிடவும் மக்களைக் குடியமர்த்தவும் செய்துவந்த முயற்சிகள் அனைத்தும் இப்பாம்புகளால் தடைபட்டு நிற்கின்றன.*

*இதையும் தாண்டி, இந்தத் தீவை பார்வையிட விரும்பினால், பிரேசிலின் கடற்படையினர் தீவுக்கு 100 மீற்றர் தொலைவில் இறக்கிவிடுவார்கள். அங்கிருந்து படகிலோ அல்லது நீந்தியோ இத் தீவுக்குச் சென்றுவரலாம்!*

# காற்றாலை



காற்றாலை (windmill) என்பது, காற்றால் உந்தப்படும், ஆற்றல் உற்பத்தி செய்யும் பொறி ஆகும். காற்று வீச்சினால் ஏற்படக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பொறி அமைக்கப்பட்டு, காற்று விசைச் சுற்றுக் கலன்களில் இருந்து பெறப்படும் இயந்திர ஆற்றல், மின் ஆற்றலாக மாற்றப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. இதில் இருக்கும் நீளமான தகடுகள்/ இறக்கைகள் (Blades) காற்றின் வேகத்தால் சுற்றுவதால், அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் மின்னாக்கி (Generator) இயங்குவதன் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பிக்கக்கூடிய ஆற்றலான காற்றாலை மின்சாரம், சுற்றுச்சூழலை சீரழிக்காத பசுமை ஆற்றலாகக் கருதப்படுகிறது. இந்த வகையில் செய்யப்படும் ஆற்றல் உற்பத்தி சுற்றுச்சூழலைப் பாதிக்காத தூய ஆற்றல் ஆகும். உதாரணமாக, அனல்மின் நிலையங்களின் மூலம் வெளியேற்றப்படும் காற்று மாசுபாடு போன்ற பாதிப்புகள் எதுவும் காற்றாலைகளால் ஏற்படுவதில்லை. பொதுவாக, இது கம்பங்கள் முதலிய பெரிய, உயர்ந்த கட்டடங்களில் இருக்கும். பழங்காலத்தில், காற்றாலைகளின் ஆற்றல் தானியங்களை அரைக்கவும், நீர் இறைக்கவும், மர அறுவைக்கும் பயன்பட்டது. தற்காலத்தில், இவை மின் உற்பத்திக்கே அதிகம் பயன்படுவதால் காற்றுச் சுழலிகள் (wind turbines) என்றும் அழைக்கப்படுகின்றன.

காற்றாலை மின் உற்பத்தியில் சீனா முதல் இடத்திலும், அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் இருக்கின்றன.

**சூழல் பாதிப்புகள்**

பரவலாக காற்றாலை மின்சாரம் பசுமை மின்சாரம் என்று வர்ணிக்கப்பட்டாலும், காற்றாலை மின்சாரம் சுற்றுச்சூழலை குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கிறது. காற்றாலைகளால் ஒலி மாசுபாடு, உயிரினங்களின் வாழ்விடச் சிதைவு, பறவைகளின் வலசைப் பாதையில் இடர் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு காற்றாலைச் சுழலியின் மூலம் ஒரு ஆண்டில் ஒன்றிலிருந்து 64 பறவைகள் வரை இறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. உதாரணமாக ஸ்பெயின் நாட்டில் எல் பெர்டோன் (El perdon) என்ற இடத்தில் அமைந்துள்ள காற்றாலையில் ஆண்டுக்கு 64 பறவைகள் ஒரு காற்றாலையால் இறக்கின்றன. அதேநேரம் தங்கள் ஆய்வுக் காலத்தில் பறவைகளின் மரணங்களே நிகழாத காற்றாலைகளும் உள்ளதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# மஞ்சரி விளையாட்டு

## உலகக் கிண்ணத்திற்கு தயாராகும் வனிந்துவின் டி20 அணி



சிம்பாப்வேயுக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி 2–0 என வென்றது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. என்றாலும் குசல் மெண்டிஸ் தலைமையில் பல மாற்றங்களுடன் களமிறங்கிய இலங்கை ஒருநாள் அணிக்கு இந்த வெற்றி முக்கியமான ஒன்று.

முதல் போட்டி மழையால் முடிவு கிடைக்காதபோதும் இரண்டாவது போட்டியில் 2 விக்கெட்டுகளால் போராடி வெற்றியீட்டிய இலங்கை அணி கடைசி போட்டியில் 8 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பலவீனப்பட்டிருக்கும் சிம்பாப்வேயுக்கு எதிரான இந்த வெற்றிகள் அணியின் உண்மையான பலத்தை முழுமையாக வெளிப்படுத்துவதாக எடுத்துக்கொள்ள முடியாது. என்றாலும் கடந்த கால குறைகள் அணியில் தொடர்ந்து நீடிப்பது மாத்திரம் தெரிகிறது.

ஆரம்ப துடுப்பாட்டத்தில் இருக்கும் பின்னடைவை சமாளிக்கும் முயற்சியாகவே முதல்தர போட்டிகளில் சோபித்து வந்த அவிஷ்க பெர்னாண்டோ அழைக்கப்பட்டார். என்றாலும் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பத்தும் நிசங்க தொடரில் இருந்து நீக்கப்பட்டது பின்னடைவாக அமைந்தது.

அவிஷ்க பெர்னாண்டோ மூன்று போட்டிகளிலும் இரண்டில் டக் அவுட் மற்றும் ஒரு போட்டியில் 4 ஓட்டங்களையே பெற்றார். சரித் அசலங்க முதல் போட்டியில் சதம் பெற மற்றப் போட்டியில் டக் அவுட் ஆனார். குசல் மெண்டிஸும் முதல் இரு போட்டிகளிலும் பெரிதாக துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை. முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க துடுப்பாட்டத்தில் தொடர்ந்து தடுமாறி வருகிறார்.

இந்த நிலையில் ஒருநாள் போட்டிகளில் புதுமுக வீரராக வந்த ஜனித் லியனகே நம்பிக்கை தரும் வகையில் மத்திய வரிசையில் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டாவது போட்டியில் அவரது 95 ஓட்டங்களும் இல்லாமல் இருந்திருந்தால் 209 ஓட்டங்களை துரத்திய இலங்கை அணி தோல்வியை சந்தித்திருக்கும்.

பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க மற்றும் துஷ்மந்த சமீர இருப்பதால் வேகப்பந்து வரிசை பலமாகவே இருந்தது. சுழற்பந்தில் மஹீஷ் தீக்ஷன வழக்கம்போல் சிறப்பாக செயற்பட்டதோடு ஏழு மாதங்களுக்குப் பின்னர் தொடரின் கடைசி போட்டியில் அணிக்கு திரும்பிய வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் தனது சிறந்து பந்துவீச்சாக 5.5 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தினார். அவரது கூக்லி பந்தை சிம்பாப்வே வீரர்களால் சமாளிக்கவே முடியாமல்போனது.

அடுத்து இலங்கை அணி சிம்பாப்வேக்கு எதிரான டி20 போட்டியில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் இன்று (14) நடைபெறுகிறது. இந்த ஆண்டு நடுப்பகுதியில் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுவதால் இந்தத் தொடர் முக்கியமானது.

அதனால் தான் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளின் பின்னர் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸை டி20 அணிக்கு அழைத்திருக்கிறார்கள்.

இது ஒருநாள் உலகக் கிண்ணத்தில் செய்த தவறை திருத்திக் கொள்ளும் முயற்சியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

புதிய டி20 தலைவராக நியமிக்கப்பட்ட வனிந்து ஹசரங்கவின் கீழ் இலங்கை ஆடும் முதல் தொடராகவும் இது அமையப்போகிறது. முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்கவும் குழாத்தில் சேர்க்கப்பட்டிருப்பது மற்றும் குசல் பெரேரா மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகிய அனுபவ வீரர்கள் இணைக்கப்பட்டிருப்பது டி20 உலகக் கிண்ணத்திற்கான அணியை தயார்படுத்தும் முயற்சியாகவே பார்க்க முடிகிறது.

என்றாலும் இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு முதல் சிம்பாப்வே தொடரையும் சேர்த்து மொத்தமாக 9 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடப்போகிறது. அணியை கட்டமைப்பதற்கு இந்த ஒவ்வொரு போட்டியும் முக்கியமானது.

## நியூலாண்ட் சாகசங்கள்



இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் கேப்டவுன், நியூலாண்ட் மைதானத்தில் கடந்த ஜனவரி 3 ஆம் திகதி ஆரம்பமான டெஸ்ட் போட்டி அடுத்த நாளிலேயே இந்தியாவின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது. தொடரும் 1–1 என நிறைவுக்கு வந்தது.

இந்தப் போட்டியில் மொத்தமாக விளையாடப்பட்ட பந்துகள் 642 தான். அதாவது முடிவு ஒன்றுடன் முடிவுக்கு வந்த டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடப்பட்ட மிகக் குறைவான பந்துகள் இதுதான்.

முன்னர் 1932இல் மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா இடையிலான போட்டி 656 பந்துகளுக்கு மட்டுப்பட்டதே சாதனையாக இருந்தது. அதாவது மழையால் மோசமாக சேதத்திற்கு உள்ளாகி இருந்த ஆடுகளத்திலேயே அந்தப் போட்டி நடைபெற்றது.

தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 36 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஆஸி. முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களை எடுத்த நிலையில் தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்ஸிலும் 45 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியை சந்தித்தது.

இதில் தனது 50ஆவது பிறந்த நாளைக் கொண்டாட ஒரு சில வாரங்களே இருக்கும்போது ஆஸி. மிதவேகப் பந்து வீச்சாளர் பேர்ட் அயன்மொங்கல் முதல் இன்னிங்ஸில் 6 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் இரண்டாவது இன்னிங்ஸில் 18 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

என்றாலும் டெஸ்ட் வரலாற்றில் ஆடப்பட்ட மிகக் குறுகிய டெஸ்ட் போட்டி என்ற சாதனை அன்டிகுவா, சேர் விவ் ரிச்சட்ஸ் மைதானத்தில் 2009 இல் நடைபெற்ற இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ஆட்டம் படைத்திருக்கிறது.

வெறுமனே 10 பந்துகள் மாத்திரம் வீசப்பட்ட அந்த டெஸ்ட் போட்டி, மைதானம் விளையாடுவதற்கு தகுதியற்ற சூழலில் இருந்ததால் கைவிடப்பட்டது.

இந்த டெஸ்ட் போட்டியில் மற்றொரு அரிதான நிகழ்வாக இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்திருந்த போதும் அடுத்து வந்த ஐந்து வீரர்களும் டக் அவுட் ஆக அதே 153 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

டெஸ்ட் வரலாற்றில் இதற்கு முன்னர் ஐவர் பூஜ்யத்திற்கு வெளியேறிய ஐந்து சரிவுகள் இடம்பெற்றிருக்கின்றன. முந்தைய சாதனையான 1965இல் ராவல்பிண்டியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு ஓட்டத்தை எடுப்பதற்குள் அறு விக்கெட்டுகளை இழந்ததோடு 2 ஓட்டங்களை பெறுவதற்குள் 7 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

என்றாலும் முதல்தர கிரிக்கெட்டை ஒப்பிடும்போது இது எம்மாத்திரம். ஓட்டம் இன்றியே அடுத்தடுத்து 7 விக்கெட்டுகளை பறிகொடுத்த இரண்டு சந்தர்ப்பங்கள் பதிவாகி இருக்கின்றன. 1872இல் சர்ரே அணிக்கு எதிராக எம்.சி.சி. அணி பூஜ்யத்திற்கே முதல் 7 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

நியூலாண்ட் டெஸ்டில் முதல் நாளில் பகல்போசன இடைவெளிக்கு முன்னரே தென்னாபிரிக்க அணி 55 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இது இந்தியாவுக்கு எதிராக அணி ஒன்று இன்னிங்ஸில் பெற்ற மிக்க குறைந்த ஓட்டங்களாக பதிவானது. என்றாவும் டெஸ்ட் வரலாற்றில் அணி ஒன்று முதல் நாளின் பகல்போசன இடைவெளிக்கு முன்னரே அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்த சந்தர்ப்பங்கள் எட்டு முறை பதிவாகி இருக்கின்றன.

என்றாலும் இத்தனை சாதனைகள் நிகழ்த்திய அந்த நியூலாண்ட் ஆடுகளம் திருப்திகரமானது அல்ல என்று சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தரப்படுத்திவிட்டது.

## எதிர்காலத்தை தீர்மானிக்கும் இளையோர் உலகக் கிண்ணம்



எதிர்கால கிரிக்கெட் வீரர்களை தீர்மானிக்கும் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் இலங்கையில் நடக்க வேண்டியது. சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் இலங்கை கிரிக்கெட்டுக்கு தடை விதித்ததாலேயே போட்டிகள் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டன.

இதனால் சொந்த மண்ணில் ஆடும் சந்தர்ப்பத்தை இழந்த இலங்கை இளையோர்கள் அந்த சாதக சூழலையும் இழந்துவிட்டார்கள். இதற்கு முன்னர் இரண்டு முறை 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தை நடத்தி இருக்கும் இலங்கை, அதில் ஒன்றில் இந்தத் தொடரின் உச்சபட்ச பெறுபேறாக இறுதிப் போட்டி வரை முன்னேறியது.

அதாவது 2000 ஆம் ஆண்டு இலங்கை இளையோர் உலகக் கிண்ணத்தை நடத்தியபோது மலிந்த கஜனாயக்க தலைமையிலான இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியபோதும் அதில் இந்தியாவிடம் கிண்ணத்தை பறிகொடுத்தது. பின்னர் 2006 ஆம் ஆண்டு இந்த உலகக் கிண்ணத்தை கடைசியாக நடத்திய பின் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் போட்டியை நடத்தும் வாய்ப்பையே இலங்கை பறிகொடுத்தது.

எப்படியோ இம்முறை 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் மொத்தம் 16 அணிகள் விளையாடுகின்றன. முந்தைய தொடரில் தாம் பெற்ற நிலை அடிப்படையில் 11 அணிகள் நேரடித் தகுதி பெற்றன. இதில் இலங்கை உட்பட நடப்புச் சம்பியன் இந்தியா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், அயர்லாந்து, மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே மற்றும் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கா அடங்கும்.

எஞ்சிய ஐந்து அணிகளும், அதாவது நமீபியா, நேபாளம், நியூசிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அமெரிக்கா பிராந்திய தகுதிகாண் தொடரில் ஆடியே இம்முறை தொடருக்கு தகுதி பெற்றன. இந்த 16 அணிகளும் ஆரம்ப சுற்றில் நான்கு அணிகளைக் கொண்ட நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு விளையாடவுள்ளன. இதில் ஏ குழுவில் இந்தியா, பங்களாதேஷ், அமெரிக்கா, அயர்லாந்து, பி குழுவில் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், ஸ்கொட்லாந்து, சி குழுவில் அவுஸ்திரேலியா, இலங்கை, சிம்பாப்வே, நமீபியா மற்றும் டி குழுவில் பாகிஸ்தான், நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாள அணிகள் இடம்பெற்றுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 6 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளில் மற்றும் பெப்ரவரி 11 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டி உட்பட மொத்தமாக 41 ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இந்தத் தொடரில் பங்கேற்கும் இலங்கை குழாத்திற்கு கொழும்பு றோயல் கல்லூரியின் சினெத் ஜயவர்தன தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இடது கை துடுப்பாட்ட வீரரான சினெத், இலங்கை இளையோர் அணிக்கு தலைமை ஏற்று அனுபவம் பெற்றவர் என்பதால் அவரது தேர்வு எதிர்பார்க்கப்பட்டது.

15 பேர் கொண்ட இந்த குழாத்தில் தொடர்ந்து இலங்கை இளையோர் அணியில் ஆடும் பல வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். இதில் சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராகவும் வெளிநாட்டில் பாகிஸ்தான் இளையோர் அணிக்கு எதிராகவும் வெற்றிகளைக் குவித்து டுபாயில் கடைசியாக நடந்த 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத்தில் சோபிக்கத் தவறிய பல வீரர்கள் இந்தக் குழாத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

இதன்படி அணித் தலைவர் சினத்துடன் உப தலைவர் மல்ஷ தருப்பத்தி, தினுர கலுபஹன, விஹாஸ் தெளமிக்க, கருக்க சங்கேத், விஷ்வ லஹிரு, புலிந்து பெரேரா, ரவிஷான் பெரேரா, ருசந்த கமகே, ஷருஜன் ஷன்முகநாதன், ரவிஷான் நெத்சர மற்றும் விஷான் ஹலம்பகே ஆகியோர் அணியில் தமது இடத்தை தக்கவைத்திருக்கிறார்கள்.

19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்ற அணியில் இருந்து ஒரே மாற்றமாக சுபுன் வாதுகே சேர்க்கப்பட்டுள்ளார். அவர் தனது பாடசாலையான கண்டி, திரித்துவக் கல்லூரியின் சக வீரர் தினுக தென்னகோனின் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக ஏற்கனவே தென்னாபிரிக்கா சென்றிருக்கும் இலங்கை இளையோர் அணி இன்று ஜனவரி 14 ஆம் திகதி பங்களாதேஷுக்கு எதிராகவும் ஜனவரி 17 ஆம் திகதி இந்தியாவுக்கு எதிராகவும் பயிற்சிப் போட்டிகளில் ஆடும். ஜனவரி 21 ஆம் திகதி சிம்பாப்வேக்கு எதிரான போட்டியுடன் இளையோர் உலகக் கிண்ணத்தை ஆரம்பிக்கும் இலங்கை அணி தொடர்ந்து ஜனவரி 23 நமீபியாவையும் ஜனவரி 28 ஆம் திகதி அவுஸ்திரேலியாவையும் எதிர்கொள்கிறது.

ஒவ்வொரு குழுவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 6 சுற்றுக்கு முன்னேறும். இரண்டு குழுக்களாக மொத்தம் 12 அணிகள் ஆடும் சுப்பர் 6 சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே அரையிறுதிக்கு முன்னேறும். எனவே, நீடித்து திறமையை வெளிப்படுத்தும் அணிக்கே கிண்ணத்தை வெல்ல முடியும்.

இளையோர் உலகக் கிண்ணம் என்பது ஒவ்வொரு அணியினது எதிர்கால கிரிக்கெட்டாகும். இந்தக் கட்டத்தில் சோபிக்கும் அணிகளே பிரதான சர்வதேச கிரிக்கெட்டில் வலுவான கட்டமைப்பை பெற்றிருக்கும். இந்தியா அதிகபட்சமாக ஐந்து முறை சம்பியன் கிண்ணத்தை வென்றிருக்கிறது.

19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்றவர்களான இயோன் மோர்கள் (13 போட்டிகளில் 606) மற்றும் பாபர் அஸாம் (12 போட்டிகளில் 585) போன்ற வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டிலும் முன்னணி வீரர்களாக முன்னேறி இருக்கிறார்கள்.

என்றாலும் சர்வதேச கிரிக்கெட்டில் சோபித்த அனைத்து வீரர்களும் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் ஆடியவர்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. பெரும்பாலான வீரர்கள் 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் கட்டமைப்பில் இருந்து முன்னேறியவர்கள் அல்ல. என்றாலும் தேசிய அணியின் எதிர்காலத்தை அளவிடுவதற்கு இந்த 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் முக்கியமானதாக உள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

இனிய
தை



பொங்கல் வாழ்த்துக்கள்

Senthooram
செந்தூரம்

2024 ஜனவரி 14 ஞாயிற்றுக்கிழமை



பொத்துவில்
அஸ்மின் எழுதிய
"பொங்கலோ
பொங்கல்.."
பாடல்

# ஆடம்பரம் தெரியாத மஸ்க்




புள்ளி விபரங்களின்படி உலகின் பெரும் செல்வந்தர் இலொன் மஸ்க். அவரின் சொத்து மதிப்பு 243.5 பில்லியன் டொலர். இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இரண்டு மடங்குக்கும் அதிகம். ஆனால் அவரது வாழ்வு முறையில் பெரும் செல்வந்தருக்கான எந்தத் தோரணையும் இருக்காது. அதிலே ஆடம்பர வாழ்க்கை, கொண்டாட்டங்கள் எதுவும் இல்லை.

உண்மையில் அவர் ஒரு சராசரி மனிதனை விடவும் அதிக நேரம் வேலை பார்க்கிறார். மற்ற உலக மகா செல்வந்தர்கள் போன்று அவருக்கு சொந்தமாக வீடு கூட கிடையாது. அதாவது அவரது வாழ்வு முறையில் பெரும் செல்வந்தருக்கான எந்தத் தோரணையும் இருக்காது.

மஸ்க் பெரும் செல்வந்தராக பிறக்கவில்லை. ஒரு டொலருக்குள் சாப்பிட்டு சிக்கன வாழ்க்கை வாழ்ந்தவர். பணம் கொட்டியபோது வீடுகளை வாங்கிக் குவித்தார். என்றாலும் 2020இல் தன்னிடம் இருக்கும் ஏழு ஆடம்பர வீடுகளையும் விற்றுவிட்டார். அதற்கு பதில் இரண்டு அறைகள் கொண்ட சிறு வீட்டிலேயே வாழ்கிறார்.



அதற்கு முன் பெரும்பாலும் தனது டெஸ்லா நிறுவனத் தலைமையகத்தில் இருக்கும் இருக்கையில் படுத்து காலத்தை கழித்திருக்கிறார்.

அவரிடம் சொந்தமாக ஆடம்பர கார்கள் கூட இல்லை. தனிப்பட்ட விமானம் ஒன்றை வைத்திருக்கிறார். அதுவும் வேலைக்காக மாத்திரம்தான் அதனை பயன்படுத்துகிறார். விடுமுறை பயணங்கள் செல்வதில்லை.

மஸ்க் வாரத்திற்கு 85 தொடக்கம் 100 மணித்தியாலங்கள் வேலை செய்கிறார். சாப்பாட்டு நேரத்தைக் கூட வேலை தொடர்பிலான சந்திப்புகளை மேற்கொண்டு காலத்தை சேமிக்கப் பார்ப்பார். ஆறு மணி நேரம்தான் உறங்குவாராம்.

அவர் ஒரு காலத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தவர் என்று மஸ்கின் காதலி கிறிம்ஸ் ஒரு தடவை கூறியிருந்தார். அவர் தனது பழைய படுக்கையைக் கூட மாற்ற மறுக்கிறார் என்கிறார். தனது காதலனின் சிக்கன வாழ்க்கையை சாடும் அவர், பீனட் பட்டரை எட்டு நாட்களுக்கு வைத்து தொடர்ச்சியாக சாப்பிடுவார் என்கிறார். இந்த ஜோடிக்கு இரண்டு குழந்தைகள் இருந்தபோதும் இருவரும் திருமணம் செய்யவில்லை.

காதலியிடம் இருந்து விலகிய மஸ்க் இரண்டு பெண்களை மூன்று தடவைகள் திருமணம் செய்திருக்கிறார். அதாவது தனது இரண்டாவது மனைவி டலூலா ரலியை இருமுறை திருமணம் புரிந்திருக்கிறார்.

தனது தனிப்பட்ட வாழ்வை இரகசியமாக வைத்திருக்க முயற்சிக்கும் மஸ்க் அது வெளியுலகுக்கு தெரியவருவதை போதுமான வரை தவிர்த்துக் கொள்கிறார். எவ்வளவுக்கு என்றால் பிறந்த நாளைக் கூட கொண்டாட மாட்டார். ஒருமுறை அவரது 50 ஆவது பிறந்த நாளுக்கு என்ன பரிசு வேண்டும் என்று ரசிகர் ஒருவர் கேட்டதற்கு, விண்கலம் ஒன்றை தாருங்கள் என்றார்.

என்றாலும் இலொன் மஸ்க் என்பவர் ஒரு தேர்ந்த சமூக தொடர்புகளை கையாள்பவர் என்றும் அவரது வாழ்வு முறை என்பது வெளி உலகுக்கு காண்பிப்பதை விடவும் மாறுபட்டது என்றும் கூறுபவர்களும் இருக்கிறார்கள். அதாவது மக்கள் தன்னைப் பற்றி எதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை அவரும் அவரது குழுவும் நன்றாக தெரிந்து வைத்துள்ளனர் என்று இவ்வாறு விமர்சிப்பவர்களின் கருத்து.

சமூக ஏற்றத்தாழ்வு என்பது எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது. எனவே தனது செல்வத்தை விமர்சனம் இன்றி கையாள்வது பற்றி மஸ்க் நன்றாகவே தெரிந்திருக்கிறார். மற்றும் கடுமையான உழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளாலேயே அதிக பணம் சம்பாதிக்க முடியும் என்று அவர் உலகுக்கு காண்பிக்க முயல்கிறார் என்பது சிலரின் கூற்று.

இதனாலேயே அவர் சராசரி வாழ்க்கை வாழ்கிறார், அடிக்கடி தொலைக்காட்சி, சமூக தளங்களில் தோன்றுகிறார் என்பது தர்க்கம்.

ஆனால் அவரது நிர்வாக நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும். கொவிட் பெருந்தொற்றுஆரம்பித்தபோதுபலரும் வேலைகளை இழந்தும், வருமானங்களை இழந்தும் பெரும் நெருக்கடியை சந்தித்தார்கள். உலகப் பெருளாதாரமே சிக்கலை சந்தித்தது. அந்த நேரத்தில் மஸ்கின் டெஸ்லா நிறுவனத்தின் பங்கு விலை 700 வீதம் உயர்ந்தது. மஸ்கின் சொத்து மதிப்பும் 140 பில்லியன் டொலர்களாக அதிகரித்தது. அப்போதே அவர் திடீரென்று உலக பெரும் செல்வந்தராக மாறினார்.

அந்தப் பணத்தில் அவர் ட்விட்டரை 44 பில்லியன் டொலருக்கு வாங்கினார். ட்விட்டரை வாங்கிய விரைவிலேயே அதன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் அனைத்து நிர்வாகக் குழுக்களையும் கலைத்தார்.

ட்விட்டரை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த அவர், வெறுமனே ஒரு மின்னஞ்சல் செய்தியை அனுப்பி 3700 பேரை வேலையில் இருந்து தூக்கினார். ட்விட்டர் இந்தியாவில் வேலைபார்த்த 230 ஊழியர்களில் 180 பேர் நீக்கப்பட்டார்கள். அந்த நடவடிக்கை கடுமையாக இருந்ததோடு இதுவரை இலவசமாக இருந்த ட்விட்டரிலும் கட்டண முறைகளை அறிமுகம் செய்தார். இதுவெல்லாம் மஸ்கின் உண்மை முகத்தை காட்டுகிறது என்பது அவரை விமர்சிப்பவர்களின் கூற்று.



# ஆட்டுடன் ஆடவருக்கு கட்டாயத் திருமணம்



தென் சூடானில் சார்ள்ஸ் டம்பே என்ற ஆடவர் ஆடு ஒன்றுடன் பாலியல் நடத்தையில் ஈடுபட்டதை அந்த ஆட்டின் உரிமையாளர் கண்டுபிடித்துவிட்டார். அந்த ஆடவரை பிடித்துக் கட்டிய அவர் ஊர் பெரியவர்களை அழைத்து பஞ்சாயத்து பேசினார்.

அப்போது, குற்றம் செய்த ஆடவர் அந்த ஆட்டை திருமணம் புரிவதற்கு ஊர் தலைவர்கள் தீர்ப்புச் சொன்னார்கள். சும்மாவல்ல, ஆட்டு உரிமையாளருக்கு வரதட்சணையாக 15,000 சூடான் டொலர்களை கொடுக்கவும் உத்தரவிடப்பட்டது. அரை வரதட்சணையுடன் டம்பேவுக்கு அந்த ஆட்டை திருமணம் செய்ய வேண்டி ஏற்பட்டது. அந்த ஆட்டுக்கு கேலியாக ஊர் மக்கள் “ரோஸ்” என்று பெயர் சூட்டினார்கள்.

நான்கு மாதங்களே உயிர்வாழ்ந்த அந்த ஆடு பிளாஸ்டிக் பை ஒன்று தலையில் சிக்கி மூச்சுத் திணறி உயிரிழந்தது.

2006 ஆம் ஆண்டு நடந்த இந்த சம்பவத்தை பி.பி.சி. தொலைக்காட்சி செய்தியாக வெளியிட்டதை அடுத்து உலகெங்கும் பிரபலம் அடைந்தது. இதனை யொட்டி சூடானிய சமூகங்கள் இடையே வழங்கப்படும் இப்படியான வினோதமான தீர்ப்புகள் 2013 ஆம் ஆண்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.



நண்பர் 1 : என்ன சார்... உங்க பையன் அவனோட தாத்தா மேல ஏறிப் படுத்துகிட்டு இருக்கான்...?
நண்பர் 2 : நான்தான் சொன்னேனே.. எங்கப்பா படுத்த படுக்கையா ஆகிட்டாருன்னு..

ராமன் : பால் வியாபாரம் செய்கிறீர்களே! கட்டுபடியாகிறதா?
முராரி : மாட்டின் சொந்தக்காரர்கள் கண்களில் அகப்பட்டுக் கொள்ளாதவரை பரவாயில்லை.



ஒருவர் : சார்... ஆறு வருஷத்துல டெபாசிட் பணம் டபுள் ஆகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?
அதிகாரி : டபுள் ஆகும்னுதானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே



வேலு : அதான் டி.வியில் நியூஸ் போடுறானேன்னு நியூஸ் பேப்பரை நிறுத்தினது தப்பாபோச்சு..
பாக்கி : ஏன்... என்னாச்சு?
வேலு : இப்பப் பாருங்க.. ஓசி பேப்பர் வாங்க வரும் பக்கத்து வீட்டுக்காரரு, கொஞ்சம் டி.வி இருந்தாக் கொடுங்க.. நியூஸ் பார்த்துட்டு தர்றேன்னு சொல்றாரு.





ராணி : நேற்றைய பார்ட்டில, உன் கணவர் குடிச்சிருப்பதை எப்படி கண்டுபிடிச்சே?
வேணி : ஜன கண மனவிற்குக் கைதட்டினாரே

மாணவன் 1 : வர வர நம்ம டீச்சருக்கு ஞாபகமறதி அதிகமாயிட்டே வருது?
மாணவன் 2 : எப்படிடா சொல்றே?
மாணவன் 1 : திருக்குறளை நம்ம டீச்சரே போர்டுல எழுதிட்டு இதை எழுதியவர் யாரு? ன்னு கேட்கிறாங்க





பாக்கி : 22 ம் நம்பர் பஸ் எங்கே வரும்?
வேலு : ரோட்ல தான்!

வேணியா : இன்னும் முப்பது வருஷம் இளமையா இருக்க வழி இருக்கா?
ராஜி: எதுக்கு?
வேணியா : ஒரு மெகா சீரியல்ல கதாநாயகி வாய்ப்பு கிடைச்சிருக்கு





பெரியசாமி : எங்க தலைவர் ஒரு திறந்த புத்தகம் மாதிரி.

சின்னசாமி: ஓ! அதுதான் நேத்து ரோட்டிலே போட்டு ஆளாளுக்குப் புரட்டி எடுத்தாங்களா?

ஆசிரியர் : பூமி தன்னைத்தானே சுத்தி சூரியனைச் சுத்துமா? இல்ல சூரியன் தன்னைத்தானே சுத்தி பூமியைச் சுத்துமா?
மாணவன் : எனக்குத் தலையைச் சுத்துது சார்.



ஒருவர் : நீங்க இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இதுவரைக்கும் நான் உங்களைத் தவிர, வேற எந்த டாக்டர் கிட்டேயும் போனதில்லை
மற்றொருவர் : நானும் அப்படித்தான் இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இதுவரைக்கும் உங்களைத் தவிர, வேற எந்த பேஷண்ட்டுக்கும் ட்ரீட்மெண்ட் கொடுத்ததில்லை





கோபு : டேய் பாபு எனக்கு லைப்பே ஒரு பிடிப்பு இல்லே தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணுதுடா
பாபு : அட அசடு அதுக்காகத் தற்கொலை பண்ணிக்காதே. கல்யாணம் பண்ணிக்கோ. அது போதும்.



முட்டாள் 1 : சார்... என் பேரு கந்தசாமி.... சொந்த ஊரு பழனி...
முட்டாள் 2 : அதுக்கென்ன இப்போ..
முட்டாள் 1 : ஆயிரம் ரூபா கடன் வேணும். ஊர் பேர் தெரியாதவனுக்கு எல்லாம் கடன் குடுக்க முடியாதுன்னு சொன்னீங்களே.. அதான் அறிமுகப் படுத்திக்கிட்டேன்.



சித்ரா : ஏழு வருஷமா லவ் பண்றோம். இன்னும் நீங்க கல்யாணப் பேச்சையே எடுக்கலையே?
கோபு : சரி சித்ரா, இப்ப கேட்கறேன்.. எப்போ உன் கல்யாணம்?

முட்டாள் 1 : என்னங்க... செருப்பு காலை கடிக்குது
முட்டாள் 2 : அப்ப மாலைல போட்டுக்கங்க



# இனிய நந்தவனம் சஞ்சிகையின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா
















இனிய நந்தவனம் சஞ்சிகையின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா திருச்சியில் உள்ள பிரீஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. விழாவில் வெளியிடப்பட்ட சஞ்சிகையின் ஆண்டு விழா மலரின் முதலாவது பிரதியை இலங்கையில் இருந்து கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமர், நூலாசிரியர் இனிய நந்தவனம் சந்திரசேகரனிடமிருந்து பெற்றுக் கொண்டார். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் தொழில் அதிபர் அப்துல் வஜீத், சமூக சேவையாளர் திருச்சி டொக்டர். கே. சீனிவாசன் உட்பட பிரமுகர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

# தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்









புதுவருடத்தை முன்னிட்டு மீண்டுமொரு இதமான இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் கவிக்கமல் , பாசில், இணைந்து வழங்கிய “அக்ஷரா” “வீனஸ்” இசைக்குழுவினர்களின் “இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், பவானி, கீதா, சான், ஜெயமோகன், டாக்டர் ஜமீல் கலந்து சிறப்பித்த “தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் இன்னிசை மாலை" கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெற்றது.


ஹமிர்த வர்ஷினி


Shanthi Banusha


Nilanthi Priyadarshini


Bruno is celebrating 3 years birthday.


Tuan Nihar


08.01.2024 Leela Palace Chennai இல் Europe நாடுகளுக்கான திரைப்பட விநியோகஸ்தர்களுடன் முக்கிய சந்திப்பில்....


Shankavi Suresh






தேசிய லொத்தர் சபை உறுப்பினர்களுக்கிடையில் வருடாந்தம் நடத்தப்படும் சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி 06.01.2024 அன்று கொழும்பு 05, ஷாலிகா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இம்முறை நிதிப் பிரிவைச் சேர்ந்த அணி 70,000.00 ரூபா பணப் பரிசையும் சம்பியன் கிண்ணத்தையும் வென்றது.

இரண்டாம் இடத்தை விற்பனைப் பிரிவு அணி பெற்றதோடு, அவ் அணிக்கு 50,000.00 ரூபா ரொக்கப் பரிசுடன் கோப்பையும் கிடைத்தது.

இந்தப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக நிதிப் பிரிவைச் சேர்ந்த தனுஷ்க மதுரங்கவும், சந்தைப்படுத்தல் பிரிவின் லலித் குமார சிறந்த துடுப்பாட்டக்காராகவும் , நிதிப் பிரிவைச் சேர்ந்த அசங்க விஜேவர்தன இந்தப் போட்டியின் நாயகனாகவும் தெரிவானார்கள். பெண்களுக்கான போட்டியில் சந்திரா ஹேரத் தலைமையிலான அணி சம்பியனாகவும், தனுஜா சம்மானி தலைமையிலான அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன.

தேசிய லொத்தர் சபையின் தலைவர் கலாநிதி சமிர சி.யாப்பா அபேவர்தன, பணிப்பாளர் கலாநிதி கித்சிறி மஞ்சநாயக்க, பணிப்பாளர் சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன உள்ளிட்டோர் கௌரவ அதிதிகளின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# பொத்துவில் அஸ்மின் எழுதிய "பொங்கலோ பொங்கல்.." பாடல்





பொத்துவில் அஸ்மின் எழுதிய "பொங்கலோ பொங்கல்.." பாடல் வெளியானது.

இலங்கையின் முன்னணி சிங்கள தொலைக்காட்சி அலைவரிசையான தெரண Tv பிரதித் தலைவர் லக்சிரி விக்ரமகே வழிகாட்டலில், தெரண தொலைக்காட்சி தயாரிப்பில் உழவர் திருநாள் தினத்தில் தைப் பொங்கல் சிறப்பு காணொளிப்பாடல் "பொங்கலோ பொங்கல்.." வெளியாகியுள்ளது.

சிங்கள இசையுலகில் பிரபலமான இசையமைப்பாளர் சத்துரங்கன டி சில்வா இசையமைக்க, தமிழ் சினிமா பாடலாசிரியரும் பிரபல கவிஞருமான பொத்துவில் அஸ்மின் வரிகளை எழுதியுள்ளார்.

2021 ஆம் ஆண்டு வெளியான "மொட்டுவிட்ட பூங்கொடி","நிலவா நடநடந்து" ஆகிய பாடல்களின் பின் சத்துரங்கன இசையில் பொத்துவில் அஸ்மின் எழுதியுள்ள முதல் பொங்கல் பாடல் இதுவாகும்.

இப்பாடலினை சக்தி Fm சூப்பஸ்டார் நிகழ்ச்சியில் மகுடம் சூடிய பாடகர் வவுனியா கந்தப்பு ஜெயரூபன் சிறப்பாக பாடியுள்ளார்.

கந்தப்பு ஜெயந்தன் இசையில் பொத்துவில் அஸ்மின் எழுத்தில் இவர் ஏற்கனவே பாடிய "பச்ச முத்தம் நச்சுன்னு தான் தாடி புள்ள" பாடல் சிறந்த கிராமிய பாடலுக்கான தேசிய விருதினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பொங்கலோ பொங்கல் பாடலினை பொங்கல் தினத்தில் தெரண தொலைக்காட்சி அலைவரிசையிலும் etune Youtube தளத்திலும் இசை ரசிகர்கள் கண்டுகளிக்கலாம்.





## சென்னையைச் சேர்ந்த

# உணவியல் நிபுணர், எழுத்தாளர் மஞ்சுளா காந்தி

**உங்களைப் பற்றிய அறிமுகம்**

நான் மஞ்சுளா காந்தி. பிறந்தது புதுச்சேரியில். திருமணமாகி தற்போது 23 வருடங்களாக சென்னையில் வசிக்கிறேன். நான் உணவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கின்றேன். சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவமனையில் 5 ஆண்டுகள் உணவியல் நிபுணராகப் பணியாற்றியுள்ளேன். தற்போது என் கணவருடன் சேர்ந்து சுய தொழில் செய்கின்றேன்.

**எழுத்து துறையில் ஆர்வம் ஏற்படக் காரணம்?**

மகாகவி பாரதி வாழ்ந்த புதுவை மண்ணில் பிறந்த காரணமோ என்னவோ அவரின் எழுத்தால் ஈர்க்கப்பட்டு தமிழ்க் கவிதைகள் எழுதத் தொடங்கினேன். பத்தாம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி கற்றதும் தமிழைக் காதலிக்க மற்றுமொரு காரணமாக அமைந்தது.

**கவிதைகள் எழுதுவற்கென்று ஏதேனும் யுக்திகள் பயன்படுத்துகின்றீரா?**

அப்படி எந்த யுக்திகளும் பயன்படுத்துவது இல்லை.



நான் மரபுக்கவிதைகள் எழுதுவதில்லை. எனினும் எனது கவிதைகளில் இலக்கணங்களும் சந்தங்களும் இருப்பதாக பல சான்றோர் கூறுவதுண்டு. முறையான இலக்கணம் கற்று மரபுக் கவிதைகள் எழுதும் ஆர்வமும் உண்டு. எவ்வகைக் கவிதைகளாக இருந்தாலும் வாசிப்பவர்களுக்கு எளிதாகப் புரிவதோடு நான் சொல்ல எண்ணும் செய்தி அவர்களை சரியாக அடைய வேண்டும் என்பதே என் எண்ணம்.

அதனால் நான் எப்போதும் எளிமையான சொல்லாடல்களையே உபயோகிப்பதுண்டு. ஒருவேளை அதுவே என் யுக்தியாக இருக்கலாம்.

**இலக்கியப் பயணத்தில் உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்கள்?**

பள்ளிப்பருவத்திலேயே கவிதைகள் எழுதத் துவங்கிய நான் என் குடும்பத்தார் மற்றும் நண்பர்களால் மிகவும் ஊக்குவிக்கப்பட்டு வந்தேன். எனக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று விரும்பிய என் கணவர் என் முதல் நூலான "சிறகு" எனும் கவிதை நூலை 2007 ஆம் ஆண்டு நான் வெளியிட பேருதவி செய்தார். முகநூலிலும் புலனத்திலும் என் கவிதைகளைப் பதிவிட்டுக் கொண்டிருந்தேன்.



பிறகு தற்போது மருத்துவம் பயின்று வரும் என் மகன் தர்ஷன் எனக்காக ஒரு வளையொளிப் பக்கத்தை (YouTube) ஏற்படுத்திக்கொடுத்தார். "மஞ்சுவின் கவிதை கேளுங்கள்" என்ற அந்தப் பக்கத்தில் என் கவிதைகளை "ஒலிஒளி வடிவில் பகிர்ந்து வந்தேன்.

பின் புதுவையின் "ஒரு துளிக் கவிதை" அமைப்பாளர் ஐயா முனைவர் அமிர்தகணேசன் அவர்கள் தந்த ஊக்கமும், உந்துதலும் என்னை இலக்கிய உலகில் மகிழ்வுடன் பயணிக்க உதவியது.

இன்று பல பத்திரிகைகளில் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதி வருகின்றேன். இதுவரை மூன்று கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளேன்.

**கவிதைகள் எழுதுவதற்கென்றே நேரம் ஒதுக்கி எழுதுகின்றீரா அல்லது எப்போது உங்களுக்குள் கவிதைகள் பிறக்கின்றன?**

கவிதைகளுக்காக நேரம் ஒதுக்குவதில்லை. எப்போதெல்லாம் என் மனதில் கவிதைகள் தோன்றுகிறதோ அதுவே என் கவிதைகளுக்கான நேரம். பெரும்பாலும் அமைதியான சூழலில் கவிதைகள் எழுதுவது வழக்கம். இந்தக் கேள்விக்கான பதிலாக என் கவிதை ஒன்று உண்டு அதன் சில வரிகள்,

"ஒவ்வொரு நாளும்
பிரசவிக்கிறேன் .....
சுகப்பிரசவம்தான்...
சில நாட்களில்
இரண்டு மூன்று கூட ....
ஒரு நேரம்
ஓய்வறையில்
பல நேரம்
பள்ளியறையில்
சட்டென்று சிலநாள்
சமையலறையில்
மௌனப் பிரயாணங்களில்
மகிழுந்தில் கூட ......

(07ஆம் பக்கம் பார்க்க)

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி

## உணவியல் நிபுணர், எழுத்தாளர்... (06ஆம் பக்கத் தொடர்)

**உங்கள் புத்தக வெளியீடுகள் பற்றி கூறுங்கள்**

நான் இதுவரை மூன்று புத்தகங்கள் வெளியிட்டுள்ளேன். நான்காவது கவிதை நூல் தயாரிப்பில் உள்ளது. எனது முதல் நூலான "சிறகு" 2007 ஆம் ஆண்டு (தர்ஷன் பதிப்பகம்) பட்டிமன்றப் புகழ் திரு. சாலமன் பாப்பைய்யா அவர்களால் வெளியிடப்பட்டது.

பின் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் 2021 ஆண்டு "குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்" (ஒரு துளிக்கவிதை புதுச்சேரி) என்ற என் இரண்டாம் நூலை முனைவர் தி.அமிர்தகணேசன் அவர்களின் தலைமையில் "நக்கீரன்" இணை ஆசிரியர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் அவர்கள் வெளியிட்டு மகிழ்வித்தார்.

மூன்றாவதாக, மண்ணை விட்டு மறைந்தாலும் என்றும் என் மனதிலே வீற்றிருக்கும் என் அன்பு அப்பாவின் நினைவாக "அப்பஞ்சாமியின் க(வி)தை என்ற தலைப்பில் (ஒரு துளிக்கவிதை புதுச்சேரி) அவரின் நினைவு நாள் மலராய் வெளியிடப்பட்டது.

**சான்றிதழ்கள் விருதுகள் ?**

**விருதுகள் :**

★ "தமிழன்பன் எண்பது விருது" (2022)

★ "தமிழ்ப்பணிச்செம்மல் விருது" (2022)

★ "திருக்குறட்செம்மல்விருது" (2022)

★ "சாதனைப் பெண்கள் விருது" (2022)

★ "கவிஞர் வாலி விருது" (2022)

★"கமலாதாஸ் ஈரோடு தமிழன்பன்வி ருது" (2023)

**சான்றிதழ்கள்:**

★ தேசிய கல்வி அறக்கட்டளை கல்லிடைக்குறிச்சி கண்ணதாசன் கோட்டம் நடத்திய உலக சாதனை நிகழ்வில் பங்கேற்பு சான்றிதழ்.

★ உலகப் பெண் கவிஞர் பேரவை, அமெரிக்க தமிழ் ஊடகம், ஒரு துளி கவிதை இணைந்து நடத்திய பன்னாட்டு கவியரங்கத்தில் கலந்து கொண்டதற்கான பங்கேற்பு சான்றிதழ் (2021)

★ உலக சாதனையில் மகாகவியின் கவிதைகளோடு நான் என்ற தலைப்பில் பன்னாட்டு ஐக்கிய மகளிர் பேரவை நடத்திய நிகழ்வில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் (2021)

★ நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ் கல்லூரி மதுரை பைந்தமிழ் இலக்கியப் பேரவை இணைந்து நடத்திய, உலக யோகா நாள் வினாடி வினா நிகழ்வில் வெற்றி பெற்றதற்கான பாராட்டுச் சான்றிதழ் (2022)

★ வல்லினச்சிறகுகள் இதழின் நூறாவது வாரமலர் 24 மணி நேர தொடர் சாதனை நிகழ்வில் பங்கேற்பு மற்றும் ஒருங்கிணைப்பு செய்ததற்கான பாராட்டுச் சான்றிதழ்.

★ அட்லாண்டா தமிழ் நூலகம், ஒரு துளி கவிதை, உலகப் பெண் கவிஞர் பேரவை, வல்லின சிறகுகள் இணைந்து அமெரிக்காவில் முதன்முதலாக நடத்திய புத்தகக் கண்காட்சியில் ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவராய் செயல்பட்டதற்கான பாராட்டுச் சான்றிதழ்

**பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள்? சவால்களை எப்படி கடந்து வந்தீர்கள்?**

பெண்கள் என்றாலே கட்டாயம் பல கட்டங்களில் பல சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. அவற்றையும் மீறி முன்னேற நம் மனதை திடமாகவும் தைரியமாகவும் தயார்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

நம்மை ஊக்கப்படுத்தி போற்றுவோர்களைக் கண்டு மகிழ்ந்திடும் அதேவேளை பொறாமையால் தூற்றுவோர்களை கண்டுகொள்ளாமல் நகர்ந்து செல்லும் நயம் தெரிந்து விட்டால் போதும் எந்த உயரத்தையும் எளிதாக தொட்டுவிடலாம்.

**இலக்கியம் தவிர்ந்து வேறு துறைகளிலும் ஈடுபாடு உண்டா?**

ஆம், இலக்கியம் தவிர எனக்கு பல கலைகளில் மிகுந்த ஆர்வங்கள் உண்டு. அழகிய ஓவியங்கள் வரைவது எனக்குப் பிடிக்கும், அழகான கோலங்கள் வரைவேன் அதற்கான நிறைய ரசிகர்களும் உள்ளனர், தவிர கைவினைப் பொருட்கள் செய்வதிலும் மிகுந்த ஆர்வமுண்டு. கற்றது உணவியல் என்பதால் சமைப்பதிலும் கூட நாட்டம் அதிகம்.



உணவியல் நிபுணர் என்ற வகையில் இங்கு ஏனையோர்க்கும் பயன்படக்கூடிய சில குறிப்புகளை கூறுங்களேன்

உணவே மருந்து என்ற காலம் மாறி, மருந்தே உணவாக மாறும் காலமாக ஆகிவிட்டது. அப்போதெல்லாம் நாம் உண்ட நல்ல இயற்கையான சரிவிகித உணவுகளை யாரும் தற்போது விரும்புவதில்லை.

அதனால் தான் பல்வேறு நோய்கள் உருவாகி வருகின்றன. மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, உயிர்ச்சத்து, உலோகச்சத்து போன்ற அனைத்தும் நாம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே நிரம்பி இருக்கின்றன. அவற்றை சரிவிகிதத்தில் உண்ணாமல் அதிக அளவு மாவுச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகளை மட்டுமே உண்பதால் நலமின்மை நம்மை நாடிவருகின்றது.

எனவே, கொழுப்புச்சத்து, மாவுச்சத்து நிறைந்த உணவுகளை குறைவாகவும், செரிமானத்திற்கும், நல்லாரோக்கியத்திற்கும் உதவும் புரதம், உயிர்ச்சத்து, உலோகச் சத்து நிறைந்த உணவுகளை அதிகமாகவும், என சரிவிகித உணவு முறையை உட்கொண்டால் மகிழ்வாக வாழலாம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமன்றோ?

**வேறு ஏதும் கூற விரும்புகினீர்களா?**

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்"

என்ற மகாகவியின் வாக்கிற்கேற்ப நல்லவற்றையே எண்ணி அதனையே செயல்படுத்தி வாழ்வது நம்மை மென்மேலும் உயர்த்தும். தாயாம் தமிழவளை உயிரெனக் கொள்வோம் தரணியில் வெல்வோம்.

## கட்டார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் பணியாற்ற இலங்கையை சேர்ந்த ஊடகவியலாளர்கள் தெரிவு

கட்டார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியின் உத்தியோக பூர்வ தலைமை ஊடக மையம் நேற்று (05) முஸரிஃப் டவுன்டவுனில் திறந்து வைக்கப்பட்டது.




இதில் ஊடகவியலாளர்களுக்காக திறந்திருக்கும் தலைமை ஊடக மையத்தில் செய்தியாளர் சந்திப்பு அறை மற்றும் இலவச இணைய வசதிகள், ஸ்டுடியோக்கள், தகவல் தொழில்நுட்ப வசதி, புகைப்படக் கலைஞர் சேவைகள் மற்றும் உணவகம் உள்ளிட்ட ஏராளமான வசதிகளை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வகையில் இப்போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்கை தமிழ் ஊடகம் சார்பாக ஜே.எம்.பாசித், அஸ்வர் ரிஸ்வி, ஹுபைப் முஸம்மில், மொஹமட் சிராஜ், ராஜயோகன், நிஹாசா நிசார், ஆஷா பிரியா, பாத்திமா ஆஷிகா, வசந்த் குமார், மொஹமட் ஆதில் மற்றும் ஏ.ஜே. எம்.ஜப்ராஸ் ஆகியோர் பணியற்றவுள்ளனர்.

இதில் கட்டார் நாடானது பிரதானமாக ஊடகவியலார்களை கெளரவிக்கும் வகையில் இவர்களுக்கு இப்படியான வாய்ப்பை வழங்கியுள்ளதோடு இவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அமைத்துக்கொடுத்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும்.

## புரட்சிக் கலைஞர் விஜயகாந்திற்கு இரங்கல் அதிர்ச்சியில் கலையுலகம்

கலாவிபூஷணம் இரா. தில்லைராஜன்





ஒரு சிறந்த கலைஞரை, நடிகரை, சமூக சேவகரை, அரசியல்வாதியை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறந்த மனிதரை இழந்தது ஒரு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலி. தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்னும் பாரதியின் தாரக மந்திரத்திற்கேற்ப மக்களின் பசி தீர்த்த வள்ளல். எத்தகைய இடையூறுகள் தன்னை சூழ்ந்த போதும் அவற்றை தகர்த்தெறிந்து தாம் கொண்ட கொள்கையில் தன் இலட்சியத்தை இலகுவாக அடைந்து காட்டிய பெருந்தகை அவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவர் விட்டுச் சென்ற கலையுலக சமூகப் பணிகளை இறையருளால் தொடர வேண்டும் என பிரார்த்திக்கிறோம்.

அறிவியல் நாடக முன்னேற்ற மன்றத் தலைவரும் விஜயகாந்த் நற்பணி மன்ற நிறுவனரும் மற்றும் "For your Requirements" அமைப்பின் ஸ்தாபருமாகிய கலாவிபூஷணம் தில்லைராஜன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**விஜயகாந்த் நற்பணி மன்றம்**
**"For your Requirements"**

Senthooram செந்தூரம்





# நாயகனாக பீட்டர் ஹெய்ன்

தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட பல்வேறு மொழி திரைப்படங்களில் ஸ்டன்ட் இயக்குநராக பணியாற்றி வருபவர், பீட்டர் ஹெய்ன். தமிழில் அந்நியன், எந்திரன், கஜினி, பாகுபலி உட்பட பல பிரம்மாண்ட படங்களில் பணியாற்றியுள்ளார். இவர், இப்போது, பான் இந்தியா படம் ஒன்றில் நாயகனாக அறிமுகமாகிறார். ட்ரெண்ட்ஸ் சினிமாஸ் ஜெ.எம். பஷீர், எம்.டி சினிமாஸ் ஏ.எம் சவுத்ரி தயாரிக்கும் இந்தப் படத்தை மா.வெவற்றி இயக்குகிறார். இந்தப் படத்துக்கு இசை அமைக்க ஏ.ஆர்.ரஹ்மானை அணுக உள்ளனர். இதில் நடிப்பது பற்றி பீட்டர் ஹெய்ன் கூறும்போது, "முதலில் எனக்கு நடிப்பு வராது என்று சொல்லி தவிர்த்தேன். இந்தக் கதைக்கு நீங்கள்தான் சரியாக இருப்பீர்கள் என்று இயக்குநர் உறுதியாக இருந்தார். பிறகு கதையில் சில மாற்றங்களைச் செய்து இப்போது நடிக்கிறேன். இதில் காட்டுவாசியாக நடிக்கிறேன். புதுமையான ஆக்ஷன் படமாக இது இருக்கும். இதற்கு தனியாகப் பயிற்சி எடுத்து வருகிறேன்" என்றார்.

# ரஜினியை இயக்குகிறார் மாரி செல்வராஜ்?



நடிகர் ரஜினிகாந்த் இப்போது 'வேட்டையன்' படத்தில் நடித்து வருகிறார். இதை ஞானவேல் இயக்குகிறார். இதில் அமிதாப் பச்சன், ஃபஹத் ஃபாசில், மஞ்சு வாரியர், ராணா, துஷாரா விஜயன் உட்பட பலர் நடிக்கின்றனர். லைகா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கிறது. இதை அடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார் ரஜினிகாந்த். இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது.

இந்நிலையில், ரஜினிகாந்தின் 172வது படத்தை மாரி செல்வராஜ் இயக்கப் போவதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோ தயாரிக்க இருக்கிறது. இந்தப் படத்தை அடுத்து நெல்சன் இயக்கும் படத்தில் ரஜினி நடிக்க இருக்கிறார் என்கிறார்கள்.

# தொழிலதிபருடன் ரகசிய திருமணமா?

## நடிகை அஞ்சலி மறுப்பு

நடிகை அஞ்சலி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழிப் படங்களில் நடித்து வருகிறார். தமிழில் அவர் நடித்துள்ள 'ஏழு கடல் ஏழு மலை' விரைவில் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், திருமண வதந்திகள் பற்றிப் பேசியுள்ளார்.

அதில், "சினிமாவில் எனக்கு அதிகமான நண்பர்கள் இருக்கிறார்கள். என்னைப்பற்றி யாருடன் இணைத்து எழுத வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்து எழுதுகிறார்கள். முதலில், நடிகர் ஜெய்யை காதலித்ததாகச் செய்தி வந்தது. பிறகு தொழிலதிபர் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவில் செட்டில் ஆகிவிட்டதாகச் சொன்னார்கள். எனக்கே தெரியாமல் எனக்குத் திருமணம் ஆனதை நினைத்துச் சிரித்துக் கொண்டேன். நடிகை என்பதால் இஷ்டம் போல் இப்படி எழுதுகிறார்கள்" என்று வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.



# 'டெஸ்ட்' படப்பிடிப்பை நிறைவு செய்தார் நயன்தாரா



ஒய்நாட் ஸ்டூடியோஸ் சார்பில், காதலில் சொதப்புவது எப்படி? தமிழ்ப்படம், காவியத் தலைவன், இறுதிச்சுற்று, விக்ரம் வேதா, மண்டேலா உட்பட பல படங்களைத் தயாரித்தவர் சஷிகாந்த். இவர் 'டெஸ்ட்' என்ற படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இதில் மாதவன், நயன்தாரா, சித்தார்த் உட்பட பலர் நடிக்கின்றனர். இதன் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடந்து வந்தது. இந்நிலையில் இதில் குமுதா என்ற கதாபாத்திரத்தில் நடிக்கும் நயன்தாரா காட்சிகளின் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளதாக சஷிகாந்த் தெரிவித்துள்ளார்.

# சந்தானத்தின் 'வடக்குப்பட்டி ராமசாமி'



சந்தானம் நடித்துள்ள 'வடக்குப்பட்டி ராமசாமி' திரைப்படம் வரும் பெப்ரவரி 2ம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் சந்தானம் 'டிக்கிலோனா' படத்தின் இயக்குநர் கார்த்திக் யோகியுடன் மீண்டும் கைக்கோத்துள்ளார். இந்தப் படத்தை பீபிள் ஃபிலிம் பேக்டரி சார்பில் விஷ்வ பிரசாத் தயாரிக்கிறார். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள படத்துக்கு 'வடக்குப்பட்டி ராமசாமி' என தலைப் பிடப்பட்டுள்ளது. 'விட்னஸ்' பட இயக்குநர் தீபக் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

கவுண்டமணி செந்திலின் புகழ்பெற்ற நகைச்சுவை கதாபாத்திரமான 'வடக்குப்பட்டி ராமசாமி' என்ற பெயரை தலைப்பிட்டிருப்பதன் மூலம் படம் காமெடி ஜானரில் உருவாவது உறுதியாகியுள்ளது. படத்தில் சந்தானத்துக்கு ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்துள்ளார். இந்நிலையில் இப்படம் வரும் பெப்ரவரி 2ம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# 'புஷ்பா 2' படப்பிடிப்பில் இருந்து பாதியில் வெளியேறினாரா ராஷ்மிகா?

நடிகை ராஷ்மிகா மந்தனா இப்போது அல்லு அர்ஜுனுடன் 'புஷ்பா 2' படத்தில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் நடந்து வருகிறது. அதில் கலந்துகொண்ட ராஷ்மிகா, பாதியில் வெளியேறியதாக தெலுங்கு சினிமா உலகில் செய்திகள் வெளியாயின.

ரன்பீர் சிங், ராஷ்மிகா, அனில் கபூர் நடித்து ஹிட்டான இந்திப் படம் அனிமல். சந்தீப் ரெட்டி வங்கா இயக்கிய இந்தப் படத்துக்கு கலவையான விமர்சனங்கள் வந்தாலும் வசூலில் சாதனைப் படைத்தது. இந்நிலையில் இந்தப் படத்தின் வெற்றி விழா மும்பையில் நடந்தது. இதில் கலந்துகொள்வதற்காக, நடிகை ராஷ்மிகா, 'புஷ்பா 2' படத்தின் படப்பிடிப்பில் இருந்து பாதியில் வெளியேறியதாக கூறப்பட்டது.

ஆனால், ராஷ்மிகா தரப்பு இதை மறுத்துள்ளது. "இயக்குநரிடம் அனுமதி பெற்ற பிறகே அவர் 'அனிமல்' வெற்றி விழாவில் கலந்துகொண்டார். அவர் பாதியில் வெளியேறியதாகச் சொல்வதில் உண்மையில்லை" என்று தெரிவித்துள்ளனர்.



# நடிகை சம்யுக்தா திருமணமா?

மலையாள நடிகையான சம்யுக்தா மேனன், தமிழ், தெலுங்கு படங்களிலும் நடித்து வருகிறார். தமிழில் களரி, ஜூலை காற்றில், தனுஷுன் வாத்தி படங்களில் நடித்துள்ளார்.

இவர் அடுத்து புதிய படங்கள் எதிலும் ஒப்பந்தம் ஆகவில்லை என்று கூறப்படுகிறது. அவர் தனது நண்பரை கடந்த சில வருடங்களாகக் காதலித்து வருகிறார். இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளதை அடுத்து இந்த வருடம் இவர்கள் திருமணம் இருக்கும் என்றும் அதனால்தான் அவர் புதிய படங்கள் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால், இதுபற்றி சம்யுக்தா தரப்பில் ஏதும் தெரிவிக்கவில்லை.



# டார்க் காமெடி கதையில் சத்யராஜ், வெற்றி

சேகர் ஜி புரோடக்ஷன்ஸ் சார்பில் இளையராஜா சேகர் தயாரிக்கும் படத்தில் சத்யராஜ், வெற்றி முதன்மை பாத்திரங்களில் நடிக்கின்றனர். இன்னும் பெயரிடப்படாத இந்த டார்க் காமெடி படத்தை, நரேந்திர மூர்த்தி இயக்குகிறார். அமெரிக்கா, மலேசியாவில் ஆவணப்படங்களை இயக்கியுள்ள இவர், இந்தப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். எம்.எஸ். பாஸ்கர், கோவை சரளா, சச்சு, பிராத்தனா, ஐரா உட்பட பலர் நடிக்கின்றனர். ஆர்.உதயகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். ஜெரால்டு ஃபெலிக்ஸ் இசையமைக்கிறார்.

"ஒரே இரவில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் நடக்கும் கதை. நான்கு வெவ்வேறு வீடுகளில் நான்கு கொலைகள் நடக்கின்றன. அந்த வீட்டில் இருப்பவர்கள் அந்த உடல்களை அபார்ட்மென்டுக்கு வெளியே எப்படி கொண்டு செல்கிறார்கள் என்பதுதான் கதை. பஞ்சதந்திரம் படத்தைப் போல, அடுத்து என்ன நடக்கும் என்கிற விறுவிறுப்பை இந்தப் படம் ரசிகர்களுக்கு கொடுக்கும்" என்கிறது படக்குழு. இதன் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி இருக்கிறது.





# யாஷின் 'டாக்ஸிக்' படத்தில் கரீனா கபூர்

கே.ஜி.எஃப் படங்களின் மூலம் இந்திய அளவில் பிரபலமானவர், யாஷ். இவர் அடுத்து நடிக்கும் படத்தை கீது மோகன் தாஸ் இயக்குகிறார். படத்துக்கு டாக்ஸிக் என்று தலைப்பு வைத்துள்ளனர். கேவிஎன் புரொடக்ஷன்ஸ், மான்ஸ்டர்மைண்ட் கிரியேஷன்ஸ் தயாரிக்கின்றன. யாஷின் 19 வது படமான இதில் சாய் பல்லவி நாயகியாக நடிக்க இருப்பதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் பிரபல இந்தி நடிகை கரீனா கபூர் கான் இதில் முக்கிய வேடத்தில் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.



# 'தக் லைஃப்'

'நாயகன்' படத்துக்கு பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் மீண்டும் இணையும் படம், 'தக் லைஃப்'. இதில் த்ரிஷா, ஜெயம் ரவி, துல்கர் சல்மான், கவுதம் கார்த்திக் உட்பட பலர் நடிக்கின்றனர். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். ரவி.கே.சந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். கமலின் 234வது படமான இதை ரெட் ஜெயன்ட் மூவிஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இதன் புரமோ வீடியோ வெளியாகி வரவேற்பைப் பெற்றது. இந்நிலையில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு, 18ம் திகதி சென்னையில் தொடங்க இருக்கிறது.

# பெண்கள் விரும்பும் நெகிழி, அழகானது ஆனால் ஆபத்தானது

இதனால் பூமி நச்சு நிறைந்த மண்ணாக மாறுகிறது. அதாவது நீர் ஊடுறுவதை தடுத்து ஊறு விளைவிக்கிறது. பெண்மையின் முழுமையை குழந்தை பிரசவத்தில் உணருகிறோம். பூமியின் முழுமையை விளைச்சலில் உணருகிறோம் , அவ் விளைச்சல் தரும் பூமியை நாம் நஞ்சாக்கினால், எதிர்காலச் சந்ததிகள் எப்படி உயிர் வாழ்வது ?அதற்கு பதில் கூற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

அத்துடன் மக்கள் நெகிழிப் பொருட்களில் உணவு வகைகளை கொண்டு செல்வது அதிகம் பெருகி விட்டது. இதன் பாவனை புற்று நோய்க்கு வழி வகுப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் நாம் வீசும் நெகிழிகள் நீர் நிலை, சமுத்திரங்கள், கடல்கள் போன்ற இடங்களில் தேங்கி அங்குள்ள உயிரினங்களின் அழிவுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறுகிறது.

அதாவது நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களுக்கு சுவாசிக்க சிரமம் மற்றும் உணவு பொருளாக நினைத்து உண்ணுதல் அத்துடன் வாழும் சூழல் மாறுபடல் என்பவற்றால் அந்த உயிரினங்கள் அழிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

நெகிழியை அழிக்கும் முறையில் தீயிட்டு



கொளுத்தும் போது அந்தப் புகையின் அடர்த்தி தன்மை சூழலுக்கும் சுவாசிக்கும் எமக்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஓசோன் படலத்திற்கு மிகப்பெரிய பாதிப்பை இதன் புகை ஏற்படுத்துகிறது.

உக்காது எரிப்பதிலும் சிரமம்.

மனிதனும் சூழலுடன் இணைந்து வாழும் நிலை மாறுகிறது.

இதனால் மனித வர்க்கத்தின் எதிர்காலத்திற்கு இது பாரிய பிரச்சினையாகியுள்ளது எனலாம்.

மரங்களை அழிக்கும் போது பசுமை புரட்சி செய்து மரங்களை வளர்த்தோம். அதுபோல நெகிழியை புறக்கணித்து நெகிழி புரட்சி செய்வோம்.

அதாவது துணிப் பைகள், காகிதப் பைகளை பாவனையில் உபயோகித்தல், உணவு வகைகளை வாழை இலை, தாமரை இலை போன்ற இலையில் பொதி செய்தல் வெள்ளி பாத்திரங்களை பாவித்தல், மரத்திலான பொருட்களை பாவித்தல், மூங்கிலில் பின்னிய பொருட்களை மட்பாண்டங்களை பாவித்தல், அத்துடன் மீள் சுழற்சி செய்யும் நெகிழியை பாவித்தல் அத்துடன் உக்கும் தன்மை கொண்ட உணவு பொதி செய்யும் நெகிழியை பாவித்தல் சிறப்பாகும்.

முக்கியமாக முடிந்தளவு நெகிழியை தவிர்த்து வாழுதல் அதை விடச் சிறப்பு.

நெகிழியை தவிர்ப்போம் நச்சில்லா உலகம் காப்போம்.

இது எம் ஒவ்வொருடைய தலையாய கடமையாகும்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# நேர்காணலுக்கு போறீங்களா?

எந்த இடத்துக்கு இன்டர்வியூ போகிறீர்களோ, அந்த நிறுவனத்தைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொண்டு செல்லுங்கள்.

இன்டர்வியூ நடக்குமிடத்துக்குப் பத்து நிமிடம் முன்னதாகப் போனாலும் தப்பில்லை. ஒரு நிமிடம் தாமதமாகப் போனாலும், அது உங்களுக்குக் கரும்புள்ளிதான்.

உங்களது டிரெஸ் ரொம்பவும் முக்கியம். பளபளா டிரெஸ், மூச்சை அடைக்கும் சென்ட், கண்ணைப் பறிக்கும் மேக்கப் போன்றவற்றைத் தவிர்த்துவிட்டு, எளிமையாக, அதே சமயம் அழகாகச் செல்லுங்கள்.

படபடப்பு இருக்கத்தான் செய்யும். ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது.

சிரித்த முகத்துடன் காட்சியளியுங்கள். இன்டர்வியூவில் உங்கள் முன் இருக்கிற அத்தனை பேருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு, அவர்கள் சொன்ன பிறகே இருக்கையில் அமர வேண்டும். பேசும் போது எல்லாரையும் பார்த்துப் பேச வேண்டியது முக்கியம். இன்டர்வியூவில் கேட்கப்படுகிற கேள்விக்கு முழுமையான, தெளிவான பதில் தர வேண்டியது அவசியம்.

# லவ் பண்றீங்களா?

நீங்கள் பழகிக்கொண்டிருக்கும் நபர் உங்களிடம் ஐ லவ் யூ சொல்லும் நாள் வெகு தூரத்தில் இல்லையா?

நீங்களும் அதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா?

காதலிக்கத் தொடங்கும் முன் உங்களுக்கு சில முன்னெச்சரிக்கை ஆலோசனைகள். நண்பராக இருக்கும் வரை ஆண்களது குணம் வேறாக இருக்கும். காதலராக மாறியதும் குணமும் மாறும். எனவே அவர் நண்பராக இருக்கும் போதான குணங்களைக் கண்டு நல்லவர் என அவசரப்பட்டு மனதைப் பறிகொடுத்து விடாதீர்கள்.

அவரைக் காதலராக ஏற்கலாம் என்று உங்கள் மனச்சாட்சி சொல்லி விட்டதா? ஆசையை வளர்த்துக் கொள்வதற்கு முன்பாக அவரது குடும்ப விவரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

காதல் திருமணத்தைப்பற்றி அவரது குடும்பத்தாரின் அபிப்ராயம் என்ன என்பதையும் மறைமுகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களவரை சந்திக்கச் செல்லும் போது மேக்கப், கவர்ச்சியான உடை என எக்ஸ்ட்ரா பிட்டிங்குகளை தவிர்த்து விடுங்கள். இயல்பாகவே இருங்கள்.

உங்கள் காதலர் நம்பர் ஒன் நல்ல நண்பராகவே இருக்கட்டும். ஆனாலும் எந்தச் சூழ்நிலையிலும் அவர் தனியே அழைக்கும் எந்த இடங்களுக்கும் தனியே போகாதீர்கள்.

தனிமையும், இளமையும் எப்பேர்ப்பட்ட நல்லவரையும் மோசமாக்கலாம், ஜாக்கிரதை!.

# அரை நூற்றாண்டு கால ஆசிரியப்பணியை பூர்த்தி செய்த பாவலர் யாழ் அஸீம்







***(கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கடந்த 12 வருடங்களாக கணித,விஞ்ஞான ஆசிரியராகவும்,கல்லூரியின் 'தமிழ் அமுதம்' சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றிய ஆசிரியர் யாழ் அஸீமின் பிரியாவிடை வைபவம் அண்மையில் கல்லூரியின் அப்துல்கபூர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதிபர் ரிஸ்வி மரைக்காரின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சக ஆசிரியர் சஜாத் முகைடீன் வாசித்த வாழ்த்துப்பா).***

அரை நூற்றாண்டு கால
ஆசிரியப்பணியை பூர்த்தி
செய்த பாவலர் யாழ்
அஸீம்
ஞாபகங்கள் கனத்து
கண்ணீராய்த்
ததும்ப எத்தனிக்கிறது
வார்த்தைகளாய்
இறக்கி
வைக்கின்றோம்
இந்தப்பணி
உதயத்திற்கும்
அஸ்தமனத்திற்கும்
இடைவெளி தசாப்தம் ஐந்து
யாழில் உதித்த பணி
கொழும்பில் அஸ்தமிக்கும் வரை
பிரகாசம் மட்டும் மங்கவில்லை
மங்கியதெல்லாம்
மாணாக்கர்களின்
மடமை தான்
அவர் எழுதுகோல்கள்ஒன்று
கவிபாடும்இல்லையேல்
கணக்குப்போடும்
காலம் அல்லாது மனம் தான்
முதுமையை தீர்மானிக்கும்
என்றிருப்பின்அவர் தான்
நம் யாவரிலும்
இன்றிளையவர்
எழுத்துக்கள் கோர்த்து
சொற்களமைக்க
உரிமையில்லையாயினும்
சொற்கள் புனைத்து
கவிதையாக்கும் உரிமையை
கச்சிதமாய் பயன்படுத்திய
தேசம் போற்றும்
தேசிகன் அவர்
அவர் ஓய்வடைவதாலென்ன
அவர் எழுத்துக்கள் ஓய்ந்திடுமா?
அவர் எழுத்துக்கள் மங்காத வரை
அவர் எங்களில் மணப்பார்
ஆறத்தழுவி அனுப்பினாலும்
என்றும் அவர் நினைவுகள்
ஆறாத்தழும்பாய்
'ஆசிரியம்' எனும் சொல்லை
ஆயிரம் முறை
சொல்லிப்பாருங்கள்
அவர் பெயர்
உங்களுக்குள்எதிரொலிக்க
உணர்வீர்கள்
தன் பிரிவால்
தமிழ் பிரிவை
துயரடையச் செய்தீர்.
மீண்டு வர முடியா
துயரிலிருந்து மீட்க
மீண்டும் வருவீரென
காத்திருக்கும்
ஆசிரியர் குழாம்,
வழியனுப்ப வலிக்கிறது
வாழ்த்திச் சுகமடைகிறோம்.

சஜாத் மொஹிதீன்

## முதல் பெண்மணிகள் வரிசையில் இடம் பிடித்த

# தினகரன் மூலம் சாதனை படைத்த திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்



**ஈழத்தின் முதல் தமிழ் பெண் சரித்திர நாவலாசிரியையும் ஏழாம் தலைமுறைப் படைப்பாளியுமான அமரர் திக்கம் சிவயோ கமலர் ஜெயக்குமார் அமரத்துவமடைந்து 16.01.2024ம் ஆண்டுடன் 10 ஆண்டுகளா கின்றன. அதனைமுன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

இலக்கியம் படைத்துப் புகழ் பெற்ற அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார், வடமராட்சி மண்ணின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டு தனது படைப்புக்களை ஈழத்தின் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளார்.

1999ம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் 21 அத்தியாயங்களாக வெளிவந்த "அடிமையின் காதலி" என்னும் சரித்திர நாவலின் மூலம் ஈழத்தின் முதற்பெண் சரித்திர நாவலாசிரியர் என்ற பெருமையைப் பெற்றார். இவர் அம ரத்துவமடைந்து 16ந் திகதியுடன் 10 ஆண்டு களாகின்ற போதிலும் அவரது படைப்புகள் பற்றி இன்றும் பாராட்டிப் பேசப்பட்டு வரு கின்றது. இச்சாதனை மூலம் இவர் முதல் பெண்மணிகள் வரிசையில் பதிவு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் குறிப் பாக,பெண் எழுத்தாளர்களில் தனியான முத்திரை பதித்துள்ளவர் திக்கம் சிவயோக மலர். இவர் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் மேற்கு, திக்கம் என்னும் கிராமத் தில் பிறந்து வளர்ந்தவர். 1950ம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை திக்கம் மெதடிஸ்த மிஷன் பாடசாலை யில் பெற்றுக் கொண்டார். இப்பாடசாலை 5ம் வகுப்பு வரை கொண்டிருந்ததால் 06ம் வகுப்பை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக் கல்லூரியில் ஆரம் பித்தார்.

பின்னர் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் உயர் கல்லூரியில் உயர் கல்வியை மேற்கொண்டார். பின்பு பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைப் பட் டதாரியானார். ஆசிரியர் தொழிலில் பிரவேசித்த இவர், தேர்தல் திணைக் களம், யாழ் மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆகிய வற்றில் கடமையாற்றி அரச அதிகாரி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது கணவர் அரச சேவையில் கணக்காள ராகக் கடமையாற்றிய நாடறிந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூ சணம் எஸ்.ஜே. ஜெயக் குமார் என்பது குறிப்பி டத்தக்கது.




இவரது முதற் சிறுகதை "மகன் தேடியவீடு" 1984ம் ஆண்டுசிந்தாமணி யில் பிரசுரமாகியது. 1997ம் ஆண்டு தெல்லிப்பளை மகா ஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை யினர் நடாத்திய பாவலர் தெ.து. துரையப்பாபிள்ளை நினைவு அகில உலக சிறுகதைப் போட்டியில் இவரது "பிறந்த மண்" சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

மோல்டே தமிழ் கலை கலாச்சார மன்றம் 10வது வருட நிறைவை ஒட்டி உலகளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட நாடக எழுத்துப் போட்டியில் இவரது "புலம் பெயரும் பாசங் கள்" நாடகப் பிரதி முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம், கத்தோலிக்க சாகித்திய தினத்தை முன்னிட்டு ஞானார்த்த பிரதீபவின் அனுசரணையுடன் நடாத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் பாவத்தின் சுவடுகள் என்னும் சிறுகதை முதலாவது பரிசைப் பெற்றுக் கொண்டது.

1998ஆம்ஆண்டு வீரகேசரியில் வெளியான பாவத்தின் சுவடுகள் என்னும் இச்சிறுகதை கலாசார சமய அலுவல் கள் அமைச்சினால் அவ்வாண்டுக்கான சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டு விருதும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

"தினகரன் பத்திரிகையும் துரைவி நிறுவன மும் இணைந்து நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது "சாமேளம்" சிறுகதை பரிசைப் பெற்றுக் கொண்டது. இச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற ஒரே பெண் எழுத்தாளர் இவரே என்ற பெருமை யும் பெற்றார்.

"சிரித்திரன்" சஞ்சிகை 1990 ஆம் ஆண்டு நடாத்திய சித்திரச் சிறுகதைப் போட்டி யில் இவரது "வானம் பொய்க்கவில்லை" என்ற சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

யாழ் இலக்கியவட்டமும் ஈழநாடு பத்தி ரிகையும் 1984 இல் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் "கல்லுக்குள் ஈரம்" என்னும் இவரது நாவல் பரிசு பெற்றது. இதேகாலகட்டத்தில் "முரசொலி" பத்திரி கையும் யாழ் இலக்கிய வட்டமும் நடத்திய குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டியில் இவரது "தேட்டம்" குழந்தைக் கவிதைகள் தொகுப்பு பரிசு பெற்றது.

2013 ஆம் ஆண்டு ஹொறணை பிரதேச சபை நடாத்திய சரத்சந்திர ஜயக்கொடி ஞாப கார்த்த சாகித்திய விழாவை யொட்டிய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது "மண் வாசம்" சிறுகதை இரண்டாவது பரிசை யும் விருதையும் பெற்றுக் கொண்டது.

2000 ஆம் ஆண்டு "கலைமகள்" ஹிதாயா றிஸ்வியைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட "தடாகம்" சஞ்சிகை அகில இலங்கை ரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரி சைப் பெற்றுக் கொண்டார்.

கண்டி கல்ஹின்ன தமிழ் மன்றத்தின் நூறாவது பிரசுரமான சிரேஷ்ட எழுத்தா ளர் சட்டத்தரணி கல்ஹின்ன எஸ்.எம். ஹனிபா தொகுத்த "மலைஒளி"

**(12ஆம் பக்கம் பார்க்க)**



**பருத்தியூர் பால வயிரவநாதன்**
ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
இந்து சமய கலாச்சார விவகாரத் திணைக்களம்.
10/14 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

# ஊடகத்துறையில் வெள்ளிவிழா காணும் ஜெயந்திரன்



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொதுச்செயலாளரும், தினக்குரல் பத்திரிகையின் பிரதி ஆசிரியருமான குழந்தைவேல் ஜெயந்திரன் ஊடகத்துறையில் கால் பதித்து 25 ஆண்டுகளை கடந்து வெள்ளி விழாவை கொண்டாடுகின்றார். அவருக்கு ஊடக நண்பர்கள் இணைந்து (03/01/2024) புதன்கிழமை மாலை கொழும்பு பம்பலப்பிட்டி Euro Lanka ஹோட்டலில் ஒரு பாராட்டு விழாவை நடத்தியபோது....

# ஓகொடபொல "ஜீனியஸ் கிட்ஸ்" கல்வி நிலைய விழா



வெயாங்கொடை ஓகொடபொல "ஜீனியஸ் கிட்ஸ்" ஆங்கில சிறார் கல்வி நிலையத்தின் 12 ஆவது வருடாந்த சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு வழங்கும் விழா நிகழ்வு, அண்மையில் (2023.12.23. சனிக்கிழமை), கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடிஸ் ஸ்டடி சேர்கல் கேட்போர் கூடத்தில், நிலையத்தின் ஸ்தாபகரும் பொறுப்பாளருமான றிஸ்னா ஹனீபா தலைமையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதன்போது, சிறார்களின் ஆங்கில அறிவுத் திறன்களை வெளிப்படுத்தும் பேச்சுப் போட்டிகள் மற்றும் சிறார்களின் ஆங்கிலப் பாடல்களுடனான கலை, கலாசார, நடன நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

இச்சிறப்பு நிகழ்வில், ஆங்கிலப் பேச்சு மற்றும் நடன பரிசோதகரும் ஆசிரியையுமான சிஹாரா டயஸ் பண்டாரநாயக்க பிரதம அதிதியாகவும், கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவியும் ஆசிரியையுமான எம்.எம்.கே. மௌபியா கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததோடு, ஆங்கில எழுத்து மற்றும் வாய்மொழி மூலமான போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய சிறார்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்களையும் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் பங்கேற்றி சிறப்பித்தமைக்காக, பிரதம அதிதி சிஹாரா, கௌரவ விருந்தினர் மௌபியா ஆகியோருக்கு, ஆங்கிலக் கல்வி நிலைய ஸ்தாபகர் றிஸ்னா, நினைவுச் சின்னங்களை வழங்கி பாராட்டி கௌரவித்தார்.

**ஐ. ஏ. காதிர் கான்**



## தினகரன் மூலம் சாதனை படைத்த... (11ஆம் பக்கத் தொடர்)

பல்றை மலரில் (2001) தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு சிறுகதையாக திக்கம் சிவயோகமலரின் "சுயம்" சிறுகதை, இடம் பெற்றுள்ளது.

இவரது சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர்கதைகள், ஈழநாடு, வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, முரசொலி, ஈழமுரசு, சுடர் ஒளி, தினமுரசு முதலிய பத்திரிகைகளிலும் லண்டன் தமிழ் உலகம் , சிரித்திரன், கற்பகம், அருள் ஊற்று, நமது தூது, ஒளி அரசி சஞ்சிகைகளிலும் நூல் தொகுப்புக்களிலும் பிரசுரமாகின.

ஈழத்தின் தரமான பெண் எழுததாளர்களின் ஒருவரான திக்கம் சிவயோகமலரின் சிறுகதைகள் "ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன" என்று அமரர் கலாநிதி "க.குணராசா (செங்கைஆழியான்) எழுதிய "ஈழத்துச் சிறுகதை வரலாறு"என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மல்லிகை" । 13ஆவது ஆண்டு மலரில் (ஜனவரி 2008 ) இல் ஈழநாடு பத்திரிகையின் "புனைகதைப் பங்களிப்பு" என்னும் தலைப்பில் இடம் பெற்ற ஆய்வுக் கட்டுரையில் இவரது நல்ல "அவள் அகதி இல்லை, மயங்குகிறாள் ஒரு மாது "மலர் தாவும் வண்டுகள்" ஆகியன வெளிவந்துள்ளன என்று விதந்துரைக்கப்பட்டுள்ளது.




ஈழத்து இலக்கிய வரலாற்றுப்பதிவில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் ஏழாம் தலைமுறைப் படைப்பாளியாக முத்திரையிடப்பட்டுள்ளார். மல்லிகை இதழ் தனது 34வது ஆண்டு மலரில் (ஜனவரி 1999) இவரது படத்தை அட்டைப் படமாக பிரசுரித்து கௌரவித்தது.

இந் நாவலாசியையின் இலக்கிய முயற்சிகள் பற்றிய ஆய்வு சப்ரமுகவ பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீட மொழித்துறைப் பட்டதாரி மாணவி செல்வி மீராவினால் மேற்கொள்ளப்பட்டு சிறப்புப் பட்டத்திற்கு அங்கீகாரம் பெற்றதுடன் ஆய்வு நூலாகவும் வெளியிடப்பட்டது.

தனது குடும்பத்திற்கும் இலக்கிய உலகிற்கும் புகழ் சேர்த்த இச்சரித்திர நாவலாசிரியை தனது 64வது வயதில் 16.01.2014 இல் மறைந்தார். ஈழத்து இலக்கிய உலகிற்கு துரதிஷ்டமே எனலாம். இவர் நாடளாவிய, உலகளாவிய ரீதியில் தனது எழுத்தாற்றலால் பல சாதனைகளைப் புரிந்து ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு அழியாப்புகழ் பெறும் இடத்தைப் பிடித்திருக்கிறார். அவர் தனது கணவரையும் ஒரே மகனான றுக்மாங்கதனையும் விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். அவரது இலக்கியப் படைப்புக்கள் நூலுறுப் பெறாமல் இருந்து தற்போது அவை அச்சில் வெளியாகியுள்ளன.

இதன் மூலம்தான் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் எனும் படைப்பாளியை முழுமையாகக் காண முடியும்.

இந்தவகையில் அவரது கணவர் எஸ். ஜே.ஜெயக்குமார் அமரருக்கு ஈழத்து முதல் பெண் சரித்திர நாவலாசிரியையான புகழ் தேடிக்கொடுத்த "அடிமையின் காதலி" சரித்திர நாவலை சிறப்பான வகையில் நூலாக வெளியிட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. "சிறுவர் பாடல்கள்" என்னும் நூலும் "மலரும் மொட்டுக்கள்" குறுநாவலுமாக மூன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவரது "வானமே கூரையாக" சிறுகதைத் தொகுப்பு விரைவில் வெளிவரவுள்ளது.

ஈழத்துமுதல் தமிழ் பெண் சரித்திர நாவலாசிரியையின் "அடிமையின் காதலி" சரித்திர நாவல் என்ற வகையில் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் இலக்கிய உலகில் கல்வெட்டுப் போன்று இடம்பெறும் என்பது திண்ணம்.

# வெகுவிமர்சையாக நடைபெற்ற வெலிகம அஸ்ஸபா பொன்விழா கொண்டாட்டம்









வெலிகம மதுராப்புர அஸ்ஸபா மகா வித்தியாலயம் அண்மையில் பொன்விழா கொண்டாடியது.1936 ஆம் ஆண்டு ரீ.எஸ்.அப்துல் லதீபினால் ஓலைக்குடிசையொன்றில் தற்காலிக பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 1970 இல் கலாநிதி பதியுதீன் மஹ்மூதினில் நிரந்தர கல்விக் கூடமாக உருவாக அனுமதி வழங்கப்பட்ட இப்பாடசாலை 1973 இல் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதற்கான காணியை ஆயுர்வேத வைத்தியர் பி.எம். அப்துல் கரீம் வழங்கியிருந்தார். எஸ்.ஏ.எம். மௌலானாவை முதலாவது அதிபராகக் கொண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது 5 மாணவர்களும் ஆறு ஆசிரியர்களும் தான் இருந்தார்கள். அன்று தொடக்கம் பல்வேறு சவால்கள் நெருக்கடிகள் என்பவற்றுக்கு மத்தியில் செயற்பட்ட இப்பாடசாலை இன்று பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து வருகிறது. 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் செயற்பட்டு வரும் அஸ்ஸபா பாடசாலை கல்வி,கலை,இலக்கியம் ,விளையாட்டு என பல்வேறு துறைகளிலும் தடம் பதித்து வருவது குறிப்பிடத்தக்கது. பொன்விழா நிகழ்வுகள் மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.ஊர்வலம் ,கண்காட்சி, விளையாட்டுப் போட்டிகள்,அறிவுக்களஞ்சியப் போட்டி,முன்னாள் ஆசிரியர்கள் கௌரவிப்பு என ஒரு வார காலம் வரை பல்வேறு கண்கவர் நிகழ்வுகளினால் பொன்விழா கலைகட்டியது.பாடசாலை அதிபர் ஹிப்ளர் உள்ளிட்ட ஆசிரிய குழாமும் பழைய மாணவர் சங்கமும் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**ஷம்ஸ் பாஹிம்**

# விடியலை இழந்தேன்



அகிலத்தின் அருட்கொடையாம்
மதினத்து மாநபியின்
அருள் இலங்கும்
வதனத்தைக் கண்டிடவும்
சுவனத்துக் கனிகளை
சுவைத்து ருசித்திடவும்
என்னுயிரில் வாழ்ந்தவளே
இகமதனைத் துறந்தனையோ
நான் யாத்திட்ட கவிதைகளை
நேசித்தாய் அகங்குளிர
சுவாசித்தே கவி வரிகளை
வாசித்தாய் ஓசைநயமுடன்
விமர்சித்தாய் அக்கறையு
டன்
பிரகாசித்திடவே கவியுலகில்
காதலித்தாய் என்னோடு
என் கவிதைகளையும்
என் முதல்
ரசிகை ஆனவளே
உன்னை நினைத்து
எழுதுகையிலே
கண்ணீரில் கறையுதம்மா
எழுத்துக்கள் எல்லாம்
நான்கு தசாப்தங்களை
நல்லமறமாய் எங்கள்
இல்லற வாழ்க்கையை
இனிதே நடத்தியவள்
பாழும் உலகினில்
என்னை பரிதவிக்கவிட்டு
படைத்தவன் ஆணையை
இன்முகத்தோடு ஏற்றாய்
கண்ணீர் அஞ்சலியாய்
இக் கவிதையை யாத்தே
காணிக்கை ஆக்குகிறேன்
என் கல்பினில் வாழ்பவ
முக்கு

கதிரோன் அஸ்தமிக்க
மாலை மயங்கியது
மஹ்ரிபின் அதான்
வானில் மிதக்க
ஆர்வமாய் எழுந்திட்டவள்
இஹ்லாஸோடு
இறையோனை தொழுதிட்டாள்
மணநிறைவோடு
மயக்கமாய் வருகுதுன்னு
மகளின் மடியில் சாய்ந்திட்டவள்
என்ட அல்லாஹ்
என்ட இல்லாஹ் என்றவள்
திருக்கலிமாமாவாம்
லா இலாஹ இல்லல்லாஹ்வை
உறுதியோடு இறுதியாய்
மொழிந்தே இன்முகத்தோடு
இறைவனிடம் ஏகினாள்
எல்லாம்அறிந்த
வல்லோனின் விதிப்படி
பொல்லா உறவுகளின்
தொல்லைகளிலிருந்து உன்னை
காத்திட்டானே அந்தக்
கருணையாளன் அவன்
மணங்கமழ்ந்தவளாய் நீ
மண்ணறை ஏகிட
இனங்காணாத
தனிமையும் வெறுமையும்
என்னில் ஆகியது
அறிவுரை பகர்ந்திடவும்
ஆறுதல் கூறிடவும்
உம்மா இல்லை என்ற
வேதனையில் மகள்மார்
வெறிச்சோடியது இல்லம்
கதைசொல்லி விளையாடிட
நீயின்றி வேதனையில்
ஏக்கத்தோடு பேரப்பிள்ளைகள்
உந்தன் மீதான

காதல் நினைவலைகளோடு
காலத்தைக் கழிக்கின்றேன்
கண்ணீரில் கரைந்தவனாய்
என்னுள் ஒளிந்திட்ட
மின்னும் தாரகையே
வண்ணக்கனவுகளாய்
நாளும் வருகின்றாய்
இருமணமும் கலந்திட
இணைந்திட்டோம் இல்லறத்தில்
சீர்செனத்திகள் காத்திருந்தும்
பெருஞ்சீதனமாய் உன்னை
வரித்தேன்
முக்கனிகளாய் மூன்றை
சந்ததிகளாய் பெற்றெடுத்தாய்
அகரத்தோடு ஆன்மிகத்தையும்
அழகுறவே கற்றிட வைத்தாய்
நச்சரிப்பாய் நாளும்
வச்ச கண்ணு வாங்க முன்பு
வளர்ந்திருச்சி மூனுமின்னு
உச்சரிப்பாய் கவலையோடு
விழிநீரில் நனைந்திட்ட
உனதான பிரார்த்தனைகளால்
வல்லோனின் விதிப்படி
வந்தேகின இளவல்கள்
மருமகன்களாய் மூவர்
மணமேடை கண்டதால்;
மகள்மார் மூவரும்
மணதார வாழ்த்தியே
மறையோனைத் துதித்தாய்
வாழ்ந்திட்டாய் மகராசியாய்
தாழ்ந்திடாமல் யாரிடத்திலும்
மருந்தோ மாத்திரையோ
மவராசன் நீயிருக்க
எனக்கேது குறையென்றாய்
வீழ்கின்றபோதெல்லாம்
வீழ்ந்திடாமல் நான்

உற்ற துணையாகி நீ
ஊன்றுகோலாகினாய்
சான்று பகர்வேன் நான்
சத்தியத்தில் வாழ்ந்திட்ட
உத்தமி – நீயென
பண்போடு பத்தினியாய்
அன்போடு வாழ்ந்திட்டாய்
ஆலம் விழுதுகளாய்
குடும்ப உறவுகளுக்குள்
ஊடுருவி நின்றாய்
ஒற்றுமையின் சின்னமாய்
உறவுகளுக்கு ஏதும் என்றால்
ஊண் உறக்கம் மறந்திடுவாள்
நோம்பலங்கள் நீங்கும் வரை
நோன்பிருந்திடுவாள்
நாயகத் திருமேனி
நவின்ற நல்லுரையின்
ஆத்தாட்சியாய் நீயானாய்
ஏன்னவள் உன்னை
நல்லவளாய் என்றே
நற்சான்று பகன்றனரே
அவளது மண்ணறையை
சுகந்த மணம் கமழச் செய்து
சுவனத்து பூஞ்சோலைகளில்
ஒன்றாக்கி
நாளை மஹ்சர்
வரும்வரை

புதுமணப் பெண்ணாய்
உறங்கச் செய்திடு யா
அல்லாஹ்
கேள்வி கணக்கின்றி
வலது கையில்
பட்டோலையோடு
மின்லென சிராத்தைக் கடந்தே
ஆகிரத்தின் அமளியிலிருந்து
காத்திடுவாய்
அர்சின் நிழலில்
அவளை ஆக்கிடுவாய்
யா அல்லாஹ்
அண்ணலாரின் கரங்களால்
ஹவ்லுல் கவ்தரின்
நீரை அருந்திட
அருள் புரிவாய்
கருணை வடிவான
என்னவள் மீது
கருணை காட்டிடு
மிருதுவானவள் அவள்
மென்மையாய் நடந்திடு
அருளாளனே அன்பாளனே
மருணையாளர்களில் மகா
கருணையாளனே
என்னில் வாழ்ந்திட்டவள்
உன்னளவில் ஏகிவிட்டாள்
நயந்தும் பயந்தம்
யாவரும் வியந்திடும் வண்ணம்
வாழ்ந்தவள் யா அல்லாஹ்
அறிந்தும் அறியாமலும்
செய்திட்ட பாவங்களை
உனதருளினால்
மன்னித்திடு
எனதான மனையாளுக்கு
உனதான அருட் கொடையாம்
“ஜென்னத்துல் பிர்தவ்ஸை”
நன்கொடையாய் அளித்தே
நல்லருள் பாலித்திடு

**கலாபூசணம் டீ வன்ஸோ – மலாய்கவி**

# வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்

வாசலில் ஒருபுறம் இருக்கும் கிளிக்கூடு விடுதலையின் குறியீடு. மேடையின் இடதுபுறத்து கிணற்று வேலி வேலிக்கு மேலால் தோன்றும் வாழைமரம் கட்டுடைக்கும் விடுதலையின் குறியீடுதான். தொடக்கத்தில்

முற்றம் பெருக்கும் பாவனையில் கமலி தோன்றுதல் ஏகாதிபத்தியத்தையும், அந்நியர் ஆதிக்கத்தையும் கூட்டித் துடைத்து வாழ்வைச்சுத்தம் செய்ய வேண்டுமென்ற குறியீடு தானே.

சோமு சொல்வான்'சாகு முன்னர் என்றோ உன்நாவில் எழுகின்ற சங்கதி நன்றாய். அதே போல் நான் எடுத்த நயனம் நன்றாய்ப் பேச வைத்தல் வேண்டும் நான்..' இந்தக்கூற்று கலை விடுதலைக்கான குறியீடாக வாசிப்புச் செய்யப்படல் வேண்டும்.

நாடகத்தின் தொடக்கத்தில் நயனக்காரரர் மாணிக்கம் மேடைக்குள் நுழைகிற போது 'கேற்றிலே ஆடு அவிழ்த்துக்கொண்டேன் அலைகிறது முற்றத்தில் நட்ட கொடியை நறநறவென்று தின்கிறது. கட்டி வைக்க ஓராள் கிடையாதே இவ் வீட்டில்' என்பார்.

இந்தக்கூற்றில் ஆடு, அவிழ்தல், அலைதல், கொடி, வீடு எல்லாமே குறியீட்டு அர்த்தத்தில்த்தான் வாசிக்கப்படும் வேண்டும்.

**ஆடுஅந்நியர்**

அவிழ்தல்/அலைதல்அந்நியரின் அடக்குமுறை/அத்து மீறிய செயல்கள்

கொடிதமிழர் கலை,பண்பாடு





வீடுதேசம்

இவ்வாறு ஒரு பிரதி வாசிப்பின் மீது வாசிப்பாளனின் குறியீடு படைப்பாளன் வழியிருந்தோ அல்லது தன் அனுபவ,கற்பனை வழியிருந்தோ செலுத்தப்படும் போது காத்திரமான உள்நிலை வாசிப்பு உயிர்ப்புறும்.

கோடையில் கமலி, சோமு மனஇயைபாடு அல்லது காதல் இசை மீதான அல்லது இசை ஊடான ஈர்ப்பு எல்லாமே குறியீடுதான். விடுதலையுணர்வின் குறியீடு.

கோடை சுதந்திரத்துக்கு முற்பட்ட ஒரு காலத்தின் சித்தரிப்பு. சுதந்திரத்தின் பின்னரான பொருத்தப்பாடுள்ளதா என்கிற கேள்வியெழலாம். பேராசிரியர் நுஃமான் அதன் தற்காலப்பெறுமதி குறித்த கேள்விக்கு சுதந்திரத்தின் முன், பின் என் காலவோட்டம் மாறியது தவிர அக்கால, தற்கால நிலைமை அதிகம் வேறுபட்டதில்லை என்பார். இந்தக் கருத்தியலும் குறியீடு சார்ந்ததேயாகும்.

கோடை நாடகம் அரங்கமைப்பின் மூலம் மேலும் உயிர்ப்புறுகிறது. நாடகத்தின் தொடக்கம் தரும் அழுத்தம் அல்லது அழகியல் போல் கோடையின் இறுதிக்காட்சி பெறும் முக்கியம் அவதானிப்புக்குரியது. இங்கும் வாசகன் குறியீட்டைக் கண்டடைகிறான்.

நாடகத்தில் கமலியும் சோமுவும் ஒருவரை ஒருவர் நேசமுறும் காதலர்களாக கட்டமைகிறார்கள். தம்மைக் கட்டும் சமுதாயத்தடைகளை உறுதியோடு தாண்டிச் செல்லும் புதிய தலைமுறைக்கான குறியீடாகிறார்கள். இந்தக்கட்டமைவுக்கு எதிரான மறு கட்டமைவாக செல்லமும் முருகப்பும் தோன்றுகிறார்கள்.

இறுதிக்காட்சியில் கமலி தன்னைச்சுற்றிய கட்டை உடைத்துதறி வெளியேறுகிறாள். அவள் கிளிக் கூட்டோடு வெளியேறுவதும் ஒரு குறியீட்டம்சம்தான். விடுதலையின் குறியீட்டம்சம். விடியுமிரவில் கோவிலில் இருவரும் சந்திப்பதும் சோமன் பாட பஞ்சையர் உருகிக் கேட்டிருப்பதாயும் வரும் காட்சி நெஞ்சுருகும் விடுதலை ஆவலின் குறியீடு. "என்றோ ஒருநாள் இருந்துபார் .........என்றோ ஒரு நாள் எழும்"நம்பிக்கையின் குறியீடென வாசிப்பாளன் குறியிட்டு வாசிப்பை நிகழ்த்தலாம்.

குறியீட்டு வாசிப்பு தேர்ந்த நிலையை அல்லது அர்த்தப்பொதிவான தேடலை அல்லது வாசிப்புணர்வைத்தரும்.

படைப்பாளி குறியீட்டினூடாகச் சொல்ல முனைவனவற்றை அறிதிறன் கொள்ளுதல் வாசகனின் கடமைதான். அத்தோடு தான் குறீயிடுகளை உருவாக்கி அல்லது செலுத்தி புதிய பொருண்மையைக் கண்டடைவதும் இதன் பாற்பட்டதே.

கவிதைகள் நினைவின் சாரலாக எப்போதும் மனதுக்குள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியபடி இருக்குமானால் அத்தகையவற்றைக் கொண்டாடலாம்.

நினைவுறு கவிதை

ஒரு கவிதை வாசித்து முடியும் போது நம்மை விட்டுப் பிரியாததாகி மனதுக்குள் ஒரு அதிர்வை, ஒரு தூண்டிலை, ஒரு பிசைவை தந்திட வேண்டும். அவ்வாறான கவிதைகளை நினைவுறு கவிதைகளாக மறுசொல் தர முனைகிறது. இன்றைய நினைவுறு கவிதை அழகிய சிங்கருடையது.

சுவர்

சுவருக்கு ஒன்றும் தெரியாது  
திட்டினால் புரியாது  
யாரையும் பார்க்காது  
பார்க்கத் தெரிந்தாலும்  
சலனமில்லாமல் பார்க்கும்  
சுவர் நின்று கொண்டிருக்கும் அசையாது  
ஊடுருவ முடியாது  
தாண்டிக் குதிக்கலாம்  
இடித்துத் தள்ளலாம்  
நானும் சுவர்தான்  
பார்த்தாலும் சலனமடையாத சுவர்தான்  
கேட்டாலும் காது கேளாது நிற்கும் சுவர்தான்  
நீ திட்டினாலும்  
ஊடுருவ முடியாத சுவர்தான்  
சுவரென்று தொடப்போனால்  
சுவராய் நானில்லை  
முன்னால் தென்படவும் போவதில்லை

## நினைவுறு கவிதை



# மாணவர்களுக்கான ஊடகக்கலை

இன்று ஊடகத்துறை மீறலான வளர்ச்சியை அடைந்திருக்கிறது. சமூகத்தை ஊடகத்தைக்கடத்தும் விரைவியாக அமைகிறது. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, விளம்பரம் என ஊடகத்தின் சகல துறைகளையும் தன் செயற்பாட்டுக்குள் சமூகத்தளம் உள்ளீர்த்திருக்கிறது.

இதனூடாக ஊடக ஆளுமைகளின் அல்லது வெளிப்பாட்டாளர்களின் செயற்பாங்கும் விதிக்குட்பட்டும் மீறியும்,புதிய கண்டடைவுகளுக்குட்பட்டும் இயக்கம் கொள்கிறது.

இந்தப் பின்னணியில் பாடசாலைகள் மாணவரிடையே அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பண்பாட்டையும் பயில்தன்மையையும் மேலெடுத்தலும் நெறிப்படுத்தலும் கூட மிகுந்த அவதானிப்புக்குரியது.

இளைய மாணவர் சந்ததியிடையே மிகச்சிறந்த ஊடக ஆளுமைத்திறன் மை காணப்படுகிறது. அதனை கட்டமைப்புக்குள் ஒழுங்குபடுத்தி பாடசாலை ஊடகக்கழகங்களை ஆற்றுப்படுத்தலுமாகும் சமூகத்தள ஊடக இயக்கத்தில் மாணவர் பங்காற்றலை சிறப்பாக்கலாம்

# அடிக்குறிப்பியல்




பாடசாலை என்பது தலைவிதியின் புத்தகம்.  
பாடசாலை என்பது தர்மவிதிப் புத்தகம் தான்.  
தலைவிதியை தர்மவிதியில் எழுதும்  
ஒரு புத்தகம் பாடசாலை.  
எல்லோருக்குள்ளும் பாடசாலை இருக்கிறது.  
மழைக்குக்கூட ஒதுங்காதவர்களுக்குள்ளும்  
பாடசாலை இருக்கிறது.  
பாடசாலை என்பது  
புரட்டப் புரட்ட நீளும் நிஜத்தின் புத்தகம்  
பத்திகளில் அட்ஷரங்களின் விதைகள்  
பக்கங்களில் அர்த்தங்களின் விருட்ஷங்கள்  
பாடசாலையொரு வனம்  
வாழ்வை வாசிக்கும் பெரு வனம்  
அது ஒரு முடிவிலிப் புத்தகம்  
வாசிக்க வாசிக்க  
வசிக்க வசிக்க  
விரிகிறது  
பறவையின் சிறகென நினைவுகள்  
நினைவெழுதும் அடிக்குறிப்புகளில்  
வளர்கிறது க(வி)தை  
முதலாம் பக்க அடிக்குறிப்பு

(அ)

எனது பாடசாலையின் முதலாம்  
காலடித் தடம்  
ஞாபகத்தில் அழிந்திருக்கிறது  
வெறுங்காலோ செருப்போ வாப்பாவின் வேர்வையில் பூத்த சப்பாத்தோ முதல் தடத்தில் இருந்திருக்கும்  
முதலாம் வகுப்பின் கடைசிநாள்  
ஞாபகத்தின் அடிக்குறிப்பிலிருக்கிறது  
பெயர் மறக்கப்பட்ட  
அல்லது மறுக்கப்பட்ட  
முதலாம் பிள்ளையாக  
வெள்ளை உடுத்தி  
அழகிய மாநிற  
பெரிய வாத்தியாரின்  
குரலில் இன்னும்  
காதுகளில் சுற்றுகிறது நினைவு  
ஓலைக்கொட்டிலில் ஒழுகும்  
மழையின் துளிகளையும்  
கண்ணீரின் துளிகளையும்  
எண்ணி எண்ணிப் படித்த  
காலமொன்று நினைவில் சுற்றுகிறது  
கால்களுக்குக் கீழ் கட்டும் வெள்ளத்தில்  
கைகள் வனைந்து கடதாசிப் படகுகள் ஓடும்  
மழை விட வாசலில்லா வகுப்பின் கரையில் ஒதுங்குமொரு ஐம்பது படகின்  
நங்கூரமிடும் பருவம்  
ஐம்பது படகும் பிறகு சிதறிற்று  
திசைமாறி எங்கெங்கோ அலைந்திற்று  
எங்கெங்கோ திசை கட்டி அலைந்தன;எங்கெங்கோ ஒதுங்கின படகுகளின்  
க(வி)தையிது

( ஆ)

பூவரசு இலையிலூறிய பீப்பீ  
மரத்திலடர்ந்த மசுக்குட்டியாய் சுவைக்கும்  
படித்தலின் கடித்தல்  
அல்லது  
படிப்பித்தலின் அடித்தல்  
சிலபோது  
மஞ்சள் நிறப்பூவாய் முகம் மலரும் கணங்கள்  
கிடுகுக் கூரை வழியே தெறிக்கும்  
இளமஞ்சள் வெயிலில் தெரியும்  
ஆரம்பக்கல்வி ஆலமரத்தின் விதை  
பெரு விருட்ஷத்தை  
அடக்கியிருக்கும் வித்தை  
எனக்குள்ளும் விதையாகி சதையாகி  
கதையாகி விழுதுகளில் ஆடுகிறது காலம்  
தலை, கை, நெஞ்சு,  
நெஞ்சு நிமிர்கவென சொல்லித்தந்த ஆசான் மகத்தில் வீழ்கிறது பசுமை நிழல்  
என் வகுப்பில் பரவுகிறது மகாத்மா  
காந்தியின் மனம்  
தலைஅறிவுகைதிறன்  
நெஞ்சுமனப்பாங்கென  
பசுமரத்தாணியாய்  
பதிகிறது பாலகம்  
பாடசாலை என்பது புத்தகம்  
அது தர்மவிதியில் எழுதும் கூர்முனை வகுப்புகளின் சிலேட்டுப் பென்சில்களாலான புத்தகம்

**தொடரும்..**

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

சடங்கை ஏற்காதவன் சிறுவன், வளர்ச்சியடையாதவன், அவனுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு கிடையாது, திருமணம் செய்ய முடியாது, பழங்குடி மக்களின் சடங்குகளில் கலந்து கொள்ள முடியாது போன்ற பல விதிமுறைகளை வகுத்திருந்தனர்.

விருத்தசேதனம் செய்வதால் பாலியல் சம்பந்தமான பல நோய்களில் இருந்து தவிர்ந்து கொள்வதோடு சுத்தம் பேணப்படுகிறது என்பது அவர்களது ஐதீகமாக இருந்தது. மண்டேலா, ஜஸ்டிஸ் (ஜோங்கிந்தாபா அரசரின் மகன்) உள்ளிட்ட வேறு சிலருக்கும் சடங்குகள் நடத்திட விழா ஏற்பாடு செய்தார் ஜோங்கிந்தாபா அரசர்.

மண்டேலாவின் காலத்திற்கு முன் ஏதாவது ஒரு வீரச் செயல் புரிந்து வீரத்தை நிரூபித்துக் காட்டினால்தான் சடங்கை நடத்தும் வழக்கத்தை பழங்குடி மக்கள் பின்பற்றினார்கள். மாடு அடக்குவது, சண்டையிடுவது, வீரதீர விளையாட்டுக்களில் தேர்ச்சியடைவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வீரத்தை நிரூபித்த பிறகுதான் சடங்கு நடத்துவார்கள்.

காலம் மாற மாற இந்த வழக்கமும் மாறிப்போனது. ஆனால் மண்டேலா குறைந்தபட்சம் தன் நண்பர்களிடமாவது தன் வீரத்தை நிரூபித்துக் காட்ட வேண்டுமென்று முடிவு செய்தான். ஊர்ப் பெரிய மனிதர் ஒருவரின் பண்ணையிலிருந்து பன்றி ஒன்றைத் திருடிவந்து அதை நண்பர்களுக்கு விருந்தாக்க வேண்டுமென்று முடிவுசெய்து களத்தில் இறங்கினான்.

சாக்குப் பை, தடி ,கயிறு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தொழுவத்தை நெருங்கினான். பன்றி திமிறினால், வர மறுத்தால் என்ன செய்வது? சத்தமிட்டு உரிமையாளரை எழுப்பி விடுமோ? என்ற பதற்றத்துடன் பியர் வகையில் இருந்து கிடைக்கும் ஒரு கரைசலை எடுத்துக் கொண்டான். அந்தக் கரைசலை பன்றிக்கு அருகில் கொண்டு சென்றான். வாசனையால் கவரப்பட்ட பன்றி மண்டேலாவை பின்தொடர்ந்தது.

சிறிது தூரம் அலைந்த பன்றியை மண்டேலா கைப்பற்றி தன் கைகளாலேயே குத்திக் கொன்றான். அன்று இரவு நண்பர்களுடன் மண்டேலா திறந்த வெளியில் நெருப்பு மூட்டி ஆடிப்பாடி பன்றியை சுட்டு சாப்பிட்டு குதூகலித்தான். அவனது வீரம் புகழப்பட்டது. அடுத்த நாள் விருத்த சேதன சடங்கு ஆரம்பமானது. ஊருக்கு ஒதுக்குப் புறமாக இரவு நேரத்தில் மண்டேலா, ஜஸ்டிஸ் இன்னும் சிலர் அழைத்து செல்லப்பட்டனர்.

முதலில் ஆற்றில் மூழ்கி எழுந்து ஜபம் சொல்ல வேண்டும். பின்னர் வரிசையில் நிற்க வேண்டும். இரவு நேரக் குளிரில் ஈரம் சொட்டச் சொட்ட வந்து வரிசையில் நின்றான் மண்டேலா. அவனுக்கு கை கால் உடல் உள்ளம் நடுங்கியது. சடங்கு செய்யும் போது பயந்து அழுது கத்தக் கூடாது; தாங்கிக் கொள்வதில்தான்

**தொடர் 5**

வீரம் இருக்கிறது என்று முன்னரே சொல்லியிருந்தார்கள்.

அதனால் நண்பர்கள் அதிகம் கத்தாமல் தாங்கிக் கொண்டார்கள். மண்டேலாவின் முறை வந்தது. தானும்



கத்தாமல் அழாமல் தாங்கிக் கொள்ள வேண்டும்; அதிகம் கத்தினால் மானம் போய்விடும்; அதையே சொல்லி நண்பர்கள் கேலி செய்வார்கள் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு முன்னோக்கிச் சென்றான்.

ஒரு விநாடி... உறுப்பின் முன்பக்க

(தொடரும் ......)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகர்

இது இலங்கைக்குப் போய் சேர்ந்த அன்றே இவரது அப்பாவுக்கு நிலையத்திலிருந்து தொலைபேசி அழைப்பு. "ஒலிச்சித்திரம்' பிரமாதமாக இருக்கிறது பாராட்டுக்கள் என்றார் இலங்கை வானொலியின் நிகழ்ச்சிப் பொறுப்பாளர். இந்தப் பாராட்டுக்குரியவன் நானல்ல. என் பதினேழு வயது மகன் ச.வெ.சேகர் என்று கூறியுள்ளார் அவரது தந்தை.

அடுத்து இவர் தயார் செய்தது சிவாஜிகணேசனின் ஒப்பற்ற சித்திரம் “வசந்த மாளிகை”.நடிகர் வி.கோபாலகிருஷ்ணன் இவரது நண்பர். அவர் நாடகங்கள் நடத்தி வந்தார். அவரது நாடகங்களுக்கு அடிக்கடி இவர் போவதுண்டு. அப்படி ஒரு நாள் சென்னை சிறைச்சாலையில் நடந்த ஒரு நாடகத்தில் நடிக்க வேண்டிய நடிகர் ஒருவர் அன்றைய நாள் வராமல் போனார்.

வி.கோபாலகிருஷ்ணன் இவரிடம் அந்த கதாபாத்திரத்தில் நீயே நடித்துவிடு என்றார். இவரும் ஒப்புக்கொண்டு நடித்தார். அது தான் இவர் நடித்த முதல் நாடகம். வி.கோபாலகிருஷ்ணன் நாடகத்தில் நடிகராக அங்கீகாரம் பெற்ற இவர், அந்தக் குழுவுடன் சிங்கப்பூர் சென்றும் நடித்துள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து கப்பலில் திரும்பி வந்தபோது நண்பர்களுடன் பேசி கப்பலிலேயே ஆரம்பித்ததுதான் “நாடகப்ரியா” நாடகங்கள். 1974 இல் கப்பலில் ஆரம்பித்த இவரது குழு இன்று வரை வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது. நாடகத்தையும் படிப்பையும் தொடர்ந்த இவர் மத்திய தொழில்நுட்பக் கல்லூரியில் “இயந்திரப் பொறியியலாளர்” படிப்பு பயின்று முடித்துள்ளார். கே.பாலசந்தர் “நினைத்தாலே இனிக்கும்” படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார்.

அதில் ரஜனிகாந்தும், கமலஹாசனும் நடித்தனர். சிங்கப்பூரில் நடப்பது போன்ற ஒரு காட்சியை சென்னையிலுள்ள இவரது "பதிவு திரையரங்கில்" எடுத்தார்கள். இவரது ஸ்டுடியோவுக்கு வரும் ரஜனிகாந்த் அவருக்கு ஒரு காரியம் ஆகவேண்டும் என்பதற்காக 5 வெள்ளி சிங்கப்பூர் பணம் கொடுப்பார். இவர் உடனே ‘நம்ம ஊரு புத்தியைக் காட்டிட்டே பாத்தியா’ என்று சொல்லவேண்டும். இதுதான் காட்சி. இவர் வழக்கமாக இருக்கின்ற இடத்தில் இருந்தபடி ரஜனிகாந்திடம் இந்த வசனத்தைச் சொன்னார். இதை நடிப்பு என்ற கோணத்தில் பார்க்காமல் ஒரு சீன் தானே என்ற கண்ணோட்டத்தில் செய்துகொடுத்தார்.



1979இல் படம் வெளியானபோது இக்காட்சி பிரபலமாகி சாமானிய ரசிகர்களிடமும் போய் சேர்ந்தது. இந்த நேரத்தில் கே.பாலசந்தரே மீண்டும் இவரை அழைத்து “வறுமையின் நிறம் சிகப்பு” படத்தில் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வைத்தார். வேலை இல்லாமல் திண்டாடும் 3 நண்பர்களைப் பற்றியது இப்படம். கமலஹாசன், திலீப், ச.வெ.சேகர் மூவரும் நண்பர்களாக நடித்தனர்.1979ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இவருக்குத் திருமணம் நடந்தது. திரைப்படங்களில் பரபரப்பாக நடித்தாலும், இடைவிடாமல் நாடகங்களில் நடித்தார். ச.வெ.சேகர் 25க்கும் மேற்பட்ட நாடகங்களை உருவாக்கியிருக்கிறார்.

இந்த நாடகங்களை 5300க்கும் மேற்பட்ட முறை மேடையேற்றியிருக்கிறார். நாடகத்தில் இவருக்கு மானசீகக் குரு “சோ”. 2003இல் அமெரிக்காவில் 32 நாட்களில் 28 நாடகங்களைப் போட்டிருக்கிறார். அனைத்தும் அரங்கு நிறைந்த காட்சிகள்.

1984ஆம் ஆண்டு ஒரே நாளில் 8 நாடகங்கள் நடித்திருக்கிறார்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# Arunthathi Matru Mothiram



Hair & Makeup by
Sree koshi beauty palace
Koshi Sana... At Arunthathi Matru Mothiram event held at Galadari Hotel

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.